கல்கி



ALKI 1-9-1957


30 நயா பைசா

கல்கி

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.

பைலட் பேனவின் அற்புத தரத்திற்கு அரிய எடுத்துக்காட்டு!



உப்புத் தாளின்மீது இரண்டு மணி நேரம் இடைவிடாமல் எழுதிய பிறகும் பைலட் பேனவின் உறுதி யான நிப் கெட்டுப்போகவோ, அதன் எழுத்தின் வடிவு குலையவோ செய்யவில்லை. பைலட் பேனவின் மேன்மைக்கு இதைவிட மேலான அத்தாட்சி வேறென்ன வேண்டும்!

பைலட் பேனவின் விலை மிகக் குறைவேயாயினும், அது எவ்வித கடின உபயோகத்திற்கும் உகந்தது என்பதை அதி சயிக்கத்தக்க பரீட்சைகள் நிரூபித்துள்ளன. உப்புத்தாள் மீது எழுதினும் கூடவோ அல்லது மிருதுவான மரப்பலகை யில் குத்திவிடினும் கூடவோ, அதன் உறுதியான நிப் பிற்கு யாதொரு சேதமும் விளையாது. இந்த பேனவில் நிறைய மை சேர்கிறது. ஒருதரம் மை நிரப்பினால், முழுத்தாளில் 40 பக்கங்கள் எழுதலாம்! மற்றும் இந்தப் பேனா ஒழுகாது என்பதற்கு உத்திரவாதம் உள்ளது!

எவ்வளவு கடின உபயோகத் திலும்கூட எழுத்தின் வடிவு குலை யாமல், சீராக எழுதும் தன் மையே பைலட் பேனா பெற் றுள்ள தனி மதிப்பிற்குக் காரணம். பைலட் பேனக்கள் விலை ரூ. 4/8லிருந்து ரூ. 37/-வரை பல வேறு மாடல்களில் உள்ளன. ஒவ் வொரு மாடலும் நீங்கள் கொடுக் கும் பணத்திற்குச் சிறந்த பேனா வாக அமையும். உங்களுக்குப் பிடித்தமான மாடல் ஒன்றைத் தேர்ந்தெடுங்கள்.



சிறந்த முறையில் நீடித்த உழைப்பிற்கு

பைலட் பேனவை வாங்குங்கள்

பைலட் பேனவிற்குகந்தது பைலட் மையே

தி பைலட் பேன் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிமிடெட்
தந்தோனிக் சென்டர், ஆர்மீனியன் தெரு, மதராஸ் 1

விற்பனை மற்றும் சர்வீஸ் செய்பவர்கள்: ஜெம் அண்ட் கம்பெனி
325/326, நேதாஜி ஸுபாஷ் சந்திர போஸ் ரோடு, மதராஸ் 1

டிரேட் மார்க்



மலர் 17 } தமிழ்த்திரு நாடு தன்னைப் – பெற்ற { ஹேவிளம்பி
இதழ் 5 } தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் { ஆவணி 16

மொழி விஷயத்தில் ஜனநாயகம்

பி. ஜி. கெர் அவர்கள் தலைமையில் கூடிய மொழிக் கமிஷன் அறிக்கை, ஒரு வருஷத்துக்குப் பிறகு சமீபத்தில் வெளியாயிற்று.

அந்த அறிக்கைக்குள் என்ன இருக்குமோ, ஏது இருக்குமோ என்று மக்கள் பயந்து கொண்டிருந்தனர். சர்க்காரும் இந்த அறிக்கையை வெளியிடுவதால் என்ன புது ஆபத்துகள் வருமோ என்று பயந்தனர். அவர்கள் பயம் வீண் பயமாக முடியவில்லை. 1965-க்குள் எப்படியும் இந்தியை அரசாங்க பாஷை ஆக்கிவிட வேண்டியது தான் என்று பி. ஜி. கெர் அறிக்கை கூறுகிறது.

இது வெளியான சில நாட்களிலேயே மத்திய சர்க்கார் மந்திரி ஸ்ரீ பி. என். தாதர் மக்கள் சபையில் 1965 - க்குள் எப்படியும் இந்தி அரசாங்க மொழியாகிவிடும், அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன என்று கூறினார். "மத்திய சர்க்கார் காரியாலயங்களில் வேலை செய்கிறவர்களுக்கு இந்தி மொழியில் தீவிரமாகப் பயிற்சி யளிக்கப்பட்டு வருகிறது! இப்பயிற்சியைத் தீவிரப்படுத்த மேலும் பலபயிற்சிக் கூடங்கள் ஆரம்பிக்கப் போகின்றனர்." இப்படி மிக உற்சாகமாகச் சொல்லியிருக்கிறார்.

இவற்றிலிருந்து மத்திய சர்க்கார் இந்தி மொழியை அரசாங்க மொழியாக்கு வதில் மிகத் தீவிரமாகவே இருக்கிறார்கள் என்பது சந்தேகமறத் தெரிகிறது. "இந்த அவசரம் வேண்டாம்" என்று தேச நலனில் அக்கறை கொண்ட பெரியோர்கள் பலர் பலவிதமாகச் சொல்லியும் சர்க்கார் பிடிவாதமாக இருக்கிறார்கள். இந்தப் பிடிவாதம் இன்று நேற்றல்ல; அரசியல் நிர்ணய சபை நடைபெற்ற நாட்களிலிருந்தே இருக்கிறது.

* *

இவ்விஷயம் பற்றி, அன்று அரசியல் நிர்ணய சபையில் முக்கிய பங்கெடுத்துக் கொண்டு பாரத நாட்டு அரசியலை உருவாக்கித் தந்த டாக்டர் அம்பேத்கர் மிக உருக்க மாக எழுதியிருக்கிறார். இந்தி வெறியர்களின் ஆத்திரத்தை அவர் குறிப்பிடும் ஒரு நிகழ்ச்சி அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறது.

இந்தி 1965-க்குள் அரசாங்க மொழியாகிவிட வேண்டும் என்ற சட்டம் முதன் முதலில் அரசியல் நிர்ணய சபையில்தான் செய்யப்பட்டது. அந்த அரசியல் நிர்ணய சபையில், இந்தத் தீர்மானம் வந்தபோது, இதற்கு ஆதரவாக 77 பேரும் எதிராக 77 பேரும் சரிசமமாக இருந்தனராம். அதனால் அன்று அந்தத் தீர்மானம் கைவிடப் பட்டது. சிலநாட்கள் கழித்து மேற்கண்ட தீர்மானம் மீண்டும் வந்தபோது, ஆதரவாக 78 வோட்டுகளும் எதிராக 77 வோட்டுகளும் கிடைத்ததால், ஒரே ஒரு வோட்டு பலத்தில் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

பெரும்பான்மையான மக்களின் உணர்ச்சிகளையும் வாழ்க்கையையும் பாதிக்கக் கூடிய மொழி விஷயத்தில் ஒரே ஒரு வோட்டு அதிகப்படி கிடைத்தது என்று சட்டம் இயற்றி விட்டார்கள். இது ஜனநாயகம் கண்டறியாத புதுமையாகும்!

ஜனநாயகம் தழைக்கும் நாடுகளிலே மொழி விஷயத்தில், சிறுபான்மையோரின் உணர்ச்சிகளுக்கு எவ்வளவு மதிப்பு அளிக்கிறார்கள் என்பதைப் பார்ப்போம்.

ஒரு நாட்டுக்கு ஒரு மொழிதான் தேசிய மொழியாகவோ அரசாங்க மொழி யாகவோ இருக்க வேண்டும் என்பதில்லை.

ஸ்விட்ஸர்லந்து தேசத்தில் மூன்று மொழிகள் அரசாங்க மொழிகளாக இருக்கின்றன. ஜெர்மன், பிரஞ்சு, இத்தாலி ஆகிய பாஷைகள் அந்த நாட்டின் தேசிய மொழிகளாகும்.

தென் ஆப்பிரிக்காவில் ஆப்பிரிக்க மொழியும் ஆங்கிலமும் அரசாங்க மொழிகளாக இருக்கின்றன.

பின்லாந்து தேசத்தில் ஸ்வீடிஷ் மொழி பேசுவோரின் ஜனத்தொகை ஒன்பது சத விகிதம்தான். எனினும் அந்தநாட்டில் பின்லாந்து மொழியோடு கூட ஸ்வீடிஷ் மொழியும் அரசாங்க மொழியாக இருந்து வருகிறது.

ஆனால் நம் நாட்டிலோ இந்தி மொழி பேசுவோர் மொத்த ஜனத்தொகையில் அறுபது சத விகிதம் பேர்கள் இருக்கின்றனர். அதனால் ஹிந்தி மொழியே அரசாங்க மொழியாக இருக்க வேண்டும் என்று சொல்லுகின்றனர்! இது என்ன நியாயம்? மற்ற சிறுபான்மையோரின் உணர்ச்சிக்கு என்ன மதிப்பு இருக்கிறது?


பெரும்பான்மை சிறுபான்மை என்கிற கணக்கில் ஒரு விசேஷம்: நாடு முழுதிலும் எல்லாப் பிரதேசங்களிலும் இந்தி பெரும்பான்மையோர் பேசி வந்தால் அது நியாயம். ஆனால் விஷயம் வேறு. தென்பாகம் முழுதும் இந்தி பேசாத இடம், மற்றப் பாகங்களிலுள்ள பெரும்பான்மையோர் கணக்கை வைத்துக் கொண்டு தென்பாகத்திலுள்ளவர்களின் உணர்ச்சியை முற்றிலும் புறக்கணித்து விடுவது அநியாயமாகும்.

இப்படி நாம் சொல்லும் போது இந்தியைத் தவிர வங்காளி, தமிழ், தெலுங்கு, மராட்டி ஆகிய நமது நாட்டிலுள்ள பதினான்கு பாஷைகளும் அரசாங்க மொழிகளாக இருக்க முடியுமா என்று கேட்கலாம்.

இந்த மொழிகள் யாவும் அந்த அந்தப் பிரதேசங்களில் அரசாங்க மொழியாகத் தொழிற்படத்தான் போகின்றன. அந்த அந்த ராஜ்ய சர்க்காரின் நிர்வாகங்கள் அந்த அந்த ராஜ்ய மொழியில்தான் நடைபெறும். தமிழ் நாட்டில் தமிழும், ஆந்திர நாட்டில் தெலுங்கும், வங்கத்தில் வங்காளி மொழியும் ராஜ்ய சர்க்கார் மொழியாக இருக்கும்.


ஆனால் மத்திய சர்க்காருடன் நடத்தும் கடிதப் போக்குவரத்து இந்தி மொழியில் மட்டும்தான் இருக்க வேண்டும் என்கிறார்கள்; இதுதான் கூடாது என்று கூறுகிறோம்! இந்தி மொழியுடன் இதுகாறும் இருந்துவரும் ஆங்கிலமும் மத்திய சர்க்கார் மொழியாக இருக்க வேண்டும் என்கிறோம்.

பாவம், வண்டிக்காரர்!



இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் பளுவைத் தாங்க முடியாது என்ற உண்மையை இப்பொழுதுதான் திரு டி. டி. கே. உணருகிறார்.

உணவுப் பிரச்னை!



தமிழ்நாட்டு அரிசிப் பற்றாக்குறையை ஆந்திர நாடு நீக்குமென்று நம்பினார்கள். ஆனால் ஆந்திர நாட்டிலிருந்து அரிசி வரவில்லை. தமிழ்நாட்டிலுள்ள சொற்ப அரிசியும் கேரளத்துக்குச் சென்று கொண்டிருக்கிறது!

நூற்றைம்பது வருஷ அந்நிய ஆட்சியின் பயனாக நமக்கு ஆங்கிலம் கை வந்திருக்கிறது. காஷ்மீரிலிருந்து கன்யா குமரிவரை ஆங்கிலம் இன்றும் நன்றாக வழங்கி வருகிறது. சர்க்கார் காரியாலயங்களில் வேலை செய்பவர்களுக்கு மிகவும் செவ்வனே ஆங்கிலத்தில் எந்த விஷயத்தையும் கூற முடிகிறது! இந்தியில் சொல்ல முடிவதைவிட, இந்திக்காரர்களால் ஆங்கிலத்தில் தெளிவாகவும் நுட்பமாகவும் சொல்ல முடிகிறது; எழுத முடிகிறது. இப்படிப் பல ஆண்டுகள் அரும் முயற்சியினால் கைவரப் பெற்ற மொழியை இழந்து விடுவானேன்? பாரத மக்கள் அனைவரையும் இன்று இணைத்து வைக்கும் ஒரு பொது மொழியை இழப்பானேன்?

ஆங்கிலத்தை அரசாங்க மொழியாகக் கொள்வதற்கும் சுதந்திரத்துக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. ஆகவே, இந்தியுடன்கூட ஆங்கிலமும் மத்திய அரசாங்க மொழியாகத் திகழ வேண்டும்.

வெள்ளைக்காரர்கள் கொடுத்த ரயில் தண்டவாளத்தையும், தந்தியையும், இன்ஜினையும் தூரக் கழற்றி எறிந்துவிடவில்லை. அவற்றை உபயோகித்துத்தான் வருகிறோம். அதே போல் ஆங்கிலத்தையும் நாம் பயன்படுத்திக் கொள்ளத்தான் வேண்டும்.

மற்றொரு விஷயமும் சொல்லத்தான் வேண்டும். 1965-க்குள் இந்தி அரசாங்க மொழியாக்கப்பட்டால், இந்தியைத் தாய் மொழியாகப் பெறாத பலர் கஷ்டநஷ்டங்களுக்கு உள்ளாவார்கள். மத்திய சர்க்கார் உத்தியோகங்களுக்கு மற்ற பாஷைக்காரர்கள் அவ்வளவு சுலபத்தில் திறமை பெற்றவர்களாகிவிட முடியாது. இந்தியை எப்படியும் அரசாங்க மொழியாக்க வேண்டும் என்றால், இரண்டு தலைமுறைக்கு இந்தியைப் பள்ளிக்கூடங்களில் கட்டாய பாடமாக வைத்து மாணவர்களுக்குக் கற்றுக் கொடுத்து வெற்றி பெற்ற பிறகே இந்தியை அரசாங்க மொழியாக்க முடியும். ஆனால், நமது சர்க்காருக்கு இந்தியைக் கட்டாய பாடமாக வைப்பது என்றாலே பெரும் பீதியாக இருக்கிறது. எத்தகைய கிளர்ச்சிகள் நேருமோ என்று அஞ்சுகிறார்கள். இந்தியைக் கட்டாய பாடமாக வைத்து மக்களைத் தயார்செய்யத் தைரியமில்லாதபோது 1965க்குள் அரசாங்க மொழி இந்தியாகி விடும் என்பது மற்ற மொழிக்காரர்களுக்குப் பெரும் அநீதி விளைவிப்பதாகும்!

* * *

இப்படி நாம் சொல்லும்பொழுது நமக்கு இந்தி என்றாலே பிடிக்காதோ என்று நினைக்கலாம். அதுதான் இல்லை. முதலில் நமக்கு எந்தப் பாஷையினிடத்துமே வெறுப்பில்லை. மேலும் நம் நாட்டில் ஏதாகிலும் ஒரு பாஷை தேசிய பாஷையாகக்கூடிய தகுதியிருக்கிறதா என்றால் அது இந்திக்குத்தான் உண்டு என்று பூரணமாகக் கருதுகிறோம். அதுதான் பாரதநாட்டு ஜனத்தொகையில் 60 சதவிகிதம் பேர் பேசும் மொழியாக இருக்கிறது. அதை மற்ற நாற்பது சதவிகிதம் பேர் கற்றுக்

கொண்டுதான் ஆக வேண்டும். அப்பொழுது தான் பாரததேசம் முழுதும் ஒரு நாடு என்ற உணர்ச்சி, வடநாட்டிலிருந்து தென்னாட்டுக்கு வருபவர்களுக்கும் தென்னாட்டிலிருந்து வடநாடு செல்பவர்களுக்கும் ஏற்பட முடியும். பாரத நாட்டின் அரசியல், வர்த்தகம், பண்பாடு எல்லாம் ஒன்றாகத் திகழ வேண்டும் என்றால், அதைச் சாதிக்க வல்லது இந்தி தான். வர்த்தகம், அந்த அந்த மொழி எல்லைக்குள் கட்டுப்பட்டிருக்க முடியுமா? தமிழ் நாட்டில் இருப்பவர்கள் வடநாட்டில் இன்று வர்த்தகம் செய்கிறார்கள். அவர்களுக்கு இன்று உதவுவது இந்தி. இப்படி எல்லாத் துறைகளிலும் பாரதம் ஒன்றாக வளரவேண்டுமெனில் இந்தி அவசியம். ஆகவே, பாரத நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் பள்ளிக் கூடங்களில் மாணவர்களுக்கு இந்தி கற்றுக் கொடுப்பது அவசியம் என்பதில் நமக்குச் சந்தேகமில்லை.

ஆனால் 1965-க்குள் இந்தியை அரசாங்க பாஷையாக்கியே தீருவது என்று அவசரப்பட்டு, தவறு செய்துவிடக் கூடாது என்றுதான் வற்புறுத்த விரும்புகிறோம்!

ஜனநாயகம் என்பதற்குப் பெரும்பான்மையோரின் எதேச்சாதிகார ஆட்சி என்பதல்ல பொருள். பெரும்பான்மையாக இருப்பவர்கள் சிறுபான்மையோரின் உணர்ச்சிகளுக்கு மதிப்புக் கொடுத்து ஆட்சி நடத்துவது என்பதுதான் அதற்குப் பொருள்.

மத்திய சர்க்கார் என்பது நாட்டிலுள்ள எல்லா ராஜ்யங்களுக்கும் உரியது. அது எல்லா ராஜ்யங்களின் உணர்ச்சிகளுக்கும் மதிப்புக் கொடுத்து நியாயமாக நடந்து கொள்ளக் கடமைப்பட்டது. மத்திய சர்க்கார் இயற்றும் ஒரு சட்டம், ஒரு சாராருக்குப் பயன் அளிக்கக் கூடியதாகவும் மற்றவர்களுக்குத் தொல்லைகள் தரக்கூடியதாகவும் இருந்தால், மத்திய சர்க்கார் அத்தகைய சட்டங்களை இயற்றுவதைவிட ஒதுக்குவதே அறிவுடைமையும் கடமையுமாகும். இந்தியை 1965-க்குள் அரசாங்க பாஷையாக்குவது நாட்டிலுள்ள மற்றப் பகுதியினருக்குப் பெரும் அநீதியாக முடியுமாதலால், அந்தச் சட்டத்தை மாற்றுவதே அறிவுடைமையாகும்.

இன்னொரு கேள்வியும் கேட்கப்படுகிறது. "ஆங்கிலம் படித்து நீங்கள் திறமையாகக் காரியம் செய்யவில்லையா? அதைப் போல் இந்தியைப் படித்துக் காரியங்கள் செய்யுங்களேன்" என்கிறார்கள். அப்படியானால் இந்தி பேசுபவர்கள், அன்று நம் நாட்டில் ஆங்கிலத்தைத் திணித்தவர்கள் நிலையிலிருக்க விரும்புகின்றனரா? இதைவிடப் படுமோசமான நிலை வேறில்லை. பாரத நாட்டிலே இந்தி பேசுபவரும் சரி, தமிழ் பேசுபவரும் சரி, கன்னடம் பேசுபவரும்சரி யாவரும் ஒன்றே; இவர்கள் அத்தனை பேருக்கும் வேலை வாய்ப்புகள் கிடைப்பதும், நலன்கள் கிடைப்பதும் சரிசமமாகவே இருக்க வேண்டும். இதில் ஏற்றத் தாழ்வு இருக்கக் கூடாது. இப்பொழுது இந்தியை 1965-க்குள் மத்திய சர்க்கார் பாஷையாகச் செய்து விட்டால் நாட்டில் ஏற்றத் தாழ்வுகள் நிச்சயம் ஏற்பட்டுவிடக் கூடிய சூழ்நிலை வளர்ந்து விடும். பாரதத்தை யு. பி.க்காரர்களும் பீகார்காரர்களுமே ஆள வேண்டும் என்ற நிலையை உண்டாக்கி விடும். இது ஆங்கில மொழி சென்ற இருநூறு ஆண்டுகளில் பாரதத்துக்குத் தேடித் தந்த ஒற்றுமையைக் குலைத்துவிடும். அதனால் மொழி விஷயத்தில் மத்திய சர்க்காரை எச்சரிக்கையோடு இருக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். அவசரப்பட்டுச் சிறுபான்மை மக்களுக்கு அநீதியையும் மனக் கசப்பையும் உண்டாக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறோம். அப்பொழுதுதான் ஜனநாயகம் பாரத நாட்டில் நல்லபடியாக நிலைக்கும்.

கல்லூரி மாணவர்களுக்கு ஒரு நற்செய்தி

கல்லூரிகளில் போதனா மொழி தமிழ் மொழியாகத்தான் இருக்க வேண்டும் என்று நாம் பன்முறை வற்புறுத்தியிருக்கிறோம்!

பௌதிகம், ரசாயனம், சரித்திரம், பூகோளம், பூகர்ப்ப சாஸ்திரம் ஆகிய எல்லாப் பாடங்களையும் தமிழ் மொழி மூலமே கற்பிக்க வேண்டும். அப்பொழுதுதான் மாணவர்கள் விஷயங்களை எளிதில் உணர்ந்து கொள்ள முடியும் என்று பலமுறை சொல்லியிருக்கிறோம். தமிழ் மொழியின்றி வேற்று மொழிகளில் மேற்கண்ட சாஸ்திரங்களைக் கற்பிக்கும் போது, அந்த அந்த சாஸ்திரத்தின் உண்மைகளைத் தெரிந்து கொள்ளுவதற்குப் பதிலாக வேற்று மொழியின் சொற்களில்தான் மாணவர்களின் கவனம் சென்றது. ஆங்கிலம் மூலம் பௌதிகம் சொல்லிக் கொடுப்பதாக ஆசிரியர் நினைத்துக் கொண்டிருக்க, பௌதிகம் மூலம் மாணவர்கள் ஆங்கிலத்தைத்தான், அதுவும் நொண்டுகின்ற ஆங்கிலத்தைத்தான், கற்றுக் கொண்டு வந்தனர்!

இது முற்காலத்திய நிலைமை. அதாவது உயர்தரப் பள்ளி வகுப்புகளில் மாணவர்கள் ஆங்கிலம் மூலம் பாடம் கற்று ஓரளவு ஆங்கிலத்தில் பயிற்சி பெற்றிருந்தபோதே, மாணவர்கள் பௌதிகத்தையும் ரசாயனத்தையும் படித்த லட்சணம் இது என்றால், இப்போது கேட்கவே வேண்டியதில்லை! இப்போது உயர்தரப் பள்ளிகளில் எல்லாப் பாடங்களையும் தமிழில் படித்து விட்டு, போதனாமொழி ஆங்கிலமாக உள்ள கல்லூரிக்கு வரும்போது, மாணவர்கள் பாடு, கண்ணைக் கட்டிக் காட்டில் விட்ட மாதிரி இருக்கிறது!

மாணவர்கள் ஒன்றும் புரியாமல், நாள் எல்லாம் கல்லூரி பெஞ்சுகளில் உட்கார்ந்து விட்டு வருகிறார்கள்! ஆகவே, மாணவர்களிடம் இரக்கமுள்ள ஆசிரியர்கள் உடனே போதனா மொழியைத் தமிழாக மாற்றிக் கொள்ள வேண்டும்! மாணவர்களின் எதிர் கால முன்னேற்றத்தில் அக்கறை நமது சர்வ கலாசாலைக்கு உண்மையில் இருக்குமானால்

போதனமொழி தமிழாகச் செய்துகொண்டே யாக வேண்டும்!

''விஞ்ஞானமும், சரித்திரமும் தமிழில் சொல்லிக் கொடுக்கலாம். ஆங்கிலத்தைத் தமிழில் எப்படிச் சொல்லிக் கொடுப்பது?'' என்று சிலர் கேட்கிறார்கள்.

இங்கிலாந்து தேசத்தில் பிற மொழிகளை - தமிழைக்கூட - கற்பிக்கிறார்கள். முழுவதும் அந்தந்த மொழியிலா கற்பிக்கிறார்கள்? பிரஞ்சு மொழியைப் பிரஞ்சிலும், ஜெர்மானிய மொழியை ஜெர்மனிலும், லத்தீன் மொழியை லத்தீனிலும், கிரேக்க மொழியைக் கிரீக்கிலும் கற்றுத் தருவதில்லை. எல்லா மொழிகளையும் அவர்கள் தாய்மொழியாகிய ஆங்கிலத்தின் மூலம்தான் கற்பிக்கிறார்கள். அதேபோல் தமிழ் நாட்டிலுள்ள மாணவர்களுக்கு ஆங்கிலத்தைத் தமிழ்மூலம் சொல்லித் தருவதில் என்ன தவறு?

கல்லூரி மாணவர்க்குப் பாடமாக அமைந்துள்ள ஆங்கிலப் பாடல்கள் சிலவற்றை அவ்வப்போது, 'இலக்கியச் செல்வ'ப் பகுதியில் தமிழிலே வடித்துத் தருவதற்கு நமது பேராசிரியர் அ. சீநிவாசராகவன் இசைந்திருக்கிறார்கள். இடை இடையே தமிழ்ப் பாடல் வந்து நெஞ்சைத் தொடும்; மற்றைய மொழிகளில் உள்ள இலக்கியமும் வரும்.

செப்டம்பர் 8-ம் தேதி இதழிலிருந்து இந்த ஏற்பாடு நடைமுறைக்கு வருகிறது.

ஆங்கில இலக்கியத்திலுள்ள மிக உயர்ந்த நயங்களை நம் தமிழ்மொழியில் பேராசிரியர் எழுதி வருவது கல்லூரி மாணவர்களுக்கு வரப்பிரசாதமாக, கிடைத்தற்கரிய பேருக இருக்கும். அதே சமயம் இலக்கியத்தில் ஆர்வமுள்ள வாசகர்களும் மேனாட்டு இலக்கிய நயங்களை அனுபவிக்க நல்ல வாய்ப்பாக இருக்கும்.

விபத்துக்கள் தீர வழி உண்டா?

நேரத்தை முக்கியமான அம்சமாகக் கொண்டு இயங்கும் ரயில் வண்டிகள் பல மணி நேரம் தாமதித்து வருவது இப்போதெல்லாம் தினசரி நிகழும் சாதாரண சம்பவங்களாகி விட்டன. இதனால் பொது மக்களுக்கு எவ்வளவு அசௌகரியங்கள் ஏற்படுகின்றன என்பதைச் சொல்லவேண்டியதில்லை. இனி ரயில் வண்டிகள் குறிப்பிட்ட நேரத்துக்குப் போவதும் வருவதும் எக்காலமோ என்று எல்லோரும் ஏங்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந் நிலையில், ரயில் விபத்துக்களும் தினசரி நிகழ்ச்சிகளாகி வருவது பொது மக்களின் மனத்தில் பீதியை உண்டாக்கி விருகிறது. மகா பயங்கரமான அரியலூர் விபத்துக்குப் பிறகும்கூட நாட்டின் பல பாகங்களிலும் விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன. அவ் விபத்துக்களின் விளைவாக அதிக உயிர்ச் சேதம் ஏற்படாததற்குக் கடவுளின் கருணைதான் காரணமேயன்றி, சிப்பந்திகளின் திறமையால் கோர விபத்துக்கள் தவிர்க்கப்பட்டன என்று கூற முடியாது.

ரயில்வே சிப்பந்திகள் இமை கொட்டாமல் அதாவது மிக்க ஜாக்கிரதையுடனும் கவனத்துடனும் தங்கள் கடமைகளைச் செய்ய முற்பட்டாலன்றி, வண்டிகள் மிகவும் தாமதித்து வரும் வெட்கக் கேட்டையோ, பயங்கரமான விபத்துக்களையோ தவிர்க்க முடியாது. சமீபத்தில் ஏற்பட்ட பல சில்லறை விபத்துக்களுக்கும் சிப்பந்திகளின் அசிரத்தைதான் காரணம் என்று கூறப்படுகிறது. அவர்களிடையே கடமை உணர்ச்சி குறைந்துவிட்டது என்றே கருதவேண்டியிருக்கிறது. அவர்களுக்கு எவ்வளவு குறைகள் இருந்தபோதிலும், அவற்றுக்கு நியாயமான முறையில் பரிகாரம் காணவேண்டுமேயன்றி, அவர்கள் குறைகளை மனத்தில் கொண்டு கடமையில் தவறுவதை எவரும் ஒப்புக்கொள்ள முடியாது. நாட்டின் முன்னேற்றமும், மக்களின் உயிர், உடைமை, சுபிட்சம் முதலியன யாவும் ரயில்சேவைகள் காலம் கடவாமலும் விபத்தின்றியும் இயங்குவதையே பொறுத்திருக்கின்றன. தேசத்தின் எதிர்கால நலனுக்கு இன்றியமையாத ரயில் போக்குவரத்தில் பொது மக்கள் நம்பிக்கை இழக்கும்படி செய்வதைக் காட்டிலும் தேசத் துரோகமான காரியம் வேறு இருக்க முடியாது.

எனவே, ரயில் வண்டிகளில் பிரயாணம் செய்யும் மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் தாங்கள்தான் பொறுப்பாளி என்ற உணர்ச்சி அவர்களுக்கு ஏற்படவேண்டும். அத்தகைய பொறுப்பு உணர்ச்சி அவர்களுக்கு ஏற்பட்டாலன்றி, விசாரணைகளினாலோ, ரயில்வே அதிகாரிகளின் அறிக்கைகளினாலோ பொது மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும்படி செய்துவிட முடியாது. நாட்டின் நலனுக்குக் கூத்தகமான இந்தப் புதிய ஆபத்துக்கு விமோசனம் ஏற்பட வழி பிறக்க வேண்டியது அத்தியாவசியமும் அவசரமுமாகும்.

பாரதி விசேஷ இதழ்

செப்டம்பர் 11ந் தேதி என்றால் அது தமிழ்த் திருநாள், மகாகவியின் நினைவுநாள் என்பது தமிழ்கூறும் நல்லுலகம் எங்கிலும் உள்ள மக்கள் நன்கு அறிவார்கள். மகாகவியின் நினைவுநாளையொட்டி அடுத்த செப்டம்பர் 8ந் தேதி கல்கி இதழ் பாரதி இதழாக வெளிவருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த விசேஷ இதழில் இதுவரை வெளிவராத மகாகவி பாரதியாரின் சில அருமையான கட்டுரைகளும், பாரதியே மொழிபெயர்த்த இன்னொரு மகாகவியின் மிகச் சிறந்த சிறுகதையும் வெளிவருகின்றன.

நஷ்டம் நமதல்ல!

‘நல்ல மாட்டுக்கு ஒரு சூடு’ என்பார்கள் தமிழ் மக்கள். ஆம், ஒருவன் யோக்கியனாகவும் நல்லவனாகவும் இருந்து தவறு செய்து விட்டால், அவன் தவற்றை ஒரு தடவை எடுத்துச் சொன்னால் போதும். அவன் திருத்திக் கொள்வான். இந்த நம்பிக்கை தமிழ் மக்களுக்கு அன்று தொட்டு இன்று வரை இருந்து வருகிறது.

அந்தப் பண்பாட்டை அனுசரித்தே நாம் பாரத சர்க்காரை இந்தத் தடவை ஒன்றும் குறை கூறாமல் விடுகிறோம்.

* * *

பாரத சர்க்கார் சுதந்திரப் போராட்டத்தைப் பற்றி எடுத்துள்ள செய்திப் படத்தைப் பற்றி நமக்கு ஏராளமான கடிதங்கள் வந்துள்ளன. மாதிரிக்கு ஒரு கடிதத்தை இவ்வார வட்டமேஜைப் பகுதியில் பார்க்கலாம்.

பாரத நாட்டுச் சுதந்திரப் போராட்டத்திலே கலந்து கொண்டு, வெள்ளைக் கும்பினிக்காரர்களைக் கலங்க அடித்த வீரபாண்டிய கட்டபொம்மன், மருது சகோதரர்கள் போன்றவர்களைப் பற்றி அந்தச் செய்திப் படத்தில் ஒரு குறிப்புகூடக் காணவில்லை.

இவர்களைப் பற்றித்தான் ஒன்றுமில்லை என்றாலும், காந்தி யுகத்திலே அஹிம்சைப் போரில் காந்தி மகானுடன் தோளோடு தோள் சேர்த்து நின்று பாரத அன்னையின் விடுதலைக்கு மகத்தான தியாகங்கள்\ புரிந்த தென்னாட்டுத் தலைவர்களையாவது குறிப்பிட்டிருக்கலாம் அல்லவா? அவர்களில் ஒருவரையுமே காண்பிக்கவில்லை.

நமது அருமைத் தலைவர் ராஜாஜியின் மகத்தான சேவையை உலகமே போற்றுகிறது.

காந்தி மகான் தண்டி யாத்திரை சென்று உப்பு சத்தியாக்கிரகம் செய்தபோது ராஜாஜி வேதாரண்யத்துக்கு ஒரு பெரும் தொண்டர் படையுடன் சென்று உப்பு சத்தியாக்கிரகம் செய்தார். அந்த நாட்களில் பாரத மக்கள்; கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீர் வரையுள்ள மக்கள்; எவ்வளவு ஆர்வத்தோடு அந்தப் பாதை யாத்திரைகளைக் கவனித்து வந்தார்கள். ஒவ்வொரு நாள் செய்தியையும் எவ்வளவு பரபரப்புடன் படித்து வந்து, தேச பக்தியும் உணர்ச்சியும் பெற்றார்கள். அந்த நாட்களை யெல்லாம் பாரத சர்க்கார் மறந்திருப்பதை நினைக்க வியப்பாக இருக்கிறது!

தீரர் சத்தியமூர்த்தி சட்டசபைகளிலும் பலப்பல பொது மேடைகளிலும் ஏறி நின்று தேசத்தை வீறு கொண்டு எழச் செய்த காட்சியை இன்னும் நம் மக்கள் மறந்துவிடவில்லை. ஆந்திரகேசரியின் தீரம்மிகுந்த செயல்களை மக்கள் கதை கதையாகப் பேசுகின்றனர். வ.வே.சு. ஐயர், பாரதியார், வ.உ.சி. இப்படி எத்தனையோ தேசபக்தர்கள் இல்லையா? இவர்களில் ஒருவரைக்கூட நமது பாரத சர்க்கார் எடுத்துள்ள செய்திப் படத்தில் காண்பிக்கவில்லை. இது தென்னாட்டு மக்களின் உணர்ச்சியைத் தொட்டிருக்கிறது. இந்தச் செய்கை தமிழ் மக்களை எவ்வளவு ஆத்திரம் கொள்ளச் செய்திருக்கின்றது என்பதை நமக்கு வரும் கடிதங்கள் காண்பிக்கின்றன.

சில ஆண்டுகளுக்கு முன் பாரத சர்க்கார் வெளியிட்ட தபால் பில்லைகளில், தமிழ் நாட்டுக் கவிஞர், கலைஞர் யாரையும் சேர்க்காமல் வட நாட்டுக் கவிஞர்களாகவே வெளியிட்டது பெரும் கிளர்ச்சியை உண்டு பண்ணியது. இப்பொழுது, இந்தச் செய்திப் படம் பெரும் கிளர்ச்சியையும் வருத்தத்தையும் உண்டு பண்ணியிருக்கிறது.

பாரத சர்க்கார் அடிக்கடி இமய முதல் குமரி வரை ஒரே தேசம் என்று சொல்லி வருகிறார்கள். நாம் எல்லோரும் இந்தியர்கள் எனகிறார்கள். ஆனால் இந்தச் சுதந்திரப் போராட்டத்தைப் பற்றிய செய்திப் படத்தில் சுதந்திரத்துக்காக உடல், பொருள், ஆவி அத்தனையும் அர்ப்பணம் செய்த உத்தமத் தென்னாட்டுத் தலைவர்களையே அடியோடு மூடி மறைத்து விட்டார்கள்.

இதனால் தமிழ் மக்கள் அளவு கடந்து உணர்ச்சி வசப்பட்டு மனவருத்தமுற வேண்டாம் என்றுதான் நாம் கேட்டுக்கொள்கிறோம். உண்மை தேசபக்தி, பெரியோர்கள் செய்த தியாகம் ஆகியவற்றை யெல்லாம் மறைத்து விட முடியாது. அது என்றும் ஒளிவீசி வழி காட்டத்தான் செய்யும். இன்றைய சர்க்கார் இப்படி மூடி மறைத்து விட்டதால் நமக்கு நஷ்டம் ஒன்றும் வந்துவிடவில்லை.

பாரத சர்க்கார் இப்படித் தென்னாட்டு மக்களின் உள்ளங்களை நோகும்படி காரியம் செய்து கொண்டே போனால் முடிவில், எதில் கொண்டு போய் விடும் என்று நாம் சொல்லத் தயாராயில்லை. இதனால் கஷ்டமும் நஷ்டமும் அடையப் போகிறவர்கள் பாரத சர்க்காரே ஒழியத் தென்னாட்டவர்கள் அல்ல! இதைச் சொல்ல வேண்டியது நமது கடமை என்றே சொல்லுகிறோம்.

பிரார்த்தனைக் கூட்டம்

— கிண்டி ராஜபவனம் —

காந்தி மண்டபத்தில்

ஆகஸ்ட் 30-ந் தேதி வெள்ளிக்கிழமை மாலை 5-30 மணிக்கு

ஸ்ரீமதி ரங்காயகி கோஷ்டியார் — துதி கீதங்கள்

நாகஸ்வர இன்னிசை - தக்கர்பாபா வித்தியாலய மாணவர்கள், சாரதா வித்தியாலய போதனாமுறை பயிற்சிப் பள்ளி மாணவிகள், நூற்பு யக்ஞம், கீதை பாராயணம், ராமநாம பஜனை

சந்தர்ப்பவாதிகளின் சதி

ரஜனி

நாட்டில் ஒரு பயங்கரமான வகுப்புக் கலகத்தைத் தோற்றுவிக்கவும் அந்த நெருக்கடியைப் பயன் படுத்திக்கொண்டு ஆட்சியைக் கைப்பற்றவும் யு. என். பி. எனப்படும் ஐக்கிய தேசியக் கட்சி தீவிரமாகச் சதி செய்து வருவதை இவ்வாரம் பிரதம மந்திரி திரு பண்டாரநாயகா அம்பலப்படுத்தியிருக்கிறார். போப்பிட்டி என்னுமிடத்தில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் அவர் பேசியபொழுது பாஷைப் பிரச்னையைக் கிளப்பி விட்டவர்களே யு. என். பி. கட்சியைச் சேர்ந்தவர்கள்தானென்றும், வகுப்புக் கலகத்தைக் கிளப்பிவிட்டு, பல்லாயிரக்கணக்கானவர்களைக் கலகத்தில் உயிர் துறக்கச் செய்து அவர்களுடைய பிரேதங்களின் மீது ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்ற யு. என். பி. சதி செய்கிறதென்றும் திரு பண்டாரநாயகா கூறினார். சிங்களத்துடன் தமிழுக்குச் சரிசம அந்தஸ்து அளிக்கப்பட வேண்டுமென்று ஒரு சமயம் யு. என். பி. கட்சி வாதாடியதையும் சென்ற பொதுத் தேர்தலின்பொழுது சிங்களத்தை மட்டுமே ராஜாங்கபாஷையாக்குவோமென்று அவர்கள் மார் தட்டி வீரம் பேசியதையும் பிரதம மந்திரி திரு பண்டார நாயகா குறிப்பிட்டு விட்டு, அத்தகைய சந்தர்ப்பவாதிகளை நம்பினால் நாடு நாசமடைந்து விடுமென்று கடுமையாக எச்சரித்தார்.


தமிழர்களுக்கும் தமிழ் மொழிக்கும் நாட்டில் நியாயமான அந்தஸ்து அளிக்க வேண்டிய அவசியத்தை வற்புறுத்தி விட்டு, "சிங்களத்தைத் தமிழ் மக்களின் தொண்டையில் ஒருபோதும் திணிக்க முடியாது. அவ்விதம் செய்வது தர்மமும் இல்லை. சிங்களம் தெரியாத தமிழர்களை அவர்களுடைய தாய்மொழியில் தங்களுடைய நடவடிக்கைகளைச் செய்து கொள்ள அனுமதிப்பதில் என்ன தவறு இருக்கிறது? சிங்களவர்களின் நலவுரிமையைப் பாதுகாக்கவும் அதே சமயம் தமிழ் மக்களுக்கு அநியாயம் செய்யாமலும் இருக்கவுமே சமஷ்டிக் கட்சியுடன் சமரச ஒப்பந்தம் செய்து கொள்ளப் பட்டது. இந்த ஒப்பந்தத்தை மறுப்பவர்கள் தேசத்துரோகிகள்" என்று திரு பண்டாரநாயகா கூறினார்.

பிரதம மந்திரி இவ்விதம் போப்பிட்டியில் பேசிய அதே நேரத்தில் யு. என். பி. கட்சியினர் கொழும்பில் பிரும்மாண்டமான பொதுக் கூட்டம் நடத்திச் சமரச ஒப்பந்தத்தைப் பலமாகக் கண்டித்தார்கள். அவர்கள் அம்மட்டோடு நிற்கவில்லை. சமரச ஒப்பந்தத்தை ரத்துச் செய்வதற்காகச் சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தவும் சித்தமாயிருப்பதாகச் சொல்லி சத்தியாக்கிரகப் போராட்டத்துக்கு ஒரு நிதி திரட்டவும் அவர்கள் ஆரம்பித்திருக்கிறார்கள். பசசோந்தியைப் போல நடக்கும் யு. என். பி. தலைவர்கள் அவர்கள் விரும்புவதைப் போல் சமரச ஒப்பந்தத்தை ரத்துச் செய்து தமிழர்களுக்கு இந்நாட்டில் எவ்விதமான உரிமையையும் இல்லாதபடி செய்து விட்டால், நாளை தமிழர் உரிமைக்காக யு. என். பி. தலைவர்கள் சத்தியாக்கிரகம் செய்ய முற்பட்டால்கூட ஆச்சரியப் படுவதற்கில்லை யென்று "டைம்ஸ் ஆப் சிலோன்" பத்திரிகை எழுதியிருந்தது. யு. என். பி.யின் இலட்சியமெல்லாம் இந்நாட்டில் தமிழ் மக்களுக்கு உரிமைகள் இருக்கலாமா அல்லது கூடாதா? என்பதில்லை. தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்குமிடையில் எப்படியாவது முடிச்சுப் போட்டு வகுப்புக் கலகத்தைக் கிளப்பிவிட்டு அதன் பயனாக அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டுமென்பதுதான் அவர்கள் எண்ணம். தமிழரசுக் கட்சிக்கும் பிரதம மந்திரிக்குமிடையில் சமரச ஒப்பந்தம் ஏற்பட்டது, யு. என். பி.க்குப் பெருத்த ஏமாற்றத்தை விளைவித்து விட்டது.

தமிழரசுக் கட்சி சத்தியாக்கிரகம் செய்யத் திட்டமிட்ட பொழுது சமரச உடன்பாட்டுக்கு வரவேண்டுமென்று அவர்களை வற்புறுத்திய யு. என். பி. தலைவர்கள், சமரச உடன்பாடு ஏற்பட்ட பின்னர் அந்த உடன்பாட்டை ஆட்சேபித்துச் சத்தியாக்கிரகம் செய்வோமென்கிறார்கள்!

*   *   *

தாமரவல்லித் தோட்டம் என்ற ஒரு இலங்கைத் தோட்டத்தில் இவ்வாரம் துப்பாக்கிப் பிரயோகம் நடந்து மூவர் காயம்



திருச்சிராப்பள்ளி ஸ்ரீ B. S. குப்புசாமி செட்டியாரின் குமாரியும், சேபின் பிரிண்டர்ஸ் அதிபர் ஸ்ரீ K. பாலசுந்தரம் அவர்களின் சகோதரியுமான செல்வி சந்திர புஷ்பத்துக்கும், சென்னை பிரபல ஏற்றுமதி இறக்குமதி வியாபாரிகள் G. K. R. செட்டி அண்டு கோ. உரிமையாளர் ஸ்ரீ G. K. ராமனுதன் செட்டியார் அவர்கள் குமாரன் செல்வன் G. R. ஸ்ரீநிவாஸனு B. Sc.க்கும் 15-8-57 சுதந்திரத் திருநாளன்று சென்னையில் திருமணம் சிறப்பாக நடந்தேறியது. மறுநாள் 16-8-57 அன்று நடந்த வரவேற்பில் ஸ்ரீ கண்டசாலா கோஷ்டியாரின் இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது. திருமணத்திற்கும் வரவேற்பு வைபவத்திற்கும், ஏராளமான வர்த்தகப் பிரமுகர்களும், அன்பர்களும் வந்திருந்து மணமக்களை வாழ்த்திச் சிறப்பித்தனர். வாழ்க, மணமக்கள்!

அடைந்தார்கள். இத்தோட்டத்தில் முதலாளிமாரின் போக்கை ஆட்சேபித்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸையும் லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியனையும் சேர்ந்த தொழிலாளர் சென்ற முப்பது நாட்களுக்கு மேலாக வேலை நிறுத்தம் செய்து வந்தார்கள். இந்த வேலை நிறுத்தத்தை முறிக்கத் தோட்ட நிர்வாகம் பல உபாயங்களைக் கையாண்டதாயும், வேலை செய்ய வெளியார்களை அழைத்து வந்ததில் கைகலப்பு ஏற்பட்டுத் துப்பாக்கிப் பிரயோகம் நடந்ததாயும் கூறப்படுகிறது. காயமடைந்தவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை ஆட்சேபித்தும், தாமரைவல்லித் தோட்டத்தில் வேலைநிறுத்தம் செய்பவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கவும் நாவலப்பிட்டி ஜில்லா முழுவதிலும் உள்ள சுமார் இருபதினாயிரம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். தோட்ட முதலாளிமார் சம்மேளனம் இந்தத் தகராறில் தலையிட்டு ஒரு சமரச முடிவைச் செய்யாதபட்சத்தில் மற்றும் பல ஜில்லாக்களுக்கும் வேலை நிறுத்தம் பரவும் போல் இருக்கிறது. வேலை நிறுத்தத் தகராறுகளைச் சமரசமாகப் பேசித் தீர்க்காமல் துப்பாக்கிப் பிரயோகம் செய்யும் முறையைத் தோட்ட முதலாளிகள் கையாளுவது அருவருக்கத் தக்கதென்று ஸ்ரீ எஸ். தொண்டமான் அழுத்தமாகக் கண்டித்திருக்கிறார்.

இலங்கை வானொலியின் வர்த்தக ஒலிபரப்பில், இந்தியாவுக்காக ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகளின் தரத்தைப் பற்றிக் கடுமையாக ஆட்சேபித்து இந்திய யூனியன் ஒலிபரப்பு மந்திரி ஸ்ரீ கேஸ்கர் இலங்கை ஒலிபரப்பு மந்திரி ஸ்ரீ மரைக்காயருக்கு ஒரு கடிதம் அனுப்பியிருக்கிறார். இந்திய வானொலியில் 'டப்பா சங்கீதம்' தடை செய்யப்பட்டிருக்கையில் இலங்கை வானொலியில் வர்த்தகப் பகுதி இந்த டப்பா சங்கீதத்தையே இந்தியாவுக்கு ஒலிபரப்பி வருகிறது. மோசமான இப்பாட்டுகள் ஒலிபரப்பப்படுவதை இலங்கையிலுள்ள பத்திரிகைகளே ஒருமுகமாகக் கண்டித்து வருகின்றன. அந்த நிலைமையில் இந்திய யூனியன் மந்திரி ஒரு ஆட்சேபக் குறிப்பு அனுப்பியதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஒரு நாடு விரும்பாத விஷயங்களை அந்நாட்டுக்கு ஒலிபரப்புவது காமன்வெல்த் ஒலிபரப்பு உடன்பாடுகளுக்கு விரோதமானது என்பதையும் ஸ்ரீ கேஸ்கர் தமது ஆட்சேபணைக் குறிப்பில் எடுத்துக் காட்டியுள்ளார்.

ஆனால் இலங்கை வானொலியின் ஒலிப்பதிவின் தரம் மோசமாயிருப்பதாக ஸ்ரீ கேஸ்கர் சொல்லியிருப்பதைப் பலமாக ஆட்சேபித்து இலங்கை மந்திரி ஸ்ரீ மரைக்காயர் ஒரு பதில் குறிப்பை இந்திய அரசாங்கத்துக்கு அனுப்பி வைக்கத் தீர்மானித்திருக்கிறார். இந்தியாவின் ஆட்சேபத்துக்குரிய நிகழ்ச்சிகளை இலங்கை வானொலி நிறுத்தமாட்டாதென்று அவர் அறிவித்திருக்கிறார். இதற்கிடையில் வர்த்தக ஒலிபரப்பைச் சீர்திருத்த ஒரு விசேஷ விசாரணைக் கமிட்டியையும் அவர் நியமித்திருக்கிறார்.

''ஹிந்து'' பத்திரிகையில் துணை ஆசிரியராகப் பலகாலம் இருந்து அரும்பணி புரிந்து விட்டு, சமீபத்தில் ஓய்வுபெற்ற ஸ்ரீ ரகுநாதய்யர் தமது பால்ய நண்பருக்கு அறுபதாண்டு நிறைவுவிழா கொண்டாடுவதைப்பற்றி மகிழ்ந்து எழுதுகிறார். —ஆசிரியர்

மகாலிங்க சாஸ்திரிகள்

நா. ரகுநாதன்

தற்காலம் செல்வாக்குள்ள பல தப்பு அபிப்பிராயங்களில் ஸம்ஸ்கிருதம்செத்த பாஷை என்பது ஒன்று. ஸம்ஸ்கிருதத்துக்கும் தமிழுக்கும் பிணைப்போ ஒற்றுமையோ இருக்க முடியாது என்பது மற்றொன்று. பழமையும் புதுமையும் எண்ணெயும் தண்ணீரும் போல் ஒரு நாளும் கலவாது என்பது மூன்றாவது. திரு மகாலிங்க சாஸ்திரிகள் இந்தக் கொள்கைகள் எல்லாவற்றுக்கும் முரணான நம்பிக்கையைக் கைப்பிடித்து வெற்றிபெற்ற கலைஞரும் எழுத்தாளருமாவார் எனக் கூறினால் அது மிகையாகாது. இவருடைய அறுபதாவது ஆண்டு விழாவை ஒரு தமிழ்த் திருவிழாவாகவே கொண்டாடுவது நியாயம்.

ஸம்ஸ்கிருதத்தையும் சாஸ்திரத்தையும் குலதனமாகப் பெற்ற பெருங்குடியில் பிறந்த உத்தமர். நல்லொழுக்கத்தால் மேம்பட்டு விளங்கிய அப்பய்ய தீக்ஷிதர் கவிச்சக்கரவர்த்தியும் திருமலை நாயகருக்கு அமைச்சருமான நீலகண்ட தீக்ஷிதர், இவர்கள் வம்சத்தைச் சேர்ந்தவர். ராஜு சாஸ்திரிகள் என்று புகழ் வாய்ந்த மன்னார்குடி தியாகராஜ மகியின் கொள்ளுப் பேரர். சாஸ்திரம், ஸாஹித்யம், ஸங்கீதம் ஆகிய மூன்று துறைகளிலும் வல்லமை பெற்ற மஹாமஹோபாத்யாய யக்ஞஸ்வாமி சாஸ்திரிகளின் மூத்த பிள்ளை. இவருக்கு ஸம்ஸ்கிருதப் படிப்பு விளையாட்டாகவே வந்து விட்டது எனலாம். காளிதாஸனுடைய ''மாளவிகாக்னிமித்ரம்'' என்ற ஒரு நாடகத்தை மட்டுமே தாம் முறையாகப் பாடம் கேட்டதாக அவர் சொல்லிக் கேட்டிருக்கிறேன். சுமார் பதினைந்து வயதிலேயே ஸம்ஸ்கிருதத்தில் கவனம் செய்ய ஆரம்பித்து விட்டார். தமிழைத் தனியாகப் பள்ளிக்கூடத்தில் கற்காவிடினும் பல வருஷங்களாகச் சங்கீதத்தைப் பற்றிய கட்டுரைகளும் சிறுகதைகளும் இரண்டு நாவல்களும் தமிழில் எழுதியிருக்கிறார். ஆங்கிலம் சிறப்பாகக் கற்று, எம். ஏ., பி. எல். பட்டங்கள் பெற்றுச் சிலகாலம் வக்கீலாக இருந்து, பிறகு அண்ணாமலை சர்வகலாசாலையிலும் சமீபகாலம் வரையில் தர்மபுர ஆதீனக் கல்லூரியின் பிரின்ஸிபலாகவும் பணியாற்றி இப்பொழுது ஓய்வு பெற்றுள்ளார். சங்கீத சாஸ்திரத்தை நுண்ணறிவோடு கற்றுப் பழுத்த அனுபவம் பெற்றதின் பயனாகத் தம் தகப்பனாருடைய ஸாஹித்யங்களை ஸ்வரப் படுத்தி வெளியிட்டதுடன் தாமும் பல ராகங்களில் பாவம் ததும்பும் ஸாஹித்யங்களைச் செய்து சில சிஷ்யர்களுக்கும் போதித்திருக்கிறார். பால்யத்தில் புல்லாங்குழலில் தேர்ச்சிபெற்று இனிமையாக வாசித்து வந்தார்.

திரு மகாலிங்க சாஸ்திரிகள் ஸம்ஸ்கிருதத்தில் ரஸம் படைத்த எல்லாத் துறைகளிலும் கிரந்தங்கள் இயற்றியிருக்கிறார். பாஸ நாடகங்களின் கதாஸாரத்தை எளிய வசன நடையில் இவர் தந்திருப்பது கல்லூரி மாணவர்களுக்குப் பெரிதும் பயன்பட்டு வருகிறது. செய்யுள் நடையில் சிறிய காவியங்கள், பெரிய காவியங்கள், இசையுடன் இணைந்த ஸாஹித்யங்கள், இன்னும் பலவும் செய்திருக்கிறார். ஒளவையின் அறிவுப் பாக்களை அழகாகஸம்ஸ்கிருதத்தில் மொழி பெயர்த்திருக்கிறார்.



ஸ்ரீ மகாலிங்க சாஸ்திரிகள்

நாடக வகையில் சுமார் முப்பது வருஷங்களுக்கு முன்னமேயே இவரால் இயற்றப்பட்டு ஸம்ஸ்கிருத ஸேவா ஸமிதியின் பரிசு பெற்ற ''பிரதி ராஜஸூயம்'' என்ற ஸம்பூரண நாடகம் இப்பொழுதுதான் அச்சாகி வருகிறது. இந்த நாடகத்தைப் போலவே மற்றக் கிரந்தங்களில் பெரும்பான்மையையும் இளமையிலேயே இவர் செய்து முடித்தது முக்கியமாகக் குறிப்பிடவேண்டிய விஷயம். நல்ல வேளையாக ஸம்ஸ்கிருதத்தைப் போலல்லாமல், தமிழில் எழுதுவ

தற்குச் சாஸ்திரியாருக்குப் பத்திரிகைகளும் விசேஷ மலர்கள் பிரசுரிப்பவர்களும் ஊக்கம்தந்ததால் அவருக்குத் தமிழில் மனத்தைக் கவரும்படி எழுதும் சக்தி இருப்பது எளிதில் தெரிய வந்தது. இரண்டு பாஷைகளிலும் (ஏன், இரண்டென்ன, ஆங்கிலத்தைச் சேர்த்து மூன்றென்றே சொல்லலாம்) இவருடைய சிறந்த ஆன்மீயகுணங்கள் பிரதிபலித்து, இவர் சிருஷ்டிகளுக்குச் சிறப்புத் தருகின்றன. தெளிவு, காதிற்கினிய ஓசை, மனத்தைத் தொடும் அர்த்தபுஷ்டி இவைகள் நடைக்கு அழகு செய்கின்றன. வால்மீகி, காளிதாஸன் முதலிய மஹா கவிகளின் கற்பனைக் கடலில் ஊறினவரானதால் அவர்களுடைய பண்பு இவர் எழுத்தில் ஊடுருவி நிற்கக் காணலாம். இளநகையும், காவிரிக் கரையில் உதித்த நாசூக்கான பேச்சும் இவருடைய தமிழ்க் கதைகளைப் படிப்போருக்குப் பொழுது போவதே தெரியாமல் செய்துவிடும். குடும்ப வாழ்க்கையின் சிக்கல்களையும் சமூகத்தில் கால விளைவால் உண்டாகும் மாறுதல்களையும் நேர்மையுடனும் உள்ளன்புடனும் சித்திரிக்கும் சாமர்த்தியத்தைத் திரு மகாலிங்க சாஸ்திரிகளுடைய நாவல்களில் காணலாம்.

எல்லாவற்றுக்கும் அடிப்படையானது இவருடைய ஞானத்தோடு ஒன்றிய சாந்த குணம். இதையே பண்பட்ட உள்ளத்தின் மேலான விளைவு என்று சொல்லலாம். பால்யத்தில் எழுதிய ஸம்ஸ்கிருதக் கவிதைகளிலும் வயதும் உலக அனுபவமும் நிறைந்தபின் எழுதிய தமிழ்க் கதைகளிலும் இவர், உயர்ந்த லட்சியவாதியாகவும் ரஸானுபவத்தில் சிறந்த ஸஹ்ருதயராகவும், நண்பர் கோஷ்டியில் பலராலும் வேண்டப்பட்ட ஸரஸியாகவும், பெருமதிப்பை யடைந்து பண்பட்ட வாழ்க்கைக்கு ஒரு எடுத்துக் காட்டாகவும் இருக்கிறார். ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகளின் பூரண அனுக்ரஹத்துக்குப் பாத்திரமானவர். இப்பெருந்தகை விளம்பரம் எதுவுமின்றி ஆற்றிவரும் கலைப் பணியையும் வழங்கியிருக்கும் கவிச் செல்வத்தையும் போற்றி இவர் தற்காலம் வசிக்கும் மாயூரத்துப் பெருமக்களும் சென்னை ஸம்ஸ்கிருத ஸேவா ஸமிதியாரும் ஏனையோரும் திரு மகாலிங்க சாஸ்திரிகளுடைய அறுபதாண்டு நிறைவை ஒட்டி அன்னாரைக் கௌரவிக்க முன் வந்தது ரசிகர்கள் யாவருக்கும் பேருவகை தரும்.

அருள் வாக்கு

வேதத்துக்கு அர்த்தம் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் வேதத்தை நன்கு பாராயணம் செய்திருக்க வேண்டும். மேலும், அதன் பொருள் அறிந்துகொள்ள, ஆழ்கடலிலே முத்து குளிப்பது போல, சம்ஸ்கிருத மொழியிலே ஆழ்ந்த ஞானம் வேண்டும்; சாஸ்திரத்திலே சிறிதளவாவது பரிச்சயமும் இருக்க வேண்டும். இவ்வளவும் இருந்தால்தான் வேதத்தை நன்கு உணர முடியும்.

இப்போது வெறுமனே பி. ஏ. வரை சிலர் வாசிக்கிறார்கள். ஒரு கடிதம் வந்தால்கூட அவர்களுக்கு அதைச் சரியாக வாசிக்கத் தெரியவில்லை. இந்தப் படிப்புக்குப்பதினைந்து, பதினாறு வருஷங்களாகின்றன என்று சொல்லிக் கொள்கிறார்கள். இப்படிப் பதினைந்து, பதினாறு வருஷங்களாகியும் மாணவர்களுக்கு ஒரு வித்தையும் வருவதில்லை. இவ்வாறு நாட்கள் வீணாகிப் போவதைக் காட்டிலும், பத்துப் பன்னிரண்டு வருஷங்கள் வேத அத்யயனம் செய்தால் வேதம், சாஸ்திரம் இரண்டையும் கற்றுக் கொண்டு விடலாம்.

— ஸ்ரீ சங்கராச்சாரியார், காமகோடிபீடம்



இதோ
உங்களுக்கு
முற்றிலும் புதிய
மாதிரியான
இரு பவுடர்கள்
"GOKUL"
SANTOL
TOILET POWDER
GOKUL
SANDAL
TOILET POWDER
ஸாண்டால்
சந்தனத்துடன் கூடிய
டால்கம் பவுடர் ...
ஸாண்டல் வுட்
டாய்லட் பவுடர்
சுத்தமான தனி
சந்தனத்தை
மென்மையாக்கப்பட்டது.
டி.எஸ்.ஆர். & கோ
கும்பகோணம்
A.K.GOPAL

மரகதக் கோட்டை



முன்னுரை

பேராசிரியர் கல்கி அவர்கள் தமது 'மோகினித் தீவு' என்ற கதையின் பின்னுரையில் எழுதியிருப்பதையே இன்று நான் இக் கதையின் முன்னுரையாகக் கூற விரும்புகிறேன்.

கடற்கரை மணலில் கல்கி அவர்களும் அவரது நண்பரும் அமர்ந்திருக்கிறார்கள். கல்கியின் நண்பர் அவருக்கு மோகினித் தீவு கதையைக் கூறி முடித்து விட்டார். கதை உலகிலிருந்து நண்பர் திரும்பி விட்டார். ஆனால் கல்கி அவர்கள் மட்டும் மோகினித் தீவிலிருந்து வந்தபாடில்லை. அவர் மனம் அந்த மோகனத் தீவிலேயே லயித்துவிட்டது.

"கதை முடிந்து விட்டது. போகலாம்" என்று கூறுகிறார் நண்பர்.

"உங்கள் மோகினித் தீவை எனக்கும் பார்க்க வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது. ஒரு தடவை என்னையும் அழைத்துப் போகிறீர்களா?" என்று கல்கி அவர்கள் கேட்கிறார். அகக் கண்ணால் கண்ட காட்சியைப் புறக் கண்ணாலும் காண விரும்பினார்.

"பேஷாக அழைத்துப் போகிறேன். ஆனால் என் கதையை நீர் நம்புகிறீரா? கேட்டவர்களில் அநேகம் பேர்கள் நம்பவில்லை!" என்கிறார் நண்பர்.

"நம்பாதவர்கள் கிடக்கிறார்கள். அவர்கள் கொடுத்து வைத்தது அவ்வளவுதான். நான் நிச்சயமாக நம்புகிறேன்" என்று கல்கி அவர்கள் அழுத்தம் திருத்தமாக நண்பருடைய கேள்விக்குப் பதில் உரைக்கிறார்.

இதன் பின் கல்கி அவர்கள் தம் நண்பர் கூறி வந்த வரலாற்றைப் பற்றி, தமது சிந்தனையில் எழுந்த அபிப்பிராயத்தை 'மோகினித் தீவு' புத்தகத்தின் கடைசிப் பாராவாக எழுதுகிறார். அதனை அப்படியே பெயர்த்துக் கொடுத்திருக்கிறேன்.

"சிறிது யோசித்துப் பார்த்தால் அந்த நண்பருடைய கதையில் அவநம்பிக்கை கொள்ளக் காரணம் இல்லைதானே? வெளி உலகில் நடைபெறும் நிகழ்ச்சிகள் மட்டுமே உண்மையானவை என்று நாம் எதற்காகக் கருத வேண்டும்? கவிஞன் ஒருவனின் கற்பனை உள்ளத்தில் நிகழும் அற்புத சம்பவங்களை உண்மையல்ல என்று ஏன் சொல்ல வேண்டும்?"

இந்த உயர்ந்த கருத்தை மனத்தில் நன்கு பதிய வைத்துக் கொண்டு, பிறகு இந்தக் கதையைப் படிக்க ஆரம்பிக்குமாறு நேயர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

1

மாலை வேளை. தூரத்தில் தெரிந்த சில குன்றுகளுக்குப் பின்னால் சூரியன் மறைய ஆரம்பித்தான். இருபுறத்திலும் மரங்கள் அடர்ந்து விளங்கிய அழகான சாலை வழியே ஒரு மனிதரும் ஒரு பெண்ணும் நடந்து சென்று கொண்டிருந்தார்கள். அந்த மனிதருக்குச் சுமார் ஐம்பது வயதிருக்கும். அவர் அருகே நடந்து வந்த பெண்ணின் தகப்பனாராகக் காணப்பட்டார். அந்தப் பெண் மிகவும் களைப்புற்றிருந்தாள் என்பதை அவள் நடையிலிருந்த தடுமாற்றத்திலிருந்து புரிந்து கொள்ள முடிந்தது. ஆனால் அவள் முகத்தில் சோர்வின் அறிகுறிகளைக் காண முடியவில்லை. அப்படி அவள் முகம் உண்மையில் சோர்வின் அறிகுறிகளைக் காட்டுவதாயிருந்தால்......, அப்பப்பா! அதைப் பற்றி எண்ணவே முடியாது! ஆம். சோர்வுற்ற முகமே இப்படி அசாதாரணமான பொலிவு பெற்று விளங்கியது என்றால் அவள் இளைப்பாறிப் பின் அன்றலர்ந்த மலர் போல் எழும் போது?... கற்பனைக் கெட்டாது என்ற காரணத்தால் முகவர்ணனையை விட்டு விடுவோம்!

"அப்பா! கால்கள் கெஞ்சுகின்றன. இனி என்னால் ஒரு அடிகூட எடுத்து வைக்க முடியாது" என்றாள் அந்தப் பெண்.

"அம்மா! எப்படியோ, நான்கு நாட்கள் பிரயாணம் செய்து தார்த்தா மலையைக் கடந்து திருமுனைப்பாடி நாட்டிற்கு வந்து விட்டோம். இதன் தலைநகரான திருமுக்கூடலை அடைந்து விட்டால் எங்கேயாவது ஒரு வேலை தேடிக்கொள்வேன். பின்னர் வருவாய்க்குத் தக்கபடி நிம்மதியாக வாழ்க்கை நடத்துவோம். தைரியமாக இரு அம்மா!" என்றார் தந்தை.

"அப்பா! தைரியத்துக்கு ஒன்றும் குறைவில்லை. என்னுடைய கால்களில்தான் பலம் இல்லை. திருமுக்கூடலுக்கு இன்னும் எவ்வளவு தூரம் இருக்கிறது?"

"இன்னும் பன்னிரண்டு காததூரம் இருப்பதாக அந்த வண்டிக்காரன் கூறினான். இப்போது இரண்டு காத தூரமாவது நடந்திருப்போம் என்று நம்புகிறேன்."

"அப்பா! அந்த மாட்டு வண்டிக்காரன் நன்றாக இருக்க வேண்டும். ஏதோ சிறிது தூர



மாவது வண்டியில் ஏற்றிக் கொண்டு வந்தானே. அது போகட்டும். இங்கு ஏதோ சத்திரம் இருப்பதாகவும் இரவு அதில் தங்கி நாளைக் காலையில் மறுபடியும் பயணத்தைத் தொடங்கலாம் என்றும் கூறினானே?''

''ஆமாம், அம்மா! இன்னும் ஒரு காத தூரத்தில் சத்திரம் தென்படும் என்று நம்புகிறேன். உனக்கு மிகவும் களைப்பாக இருந்தால் இந்த மரத்தடியில் சிறிது நேரம் உட்கார்ந்திருந்து விட்டுப் போகலாம்'' என்றார் அன்புத் தந்தை.

அப்படியே இருவரும் உட்கார்ந்தார்கள். மேற்குத் திசையில் சூரியன் மறைந்து விட்டான். ஆதவனின் பொன் ஒளி மறைந்து ஆகாயம் முழுவதும் சிவந்து காணப்பட்டது.

''அப்பா! சூரியன் மறையும் இந்தக் காட்சியைப் பார்த்தால் உங்களுக்கு என்ன தோன்றுகிறது?'' என்று கேட்டாள் மகள்.

தகப்பனார் யோசித்தார். ''போர்க்களத்தை நினைவுபடுத்துகிறது. குழந்தாய்! இரண்டு மாபெரும் சைனியங்கள் மோதிக் கொண்டன. உக்கிரமான போர் நடந்தது. பல்லாயிரக் கணக்கானவர்கள் கொல்லப்பட்டனர். இரத்த ஆறு ஓடியது'' என்று கூறி நிறுத்தினார் தந்தை.

''நான் அப்படி எண்ணவில்லை அப்பா! இரவு என்ற அரக்கனும் பகல் என்ற அரசகுமாரனும் சண்டையிட்டார்கள். உலக நன்மைக்காக அந்த அரச குமாரன் சண்டையிட்டான். ஆனால் அரக்கனே வெற்றி பெற்றான். அரசகுமாரனுடைய இரத்தம் ஆறாகப் பெருகியது. அரக்கன் வெற்றி பெற்றதும் அவனுடைய ஆசை நாயகிகளான தாரகைகள் தோன்றினார்கள். உலகை ரட்சிக்க அல்லவா அரச குமாரன் சண்டையிட்டான்? ஆதலால் உலகை நோக்கி இந்தத் தாரகைகள் கண் சிமிட்டி ஏளனம் செய்கிறார்கள்.''

''வர்ணனை பிரமாதம்! எந்தக் கவிஞனும் இரவை இப்படி வர்ணித்ததே இல்லை. அற்புதம் அற்புதம்!'' என்ற மூன்றாவது குரலைக் கேட்டதும் தந்தையும் மகளும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார்கள்.

2

கட்டுக்கோப்பான உடலுடன் ஒரு வாலிபன் நின்று கொண்டிருந்தான். அவனுடைய முகத்தில் கண்களுக்குக் கீழே உள்ள பாகம் ஒரு கரிய துணியினால் மூடப்பட்டிருந்தது. கண்களுக்கு மேலே உள்ள பாகத்தை நெற்றி உள்பட ஒரு வெண்மையான துணி மறைத்தது. அவன் முகத்தில் மூடி மறைக்கப்படாத பாகம், அவனுடைய அகன்ற கண்கள்தான்.

அந்தக் கண்களுக்குத்தான் என்ன அபாரமான சக்தி! அந்தப் பெண்ணின் முகத்தை ஏன் அப்படி உற்று நோக்குகிறது? அந்தக் கண்களின் பார்வை அவளது உடலை ஊடுருவிச்



சென்று அவன் மனத்தை அறிய அல்லவோ முயற்சி செய்கிறது? அந்த முயற்சியில் எளிதில் வெற்றி பெறும் சக்தியும் அக் கண்களுக்கு இருந்தது!

முகமூடி மனிதன் தொடர்ந்து கூறினான்: "ஐயா! நானும் எவ்வளவோ கவிகளின் பாடல்களையும் வர்ணனைகளையும் கேட்டிருக்கிறேன். எல்லோரும் இரவைக் காதலர்களுக்குப் போதை அளிக்கும் மது என்றும், தாரகைகள் பெண்களின் அழகிய ஒளி வீசும் கண்கள் என்றுமே வர்ணித்திருக்கிறார்கள். ஆனால் ஒருவன் கூட இரவை அரக்கனுக்கும் தாரகைகளை அரக்கிகளுக்கும் ஒப்பிட்டதில்லை. ஒன்றும் தெரியாத சுத்த மடையர்கள்."



இந்தக் கேலிப் பேச்சைக் கேட்டுக் கொண்டே இருந்த அந்தப் பெண்ணின் அழகிய கன்னங்கள் சிவந்தன.

"ஐயா! என்னுடைய வர்ணனையையும் சிறிது கேளுங்கள். எல்லாரும் மாலை நேரத்தில் வானம் சிவந்து காணப்படுவதைக் கண்டு, அதை ரத்த வெள்ளம் ஓடுவதற்கு ஒப்பிடுகிறார்கள். ஆனால் நான் சொல்கிறேன். பிரும்மா உங்கள் பெண்ணின் அதரங்களிலிருந்தும் அவள் வெட்கப்பட்டு முகம் சிவக்கும்போது அவள் கன்னங்களிலிருந்தும் சிவப்பு வர்ணத்தைக் குழைத்து எடுத்து வானத்தில் வண்ண ஓவியம் தீட்டுகிறார்" என்று சொல்லி முடித்தான் முகமூடி வீரன்.

இதைக் கேட்டதும் அந்தப் பெண்ணின் சிவந்திருந்த முகம் மேலும் சிவந்ததோடு அந்த வாலிபனை ஏறிட்டுப் பார்க்கமுடியாமல் பூமியை நோக்கித் தாழ்ந்தது.

தந்தை கூறினார்: "ஐயா! தாங்கள் யாரோ எனக்குத் தெரியாது. உமது உடையைப் பார்த்தால் கள்வனைப் போலத் தோற்றம் அளிக்கிறீர்கள். உமது பேச்சு ஒரு விதத்தில் பார்த்தால் உயர்தரமாகவும் மற்றொரு விதத்தில் விரசமாகவும் படுகிறது. நீர் கள்வனாக இருக்கும் பட்சத்தில் எங்களிடம் நீங்கள் களவாடுவதற்கு ஒன்றும் இல்லை. நாங்கள் பரம ஏழைகள். திருமுக்கூடலுக்குப் போகும் வழியில் இளைப்பாறுகிறோம். ஆகவே தயவுசெய்து எங்களைத் தொந்தரவு செய்யாமல் போய் விடுவதுதான் நல்லது. இல்லையேல் உம்மோடு நான் இப்போது சண்டையிடும்படி நேரிடும்."

மகள் திடுக்கிட்டவளாய்த் தந்தையை நெருங்கினாள். பலம்பொருந்திய அவர் கரங்களைத் தன்னுடைய மென்மையான விரல்களால் இறுகப் பற்றிக் கொண்டாள்.

முகமூடி மனிதன் பெரிதாகச் சிரித்தான். "ஐயா! வயதான கிழவரிடமும் ஒரு பெண்ணிடமும் சண்டை போடும் அளவுக்கு நான் கோழையாகி விடவில்லை. நீங்கள் கூறியதில் முன் பகுதி சரி. பின் பகுதி தவறு. என்னைக் கள்ளன் என்றீர்கள். ரொம்ப சரி. ஆனால் உங்களிடம் களவாடுவதற்கு ஒன்றுமில்லை என்றீர்களே அது தவறு. இந்தக் கள்வன் உமது பெண்ணைக் களவாட வந்திருக்கிறான்" என்று கூறி விட்டு மீண்டும் சிரித்தான்.

முதியவர் முதலில் திடுக்கிட்டவராகக் காணப்பட்டார். பின்னர் கோபமும் ஆங்காரமும் அவரை வந்தடைந்தன. அளவற்ற கோபத்தால் விழி சிவக்க இடையிலிருந்த வாளைச் 'சட்'டென்று உருவினார்.

அந்த முகமூடி மனிதன் சிரிப்பதை நிறுத்தினான். "ஐயா! உம்மோடு சண்டையிட நான் தயாராக இல்லை. அதற்கு என்னிடம் வாள்கூட இல்லை. நான் கூறியதை நீங்கள் தவறுதலாக எடுத்துக் கொண்டதற்காக வருந்துகிறேன். ஆரம்பத்திலிருந்தே கவிகளின் மொழியில் நாம் பேசி வந்ததால் அப்படிக் கூறினேன். உமது பெண்ணை நான் நிச்சயம் அடைந்தே தீருவேன். ஆனால் அதற்காகக் கீழ்த்தரமான முயற்சிகளில் இறங்க மாட்டேன். இது சத்தியம். என்னை நம்புங்கள்" என்றான். தந்தையும் மகளும் இந்த விந்தை மனிதனை மிகுந்த ஆச்சரியத்துடன் பார்த்தார்கள்.

முகமூடி மனிதன் மௌனத்தைக் கலைத்தான். "நீங்கள் இருவரும் களைத்திருக்கிறீர்கள். இங்கேயே இளைப்பாறுங்கள். நான் போய் இன்னொரு குதிரை கொண்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டுச் சிறிது தூரத்தில் புல் மேய்ந்து கொண்டிருந்த தன் குதிரையின்மீது லாகவமாகத் தாவி ஏறிச் சென்றான். சிறிது நேரத்தில் இன்னொரு குதிரையுடன் திரும்பி வந்தான். தான் கீழே இறங்காமலேயே பெரியவரிடம் அந்தக் குதிரையின் லகானைக் கொடுத்தான்.

அருகே இருந்த பெண்ணின் நுண்ணிய இடையைச் சுற்றித் தனது பலம் பொருந்திய இடது கரத்தை வளைத்துத் தன் குதிரைமீது ஆரோகணித்தான். இப்படி அவன் செய்தது பெரியவர் சௌகரியமாகப் பிரயாணம் செய்யட்டும் என்ற தயாள சிந்தையாலா? அல்லது அந்தப் பெண்ணைத் தன் அருகே அமர்த்திக் கொள்ள வேண்டும் என்ற பேராசையாலா? என்று தீர்மானிப்பது கடினமாக இருந்தது. முகமூடி வீரனும் பெண்ணும் ஏறிய குதிரை முன்னே விரைந்து செல்லப் பெரியவர் அவர்களைப் பின்தொடர்ந்தார்.

3

முன்னே சென்ற வீரன் சாலையோடு திருமுக்கூடலுக்குச் செல்வதற்குப் பதிலாக நார்த்தா மலைச்சாரலை நோக்கிச் செல்வதைப் பெரியவர் கவனித்தார். சாலையை விட்டு வெகு தூரம் வந்து விட்டார்கள். போகப் போகக் குதிரையைச் செலுத்துவதே அவ

ருக்குக் கடினமாக இருந்தது. கரடுமுரடான அந்தப் பிரதேசத்தில் முட் செடிகளும் புதர்களும் அடர்ந்து வளர்ந்து பிரயாணத்தைத் தடை செய்தன.

ஆனால் முன்னே சென்ற வீரன் இவற்றால் பாதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அடிக்கடி அப்பிரதேசத்தில் குதிரையைச் செலுத்திப் பழக்கப்பட்டதாலோ என்னவோ மிக லாவகமாகவும் விரைவாகவும் சென்றுகொண்டிருந்தான். அவனைப் பின்தொடர்ந்து செல்வது பெரியவருக்கு மிகக்கடினமாக இருந்தது.

சுமார் அரை நாழிகைஇப்படிப் பிரயாணம் செய்த பிறகு ஒரு மலை அடிவாரத்தை அவர்கள் அடைந்தார்கள். ஒரே முட்புதராகவும் பாறைகளாகவும் தோன்றிய அந்த இடத்தில் சில புதர்களை விலக்கிக் கொண்டு வீரன் செல்ல, பெரியவரும் பின் தொடர்ந்தார். அவருக்கும் அவரது பெண்ணுக்கும் அங்கு ஒரு பெரிய அதிசயம் காத்திருந்தது.

வனாந்திரமான பிரதேசம் என்று அவர்கள் எண்ணியிருந்த அந்த இடத்தில் ஒரு பெரிய ஏரியும் அதைச் சுற்றி நிழல் தரும் சில மரங்களும் காட்சி அளித்தன. சற்றுத் தூரத்தில் சிறிது பாழடைந்து போயிருந்த ஒரு கோட்டையும் தென்பட்டது. ஏரியைச் சுற்றி இருந்த புல் வெளியில் பல இளைஞர்கள் அமர்ந்து அளவளாவிக் கொண்டிருந்தனர். ஆனால் ஒரு வாலிபனுடைய முகத்தைக் கூடப் பார்க்க முடியவில்லை. அனைவருடைய முகங்களும் கீழ் பாகத்தில் கரிய துணியாலும் மேல் பாகத்தில் வெண்மையான துணியாலும் மூடி மறைக்கப்பட் டிருந்தன.

பெரியவரையும் அவர் மகளையும் அழைத்து வந்த வீரன் கீழே இறங்கியதும் இளைஞர்கள் அனைவரும் அவனைச் சூழ்ந்து கொண்டார்கள். வீரன் பேச ஆரம்பித்தான். அவனுடைய பேச்சு அவன் அந்த வாலிபர்களின் தலைவன் என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டியது.



"மரகதக் கோட்டைக்கு இரண்டு விருந்தாளிகளை அழைத்து வந்திருக்கிறேன். விருந்தாளிகளிடம் மரியாதையாக நடந்து கொள்ள வேண்டியது நம் கடமை. சிறிது காலம் அவர்கள் இங்கு இருப்பார்கள். அதில் உங்களுக்கு ஆட்சேபனை ஏதும் இராது என்று நம்புகிறேன்" என்றான் தலைவன்.

வாலிபர்கள் பதில் ஏதும் கூறவில்லை. அவர்களுடைய முகத்தைப் பார்க்க முடியாவிடினும் அவர்களுடைய கண்களில் தோன்றிய சந்தேகப் பார்வையைக் கவனியாமல் இருக்க முடியாது.

அதைக் கவனித்ததால்தானோ என்னவோ தலைவனுடைய உதவியுடன் குதிரையிலிருந்து கீழே இறங்கிய பெண் "அப்பா! நாம் இங்கு இருப்பது சரியல்ல. இவர்கள் நம்மை விரும்பவில்லை. நம்மை இங்கு அழைத்து வந்த இவருக்கு நன்றி கூறிவிட்டு நாம் திரும்பிப் போய்விடுவதுதான் முறை" என்றாள்.

அங்கு குழுமியிருந்த இளைஞர்களுடைய கண்கள் அனைத்தும் அப்போது அந்தப் பெண்ணையே நோக்கின. அவளுடைய அழகில் கட்டுண்டதாலோ, அவளுடைய இனிய குரலில் மயங்கியதாலோ அல்லது அவளுடைய கடுசொல்லால் தாக்குண்டதாலோ அனைவரும் ஒருமுகமாக, "இவர்கள் இங்கேயே இருக்கட்டும்" என்று கூறினார்கள்.

தலைவன் தந்தையையும் மகளையும் கோட்டைக்குள் அழைத்துச் சென்றான். சிறிது நேரத்தில் அறுசுவை உண்டி வந்து சேர்ந்தது.

பெரியவர் உணவருந்திக் கொண்டே உணர்ச்சியுடன் பேசலுற்றார்:

"ஐயா! தாங்கள் யாரோ எனக்குத் தெரியாது. முதன் முதலில் உங்களைப் பார்த்ததும் உங்களைப் பற்றித் தவறுதலாக நினைத்துக் கொண்டேன். அதற்காக வருந்துகிறேன். உங்களுக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கு நான் பார்ப்பதெல்லாம் விசித்திரமாக இருக்கிறது. இதற்கெல்லாம் என்ன அர்த்தம் என்பது புரியாத புதிராகவே இருக்கிறது. அதைப் பற்றித் தங்களைக் கேட்பது தவறாக இருக்கலாம். தங்களுக்கு விருப்பமில்லையானால் கூற வேண்டாம். ஆனால் உங்களுடைய பெருந்தன்மை எனக்கு உங்களிடம் ஒரு மரியாதையையே ஏற்படுத்தியிருக்கிறது. தங்களைப் பற்றிய முழு விவரங்களையும் தெரிந்துகொண்டால் தங்களுக்கு என்னாலான உதவியைச் செய்யத்தயாராக இருக்கிறேன்."

"என்னைப் பற்றியும் என் சகாக்களைப் பற்றியும் நான் அவசியம் தங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன். ஆனால் அதற்கு இப்போது அவசரமில்லை. முதலில் உங்களைப் பற்றிச் சகல விவரங்களையும் சொல்லுங்கள்" என்று கேட்டுக் கொண்டான் முகமூடி வீரர்களின் தலைவன்.

பெரியவர் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார். "என்னைப் பற்றிக் கூறுவதற்கு அதிகமாக ஒன்றுமில்லை. என் பெயர் சாமந்த சேனன். நானும் என் அருமை மகளும் குருவர்த்தியிலிருந்து வருகிறோம்."

"ஓ? வரகுணன் ஆண்டு வரும் குந்தள நாட்டின் தலைநகரிலிருந்தா...?"

"ஆமாம். நான் வரகுணனின் சேனாபதியாக இருந்தேன். என் மகளின் நாட்டிய அரங்கேற்றத்தை அரசவையில் ஏற்பாடு செய்தேன். என் வாழ்நாளில் நான் செய்த மாபெரும் தவறு இதுதான். கலை ரசனை சிறிதும் இல்லாத வரகுணன் காமரசனை கொண்டவனாக இருந்ததில் வியப்பில்லை. என் ஒரே மகளை அவன் விரும்பினான். விவரம் தெரிந்ததும் குந்தள நாட்டை விட்டே, நாங்கள் புறப்பட்டு விட்டோம். கடவுள் புண்ணியத்தில் வரகுண

வின் ஆட்களிடம் அகப்பட்டுக் கொள் ளாமல் தப்பித் திருமுனைப்பாடி நாட்டை அடைந்து விட்டோம். இந்நாட்டின் தலை நகரான திருமுக்கூடல், செல்வம் கொழிக்கும் நகரம் என்று கேள்விப்பட் டிருக்கிறேன். அங்கு சென்று எப்படியோ பிழைத்துக் கொள்ளலாம் என்ற தைரியம் இருந்தது. வழி யில்தான் நீங்கள் எங்களைச் சந்தித்தீர்கள்'' என்று சாமந்தசேனர் கூறி முடித்தார்.

கவனமாகக் கேட்டுக் கொண்டு வந்த வீரர் தலைவன், ''ஐயா! உங்கள் வாழ்நாளில் செய்த பெரிய தவறு என்பதாக ஒன்றை என்னிடம் கூறினீர்கள். ஆனால் அதை நான் தவறாகக் கருதவில்லை. அந்தக் காரியத்தை நீங்கள் செய்யாமல் இருந்திருந்தால் உங்களை யும் உங்கள் மகளையும் நான் பார்த்தே இருக்க முடியாதல்லவா? ஆகவே அக்காரியத்தைச் செய்ததற்காக உங்களை வாழ்த்துகிறேன்'' என்றான். அப்படிக் கூறிக் கொண்டிருக்கையி லேயே அவன் கண்கள் தன் உள்ளம் கவர்ந்த பெண்ணை ஆவலோடு தேடின.

பின்னர் ''சாமந்தசேனரே! எங்களைப் பற்றிய விவரங்களை விரைவில் தங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன். தற்போது தாங்கள் களைத்துக் காணப்படுகிறீர்கள். இளைப்பாறிக் கொள்ளுங்கள்'', என்று சொல்லி விட்டு வீரர் தலைவன் அங்கிருந்து விடை பெற்றுக் கொண்டான்.

4

ஐந்து நாட்களாகச் சாமந்த சேனர் கவலையில் ஆழ்ந்திருந்தார். அந்தக் கவலையெல்லாம் இப்போது அவரை விட்டு அகன்று விட்டது. தாமும் தமது பெண்ணும் பாது காப்பான இடத்தில், எந்தவிதமான ஆபத்தும் சூழாமல் இருக்கிறோம் என்ற எண்ணம் அவரது கவலைகளை மறக்கச் செய்தது. அதன் காரண மாக ஐந்து நாட்களுக்குப் பிறகு அன்று அவர் சயனித்த உடனேயே தம்மை மறந்து நன்றாகத் தூங்க ஆரம்பித்து விட்டார்.

ஆனால் அவருடைய மகளின் நிலை வேறுவிதமாக இருந்தது. எப்போ தும் கலகலப்பாகவும் உற்சாகமாக வும் பேசிய அந்த வாலிபனின் கம்





பிரமான உருவமும் இன்ப ஸ்பரிசமும் எப்போதும் அவன் நினைவில் இருந்துகொண்டு அவனை வாட்டின. இந்த நிலையில் அவன் உறங்குவது எப்படிச் சாத்தியம்? கோட்டையை விட்டு வெளியே வந்தான்.

சிறிது தூரத்தில் இருந்த ஒரு பாசறையின் வாசலில் நின்ற உருவம் இப்போது அவனை நோக்கி நடக்க ஆரம்பித்தது. எந்த விதமான தயக்கமும் இன்றிக் காதலர்கள் அருகே இருந்த ஒரு பாறையை நோக்கிச் செல்ல ஆரம்பித்தார்கள்.

"இவ்வளவு நேரம் பழகியும் நமது பெயரைக் கூட ஒருவருக்கொருவர் கூறிக்கொள்ளவில்லை" என்றாள் சாமந்தசேனரின் பெண்.

"நாம் வெகுநேரம் பழகவில்லையே? இன்று மாலைதானே உங்களைச் சந்தித்தேன்! இப்போது இருள் கவிந்து நான்கு நாழிகை ஆகியிருக்கும். அவ்வளவுதான்" என்றான் தலைவன்.

"உண்மைதான். ஆனால் எனக்கு மட்டும் எதனாலோ நீங்கள் பலகாலமாக அறிமுகமானவரைப் போன்று காணப்படுகிறீர்கள்."

"எனக்கும் அப்படித்தான், கண்ணே! நாம் யுகம் யுகமாக நெருங்கிப் பழகிவரும் காதலர்கள் என்ற எண்ணம்தான் உண்டாகிறது. அது போகட்டும்! உன் பெயரை நான் இது வரை தெரிந்து கொள்ள விரும்பவில்லை. இந்தமாதிரியான சூழ்நிலையில் உன் பவழச் செவ்வாயாலேயே கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்பினேன். என் எண்ணம் ஈடேறியது. உன் தகப்பனார் கூட உங்கள் வரலாற்றைச் சொன்னபோது உன் பெயரைக் கூறவில்லை. இப்போது சொல் உன்னுடைய பெயரை."

"சொர்ணமாதேவி."

சொர்ணமாதேவியின் காதலன் மூன்று நான்கு தடவைகள் அந்தப் பெயரைத் தனக்குத்தானே சொல்லிக் கொண்டான். பின்னர், "சொர்ணமாதேவி என்பதை விடச் சொர்ணமேனி என்ற பெயர் உனக்கு மிகப் பொருத்தமாக இருக்கும்" என்றான்.

"ஐயா! எனக்கு என் தகப்பனார் பொருத்தம் பார்த்துப் பெயர் சூட்டவில்லை. என்னை இவ்வுலகுக்குக் கொண்டு வருகையில் என் தாயார் இறந்து போனார்: என் தகப்பனார் என் தாயார் மீது அளவில்லாத அன்பு வைத்திருந்தார். ஆகவே வழக்கத்துக்கு மாறாக என் தாயாரின் பெயரையே எனக்கும் சூட்டி அன்புடன் என்னைப் பேணி வளர்த்தார் என் தந்தை. ஆனால் நீங்கள் உங்கள் விருப்பம் போல் என்னைப் பெயரிட்டு அழையுங்கள். அதையே நான் பேரின்பமாகக் கருதுவேன்."

"அப்படியே ஆகட்டும். அன்பே! நாம் தனித்திருக்கும்போது உன்னைச் சொர்ணமேனி என்றே அழைப்பேன்."

"ஐயா! தங்கள் பெயரை நான் அறிந்து கொள்ளலாமா?"

"காந்தன்."

இப்போது சொர்ணமாதேவி அப்பெயரைப் பல முறைகள் சொல்லி மகிழ்ந்தாள்.

"அன்பரே! என் பெயரைப் போல் அல்லாது உங்களுடைய பெயர் மிகவும் பொருத்தமாக அமைந்திருக்கிறது" என்றாள்.

"எப்படி?"

"உங்கள் திருமேனியில் உங்களுடைய கண்களை மட்டுமே நான் கண்டேன். இப்போதும் அவற்றை மட்டுமே காண்கிறேன். ஆனால் அவற்றைக் கண்டதுமே என் மனம் காந்தத்தால் இழுக்கப்பட்ட இரும்பு போன்று தங்களை அடைந்தது. தங்களுக்குக் காந்தன் என்றபெயர் மிகப்பொருத்தமானதுதானே?"

சிறிது நேரம் அங்கு மௌனம் நிலவியது. மனம் ஒன்று பட்டபின் பேச்சுக்கு இடமில்லையோ என்று தோன்றும்படி இருந்தது.

"உங்களைப் பற்றி நான் ஒன்றுமே தெரிந்து கொள்ள முடியாதா?" என்று கேட்டாள்.


"உன்னை நான் காதலிப்பதில் அதிசயம் ஒன்றுமேயில்லை. உன்னைப் பார்த்தேன், உன்னைப் பற்றித் தெரிந்து கொண்டேன். பின்னர் உன்னை மனமாறக் காதலித்தேன். ஆனால் நீயோ என்னைப் பற்றி ஒன்றுமே அறிந்து கொள்ளாமல் என் உருவத்தைக் கூடச் சரியாகப் பார்க்காமல் என்னைக் காதலிக்கிறாய். உண்மையில் அது மகத்தான அதிசயம்தான். ஆயினும் என்னைப்பற்றி நான் ஒன்றும் கூற இயலாதவனாக இருக்கிறேன். என் நண்பர்களுக்கு நான் அளித்துள்ள வாக்குறுதி அதற்குத் தடையாக நிற்கிறது."

"தங்கள் திருமுகத்தைக் கூட நான் பார்க்கக் கூடாதா?" என்று கொஞ்சும் குரலில் கேட்டாள் சொர்ணமாதேவி.

அவளுடைய குரலில் தொனித்த ஏக்கத்தைப் புரிந்துகொண்ட காந்தன் தன் முகத்தைச் சுற்றிக் கட்டப்பட்டிருந்த கரியதும் வெண்மையுமான துணிகளை அகற்றினார். காதலர்கள் ஒருவரை ஒருவர் முழுமதியின் ஒளியிலே பார்த்துக்கொண்டே இருந்தார்கள். அவர்களுடைய அந்தப் பார்வைப் பசிக்கு எல்லை ஏது? (அடுத்த இதழில் முடியும்.)

இந்தக் கதையில் வரும் ஒரு ரஸமான சம்பவத்தைத்தான் இவ்விதழ் அட்டைச் சித்திரமாக வழங்கியிருக்கிறார் நமது ஓவியக் கலைஞர் மணியம்

கலைகண்ட



1. எண்ணமும் ஏற்பாடும்

தென்கிழக்கு ஆசியாவின் பொன் கொழிக்கும் பூமியான மலேயா தீபகற்பத்துக்கு 1957 ஆகஸ்டு 31ம் நாள் ஒரு பொன்னாளாகும். (மலேயாவைப் பொன் கொழிக்கும் பூமி என்பதைவிட வெள்ளி கொழிக்கும் பூமி என்பது மிகப் பொருத்தம். ஏனெனில் மலேயா நாணயத்துக்கு வெள்ளி என்ற பெயர்தான் வழங்குகிறது. சுமார் ஒன்றரை ரூபாய் மதிப்புள்ளது ஒரு வெள்ளி) மலேயாவில் 'மெர்டேகா' என்னும் சுதந்திரக் குழந்தை பிறந்ததொரு சிறந்த நாள் இது.

இந்தச் சுதந்திரக் குழந்தையைப் பெற்றெடுப்பதற்காக மலைமங்கை (மலேயா) 1948 பிப்ரவரி முதல் தேதி முதல் அதாவது ஐக்கிய மலேயா உருவான திருநாளிலிருந்து காத்துக் கொண்டிருந்தாள்.

சுதந்திரக் குழந்தை பிறக்கும் என்ற நம்பிக்கையுடன் மலைமாதா சூல் கொண்ட திருநாள், 1955 ஆகஸ்டு ஒன்பதாம் தேதி என்று சொல்லலாம். தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் நிர்வாக சபை ஐக்கிய மலேயாவில் அன்றுதான் உதயமாயிற்று.

இரண்டு ஆண்டுகளாகச் சூல் கொண்டிருந்த தன் தங்கையான மலை மங்கையிடம் தமிழ்த் தாய்க்கு மிகுந்த பாசம் ஏற்பட்டது. தமிழ்த் தாய் ஏற்கெனவே — பத்தாண்டு

மலேயா

டி. கே. சண்முகம்-புத்தனேரி சுப்பிரமணியம்

களுக்கு முன்பே சுதந்திரக் குழந்தையைப் பெற்றெடுத்துப் பேணி வளர்க்கும் அநுபவம் வாய்த்தவள் அல்லவா? எனவே, சுதந்திரக் கர்ப்பவதியான மலேயாத் தங்கையின் ஆசாபாசங்களை நன்கு உணர்ந்தாள் தமிழ் அன்னை. "மசக்கை"யின் காரணமாகக் கர்ப்பவதிக்கு மண்ணும் சாம்பலுங்கூட இனிப்பாக இருக்குமே! தன் மலேயாத் தங்கை 'மசக்கை'யினால் துன்பப்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காக நாவிற்கினிய "மசக்கைப் பணியாரம்" அனுப்பித் தங்கையின் மனம் குளிரச் செய்ய விரும்பினாள் தமிழ்த்தாய்.

சுதந்திரக் குழந்தை பெறப்போகும் மலை மங்கைக்குக் கலைதான் சிறந்த 'மசக்கைப் பணியாரம்' என்பதை நன்குணர்ந்தாள் செந்தமிழ்த் தாய். "மாசற்ற கலை என்னும் மசக்கைப் பணியார விருந்தை மலை மங்கைக்கு அளித்து வருக!" என்று எங்களுக்கு ஆணையிட்டாள் அன்னை! அன்னையின் கட்டளையைச் சென்னியில் ஏற்றுத் தாய்நாடு விட்டு மலேயா செல்லும் வாய்ப்பு கிடைத்தது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் இலங்கையில் சுற்றுப் பிரயாணம் செய்யும் பேறு எங்களுக்குக் கிடைத்தது. அங்கே கண்ட தமிழ் ஆர்வமும் கலை ஏக்கமும் எங்களையும் எங்கள் நாடகக் கலைக் குழுவினரையும் பெரிதும் ஆட்கொண்டு விட்டன.

"அன்பெனும் பிடியில் அகப்படும் மலையே" என்று ஆண்டவனே அழைக்கப்படும்போது நாங்கள் எம்மாத்திரம்? இலங்கை மக்களின் பேரன்பையும்ஆர்வத்தையும் பாராட்டினோம்.


"இது என்ன பிரமாதம்? மலேயாவுக்குப் போய்ப் பாருங்கள்! மக்களின் கலை ஆர்வம் கடலாக அலைமோதிக் கொண்டிருப்பதைக் காண்பீர்கள்" என்று பெரியோர்கள் பலர் எங்களிடம் அடிக்கடி சொல்லி வந்தார்கள்.

திருப்பித் திருப்பிக் கிளிப் பிள்ளைக்குச் சொல்வது போல் "மலேயாவுக்குப் போங்கள்! மலேயாவுக்குப் போங்கள்!" என்று அன்புக்குரிய பலர் ஆர்வத்தை எழுப்பி விட்டார்கள். எனவே மலேயா செல்லும் வாய்ப்பு எப்போதுவரும் என்றிருந்த ஆவலோடு எதிர்நோக்கிக் கொண்டே இருந்தோம்.


மலேயாவைக்,காண வேண்டும் என்ற தவிப்பு எங்களுக்கு ஏற்படுவதற்கு மற்றொரு காரணமும் உண்டு. அது மிக முக்கியமான காரணமுங் கூட.

வீர ராஜேந்திர சோழன் கடல் கடந்து சென்று வென்ற கடாரம் என்ற தேசம் மலேயாவின் ஒரு பகுதியே என்பதைஎண்ணும் போது உள்ளத்திலே அன்பும் உடம்பிலே தென்பும் உண்டாகாமல் இருக்குமா? 'கடாரம்' என்பதுதான் கெடா என்ற பெயரால் அழைக்கப் படும் ஒரு மாகாணமாக இலங்குகிறது.

படத்திலிருப்பவர்கள்:—திரு டி. கே. சண்முகம், திரு டி. கே. பகவதி.







கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அளித்த விடையளிப்பு விருந்தில் கலந்துகொண்டவர்கள்

"கடலில் புயல் இல்லாதிருந்தால் இரவு பகலாகக் கப்பல் பயணம் செய்தால் சீன நாட்டை அடைய 1,150 நாட்கள் ஆகும்" என்று ராஜராஜ சோழன் காலத்தில் கணக்கிட்டுள்ளனர். சீன தேசத்துக்குச் செல்ல 1,150 நாட்கள் ஆகுமென்றால் அந்தக் காலத்தில் கடாரத்துக்குச் செல்லக் குறைந்தது ஐந்நூறு நாட்களாவது ஆகியிருக்க வேண்டுமல்லவா? கப்பல் பயணத்தின் கடுமையையும் பொருட்படுத்தாமல் கலம் செலுத்திக் கடாரத்தை வென்று வாகை சூடிய இராஜேந்திரனின் வீரத்தை எப்படிப் புகழ்வது?

போக்குவரத்து சாதனங்கள் மிகக் குறைவான அந்தக் காலத்திலேயே அலைகடலை எதிர்த்து முன்னேறிக் கலாசாரத்தைப் பரப்பும் ஆற்றல் பெற்றிருந்தான் தமிழன் என்று எண்ணிப் பெருமை கொள்வோம்.

"மலேயாவுக்கு முதன்முதலாக நாகரிகத்தை அளித்தது இந்தியாவே. அதுவும் தென்னாட்டுத் தமிழர்களே" என்று கூறியுள்ளார் ரோலண்ட் புராடெல் என்ற அறிஞர். இப்படி நமது பெருமையை மேலை நாட்டு அறிஞர் ஒருவர் எடுத்துக் காட்டியபிறகாவது நாம் உணர்ந்து மகிழ வேண்டாமா?

மலேயா நாட்டுக்கு வளம் கொடுப்பவை ஈயமும் ரப்பரும்.

"மண்ணிலே ஈயம் பிறக்கும்
—பச்சை
மரத்திலே ரப்பரோ
பாலாய்ச் சுரக்கும்!"

ஈயச் சுரங்கங்களிலும் ரப்பர்த் தோட்டங்களிலும் பல்லாயிரக்கணக்கான இந்தியர்கள் பாடுபட்டு உழைக்கின்றனர். அவர்களில் மிகப் பெரும்பாலோர் தமிழர்கள்.

மலை நாட்டின் வனப்புக்குக் காரணமாக இருப்பவை அழகு தவழும் சாலைகள். அந்தச் சாலைகளிலே தமிழ்த் தொழிலாளர்களின் கைவண்ணத்தைக் காணலாம் என்று பிறமொழியாளரும் பாராட்டுகின்றனர்.

இவ்வாறெல்லாம் தமிழர்களோடும் தமிழ் நாகரிகத்தோடும் நெருங்கிய உறவு கொண்ட மலை நாட்டின் வளத்தைக் காணவும், கடாரத்தைத் தன் ஆட்சியின் கீழ் கொணர்ந்த சோழப் பெருவேந்தன் இராஜராஜ சோழனின் வீர வரலாற்றை மலைநாட்டு மக்களுக்கு நாடக உருவிலே காண்பிக்கவும் எப்போது வாய்ப்புக் கிடைக்கும் என்று ஏங்கினோம்.

"திரைகடலோடியுந் திரவியந் தேடு" என்பது பழமொழி. திரவியந் தேடுவதில் மட்டும் சிறப்பில்லை; 'அலைகடலோடியும் கலை வளர்த்தேடு' என்று எங்கள் கலையுள்ளம் ஏவிக் கொண்டிருந்தது.

தனிப்பட்ட ஒருவரின் அழைப்பின் பேரில் மலேயாவுக்குச் செல்வதை நாங்கள் அவ்வளவாக விரும்பவில்லை. பொது நலச் சங்கம் ஒன்றின் சார்பிலே போவதுதான் சிறப்பு என்று காத்திருந்தோம்.

கடைசியாக, ஐம்பத்தொரு பேர்கள் அடங்கிய கலைக் குழுவை மலேயாவுக்கு அழைத்துச் செல்வதற்காக முன்பண மூலதனம் இடும் துணிவு சிங்கப்பூர் வணிகரும் நகரசபை உறுப்பினருமான திரு கே. எம். ஒலிமுகமது என்பவருக்குத்தான் வந்தது.

திரு ஒலிமுகமது "அவ்வையகத்"துக்கு வந்திருந்த சமயம் நடந்த ஒரு சுவையான நிகழ்ச்சியை இங்கே குறிப்பிடலாம் என்று கருதுகிறோம். அவர் வந்து அளவளாவிக் கொண்டிருந்த சமயம் திருமதி சகுந்தலா பாரதி 'அவ்வையக'த்துக்கு வந்தார்.

"இவர்தான் பாரதியாரின் அருமைப் புதல்வி, சகுந்தலா பாரதி" என்று திரு ஒலிமுகமதுவுக்கு அறிமுகம் செய்து வைத்து எதிரே சுவரில் மாட்டப்பட்டிருந்த பாரதியாரின் படத்தையும் காட்டினோம்.

உடனே அவர் கொஞ்சங்கூடக் கள்ளமில்லாத உள்ளத்துடன், "பாரதியார் என்பவர் யார்?" என்று கேட்டு விட்டார்! எங்களுக்குத் தூக்கி வாரிப் போட்டது. மகாகவி சுப்பிரமணிய பாரதியார் யார் என்று கேட்கும் ஒருவரா தமிழ் நாடகக் கலைக் குழுவை மலேயாவுக்கு அழைத்துச் செல்ல வந்தார் என்று அதிசயத்தில் ஆழ்ந்தோம். ஆனாலும் எங்களுக்கு ஒரு வகையில் ஆறுதலாக இருந்தது. ஒருவரை அறிமுகம் செய்து வைக்கும் போது எல்லாம் தெரிந்தவர்போல், "அப்படியா! உங்களைப் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது என் பாக்கியம்!" என்று போலி மகிழ்ச்சி காட்டாமல், தெரியாததைத் 'தெரியாது' என்று துணிவாக வெளியிட்ட திரு ஒலிமுகம்மதுவைப் பாராட்ட வேண்டும் என்றுதான் எங்கள் உள்ளம் எண்ணியது.

மலேயாப் பயணம் பற்றித் திரு ஒலிமுகமதுவுடன் கலைக் குழுவின் சார்பில் திரு டி. கே. பகவதி ஒப்பந்தம் செய்து கொண்டார். இந்த ஒப்பந்தத்துக்கு ஒரு தனிச் சிறப்பு கிடைத்தது. ஒப்பந்தத்தில் சாட்சியாகக் கையெழுத்திட்டு மதிப்பளித்தவர் சென்னையின் பிரதம மாகாண மாஜிஸ்ட்ரேட் திரு எஸ். ஏ. அய்யாசாமி செட்டியார் அவர்கள்.



தென்னிந்திய நடிகர் சங்கத்தின் வழியனுப்பு உபசாரத்தின்போது ஹாஸ்ய நடிகர் திரு டி.ஆர். ராமச்சந்திரன்பேசுகிறார். உட்கார்ந்திருப்பவர்கள் அமைச்சர் திரு பக்தவத்சலம், திரு டி. கே. பகவதி, திரு எம். ஜி. ராமச்சந்திரன்.

முதல் முகாம் சிங்கப்பூர் என்று திட்டமிடப்பட்டது. சிங்கப்பூருக்கு விமானம் மூலம் செல்வதா? கப்பல் பயணம் செல்வதா என்ற யோசனை எழுந்தது. ஏராளமான காட்சியமைப்புகளுடன் செல்லும் கலைக் குழுவுக்குக் கப்பல் பயணமே ஏற்றது என்பதில் கருத்து வேற்றுமை யில்லை. எனவே கப்பற் பயணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதில் தீவிரமாக ஈடுபட்டார் திரு பகவதி.

கப்பலில் சிங்கப்பூர் சென்றடைய ஒன்பது நாட்கள் ஆகும் என்று அறிவிக்கப்பட்டது. கப்பற் பயணம் பற்றி நண்பர்கள் சிலர் எச்சரிக்கை செய்ய முனைந்தனர். ஒருசில நாட்கள் 'கடற் பிணி' ஏற்படும் என்று கூறப்பட்டது. இதனால் எங்கள் குழுவினரில் சிலர் மருட்சி யடைந்ததும் உண்டு.

இந்த மருட்சியை மாற்ற முன்வந்தார் திரு ஏவி. எம். ஸ்டுடியோ அதிபர் திரு ஏவி. மெய்யப்பச் செட்டியார். கப்பற் பயணம் செய்து அனுபவப்பட்ட அவர் கடற்பிணிக்கு மாற்று மருந்தாகச் சில மாத்திரைகளைக் கொடுத்து உதவினார். ஆடும் அலைகளினால் கப்பலின் ஆட்டம் அதிகமானால் சிலருக்கு வாந்தி வரக்கூடும் என்றும், அத்தகைய குமட்டலைத் திரு ஏவி. எம். தந்த மாத்திரை உடனே நிறுத்தும் என்றும் உறுதி தரப்பட்டது. கலைக் குழுவின் பிரதம நடிகையான திருமதி டி. ஏ. ஜெயலட்சுமி முன்னெச்சரிக்கையாகச் சில மாத்திரைகளை வாங்கிப் பத்திரப்படுத்திக் கொண்டார்.

"கப்பற் பயணம் வெகு சுகமாக இருக்கும்; கவலையில்லாமல் உற்சாகமாகப் போய்வாருங்கள்" என்று உறுதியாக உள்ளன்போடு நல்லுரை கூறியவர் நடிகமணி திரு எம். கே. ராதா. ஏற்கனவே பல ஆண்டுகளுக்கு முன் தம் தந்தையாரும் பிரபல நாடக ஆசிரியருமான திரு எம். கந்தசாமி முதலியாருடன் மலேயாவுக்குக் கப்பல் பயணம் செய்து அனுபவம் பெற்றவர் திரு ராதா. எனவே அவரது நல்வாக்கு எங்களுக்கு மிகுந்த உற்சாகத்தைக் கொடுத்தது.

பயணத்துக்குத் தேவையான பாஸ்போர்ட், விஸா முதலிய ஏற்பாடுகளைக் கவனிப்பதில் சுமார் மூன்று மாதகாலமாக ஈடுபட்டு வெற்றி கண்டார் திரு பகவதி.

சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் சிங்கப்பூருக்குக் கப்பற் பயணம் வெகு எளிதாக இருந்ததாம். புறப்படும் தேதியன்று ரயில் நிலையத்துக்குச் சென்று டிக்கட் வாங்குவது போல் கப்பலடியிலே டிக்கட் வாங்கிக் கொண்டு உடனே புறப்படும் வசதி அந்தக் காலத்தில் இருந்ததாம்; கப்பல் கட்டணமும் மிகக் குறைவு. பதினெட்டு ரூபாய்தானும்; அன்றைய நிலைமைக்கும் இன்றைய நிலைமைக்கும் எத்தனை வேறுபாடு!


1957 ஏப்ரல் 14-ல் "சென்னை ராஜ்யம்" என்ற கப்பலில் சிங்கப்பூருக்குப் புறப்படுவது என்று முடிவாயிற்று. அதற்கான முன்னேற்பாடுகளும் பின்னமின்றி நிறைவேறின.

புறப்படுவதற்கு ஒரு மாத காலத்துக்கு முன்பிருந்தே கலைக் குழுவினரை வாழ்த்தி வழியனுப்பும் விழாக்களும், விருந்துகளும் ஆங்காங்கு நடந்து கொண்டிருந்தன. மலை நாட்டில் தமிழ்க் கலைக் கொடியைப் பறக்க விடுவதில் தமிழ்ப் பெருமக்களுக்கு எத்துணை ஆர்வம் உள்ளதென்பதை ஒவ்வொரு பாராட்டுக் கூட்டமும் உணர்த்தியது.

புறப்படுவதற்கு முதல் நாளே சுங்கச் சோதனை முதலான பூர்வாங்க ஏற்பாடுகளை முடித்துக் கொண்டு பயண மூட்டைகளைக் கப்பலில் ஏற்றும் வசதி கிடைத்தது.

கப்பலில் ஏற்றப்பட்ட காட்சியமைப்புக்குரிய சீன் சாமான்கள் மட்டுமே கப்பல் கணக்குப்படி சுமார் அறுபது டன் நிறை இருந்தன. கப்பலில் ஏற்றும் சாமான்களை எடையைக் கொண்டு கணிப்பதில்லை; அச் சாமான்கள் எவ்வளவு இடத்தை அடைக்கின்றனவோ, அதன் பேரில் கட்டணம் வசூலிக்கின்றனர்.

பயணத்துக்குரிய எல்லா ஏற்பாடுகளும் முதல் நாளே அதாவது ஏப்ரல் மாதம் பதின்மூன்றும் தேதியே முடித்து விட்டமையால், மறுநாள் நிம்மதியாகக் கப்பல் ஏறலாம் என்ற உற்சாகம் எங்களுக்கு ஏற்பட்டது. (தொடரும்)



பாவை விளக்கு

அத்தியாயம் 5

நெருப்புப் பொறி

தேவகியின் அழுகையும் தேம்பலும நின்றன. கண்களை, கன்னங்களை, நெற்றியை அழுத்தித் துடைத்துக் கொண்டு சற்று விலகி உட்கார்ந்தாள். சுவரில் சாய்ந்தபடியே களைப்போடு தணிகாசலத்தின் முகத்தை முழுமையாகப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவனும் பேசவில்லை; அவளும் பேசவில்லை.

மேசைக் கடிகாரத்தின் 'டிக் டிக்'கும் சுவர்க் கோழியின் சத்தமும் பெரிதாக ஒலிப்பதுபோல் தோன்றின. தெரு மூலையில் எங்கோ இரண்டு நாய்கள் குரைத்துக் கொண்டிருந்தன.

அவளுடைய மௌனத்தை அதற்கு மேல் அவனால் தாங்க முடியவில்லை. தேவகியின் கண்கள் தன் முகத்தை மட்டுமல்ல, அதற்குப் பின்னே உள்ள ஓர் சூன்யத்தையும் ஊடுருவுகின்றன என்பதைக் கண்டான். அவளுடைய எண்ணங்களை இனியும் தெரிந்து கொள்ளாமல் இருந்தால் தலை வெடித்துப் போகும் போலிருந்தது.

"பேசாமல் இருக்கிறீர்களே? நீங்கள் என்னவோ பேசவேண்டும் என்று சொன்னீர்களே?" என்று கேட்டான்.

அகிலன்

தேவகியின் உதட்டில் சிரிப்பு தெளிந்தது; நிராசையை வெளிப்படுத்திய சிரிப்பு அது.

''சொல்லுங்கள், தேவகி!''

''ஒன்றும் பேச வேண்டாம். உனக்குத் தூக்கம் வந்தால் நீ படுத்துத் தூங்கு. நான் உன்னைப் பார்த்துக் கொண்டே இருந்து விட்டு, எனக்குத் தூக்கம் வரும் போது, திரும்பிப் போகிறேன்.''

''சொல்ல மாட்டீர்களா?'' அவன் கெஞ்சினான்.

''முதலில் சொல்ல வேண்டுமென்று நினைத்தேன். இப்போது உன்னுடைய முகத்தைப் பார்த்தவுடன் எனக்கு ஒன்றும் பேச வரவில்லை.'' அவனுடைய தொண்டை கட்டியது. ''நீதான்....நீதான் என்னை விட்டு விட்டு நாளைக்கு ஊருக்குப் போகப் போகிறாயே!''—குரல் தழுதழுத்தது.

''நீங்கள் என்னைப் போக வேண்டாமென்கிறீர்களா?''

''தாராளமாய்ப் போ!'' என்று சினந்து கூறினாள் தேவகி. ''யார் உன்னைப் போக வேண்டாமென்று கையைப் பிடித்துக் கொண்டார்கள்? நான் இப்போது இங்கே வந்திருப்பது உனக்குச் சங்கடமாக இருந்தால் நானும் போய் விடுகிறேன். சங்கடமில்லையென்றால் நீ பேசாமல் தூங்கு. நான் இங்கே இருப்பதை மறந்துவிட்டுத் தூங்கு!''

''நீங்கள் எதையோ சொல்ல வந்தீர்கள். சொல்லவும் ஆசைப்படுகிறீர்கள். மனத்தில் உள்ளதை மறைக்காமல் சொல்லி விடுங்கள். கேட்காத வரையில் எனக்குத் தூக்கம் வராது.''

''நான் எதைச் சொல்வேன் என்று உனக்குத் தெரியுமா?''

''தெரிந்தால் ஏன் கேட்கிறேன்?''

மறுபடியும் சிறிது நேரம் பேசாமல் இருந்து விட்டு, அவன் தன் பொறுமையை இழக்கப் போகும் நேரத்தில் வாய் திறந்தாள் தேவகி.

''என் கதையைக் கேட்டுக் கொள்; நான் சிறு வயதிலேயே தாலியைப் பறி கொடுத்தவள். உன்னைப் போல் அவர் பட்டணத்துக்கு வக்கீலுக்குப் படிக்கப் போனார். ஒரு நாள் கடலில் குளிக்கப் போனவர் திரும்பி வரவில்லை. தந்தி வந்து நாங்கள் போய் அவர் உடலை எடுத்து வந்தோம். நான்கு வருஷங்களுக்கு முன்னால் நடந்தது இது. என்னைப் போல் உனக்கொரு சொந்தக்காரி இருந்தால், அவள் திரும்பவும் கல்யாணம் செய்து கொள்ள ஆசைப்பட்டால், நீ அவளைப் பற்றி என்ன நினைப்பாய்?''

''இயற்கையான ஆசை என்று நினைப்பேன். முடிந்தால் அவளுக்குக் கல்யாணமும் செய்து வைப்பேன்.''

''தப்பாக நினைக்க மாட்டாயா?''

''இதில் என்ன தப்பு?''

''அவளே அதைத் தப்பாக நினைத்தால்?...''

''ஆசைப்படுகிறவள் எப்படித் தப்பாக நினைக்க முடியும்?''

''ஆசை என்பதும், நல்லது கெட்டது என்பதும் ஒன்றல்ல. தப்பாக நினைத்துக்







கொண்டே மனம் அதற்கு ஆசைப்படுவ தில்லையா? நீ படித்தவன். நன்றாக யோசித்துப் பார்.''

யோசித்தான் தணிகாசலம். ''நல்லது கெட்டது எது என்பதை முதலில் முடிவு கட்டிக்கொள்ள வேண்டும். தப்பாக ஒன்றுக்கு ஆசைப்படக் கூடாது. ஆனால் எனக்கு நீங்கள் இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை என்று தோன்றுகிறது. முடிவுக்கு வந்தால் தப்பென்று நினைக்க மாட்டீர்கள்.''

''உண்மைதானா? எனக்காகச் சொல்கிறாயா? மனத்துக்கு மனம் வித்தியாசம் உண்டல்லவா?''

''எனக்கு உங்கள் மனம் தெரியாது.''

''இவ்வளவு நாட்கள் பழகியும் நீ தெரிந்து கொள்ளவில்லையா? இந்த ஒரு மாசத்தில் நான் உன்னிடம் நெருங்கிப் பழகியிருக்கிறேன்.''

''நீங்கள் என்னிடம் அளவற்ற பிரியம் வைத்திருக்கிறீர்கள். என்னுடைய தாயும் தங்கையும்கூட இவ்வளவு அன்புடன் என்னைக் கவனித்துக் கொண்ட தில்லை. அதற்குமேல்..அதற்குமேல்.. என் சந்தேகத்தை..நான் நினைப்பதை உங்களிடம் எனக்கு விவரமாய்ச் சொல்லத் தெரியவில்லை.''

''எனக்குந்தான் என் நினைவை உன்னிடம் சொல்லத் தெரியவில்லை. நானும் வெகுநாட்களாகக் குழம்பிக் குழம்பி இப்போது ஒரு அரைகுறை முடிவுக்கு வந்திருக்கிறேன். இன்னும் சரியான முடிவுக்கு வரவில்லை. சரியா, தப்பா என்ற போராட்டம் இன்னும் என்னிடம் நடந்து கொண்டிருக்கிறது. ஒருவேளை நீ ஊருக்குப் போகாமல் இங்கேயே இருந்திருந்தால் இன்றுகூட நான் வந்திருக்க மாட்டேன்.''

''உங்கள் எண்ணத்தில் துளிக்கூடத் தப்பில்லை. குழப்பத்தை நிறுத்திக் கொண்டு ஒரு முடிவுக்கு வாருங்கள்.''

''அந்த முடிவுக்கு வர நீதான் எனக்கு வழிகாட்ட வேண்டும். நீ சிறுபிள்ளை

இல்லை என்று எனக்குத் தெரியும். உனக்குள்ளே இருக்கும் பெரிய மனிதனை நான் பல சமயங்களில் உனக்குத் தெரியாமல் பார்த்திருக்கிறேன். அறியாப் பிள்ளை என்ற ஒருவனும், அறிந்த மனிதன் என்ற மற்றொருவனும், ஆக இரண்டு பேர் சேர்ந்தவன் நீ.''

தணிகாசலத்துக்குப் புல்லரித்தது. தனக்குள்ளே இருப்பதாக அவள் கூறிய பெரிய மனிதன் திடீரென்று விசுவரூபம் எடுப்பதை உணர்ந்தான். சாதாரண விழிப்பில்லை அது. 'உலகத்தின் எந்தச் சக்திகளுக்கும் கட்டுப்படாமல் மேலே போ!' என்று சுட்டிக் காட்டும் விழிப்பு. அவனுக்கு வழிகாட்ட வேண்டுமாம். ''என்ன செய்யச் சொல்கிறீர்கள்?'' என்று அமைதியாகக் கேட்டான்.

''நீ இந்த வீட்டுக்கு வருவதற்கு முன்பு எனக்கு எல்லாம் முடிந்து விட்டதாக நினைத்தேன். குறை எதுவுமே எனக்குக் கிடையாது. நீ வந்த பிறகு என்னிடம் கொஞ்சங் கொஞ்சமாய்க் குறை வளர்ந்தது. உன்னையறியாமல் என்னை நீ நாளுக்குநாள் அலைக்கழித்துவிட்டாய்; நான் உண்மையிலேயே குறைப்பட்டவள் என்றும், அதைக் குத்திக் காட்டிக் கிளறி விடுவதற்காகவே நீ வந்திருக்கிறாய் என்றும் நினைக்கிறேன்....''



'இல்லை, இல்லை, இல்லவே இல்லை!' என்று கதறத் தோன்றியது அவனுக்கு. ''நான் மனதார உங்களுக்கு ஒரு துன்பமும் கொடுக்கவில்லை; என்னையறியாமல் ஏதும் செய்திருந்தால் மன்னித்துக் கொள்ளுங்கள்'' என்றான்.

''இப்படிப் பேசும்போதுதான் உனக்குக் குழந்தைத்தனம் வந்து விடுகிறது. மன்னிப்பதற்கு இதில் என்ன இருக்கிறது? உன்னால் ஏற்பட்ட குறை என்று நினைத்து, உன்னாலேயே அதைத் தீர்த்துக் கொள்ளவும் விரும்புகிறேன். நான் ஒன்றும் புரியாமல் குழம்பவில்லை. உன்னைப் புரிந்துகொள்ள முடியவில்லையே என்றுதான் குழம்புகிறேன்.''

''இப்படித் தெரிந்தால் நான் இங்கு வந்தே இருக்க மாட்டேன்'' என்றான்.

''தணிகாசலம்!'' என்று அதட்டினாள் தேவகி. ''நடந்த விஷயத்தைப் பேசு. நீ வந்தது வந்து விட்டாய். இத்தனை நாள் நீ என்னை அலட்சியம் செய்தாலும் நான் உன்னை மதித்து வந்தேன். நீ என்னை வேண்டுமென்றே வெறுக்கவில்லை. உன்னுடைய துன்பம் உன் முகத்தில் கடுகடுப்பைக் காண்பித்ததே தவிர, உன்னிடம் எனக்கிருந்த பாசத்தை நான் கண்டு கொண்டேன். பெண்களுக்கு இந்த விஷயத்தில் அறிவு அதிகம்.''

தணிகாசலம் தன் கண்களை ஒருகணம் மூடித் திறந்தான். தான் முடிவு சொல்ல வேண்டிய கட்டம் நெருங்கி விட்டது. இப்படி ஒரு நிலை வந்தால் என்ன செய்வது என்று முன்னாலேயே யோசிக்கவில்லையே என்று அவன் தன்னை நொந்து கொண்டான்.

தேவகி குறுக்கிட்டாள்.

''என்னுடைய நிலையில் தப்பில்லை என்றாலே, நான் உன்னைக் கல்யாணம் செய்து கொள்ள நினைப்பது நியாயந்தானா? - இந்தக் கேள்விக்கு இன்றைக்குப் பதில் சொல், போதும்.''

''அது நியாயந்தான். ஆனால்...''

'' 'ஆனால்' என்று இப்போதே எதையும் சொல்லி விடாதே. நீ உன் ஊருக்குப் போய் நன்றாக யோசனை செய். உன் குடும்ப நிலையைத் தெரிந்துகொள். திரும்பவும் இங்கே வந்து நன்றாகப் படி. அடுத்த வருஷம் லீவுக்குப் புறப்படும்போது நீ எனக்கு இதற்குப் பதில் சொன்னால் போதும்.''

தணிகாசலத்துக்குத் தேவகியிடம் பழகிய பழக்கத்தில் ஒரு விநோதமான அநுபவம் ஏற்பட்டது. அன்று மாலை பூங்காவில் கழித்தபோதும், திரும்பவும் அவளை வாசற்படியில் கண்டபோதும் தான் அவளைக் காதலிப்பதாகவே நினைத்துக் கொண்டான். ஆனால் தூரத்தில் உள்ளபோது எழுந்த அந்த இனிய நினைவுகள் அவள் அருகில் வந்தவுடன் எங்கோ மறைந்து விட்டன.—சாயங்காலம் காப்பியை அவள் எடுத்துக்கொண்டு படியேறி வந்தபோது அவளுக்காகக் குபீரென்று பற்றி எரிந்த உள்ளம் ஏனோ அவள் பக்கத்தில் வந்தவுடன் குளிர்ந்து, உறைந்து, பனிக்கட்டியாய் மாறி விட்டது.

தேவகியே மீண்டும் பேசினாள்: ''மேல் படிப்புக்காக நீ சென்னைக்குப் போய்ப் படி. உனக்கு நான் பணம் தருகிறேன்.

ஆனால் கடற்கரைப் பக்கம் மாத்திரம் போகவே போகாதே. போனாலும் தண்ணீரில் இறங்காதே.''

அவளுடைய நெற்றியில் புருவங்களுக்கு மத்தியில் வழக்கமாகத் தென்படும் திருநீற்றைப் பார்த்தான். அது இப்போது இல்லை. புருவ மத்திக்கு நேராக உச்சியில் நேர்வகிடு எடுத்திருந்தாள். அந்தப் புருவமத்தியும், நெற்றியும், நேர்வகிடும் அவனுக்குக் காதல் உணர்ச்சிக்குப் பதிலாக லட்சிய உணர்வையே தூண்டி விட்டன.

''பதில் சொல்ல மாட்டாயா?''

மின்வெட்டும் நேரத்தில் அவன் மனக் கண் முன்னே விவேகானந்தரும், மகாத்மா காந்தியும், கல்லூரிப் பாதிரியாரும் வந்து அவனுக்குச் சாதகமான பதில் சொல்ல வேண்டாமென்று தடுத்தார்கள். அவர்கள் அப்படித் தடுத்ததற்குக் காரணமே தேவகியின் நெற்றி தான் என்று நினைத்தான்.

''சொன்னால் நீங்கள் வருத்தப்பட மாட்டீர்களே? கோபித்துக் கொள்ள மாட்டீர்களே?''

தேவகி நடுங்கினாள். உதடுகளைக் கடித்து அழுகையை அடக்கப் பார்த்தாள். முடியவில்லை. மெல்ல நகர்ந்து வந்து அவன் முழங்காலில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள். முழங்கால் அவனுக்கு நெருப்பாகச் சுட்டது.

''வேண்டாம்! மாட்டேன் என்று மட்டும் இப்போதே சொல்லி விடாதே. நான் யோசிப்பதுபோல் நீயும் ஊருக்குப் போய் யோசித்துப் பார். உனக்கு எத்தனையோ பேர் பெண் கொடுப்பார்கள். எனக்கு உன்னைத் தவிர வேறு வழியில்லை. படேரென்று பதில் சொன்னால் என் நெஞ்சு வெடித்து விடும். — நீ எம். ஏ. படித்துவிட்டு, ஒரு வேலைக்கு வந்த பிறகு, அதுவரையில் நான் உயிரோடிருந்தால்— பிறகு நாம் வாழ்ந்தால் போதும்.''

கடிகாரத் துடிப்பு சம்மட்டி அடிபோல் பயங்கரமாக அந்த அறையில் ஒலித்தது. சுவர்க் கோழிகளின் சத்தத்தைக் காணோம். தேவகி தன்னுடைய நடு உச்சியில் 'டப் டப்' என்று விழுந்து சிதறிய நீர்த்துளிகளைக் கண்டு தலை தூக்கினாள். யார்? தணிகாசலமா கண்ணீர் வடிக்கிறான்! அவன் கண்களைத் துடைத்தாள் தேவகி. தணிகாசலம் மெல்ல அவள் பிடியிலிருந்து எழுந்து அறையில் குறுக்கும் நெடுக்கும் நடந்தான்.

நடையில் வேகம் பிறந்தது.

ஆவேசம்கொண்ட புலிக்குட்டி கூண்டுக்குள் குறுக்கும் நெடுக்கும் தாவுவது போலவும், கூண்டைப் பிய்த்துக் கொண்டு நடுக் காட்டுக்கு அது ஓடுவதற்குத் துடிப்பது போலவும் தோன்றியது அந்த நடை.

கைகளைக் கட்டிக் கொண்டு அவன் எதிரில் வந்து நின்றான். நடப்பதை நிறுத்திவிட்டு மளமளவென்று பேசினான். உரத்த குரலில் அவன் பேசவில்லை. ஆனால் அதில் அழுத்தம், கூர்மை, உறுதி அனைத்தும் ஒன்றாக ஒலித்தன.

தனக்கு அவளைப் பற்றி எழுந்த எண்ணங்கள், அருகில் இருந்த போதும்— தூரத்தில் இருந்த போதும் ஏற்பட்ட நினைவுகள், தன்னுடைய வாழ்க்கையின் கனவு, நோக்கம், லட்சியம், தனது பெருமை, சிறுமை எதையும் அவன் ஒளிக்கவில்லை.

கடைசியாக அவன் கூறினான்:

''எனக்குள்ளே இனம் புரியாத வேதனை ஒன்று விவரம் தெரிந்த நாளாய்



முனகிக் கொண்டிருக்கிறது. அது என்ன என்றே எனக்குப் புரியவில்லை. அது உள்ளேயிருந்து வெளிப்படுமா, அல்லது வெளிப்படாதா, எப்போது, எந்த உருவத்தில்?—எனக்கு விளங்கவே இல்லை. இப்போதைக்கு நான் அந்த வேதனையைத்தான் காதலிக்கிறேன்; கல்யாணம் செய்து கொண்டும் இருக்கிறேன். உங்களைப் பக்கத்தில் நின்று பார்க்கும் போது எனக்கு ஏன் உங்களுடைய அழகு தெரியவில்லை? வயதும் பருவமும் தெரியவில்லை? ஏன் உங்களை எனக்குக் கை எடுத்துக் கும்பிடத் தோன்றுகிறது?... 'தேவகி' என்று பெயர் சொல்லிக் கூப்பிடும்போது நான் படுகிற துன்பம் உங்களுக்குத் தெரியுமா?''...

நிமிஷத்துக்கு நிமிஷம் அவனுடைய பேச்சு தேவகியை மேலே மேலே தூக்கிக்

கொண்டு செல்வது போல் தோன்றியது. புனிதமான ஊதுவத்தியின் மணம் அவனது உள்ளத்திலிருந்து பேச்சு வழியே புறப்பட்டு அந்த அறையெங்கும் கமழ்ந்தது. கலகலவென்று ஆயிரம் வெண்கல மணிகள் இணைந்த ஓர் மாபெரும் சந்நிதியின் பொற்கதவுகள் திறப்பது போலவும், அந்தத் திருச்சபைக்குள்ளே நீண்ட இருளுக்குப் பின், தாழை மடலைப் போன்ற ஒளிச்சுடர் நீண்டு நிற்பது போலவும் அவள் கண்களுக்குத் தெரிந்தன. எலும்பும், தோலும், தசைநாரும், ரத்தமும், வேர்வையும், ஆசாபாசங்களும், வெகுளித்தனமும் சிறுமையும் கலந்த அந்தப் பையனிடமா அந்த ஒளி?—ஆம், தெரிந்து கொள்ளக்கூடிய கண்கள் அதைத் தெரிந்துகொண்டன.

தேவகி படீரென்று எழுந்தாள். அவிழ்ந்து கிடந்த கூந்தலை முடிந்து கொண்டு அவனைப் பற்றி இழுத்துக் கீழே உட்கார வைத்தாள். "போதும், போதும், பேசாதே! நிறுத்து! இனி மேல் என்னால் தாங்க முடியாது!" என்று அவனை அடக்கினாள்.

ஐந்து நிமிஷங்கள் சென்றன. சோர்வும், களைப்பும் மிகுந்த குரலில், "இன்னும் ஒரே ஒரு விஷயம் உங்களுக்குச் சொல்ல வேண்டும்" என்று கூறினான்.

"என்ன?" என்று கேட்டாள்.

"என்றைக்காவது நான் கல்யாணம் செய்து கொள்வதாக இருந்தால், என் அப்பா சொல்லி விட்டுப் போன கௌரி ஒருத்தி இருக்கிறாள். என் மாமா பெண். அவளையும் நான் நினைத்துப் பார்க்க வேண்டும். இனி நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" என்றான் தணிகாசலம்.

தேவகி மன நிறைவோடு சிரித்தாள்.

"என்னுடைய குறையெல்லாம் நீ போக்கிவிட்டாய். உண்மையைச் சொல்கிறேன். என் வாழ்க்கையில் இவ்வளவு சந்தோஷமாக நான் என்றைக்குமே இருந்ததில்லை. எனக்காக நீ கண்ணீர் விட்டாயல்லவா? எனக்காக நீ உன் மனத்தைத் திறந்து காட்டி விட்டாயல்லவா? போதும் எனக்கு!.. சீக்கிரம் உன் வேதனையும் தீரவேண்டும். உனக்கும் அந்தப் பெண்ணுக்கும் கல்யாணமும் ஆக வேண்டும். என் ஆசை அவ்வளவுதான். அந்தப் பெண் கொடுத்து வைத்தவள்...சரி, களைத்துப் போய் விட்டாய். படுத்துத் தூங்கு. நீ தூங்கினால்தான் நான் போவேன்."

தணிகாசலம் விரித்து வைத்திருந்த படுக்கையில் படுத்துக் கண்களை மூடினான். விளக்கை அணைத்து விட்டுத் தேவகி மாடிப்படிகளில் இறங்கினாள்.

அத்தியாயம் 6

உள் மனிதன்

மறுநாள் காலை பத்து மணி..

பொன் வயலுக்கு டிக்கட் வாங்கிக் கொண்டு ரயிலில் உட்கார்ந்தான் தணிகாசலம். சுமார் நூறு மைல்களுக்கு மேல், இடையில் திருச்சி சந்திப்பில் ரயில் மாறி, பிரயாணம் செய்யவேண்டும். மத்தியானம் சாப்பிடச் சொல்லி வெண் பொங்கலும் தயிர்ச் சாதமும் கட்டிக் கொடுத்திருந்தாள் தேவகி. சன்னலுக்குப் பக்கத்தில் வசதியாக உட்கார்ந்து கொண்டு படிப்பதற்குப் பத்திரிகை ஒன்றை வாங்கினான். ரயில் புறப்பட்டது. தேவகியின் ஊர் மறைந்து அவள் நினைவு தொடர்ந்தது.

முன்னிரவு நடந்த நிகழ்ச்சிகள் அவனுக்குள்ளே இருந்த இரண்டு மனிதர்களையும் வெளியே கொண்டுவந்து நிறுத்தின. முதல் நிகழ்ச்சி அவன் பெருமைப் படக்கூடியது. அந்த மனிதனைத் துணை கொண்டு அவன் தலைநிமிர்ந்து நடக்கலாம். ஆனால் இரண்டாவது நிகழ்ச்சியையும், அதைத் தூண்டிய மனிதனையும் நினைத்துப் பார்த்தால் அவன் தலைகுனிய வேண்டியதுதான்.


இரவு சுமார் மூன்று மணிக்கு நடந்த சம்பவம் இது:

அயர்ந்த தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டான் தணிகாசலம். நடந்தவையெல்லாம் கனவல்ல, உண்மை, நனவென்ற நிச்சயம் ஏற்பட்டது. தான் தன்னுடைய சுய உணர்வு இல்லாமல் அவசரப்பட்டுத் தனக்கும் தேவகிக்கும் பாதகமான முடிவுக்கு வந்து விட்டது போல் நினைத்தான். 'விதவையை மறுமணம் செய்து கொள்வதோ வேறு சாதிப் பெண்ணை மணந்து கொள்வதோ தவறில்லை. அவளோ மேல் படிப்புக்கு வேறு பணம் தருவதாய்ச் சொல்கிறாள். குடும்ப வாழ்க்கைக்கு ஏற்ற பெண் என்பதிலும் சந்தேகமில்லை. அப்படியிருக்கும்பொழுது மறுப்பானேன்?' மனம் திரும்பிக் கொண்டு வாதம் செய்தது.

தணிகாசலத்துக்குள் மற்றொரு குறுகுறுப்பும் தலை நீட்டியது. மேலே குறிப்பிட்ட எண்ணங்களுக்கெல்லாம் இந்தக் குறுகுறுப்பே அடிப்படைக் காரணமாயிருந்தது என்பது அவனுக்கு அப்போது விளங்கவில்லை.

இப்போது விளங்கியது. ரயிலில் போகும் இந்தப் பகல் நேரத்தில் விளங்கியது. அப்போது இருட்டு நேரம். உள்ளேயும் இருட்டு; வெளியிலும் இருட்டு.

தேவகி அவன் கால்களைக் கட்டிக் கொண்டது. அவன் முழங்காலில் முகம் புதைத்தது. அவன் கண்ணீரைத் துடைத்தது. அவனைப் பிடித்து இழுத்து உட்கார வைத்தது—எல்லாம் அவனை என்னவோ செய்தன. எந்தப் பெண்ணின் கரமும் இதற்கு முன் அவனைத் தீண்டியதில்லை. இவை போன்ற அனுபவங்கள் அவனுக்கு ஏற்பட்டதில்லை. அவளுடைய கரங்களின் செழுமை, கன்னங்களின் மெருகு, கடைந்தெடுத்த தந்தச் சட்டம் போன்ற முதுகு, பாதங்களின் மென்மை இவற்றை அவன் எண்ணிப்பார்த்தான். கிடைத்தற்கரிய பெருஞ் செல்வத்தை உதறி எறிந்து விட்ட ஏமாற்ற உணர்ச்சி அவனைப்பார்த்து நகைத்தது; அவனுக்கு முட்டாள் பட்டம் சூட்டியது.



இன்னும் ஒன்றும் குடிமுழுகிப் போகவில்லை. தேவகியும் தன்னுடைய அறையின் இருளில்தான் படுத்து உறங்கிக் கொண்டிருப்பாள். மெல்லச் சென்று அவளைத் தட்டி எழுப்பி, அவள் அருகில் அமர்ந்துகொண்டு, 'தேவகி! நான் அப்போது சொன்னதெல்லாம் என் சுய புத்தியுடன் சொன்னதல்ல. அதற்காக என்னை மன்னித்துவிடு. உன் இஷ்டப்படியே நான் உன்னை மணந்து கொள்ளுகிறேன்' என்று சொல்லி வந்தால் என்ன? அவள் அதைக் கேட்டு எவ்வளவு ஆனந்தம் கொள்வாள். 'நீங்கள்' என்று அழைக்காமல் 'நீ' என்றுதான் அவளிடம் பேச வேண்டும்.

ரயில் அடுத்த ஊர் நிலையத்தில் தங்கி மேலே சென்றது. சிலர் ஏறிக் கொண்டார்கள். தனிகாசலம் அதன் பிறகு வீட்டில் நடந்த நிகழ்ச்சியை எண்ணி அவமானப்பட்டான்.

பூனைக் குட்டி போல் சத்தமில்லாமல் அறையை விட்டுக் கீழே இறங்கினான் தனிகாசலம். முதற்பார்வையிலேயே தேவகி இருந்த இடம் அவனுக்கு ஏமாற்றத்தை அளித்தது. அங்கே இருள் இல்லை. சின்னஞ் சிறு மின் விளக்கு அவள் முகத்துக்கு மட்டிலும் ஒளி கொடுத்துக் கொண்டிருந்தது. அவள் அயர்ந்து தூங்கினாள்.

அறையில் இருள் இருக்கக் கூடாதா? அந்த விளக்குத்தான் அவள் முகத்தில் வீசாமல் தேகத்தில் வீசக் கூடாதா? அவள் ஏன் ஒருபுறம் சாய்ந்தோ, அல்லது குப்புறவோ படுக்கவில்லை? அவள் முகத்தைக் கண்ணெடுத்துப் பாராமல், முதுகில் மெல்லத் தட்டி அவளை எழுப்ப நினைத்தான். அது நடைபெறவில்லை. அவன் பார்க்கத் தயங்கிய தேவகியின் நெற்றி, புருவ மத்தி, அதற்கு நேரே நெருப்புக் கீற்று போல் ஓடிய உச்சி வகிடு இவ்வளவும் அவனுக்குப் பளிச்சிட்டன. அவள் எதையும் அறியாமல் இமை கவிழ்ந்து நன்றாக உறங்கிக் கொண்டிருந்தாள்.

அந்த நிலையில் அவளை எழுப்பினால் ஓங்கித் தன் கன்னத்தில் அறைந்து விடுவாள் என்றும், தன் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளி விடுவாள் என்றும் அவனுக்குப் பட்டது. அவனுடைய உள் மனிதனும் அதற்குள் விழித்துக் கொண்டான். அந்த உள் மனிதனின் மாயக் கரங்கள் அவனுடைய பிடரியைப் பிடித்துக் கொண்டு போய்த் திரும்பவும் அவனைப் படுக்கையில் தள்ளின. 'உன்னை நீயே ஏமாற்றிக் கொள்ளாதே!' என்று அவனுக்குள்ளிருந்து ஒரு குரல் எழும்பியது. எச்சரிக்கை செய்தது.

ரயிலில் சென்ற தனிகாசலம் அந்த நினைவை உதறுவது போல் ஒரு முறை தன் தலையை உலுக்கிக் கொண்டு வெளியே வேடிக்கை பார்த்தான். அடுத்த ஆண்டுப் படிப்பு இனி அந்த வீட்டில் இல்லை என்பது அவனைப் பொறுத்தமட்டில் நிச்சயமாகி விட்டது.

புதுப்பட்டி ஸ்டேஷனைத் தாண்டிச் சென்றது ரயில். நிற்காமல் சென்றது. அது மிகச் சிறிய ஊர்; ரயிலடியிலிருந்து இரண்டு மைல் தூரம் நடக்க வேண்டும். அந்த ஊருக்கும் கண்ணபுரத்துக்கும் பதினைந்து மைல். அவனுடைய சொந்தக் கிராமம் அது.

பரம்பரை பரம்பரையாக அவனுடைய தகப்பனாரும் பாட்டனாரும் பிறந்து வளர்ந்த அக் கிராமத்தில் அவனுடைய சித்தப்பா இப்போது வாழ்ந்து வரு

கிறார். உத்தியோகமும் பரம்பரையாக வந்த கோயில் தர்மகர்த்தா உத்தியோகம். பழைய காலத்து வீடும், இரண்டு காணி நன்செயும், அந்தக் கோயிலும் அவர் குடும்பத்தைக் காப்பாற்றி வந்தன. சன்னலில் இருந்து பார்த்தபோது கோயிலின் கோபுரம் மட்டிலும் கண்ணுக்குத் தெரிந்தது. தன்னையறியாது கைகூப்பினான்.

ரயிலுக்குள் சுற்றிப் பார்க்க இப்போது தான் அவனுக்கு நேரம் கிடைத்தது. அவன் இருந்த பலகையில் ஐந்தாறு பேர்கள் நெருக்கி யடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். இடைவெளியில் ஒரு கிராமவாசியின் குடும்பம் நின்றது. மத்திய வயதுக் குடியானவன், அவன் மகன், கைக் குழந்தைக்குப் பால் கொடுத்துக் கொண்டு நின்ற அவன் மனைவி. தணிகாசலத்துக்கு அந்தத் தாய் உருவம் நின்று கொண்டு வருவதைக் கண்டவுடன் 'சுரீர்' என்று தைத்தது.



எதிர்ப் பலகையில் இரண்டே இரண்டு பேர் உல்லாசமாகப் பிரயாணம் செய்து கொண்டு வந்தார்கள். விலையுயர்ந்த படுக்கையை விரித்து அதில் படுத்துக் கொண்டு ஒருவன் புகை ஊதிக் கொண்டிருந்தான். அடுத்தாற் போல் ஒரு நவநாகரிகப் பெண்மணி — அவன் மனைவியோ என்னவோ — ரத்தச் சிவப்பு அட்டையுள்ள புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தாள். 'மண்டையோட்டில் மனித ரத்தத்தின் மர்மம்' என்று புத்தகத்துக்குப் பெயர் போட்டிருந்தது. மனித ரத்தத்தில் அவள் சுவாரஸ்யமாக மூழ்கித் திளைத்துக் கொண்டு மூன்று பேர் அமரும் இடத்தில் முதுகை வளைத்துக் கொண்டிருந்தாள்.

''அம்மா! கொஞ்சம் தள்ளி உட்கார்ந்து அந்த அம்மாளுக்கும் இடம் கொடுங்கள்'' என்றான் தணிகாசலம்.

அந்த நவநாகரிகம் மண்டையோட்டை வெறித்துப் பார்ப்பதைப்போல் அவனைப் பார்த்தது. ஆனால் அசையவில்லை.

அதற்குள் எதிரில் பள்ளிகொண்டிருந்த நறுக்கு மீசைக்காரர் தணிகாசலத்தை ஒரு தடவை முறைத்துப் பார்த்தார். ''ஏன், மிஸ்டர், உதவி செய்ய நினைத்தால் உங்கள் இடத்தைக் கொடுப்பது தானே?'' என்று கேட்டார்.

''கொடுப்பேன். பெண்ணோடு பெண்ணாக இருந்தால் தேவலாம். உங்களோடு வந்திருப்பவர்களும் பெண்; நாளைக்கு இவர்களும் அவர்களைப்போல் தாயாகி விடலாம்....''

''ஷட் அப்!''

தணிகாசலத்தின் வரிசையில் நறுக்கு மீசைக்கு எதிராகச் சிரிப்பு கிளம்பியது. விழிப்புற்ற சமுதாய உணர்ச்சியின் மிகு எக்களிப்பு அது. யாராவது ஒருவன் முன்னால் நின்று தூண்டி விட்டால் அது தானாகவே செயல் புரியும் என்பதைத் தணிகாசலம் கண்டு கொண்டான். எதிர் வரிசையில் கிராமவாசிகள் மூவருக்குமே இடம் கிடைத்தது.

பத்திரிகையைப் பிரித்துக் கதைகள் படித்தான் தணிகாசலம். சென்னையிலிருந்து வரும் 'மலர்க்கொத்து' என்ற இலக்கியப் பத்திரிகை அது. முதல் கதை சாதாரணமாகவும் அடுத்த கதை நெஞ்சைத் தொடும் வகையிலும் இருந்தன. இடையில் ரயிலில் பேசிக் கொண்டு வருவோரின் குரல்கள், பிச்சைக்காரியின் பாட்டு, ரயிலின் 'கடகட' சத்தம்எல்லாம் ஒன்று சேர்ந்தன. பாதையில் பழுது பார்க்கும் வேலை நடந்து கொண்டிருந்ததால் நடுக்காட்டில் ரயில் ஓரிடத்தில் தங்கிப் புறப்பட்டது.

அந்த இடத்தில் தணிகாசலம் வெளியே பார்த்தான். பாதைக்கடுத்தாற்போல் இலை தழை விழுந்து அழுகிப் போன, நாற்றம் பிடித்துப் பாசி படிந்த, ஓர் நீர்க்குட்டை தெரிந்தது. அதன் கரையில் அடர்த்தியான தாழம் புதர். பொன்னிறத் தளிர், பச்சை, கரும் பச்சை, பழுப்பு இப்படிப் பல நிறங்களில் அதன் தோகை மண்டிக் கிடந்தது. கூரிய முள்ளரும்புகளும் தென்பட்டன. ஆனால் அந்த நீர்க்குட்டையின் நாற்றத்தையும் தாண்டி வந்த ஓர் அபூர்வமான வாசனையை அவன் நுகர்ந்தான்.

ஆஹா என்ன அபூர்வமான மணம்! கண்களைக் கூர்மையாக்கிக் கொண்டு நன்றாக அந்தப் புதர் முழுதும் தேடிப் பார்த்தான் தணிகாசலம். வாசனையைப் பரப்பிக் கொண்டிருந்த அந்தச் செந்தாழம்பூ அவன் கண்களுக்குப் படவில்லை. மணம் மட்டிலுமே அவன் மனத்தை நிரப்பியது. பூ எங்கே?

தணிகாசலத்துக்கு ஓர் இனம் புரியாத குதூகலம். வாழ்க்கையும் லட்சியமும் கொண்டுள்ள உறவை, அல்லது உறவற்ற

தன்மையை, இந்த மணம் அவனுக்கு எடுத்துக் காட்டியது.

செந்தாழம் பூவை மனத்தில் அசை போட்டுக் கொண்டே ரயிலைச் சுற்றிப் பார்த்தான் தணிகாசலம்.

பாட்டு பாடும் பிச்சைக்காரி, மண்டையோட்டு மர்மக்காரி, மார்பை முட்டும் குழந்தையை அணைப்பதில் இன்பங் காணும் தாய், நறுக்கு மீசை நாகரிக மனிதன், சுந்தல் உடுத்திய குடியானவன், இன்னும் பலப் பல ஆண்—பெண்கள், குழந்தைகள் — கிழவர்கள் இப்படி உலகத்தின் ஒரு சிறு துளியே அதற்குள் அடைத்துக் கிடந்தது. இந்த நல்லவர் — பொல்லாதவர், இரண்டும் கலந்தவர், ஏமாளி, திறமைசாலி எல்லோரையும் இழுத்துக் கொண்டு, குறிப்பிட்ட இடத்தை நோக்கி, தண்டவாளங்கள் என்ற எல்லைக்கோடுகளுக்கு உட்பட்டு ஓடிக்கொண்டிருந்தது ரயில். இந்த ரயிலைக் கண்டுபிடித்த மனிதன் தான் பிறந்த உலகத்துக்காக ஒரு நிலையான செயலைச் செய்து விட்டுப் போய் விட்டான். தானும் அப்படி ஏதாயினும் ஒன்றைச் செய்ய வேண்டும். அழுக்கும் ஆசாபாசங்களும் தன்னலமும் நிறைந்த இந்த அழியும் உடலை வைத்துக்கொண்டு அது அழிவதற்குள், உயர்வான ஒன்றைச் செய்துவிட வேண்டும். நாற்றம் பிடித்த குட்டைக்குப் பக்கத்தில் முள் நிறைந்த புதரில் ஒரு தாழம்பூ மலர முடியுமானால் நமக்குள்ளே ஏன் ஓர் நல்ல சக்தி மலரக் கூடாது?

தணிகாசலம் தலைநிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான்.

திருச்சி சந்திப்பில் முக்கால் மணிப் பொழுது அவகாசம் இருந்தது. வண்டி மாற்றிக் கொண்டு சாவகாசமாகச் சாப்பிடத் தொடங்கினான். நேற்று தயாரித்த ரவாலாடுகள் முழுவதும் தகரப் பெட்டி நிறைய அருகில் இருந்தன. காலையில் தேவகி அதை எடுத்து மாட்டு வண்டியில் வைத்தபோதுதான் பொன் வயலுக்காகச் செய்த பலகாரம் என்று தெரிந்தது. வெண் பொங்கலில் முதல் கவளத்தை வாய்க்குக் கொண்டு போன போது அவன் கண்கள் கலங்கின. தேவகியின் அன்புக்காக மாத்திரம் அவை கலங்கவில்லை. இந்தத் தமிழ் நாட்டுப் பெண் குலத்தின் அன்பு முழுவதையும் அதன் மூலம் அவன் நினைத்துக் கொண்டான்.

முதல் நாள் இரவு ஒன்றுமே நடக்காததுபோல் எப்படி அவளால் நடந்து கொள்ள முடிந்தது? வழக்கம்போல் பேசினான், சிரித்தாள், உபசாரங்கள் செய்தாள், வழியனுப்பி வைத்தாள். எப்படி அவளால் முடிந்தது?

வண்டியில் அவனுடைய சாமான்களைக் கொண்டு வந்து வைத்து, ''மகராஜனுப்ப் போய் விட்டு வா!'' என்று கைகூப்பினாள். அவனும் கைகூப்பினான். அவனுடைய கலக்கத்தில் ஆயிரத்தில் ஒரு பகுதியைக்கூட அவள் முகத்தில் காண முடியவில்லை. மாட்டு வண்டி 'கடக் கடக்' என்ற சத்தத்துடன் அந்த வீட்டை விட்டு நகர்ந்தது. நேரான அந்தத் தெருக்கோடிக்கு அது சென்று திரும்பும் வரையில் அவளுடைய உருவம் வாசலில் நிற்பதைக் கவனித்தான்.

தான் மறுபடியும் செய்த தவறை அவள் தெரிந்து கொண்டிருந்தால் தன்னைப் பற்றி என்ன நினைப்பாள்? உலகத்தின் முன்னால் நல்லவனாக வாழ முடிந்தாலும் சரி; முடியாவிட்டாலும் சரி. தேவகி ஒருத்திக்காகவாவது நல்லவனாக நடந்து கொள்ள வேண்டும்.

திருச்சியிலிருந்து புறப்பட்ட வண்டியில் கூட்டமில்லை. இரண்டு பக்கங்களிலும் சோழவள நாட்டின் செழிப்பும் சீர்கெட்ட நிலையும் தெரிந்தன. வாழைத் தோட்டம், தென்னந்தோப்பு, பசுமை உமிழும் நெல் வயல்கள் ஒருபுறம். ஏழைமை, ஏழைமை, ஏழைமை - மற்றொருபுறம். தென்னந் தோப்புகளுக்கு மத்தியில் தெரிந்த பத்தடிக் குடிசைகளில் இருந்து கொண்டு கோவணம் கட்டாத சிறுவர்கள் ரயிலைப் பார்த்துச் சத்தம் போட ஆரம்பித்தார்கள்.

ஊர் நெருங்கி விட்டது. இன்னும் கால்மணி நேரத்தில் பொன்வயல் வந்து விடும். அதற்கு முன்பே மாலைச் சூரியனின் பொன்னொளி அவன்மீது படிந்து விளையாடத் தொடங்கியது. தன்னைக் கண்டவுடன் தன் பாட்டி, தாயார், தங்கை எல்லோரும் எத்தனை மகிழ்ச்சியடைவார்கள் என்று எண்ணிப் பெருமை கொண்டான். இவர்களைத் தவிர இன்னொருத்தியும் அங்கே இருந்தாள். சிற்றாடை கட்டிய சிறுமி.

கௌரியின் சின்னஞ்சிறு உருவம் அவன் மனக்கண் முன் வந்தவுடன் அவனுடைய உதடுகளில் ஓர் புன்னகை தெரிந்தது. பட்டுப் பாவாடை தரையில் புரள, தாவணியை இழுத்து விட்டுக் கொண்டு, அவள் மெல்ல நடந்து வந்து அவனை ஒளிந்து நின்று பார்ப்பாள். ஒருநாளும் அவனை அவள் நேருக்கு நேர் நின்று பார்த்ததில்லை. கௌரியின் காதுகளில் தொங்கிய லோலக்குகளின் அசைவுகளை அவன் பின்புறமிருந்து கண்டு ரசித்திருக்கிறான்.

ஊர் நெருங்கியதால் தலையைச் சீவிக் கொள்வதற்காகப் பெட்டியைத் திறந்து சீப்பை எடுத்தான் தணிகாசலம். அப்

போது பெட்டிக்குள்ளே சட்டை வேஷ்டிகளுக்கு மேலாக ஒரு கடிதம் மடித்து வைக்கப்பட்டிருந்தது. ஆச்சரியத்துடன் எடுத்துப் படித்தான். தேவகி எழுதிய கடிதம் அது! அவன் புறப்படுவதற்கு முன்பாக, பெட்டியைப் பூட்டுவதற்கு முன், அவள் அவனுக்குத் தெரியாமல் கொண்டு வந்து வைத்திருக்கிறாள்.

மிகுந்த பரபரப்போடு அவன் கடிதத்தைப் படித்தான்.

அன்புள்ள தணிகாசலம்,

உன்னோடு பேசிவிட்டு வந்த பிறகு எனக்குத் தூக்கம் வரவில்லை. அந்த அரைமணி நேரத்தில் எனக்கு ஏற்பட்ட எண்ணங்களை உன்னிடம் உடனடியாகச் சொல்ல வேண்டுமென்று நினைத்தேன். திரும்பவும் உன்னை எழுப்பிச் சொன்னால் அது நன்றாக இருக்காது. நீயும் உனக்கு ஏற்பட்ட ஆவேசத்தில் களைத்துத் தூங்கிப் போயிருப்பாய். அதை ஆவேசம் என்றுதான் சொல்ல வேண்டும்.

நாளைக்கு நிதானமாகச் [சொல்லலாமென்றாலோ நீ ஊருக்குப் புறப்படுகிறாய். காலையில் எனக்கும் நேரமில்லை. நீ இரண்டு மாதம் கழித்துத் திரும்பிவரும் வரையில் என்றால் இதைச் சொல்லாமல் வைத்திருக்க முடியாது. ஒருவேளை நீ ஊருக்குப் போன பிறகு என்னைப் பற்றி நீயாக ஒரு முடிவுக்கு வந்துவிடக் கூடாதென்பதற்காகவே இதைக் கடிதத்தில் எழுதி வைக்கிறேன். நேரில் சொல்லச் சங்கடமாக இருக்கும் விஷயங்களைக் கடிதத்தில் சுலபமாக எழுதி விடலாமல்லவா?

பாதிக் கடிதம் படிப்பதற்குள்ளாகவே ரயில் பொன் வயல் ஸ்டேஷனில் வந்து நின்றது. மற்றப் பாதியையும் படித்து விடத் துடித்தான் தணிகாசலம். எதை எழுதியிருக்கிறாளோ, எப்படி எழுதியிருக்கிறாளோ என்ற பரிதவிப்பு. ஆனால் சாமான்களை அவனைக் கேட்காமலே கூலியாள் வந்து தூக்க முற்பட்டான். மாட்டு வண்டியில் உட்கார்ந்துகொண்டு வீட்டுக்குப் போவதற்குள் நிதானமாய்ப் படித்து விடலாம் என்று அதை மடித்துச் சட்டைப் பைக்குள் வைத்தான் தணிகாசலம். சட்டைப் பையும் அதை ஒட்டிய இருதயமும் கடிதத்தால் கனமாக இருந்தன.

(தொடரும்)

படித்துப் பாருங்கள்

அட்சய பாத்திரம்

அந்தக் காலத்தில் பாண்டவர்களுக்குக் கிடைத்த அட்சய பாத்திரம் இந்தக் காலத்தில் கிடைத்தால், 'என்ன என்ன அவதிகள் ஏற்படும்? என்ன என்ன அதிசயங்கள் நிகழும்? எத்தகைய ஆராய்ச்சிகளுக்கெல்லாம் இலக்காகும்? அதன் காரணமாக உலகத்தின் பொருளாதாரமே எப்படியெல்லாம் தலைகீழாக மாறும்?' என்னும் கற்பனையைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்கவைக்கும் முறையில் ஆசிரியர் சிறந்த ஹாஸ்ய நாடகமாகப் புனைந்திருக்கிறார். 'அட்சய பாத்திரம்' என்னும் தலைப்பு கொண்ட இந்த ஓரங்க நாடகத் தொகுதியைச் சுவையான எட்டு நாடகங்கள் அலங்கரிக்கின்றன.

ஆவி உலக விருந்தாளி என்னும் ஆரம்ப நாடகமே களைகட்டி விடுகிறது. மனைவிக்குப் பயந்து இப் பூவுலகை நீத்து ஆவியுலகை அடைந்த பின்னரும் ஒருவன் மனைவிக்கு எப்படிப் பயந்து சாகிறான் என்பதைச் சித்திரிக்கும் இந்த ஹாஸ்ய நாடகத்தைத் தயாரிக்கும் பொழுது ஆசிரியர் மிகச் சிறந்த உத்தியைக் கையாண்டு வாசகர்களை வயிறு வெடிக்கச் சிரிக்கவைத்து விடுகிறார்.

அத்தை விஜயம் என்னும் நாடகத்திலே, அத்தையும் கதாநாயகன் சந்துருவோடு மூட்டை முடிச்சுகளைக் கட்டிக் கொண்டு ராமேசுவர யாத்திரைக்குப் புறப்படும் காட்சி அபாரம். இலக்கியப் பசி கொண்டவர்களுக்கு இந்த 'அட்சய பாத்திரம்' அட்சய பாத்திரமாகவே இன்சுவை விருந்து அளிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

எழுதியவர்: 'சியாமா'; பிரசுரம்: அல்லயன்ஸ் கம்பெனி, சென்னை-4; விலை ரூ. 2-0-0.

பிரம்ம ஓளர் மாயா

(ஹிந்திக் கதைத் தொகுதி)


ஆசிரியர் ஸ்ரீ கமல்ஜோஷி 'கல்கி' நேயர்களுக்குப் புதியவர் அல்ல. அவருடைய பல கதைகள் 'கல்கி'யில் பிரசுரமாகி நேயர்களைக் கவர்ந்துள்ளன.

அவர் எழுதிய பத்துக் கதைகள் இத் தொகுப்பிலே இடம் பெற்றுள்ளன. பத்தும் பத்து விதமான கதைகள். ஆசிரியர் கதை சொல்லிக் கொண்டு போகும் பாணியே தனியானது. மேலே என்ன நடக்கப் போகிறது என்று அறியும் ஆவலைத் தூண்டுவதாக அமைய வேண்டும் என்னும் சிறுகதை இலக்கணத்தைக் கடைப் பிடித்து அதில் ஆசிரியர் நல்ல வெற்றி கண்டுள்ளார்.

ஆடம்பர வாழ்க்கை வாழும் சீமான்களிலிருந்து பிச்சைக்கார வாழ்வு வாழும் ஏழை எளிய மக்கள் வரை ஆசிரியரின் கதா பாத்திரங்களாக உலவுகின்றனர். அந்த அந்தச் சமூகத்தின் நிலையை அப்படியே படம் பிடித்துக் காட்டுவதில் ஆசிரியரின் அநுபவமும் புலமையும் நன்கு புலனாகின்றன. பல கதைகள் தூய அன்பை ஆதாரமாகக் கொண்டு புனையப்பட்டிருக்கின்றன இத் தொகுப்பில்.

தெள்ளிய ஹிந்தி நடையிலே எழுதப்பட்டிருக்கும் இந்தக் கதைத் தொகுதி ஹிந்தி அறிந்த மக்களுக்கு மிகவும் பயன்படும்.

பிரசுரம்: கப்ரா பிரகாசன் 26, கண்டிராக்டர்ஸ் ஏரியா (மேற்கு) ஜம்ஷேத்பூர் விலை: ரூ. 3.



வட்ட மேஜை

மறைந்த எழுத்தாளருக்கு அஞ்சலி

கடந்த பதினேழு ஆண்டுகளாக நகமும் சதையும்போலிருந்த என் ஆருயிர் நண்பர் கி. ரா. கோபாலன் எங்கள் இதயத்திலெல்லாம் பேரிடியைப் போட்டு விட்டுத் திடீரென்று போய்ச் சேர்ந்து விட்டார்.

உயிர் பிரிவதற்கு முதல் நாளிரவு ஒரு மணிவரையில் உட்கார்ந்து எழுதியிருக்கிறார்,-கடைசி எழுத்தாக. 15-ந் தேதி காலை—ஒரு வைஷ்ணவப் பெரியார் மறைந்த திருநட்சத்திரத்தை முன்னிட்டு, ஆசாரத்துடன் ஆராவமுதன் சந்நிதிக்குப் போய்த் தரிசனம்செய்துவிட்டு வீடுவந்து, கோவிலிலிருந்து வந்திருந்த பிரசாதப் பொருள்களைச் சாப்பிட்டு விட்டு, காலை பத்து மணி சுமாருக்குச் சாய்மான நாற்காலியில் சாய்ந்தவர்தான், இரண்டு நிமிஷத்துக்குள் அவர் குடலுக்கு இயற்கையாக இல்லாத குருதிவெள்ளம், அப்பொழுது அவருக்கு எப்படிச் சேர்ந்ததோ, எங்கிருந்து ஊறிற்றோ?—இறுதி மூச்சையும் தள்ளிக்கொண்டு வெளியே வந்து சேர்ந்தது. அவரது மாமனார் நடக்கவில்லை, பறந்து போய் டாக்டரை அழைத்து வந்தார். டாக்டர் மகா நிபுணராக இருந்தும், காலன் முந்திக்கொண்டு விட்டான். அவர் சாகும் நிலையிலுமில்லை, எண்ணமுமில்லை. மனைவியுடன், பஞ்சான குழந்தைகளுடன் ஒரு வார்த்தையில்லை. சிட்டாய்ப் பறந்து விட்டார், எல்லோரையும் அந்தரத்தில் நிறுத்திவிட்டு.

1947 ல் விவாகம் செய்து கொண்டார். முதல் பெண்ணுக்கு இப்போது எட்டு வயது. மற்ற நான்கும் அதன்கீழே உழக்குகள். கடைசிப் பெண் குழந்தைக்கு மூன்று மாதமாகிறது. எல்லாம் தந்தையின் தலைமாட்டில் ஒன்றும் புரியாத நிலையில் குருவிக் கண்களுடன் வளைய வளைய வந்து நின்ற பரிதாபமும், இருபத்தாறு வயதேயடைந்த மனைவியின் கதறல்களும் ஊர் கண்ட பொய்க் காட்சி தானோ என்னவோ?

அவர் உள்ளத்துக்கு, கரத்துக்கு அடிபணியாத கலையில்லை. சித்திரம் என நினைத்துவிட்டால் அவர் கை தானாகவே வரைந்துவிடும். கவிதையா, கட்டுரையா, சிறுகதையா, பெருங் கதையா, சங்கீதமா ஒன்றிலும் அவர் அறிவுத்திறனுக்குக் குறைவில்லை, சளைவுமில்லை. மகா அறிஞன், மகாரசிகன், மகா விமரிசகன். நல்லதையும், கெட்டதையும் சுவையையும், அசுவையையும் பாராட்டி எதிர்க்கச் சலியாத சாதிப்புக்காரர். உழைப்பில் அவருக்கு நிகர் அவர்தான். படிப்பதற்கும், எழுதுவதற்கும் பொழுது நிர்ணயமும், காலவரையும் கிடையாது. இவ்வளவும் பொதிந்த அவரது பேரறிவும், கலைக்கூடும் அக்கினிக்கு ஆஹுதியாகி விட்டன.

வருஷத்துக்கொரு முறையான ஆகஸ்டு பதினைந்தாம் தேதி ஊருக்கும் நாட்டுக்கும் மறக்க முடியாத ஒரு அரசியல் நாள். எனக்கும் அக்குடும்பத்துக்குமோ, அவரைப் பிரிந்து நிற்கும் ஒவ்வொரு நிமிஷமும் ஆகஸ்டு பதினைந்தாம் தேதி ஆகிவிட்டது.

கும்பகோணம் 16—8—57 கி. முத்துஸ்வாமி (துரோணன்)

எழுத்தாளர் திரு கி. ரா. கோபாலன் அவர்களது அகால மரணம் பற்றிக் கேள்வியுற்று இச்சங்கம் மிகவும் வருந்துகிறது. சிறு கதைகள், பாடல்கள், தொடர்கதைகள் பலவற்றை அவர்கள் 'கல்கி'யின் வாயிலாகவும், பிற பத்திரிகைகள் வாயிலாகவும் தமிழர்களுக்குத் தந்திருக்கிறார்கள். புதுமைத் தமிழ் வளர்ச்சிக்கு அவர்கள் பிரிவு எதிர்பாராத நஷ்டமாகும். 'கல்கி'யில் எழுதி வந்த தொடர் கதையை முடிக்கு முன்னரே அவர்களுக்கு வந்த இந்த முடிவு வாசக உலகத்துக்கும் பேரதிர்ச்சியாகும். அவரது குடும்பத்தாருக்கும், சம்பந்தப்பட்ட அனைவருக்கும் சங்கம் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

திருச்சி 19—8—57 அ. வெ. ர. கிருஷ்ணசாமி
தலைவர், திருச்சி தமிழ் எழுத்தாளர் சங்கம்

★

நண்பர் திரு கி. ரா. கோபாலன் அவர்களின் திடீர் மரணம் எல்லோரையும் கலக்கி விட்டது. 'ராஜாளி மடம்,' 'அபலை அஞ்சுகம்' போன்ற சிறந்த நாவல்களை எழுதி மக்கள் உள்ளங்களைக் கவர்ந்தவர். 'மாலவல்லியின் தியாகம்' என்ற வரலாற்று ஓவியம் நமது கல்கி பத்திரிகையில் வெளியாகிக் கொண்டிருக்கையில் இயற்கை எல்லா ரசிகர்களையும் ஏமாற்றி அவரை அழைத்துக் கொண்டு சென்று விட்டது.

நண்பர் கோபாலனைப் பிரிந்து தவிக்கும் மழலைகளுக்கும் குடும்பத்தினருக்கும் எங்கள் அனுதாபங்கள்.

தஞ்சை 19-8-57 இனியவன்
தஞ்சை ஜில்லா எழுத்தாளர் சங்கம்.

★

எழுத்தாளர் கி. ரா. கோபாலன் அவர்களின் மறைவு எத்தனையோ வாசக, எழுத்தாள நெஞ்சங்களை வேதனைக் குள்ளாக்கியுள்ளது. தமிழ் இலக்கிய வான மண்டலத்தை அழகு படுத்திய அருந்தமிழ் எழுத்தாளர்கள் ஒருவர்பின் ஒருவராக மறைந்து வருகிறார்கள். திரு கி. ரா. கோபாலன் அளித்த 'ராஜாளி மடம்' அற்புத சிருஷ்டி! இன்றையச் சமுதாயத்தின் அபலை அஞ்சுகங்களின் வாழ்வை மிகவும் அழகாகச் சித்திரித்துக் காட்டினார்.

போதி மாதவனின் பொன்னடிகளில் சமர்ப்பிக்க வேண்டி அவர் சரந்தொடுத்து வந்த புனித மலர்மாலை - 'மாலவல்லியின் தியாகம்' முடிந்து பார்ப்பதற்குள் காலமாகிவிட்டாரே! குறிப்பாக, தமிழ் எழுத்தாளர் உலகுக்குப் பெருத்த நஷ்டம். அவர் புகழ் வளருமாக.

திருநெல்வேலி 17—8—57 செல்வன்

★

திரு கி. ரா. கோபாலன் அவர்கள் காலமான செய்தியைப் பத்திரிகையில் படித்து அதிர்ச்சியடைந்தேன். தமிழகம் ஒரு சிறந்த

எழுத்தாளரை இழந்து விட்டது. தஞ்சை மாவட்டம் ஒரு மேதையைப் பறிகொடுத்து விட்டது. நாங்கள் ஒரு சிறந்த துணைவரை - நண்பரை பிரிந்து ஏங்குகிறோம். யாருக்கு யார் தேறுதல் சொல்லுவது என்பதே எங்களுக்குத் தெரியவில்லை.

நாகப்பட்டினம்
17—8—57 வீர. பழனியப்பன்

சுதந்திர மலர்

கல்கி சுதந்திர நாற்றாண்டு மலர் என் கைக்குக் கிட்டியது. மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தேன். ராஜாஜி அவர்களின் 1857 என்ற கட்டுரையும், திரு ம. பொ. சிவஞானம் அவர்களின் 'புதிய சமுதாயம் அமைப்போம்' என்ற கட்டுரையும் சுதந்திர மலருக்குச் சிகரமாக விளங்குகின்றன. கி. ராஜேந்திரன் அவர்களின் சோலைக்குயில் என்ற கதையும் 100-ம் பக்கத்தில் நேதாஜி சுபாஷ்சந்திர போஸின் படக் காட்சியுடன் வெளியாகியிருக்கும் ஜெய் ஹிந்தும் ரொம்ப அழகாகவும் அருமையாகவும் இருக்கின்றன. மணியம் அவர்கள் தீட்டிய அட்டைச் சித்திரம் கல்கி மலருக்குத் தனி சிறப்பைக் கொடுத்து, மணம் வீசித் திகழ்கிறது.

இலங்கை
18-8-'57 கிருஷ்ணன்

வழி பிறக்குமா?

பஸ்களின் முன்புறம், பின்புறம் உள்ள போர்டுகளில் புறப்படும் இடத்தின் பெயரையும் போய்ச் சேரும் இடத்தின் பெயரையும் சேர்த்து எழுதப்பட்டு வருகிறது. இதனால் பஸ் இன்ன இடத்துக்குப் போகிறது என்று கண்டு கொள்ள முடியாமல் படித்தவர்களும் திண்டாடுகிறார்கள். பஸ் நிர்வாகிகளைக் கேட்டால் சட்டம் அப்படி இருக்கிறது என்றும் தாங்கள் ஒன்றும் செய்வதற்கு இல்லையென்றும் சொல்லி, பொதுமக்கள் கஷ்டப்படுவதைக் கண்டு வருந்துகிறார்கள்.

இது விவரம் பல அதிகாரிகளுக்கு அடிக்கடி எழுதியதில், பஸ்ஸில் வரும் இடத்தில், இப்போது போய்ச் சேரும் இடமும் வழியும் மட்டும் கண்டு ஒரு சின்ன போர்டு தொங்க விடப்படுகிறது. அது போதாது. பஸ் வரும் போதும், போகும் போதும் பொது மக்களுக்கு நன்றாகத் தெரியும்படி முன்பக்கம் போர்டிலும் பின்பக்கம் போர்டுகளிலும் போய்ச் சேரும் இடம் மட்டும் எழுதி, மற்றப்படி இப்போது இருப்பதுபோல் புறப்படும் இடம், வழி, போய்ச் சேரும் இடம் இவைகளை பஸ்களின் இரு பக்கங்களிலும் எழுதும்படி செய்தால் பொதுமக்களுக்கு மிக்க உதவியாக இருக்கும்.

அத்துக்குடி
18-8-'57 வி. ராமமூர்த்தி

பாவை விளக்கு

அகிலனின் சிருஷ்டியிலே கதா பாத்திர உருவம், எளிய நடை, உணர்ச்சி மோதல்கள், முன்னுரையின் கற்பனைக் கலவைகள் எல்லாம் எங்கள் நெஞ்சை அள்ளுகின்றன. "பெண்களைச் சுற்றிச் சுற்றி உலகம் இயங்குகிறது" என்ற அறிஞர் கருத்துக்கு அழுத்தம் கொடுப்பதுபோல், பெண்களால் உருவாக்கப் படுகிறான் மனிதன் என்ற கருத்துகாட்டுகிறது.

ஆரம்பமே நல்ல உருவில் அமைந்தது எங்கள் பாக்கியமே!

திருநெல்வேலி எஸ். ஏ. பி.
19—8—57 நெல்லை நண்பர்கள் சங்கம்

இமாலயத் தவறு!

ஆகஸ்ட் 15-ந்தேதி சுதந்திர தினத்தன்று அரசாங்க டாகுமெண்டரி போர்டு வெளியிட்டுள்ள 'சுதந்திர உதயம்' என்ற படத்தைப் பார்க்க நேர்ந்தது. மிகவும் சிறப்பாகவும் இந்திய டாகுமெண்டரி படங்களின் தரம் முன்னேறி இருப்பதற்கு எடுத்துக்காட்டாகவும் அமைந்துள்ளது.

ஆனால் ஒரே ஒரு ஏமாற்றம்.


நாட்டின் அடிமைத்தளைகளை அறுத்து இந்தியாவைச் சுதந்திர பூமியாக்க வேண்டும் என்று பாடுபட்ட தியாகிகள் மற்றும் மாவீரர்களின் ஞாபகச் சின்னமாக அமைத்துள்ள இப்படத்தில் மகாத்மா காந்தி, திலகர், கோகலே, ராஜேந்திர பிரஸாத், முதலிய தியாகிகளுடைய உவும், ஜான்ஸிராணி, தாந்தியா தோபே, நேதாஜி போன்ற வீரர்களின் படங்களும் இடம் பெற்றிருக்கின்றன. மேலும் தாதாபாய் நௌரோஜி, அஜ்மல்கான், சித்தரஞ்சன் தாஸ், படேல் முதலிய அமரர்களின் படங்களும் இடம் பெற்றிருக்கின்றன.

இந்த மாவீரர்களின் வரிசையிலும் சரி, தியாகிகளின் வரிசையிலும் சரி, இந்திய விடுதலைக்காகச் செயலாற்றியும், அதே காரணத்தால் செத்து மடிந்த வீரர்களும் தென்னகத்தில் இல்லாமல் போய் விட்டார்களா? சுதந்திரப் பெரும் போரில் தென் இந்தியர் ஒருவருமே செயலாற்றவில்லையோ? அறிவின் சிகரமாம் எங்கள் ராஜாஜி, பிரிட்டிஷ் கம்பெனியை ஒடுக்க எண்ணிய கப்பலோட்டிய தமிழன் வ. உ. சி., வாக்கு வன்மையிலே தன் நிகரற்று விளங்கிய ஸ்ரீ சத்தியமூர்த்தி, எஸ். ஸ்ரீனிவாசய்யங்கார், சுதந்திர தாகத்தைக் கவிகள் மூலம் வடித்துத் தந்த மகாகவி பாரதியார் முதலிய வீரர்கள் தென்னகத்தைச் சார்ந்தவர்கள்தானே? அது மட்டுமல்ல, ஆந்திர சிங்கம் பிரகாசம் பந்துலு, வ.வே.சு. அய்யர், சேலம் விஜயராகவாச்சாரியார், போன்றவர்களும் இல்லையா?

இவர்களில் யாருமே இந்திய டாகுமெண்டரி போர்டாரின் கவனத்துக்கு வரவில்லையா? மவுண்ட் பேட்டன் பிரபு வெளியேறியதைக் காட்டும்போது முதல் இந்திய கவர்னர் ஜெனரலாகப் பதவி ஏற்ற மேதை ராஜாஜி எங்கே? ஏன் காட்டவில்லை?

இந்தத் தவற்றைப் பன்முறை எடுத்துக் காட்டியும் டாகுமெண்டரி போர்டு இதே தவறைத் திரும்பத் திரும்பச் செய்து வருகிறது.

போத்தனூர்
18-8-'57 எஸ். சாரங்கன்


பாருங்கள்! ஒரு அரை வில்லை
ஸன்லைட் தான்
இவ்வளவு
சலவையும்
செய்து முடித்தது!
அதன் மிகையான
நுரையே நிறைவேற்றும்
SUNLIGHT
SOAP
பளிச்சென்று
வெண்மையாக
வெளுப்பது ஸன்லைட் சோப்
S. 249-50 TM

மாலவல்லியின் தியாகம்



அத்தியாயம் 9

பார்த்தவரையில் போதும்!

பூதி விக்கிரம கேசரி கொடும்பாளூர் கோட்டையைக் கட்டியது பற்றிப் பெருமையாகப் பராந்தகன் விவரித்தான் அல்லவா? அதைக் கேட்டதும், "இதை எப்படிச் சாமர்த்தியம், சாகசம் என்று சொல்லிக் கொள்ள முடியும்? காற்று வசதி இல்லாமல் ஒரு கோட்டையைக் கட்டுவது ஒரு பெருமையா........?" என்றார் புலிப் பள்ளியார்.

"காற்று வசதிக்கு வேண்டிய முறையில்தான் இக் கோட்டை கட்டப்பட்டிருக்கிறது. அந்தச் சாளரங்கள் எல்லாம் இப்பொழுது திறந்துவிடப் படவில்லை."

"ஏன் அவைகளைத் திறந்து விடக்கூடாது?" என்று கேட்டார் புலிப்பள்ளியார்.

"திறக்கலாம். ஆனால் அவைகளைத் திறப்பதும் மூடுவதுமே ஒரு மர்மம். தவிர, காற்றுக்காக அவைகளைத் திறந்துவிட்டால் காற்றுமாத்திரம் வருவதில்லை. வெளிச்சமும் வந்துவிடும். அதனால்தான் அவைகளைத் திறப்பதில்லை. இது மர்மங்கள் நிறைந்த கோட்டையல்லவா..?" என்றான் பராந்தகன்.

புலிப்பள்ளியாருக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. அப்பொழுது அவனோடு இருளில் நின்று பேசித் தர்க்கம் செய்வதைவிட எப்படியாவது வெளியே போனால் போதுமென்றாகி விட்டது. "போதும் பார்த்த வரையில் எனக்குத் திருப்தி. போய் விடலாம்" என்று கூறினார்.

"இல்லை. இன்னும் முழுதும் நீங்கள் பார்க்கவில்லை. இன்னும் எவ்வளவோ இடங்களை நீங்கள் பார்க்க வேண்டும். இன்னும் வடக்கு வாசலுக்கே நாம் வரவில்லையே?"

"எல்லா இடங்களும் இப்படித்தானே இருக்கும்?" என்றார் புலிப் பள்ளியார் அலுப்போடு.

"எல்லா இடங்களும் இப்படி இருக்காது. கோட்டையின் ரகசியங்களும் மர்மங்களும் எங்கெங்கெல்லாம் இல்லையோ, அங்கெல்லாம் காற்று வசதியும் வெளிச்சமும் இருக்கும்" என்றான் பராந்தகன்.

"அப்படியென்றால் இந்தக் கோட்டையில் முக்கால்வாசி இடம் மர்மம் நிறைந்ததாகவும் இருள் நிறைந்ததாகவுமே இருக்கும்போல் இருக்கிறதே?"

"ஆம், அப்படித்தான்" என்றான் பராந்தகன்.

புலிப்பள்ளியார் மிகவும் குழப்பம் நிறைந்தவராய், "வெளிச்சமும் காற்றுமில்லாமல் இங்கே சுற்றிக் கொண்டிருப்பதில் பயனென்ன? போதும். எப்படியாவது வெளியே போய் விடுவோம்" என்றார் கெஞ்சும் குரலில்.

"இந்தக் கோட்டையிலுள்ள மற்ற ரகசியமான இடங்களையும் உங்களுக்குக் காட்டாமல் இருக்க என் மனம் இடங்கொடுக்கவில்லை. கொஞ்சம் சிரமத்தைப் பார்க்காதீர்கள். இதோ வடக்குவாசலை நெருங்கி விட்டோம். வெளிச்சமும் வந்துவிடும்" என்று சொல்லிக் கொண்டே நடந்தான் பராந்தகன்.

"இதோ வடக்கு வாசல் வந்துவிட்டது. உங்கள் மனத்துக்குச் சிறிது ஆறுதல் ஏற்பட்டிருக்கும். கவலைப்படாதீர்கள். வடக்கு வாசலோடு கோட்டைக்குள் நுழைந்து போனால் மேற்கு வாசலை அடையலாம். மேற்கு வாசலிலிருந்து தெற்கு வாசல்..தெற்கு வாசலிலிருந்து மறுபடியும் கிழக்கு வாச

கி. ரா. கோபாலன்

லுக்கு வந்து அங்கிருந்து அரண்மனைக்குப் போய்விடுவோம். கவலைப்படாதீர்கள்'' என்றான் பராந்தகன்.

இதைக் கேட்டதும் புலிப்பள்ளியார் மனத்தில் பெரும் திகில் ஏற்பட்டது. பராந்தகன் அன்று அந்தக் கோட்டை இருளிலும் புழுக்கத்திலுமே அவரைப் போட்டு வாட்டி உயிரை வாங்கி விடத் தீர்மானித்திருக்கிறான் என்றே அவர் முடிவு செய்து விட்டார். ''போதும், இதோடு விடுங்கள். இவ்வளவு தூரம் பார்த்ததே என் தேகத்துக்கு மிகுந்த சிரமத்தைக் கொடுத்து விட்டது. இனிமேல் தாங்காது'' என்றார் அவர் மிகவும் துடிப்போடு.

''இங்கு இருந்தது போல் அங்கெல்லாம் இருட்டாக இருக்குமோ என்ற பயம்தானே உங்களுக்கு? நீங்கள் கவலைப்படாதீர்கள். கோட்டைக் காவலர்களை ஒரு தீப்பந்தம் கொளுத்திக் கொடுக்கும்படி கட்டளை இடுகிறேன். அதைக் கொண்டு நாம் மற்ற இடங்களையும் சுற்றிப் பார்த்து விடலாம். உண்மையில் கொஞ்சம் வெளிச்சம் இருந்தால் கோட்டையின் மர்மங்கள் புலனாகும்'' என்றான் பராந்தகன்.

''சரி. போவோம். தீப்பந்தத்துக்கு ஏற்பாடு செய்யுங்கள். நடுவில் அது எங்கேயாவது அணையாமலிருக்க வேண்டும்'' என்றார் புலிப்பள்ளியார் மிகுந்த சந்தேகத்தோடு.

''அதைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். அணையாத தீப்பந்தமாகவே கொண்டு வர ஏற்பாடு செய்கிறேன். அதை நீங்களே வேண்டுமானாலும் கையில் வைத்துக் கொள்ளுங்கள்.''

வடக்கு வாசல் நெருங்க நெருங்க வெளிச்சம் அதிகமாகியது. காற்று ஜிலு ஜிலுவென்று அடித்தது. புலிப்பள்ளியாரின் பெருத்த தேகத்தில் குளிர்ச்சியான காற்றுப்பட ஏதோ தாம் சுமந்திருந்த பெரிய பளுவையே இறக்கி விட்டாற் போல் இருந்தது. வடக்கு வாசல் வந்த போது வெளியே நிற்கும் காவலாளர்களை அழைக்கும் சமிக்ஞையாகப் பராந்தகன் இருமுறை கையைத் தட்டினான். வாசலில் நின்ற காவலாளிகளில் ஒருவன் ஓடி வந்து பராந்தகன் எதிரில் வணங்கி நின்றான். பராந்தகன் அதிகாரத் தொனியில், ''நல்லதாக ஒரு தீப்பந்தம் சீக்கிரம் தயார் செய்து கொண்டு வா'' என்றான்.

அந்தக் காவலாளி ஏதோ சொல்ல நினைத்தவனாகச் சிறிது தயங்கி நின்றான். பராந்தகன் அவனைக் கடுமையாகப் பார்த்துக் கொண்டே, ''என்ன தயக்கம்? போ, சீக்கிரமாகக் கொண்டு வா'' என்று கூறினான்.

காவலாளி, ''உத்தரவு'' என்று பணிவுடன் சொல்லி விட்டு வேகமாக வெளியே சென்றான்.

அவன் சென்றதும் பராந்தகன் கேலியாகச் சிரித்துக் கொண்டே, ''இந்தக் கோட்டையின் ரகசியங்களைக் காப்பாற்றுவதில் எங்களை விட இந்தக் காவலாளர்களுக்குத் தான் அதிகக் கவலை. நான் உங்களுக்குக் கோட்டையின் அந்தரங்கங்களையெல்லாம் காட்ட வேண்டுமென்று விரும்பித் தீப்பந்தம் கொண்டு வரச் சொன்னேன். அதற்கு அவன் தயங்குகிறான். பார்த்தீர்களா?'' என்றான்.

''சில அரண்மனைச் சேவகர்களே அப்படித்







தான். அவர்களுக்கு ஏதேனும் கொஞ்சம் இடம் கொடுத்து விட்டால் போதும். நம்மையே அதிகாரம் செய்யத் துணிந்து விடுகிறார்கள். ஆனால் எங்கள் தஞ்சை அரண்மனையில் இப்படி இருக்க மாட்டார்கள். அங்கே எல்லோருக்கும் என்னைக் கண்டால் நடுக்கம்தான். என்னுடைய வார்த்தைகளுக்குப் பதில் பேச மாட்டார்கள். நான் சொல்லியதைச் செய்யத் தயங்கவும் மாட்டார்கள்'' என்றார்.

''அப்படியா? தஞ்சை அரண்மனையின் அதிகாரம் வேறு. கொடும்பாளூர் அரண்மனையும் அதன் அதிகாரமும் வேறு. சிறு ஊழியர்களானாலும் அவர்கள் ஆலோசனையையும் கேட்பது என்பது இங்கு வழக்கமாகி விட்டது'' என்றான் பராந்தகன்.

வெளியே வேகமாகச் சென்ற காவலாளி கையில் ஒரு தீப்பந்தத்துடன் ஓடி வந்தான். பராந்தகன், ''அதை இங்கே கொடு'' என்று அதிகாரத் தொனியோடு சொல்லி, அவனிடமிருந்து அதை வாங்கிக் கொண்டான். ''வாருங்கள், போவோம்'' என்று சொல்லி நடந்தான். புலிப்பள்ளியார் அவனைத் தொடர்ந்தார். அவர்கள் சிறிது தூரம் சென்றார்கள். எங்கும் ஒரே வெளிச்சமாக இருந்ததே தவிர, ஒரு இடத்திலாவது இருள் கப்பி இருந்ததாகத் தெரியவில்லை. பராந்தகன் 'இந்த இடத்தைப் பாருங்கள். அந்த இடத்தைப் பாருங்கள்' என்று உபசாரமாகச் சொல்லிக் கொண்டு சென்றானே தவிர, அந்த இடங்களில் எவ்வித அதிசயங்களோ மர்மங்களோ இருப்பதாகத் தெரியவில்லை. ஆயிரங்கால் மண்டபம் போல எங்கே திரும்பினாலும் கல் தூண்களைப் பார்க்க முடிந்ததே தவிர வேறொன்றையும் காண முடியவில்லை. திடீரென்று அவர்கள் ஒரு அழகான மண்டபத்துக்கு வந்தார்கள். சுற்றிலும் இருந்த தங்க மெருகிட்ட தூண்களும், ஆசனங்களும், தரையில் விரிக்கப்பட்டிருந்த ரத்தினக் கம்பளங்களும், சுற்றிலும் தொங்கவிடப்பட்டிருந்த பட்டுத் திரைச் சீலைகளும் அது ஒரு அழகான, அற்புதமான சபா மண்டபம் என்பதைத்தான் எடுத்துக் காட்டின.

''இதுதான் சபா மண்டபம்'' என்றான் பராந்தகன்.

''ஓஹோ! அப்படியா? மிகவும் அழகாக இருக்கிறது. இந்த இடத்திலெல்லாம் இவ்வளவு வெளிச்சம் இருக்கிறதே? தீப்பந்தம் எதற்கு?'' என்றார்.

''இங்கெல்லாம் வெளிச்சம் இருக்காதோ என்று நினைத்து இதைக் கொண்டுவரச் சொன்னேன். இது கைவசம் இருப்பதும் நல்லதுதான். பாதகமில்லை. திடீரென்று எங்கேயாவது இருட்டு இருந்தால் உதவியாக இருக்குமல்லவா?'' என்று சொல்லி, ''இதை நீங்கள் கொஞ்சம் வைத்துக் கொள்ளுங்கள்'' என்று சொல்லிப் புலிப்பள்ளியாரிடம் அந்தத் தீப்பந்தத்தைக் கொடுத்தான்.

புலிப்பள்ளி கொண்டார் அந்த தீப்பந்தத்தை வாங்கி வைத்துக் கொண்டு சபா மண்டபம் போல் தோன்றும் அந்த இடத்தில் ஏதேனும் மர்மங்கள் இருக்குமோ என்று பார்த்துத் தெரிந்து கொள்ள நினைக்கிறவர் போல் சுற்றிச் சுற்றிப் பார்த்தார். கண்ணைக் கவரும் அலங்காரத்தோடும் சித்திர வேலைப்பாட்டோடும் அமைந்த அம் மண்டபத்தில் எவ்வித மர்மமும் இருப்பதாக அவருக்குத் தோன்றவில்லை.

''மண்டபத்தைப் பார்த்து விட்டீர்களா? இந்தக் கோட்டைக்குள்ளேயே இதுதான் மிகவும் முக்கியமான மர்மங்கள் நிறைந்த இடம்'' என்றான்.

''இதில் என்ன மர்மம் இருக்கிறது? எனக்கு ஒன்றும் தெரியவில்லையே? இது

ஒரு அழகான மண்டபம். அவ்வளவு தானே?'' என்றார் புலிப்பள்ளியார்.

''இது ஒரு அழகான மண்டபமாக இருப்பதும் மர்மம்தானே......சரி! வாருங்கள், மேலே போவோம்'' என்று சொல்லி நடந்தான் பராந்தகன். புலிப் பள்ளியாரும் கையில் தீப்பந்தத்துடன் அவனைப் பின்பற்றி நடந்தார்.

புலிப்பள்ளியாருக்கு ஆத்திரமும்கோப மும் பொங்கி வந்தன. ''பகல் வேளை யில் நல்ல வெளிச்சமுள்ள இடத்திலேயே என் கையில் தீப்பந்தத்தைக் கொடுத் துப் பயித்தியக்காரன் போல உங்கள் பின்னால் வரும்படி செய்கிறீர்கள். எவ் வளவுதூரம் நான் இந்தத் தீப்பந்தத் தைப் பிடித்துக் கொண்டு வருவேன். நான் ஒரு அமைச்சன். தீப்பந்தம் பிடிப்பவனல்ல'' என்றார்.

''தீப்பந்தத்தின் உதவி உங்களுக்கு வேண்டாம் என்று பட்டால் அணைத்து இங்கேயே ஒரு இடத்தில் போட்டு விடுங்கள். அதற்காகக் கோபப்படா தீர்கள். நீங்கள் அமைச்சராக இருக்க லாம். ஆனால் இந்தமாதிரியான இடங் களில் தீப்பந்தத்தின் உதவியை நீங்கள் அலட்சியம் செய்துவிடக் கூடாது. அதை இங்கே கொடுங்கள்'' என்று சொல்லித் தீப்பந்தத்தை வாங்கி அணைத்து, அதை ஒரு புறமாகப் போட்டுவிட்டு, ''வாருங் கள், போவோம்...'' என்றான்.

புலிப்பள்ளியார் ஏதோ முனகிய படியே அவனைப் பின் தொடர்ந்து சென்றார். அங்கிருந்து சிறிது தூரம் சென்றதும் பாதை வளைந்து, வளைந்து சென்றது. அந்தப் பாதையில் நடப்பதே தலை சுற்றும் போலிருந்தது. ''இதற்குப் பாம்புப் பாதை என்று பெயர். அடுத் தாற்போல் வரப்போவது எலி வளைப் பாதை'' என்று அவன் சொல்லிக் கொண்டு வரும்போதும் கொஞ்சம் கொஞ்சமாக வெளிச்சம் குறைந்து இருள் சேருவது போலிருந்தது. உண்மை யாகவே சிறிது நேரத்தில் மையிருட்டு குமைந்திருக்கும் ஒரு இடத்துக்கு அவர்கள் வந்து சேர்ந்தனர். 'மறுபடி யும் இப்படி ஒரு வாதனையா?' என்று எண்ணிப் புலிப்பள்ளியாரின் மனம் குமைந்தது. அவர் அப்படியே திகைப் படைந்து நின்று விட்டார்.

''மறுபடியும் ஒரே இருட்டாக இருக் கிறதே?'' என்றார் புலிப்பள்ளியார்.

''அப்படித்தான் இருக்கும். இதுதான் எலி வளைப்பாதை. ஜாக்கிரதையாக வாருங்கள். பாதை சரியாக இருக்காது. பாதையும் மிகக் குறுகலானதாக இருக் கும்..'' என்றான் பராந்தகன்.

''நன்றாக இருக்கிறது. இந்தப் பாதை யில் எப்படி நான் நடப்பேன்? கையி லிருந்த தீப்பந்தத்தையும் போட்டு விட் டோம்'' என்றார் அவர்.

''நான்தான் அதைக் கையிலேயே வைத்துக் கொள்ளுங்கள் என்று சொன் னேனே? எனக்கு இப்படி யெல்லாம் வரும் என்று தெரியும். நீங்கள்தான் தீப்பந்தம் எதற்கு என்று சொன்னீர் கள்..'' என்றான் பராந்தகன்.

''நீங்கள் மோசக்கருத்தோடு என்னைத் தவறான பாதையில் அழைத்துக்கொண்டு வந்திருக்கிறீர்கள்'' என்றார் புலிப் பள்ளியார் கோபத்தோடு.

''நீங்கள் தவறாகப் பேசுகிறீர்கள். நான் மோசக் கருத்து உள்ளவனாக இருந்தால் தீப்பந்தம் அவசியம் இருக்க வேண்டும் என்று சொல்லுவேனா? நீங்கள் தான் என் வார்த்தையை அலட் சியம் செய்தீர்கள்.''

''இந்தக் கோட்டையில் இதுதான் நேரான பாதை. இதைத் தவிர வேறு பாதையே கிடையாது. இதைத் தவிர வேறு ஏதேனும் பாதை இருக்குமென்று நீங்கள் நினைத்தால் அந்தப் பாதையை நீங்களே கண்டுபிடித்துச் சிரமமில்லா மல் செல்வதில் எனக்கு ஆட்சேபனை எதுவுமில்லை. ஆனால் என்னை விட்டு நீங்கள் பிரிந்தீர்களானால் என்னை மறு படியும் கண்டு பிடிப்பது சிரமமாகப் போய் விடும். அதோடு நீங்களும் கோட் டையை விட்டு வெளியே வரமுடியாது'' என்றான் பராந்தகன்.

பராந்தகனின் வார்த்தைகள் புலிப் பள்ளியாரின் மனத்தில் மேலும் மேலும் பீதியையும் நடுக்கத்தையும் உண்டாக் கின. அந்தச் சமயத்தில் அவனுடைய தயவைச் சம்பாதித்துக் கொண்டு எப்படியேனும் கோட்டையை விட்டு வெளியே சென்று விட்டால் போது மென்று அவருக்குப் பட்டது. ''இது மிகவும் அதிசயமான கோட்டை தான். இதைச் சாதாரணமாகச் சுற்றிப் பார்க்க வேண்டுமென்ற ஆவலே தவிர என் மனத்தில் வேறு எவ்வித எண்ணமும் கிடையாது. இந்தக் கோட்டையின் மர்மங்களைத் தெரிந்து கொள்ளவேண்டு மென்ற இச்சை எனக்கு இல்லை. முன்பு கண்ட இருள் பாதைகளைவிட இது மிகவும் கடினமான பாதையாக இருக் கும் போலிருக்கிறது. முன்னால் செல்லும் நீங்கள் என் கையைப் பிடித்துக்கொண்டு நடந்தால் நலமென்று நினைக்கிறேன்..'' என்றார் மிகவும் தணிவான குரலில்.

இருட்டில் அவருடைய முகம் பராந்த கனுக்குத் தெரியவில்லை. அவருடைய கெஞ்சுதலான வார்த்தைகள் அவன்



எடுப்பான தோற்றத்திற்கு

தற்காலத்திய பெண்மணிகள் மிகவும் விரும்புவது

TWO X TWO *Popular*

புல் வாயில்

வெண்மையானதும் பிரின்ட் செய்யப்பட்டதும்

தி மப்பட்லால் பைன் மில்ஸ் லிட்., நவஸாரி. அவர்களின் உன்னத தயாரிப்பு

அசல் துணிகளை ஞாபகத்தில் வையுங்கள்

★ ராஜலக்ஷ்மி 48"

★ ராஜஸோபா 45"

மொத்த விற்பனையாளர்கள்:

பயனியர் பீஸ்குட்ஸ் கம்பெனி

கௌராஜ் கல்லி, எம். ஜே. மார்கெட், பம்பாய்-2.



பருக்களும் விகாரமான சருமமும் 24 மணி நேரத்தில் குணமடைகிறது



நிக்ஸோடெர்ம் (Nixoderm) கண்டுபிடிக்கப் பட்ட பிறகு எக்ஸிமா, முகப்பரு, படை, ரத்தக் கட்டி முதலிய அருவருப்புத் தரக்கூடிய சரும உபாதைகளினால் அவதியுற அவசியமே இல்லை. நோயாளி என நினைத்து நண்பர்கள் விலகக் காரணமான அருவருப்பான சருமத்தை இம் மருந்தினால் குணப்படுத்துங்கள்

ஒரு புதிய சாதனம்

நிக்ஸோடெர்ம் (Nixoderm) ஒரு புதிய களிம்பு. பிசுக்கற்றது. ஒன்பது மூலப் பொருள்களின் சேர்க்கையால் தயாரித்த நிக்ஸோடெர்ம் (Nixoderm) மேலே தடவும் போதே ஒரு பவுடரைப்போல சருமத் துவாரங்களினூடே சென்று வியாதிக்கு மூலமான இடத்தை மூன்று வழிகளில் தாக்குகிறது. (1) நோய்க்குக் காரணமான கிருமிகளைக் கொல்லுகிறது. (2) அரித்து, எரிந்து வெந்து போவதை 7 முதல் 10 நிமிஷத்தில் தடுத்து சருமத்தை மென்மை யாக்குகிறது. (3) இயற்கையாகவே ஆற்றிச் சுத்தமாக்குகிறது

விரைவில் பலனளிக்கிறது

சரும நோய்களை நிவர்த்திக்கவே தயாரான நிக்ஸோடெர்ம் (Nixoderm) மற்றதை விடச் சீக்கிரமாகவே நமைச்சல், எரிச்சலைச் சில நிமிஷத்தில் நிறுத்திச் சருமத்தை மிருதுவாகவும் வழவழப்பாகவும் செய்கிறது. நிக்ஸோடெர்ம் (Nixoderm) ஆயிரக் கணக்கானவர்களது சருமத்தைச் சுத்தமாக்கி புஷ்டியாக்கியது. அவர்களில் ஒருவரான மிஸ்டர் R. K. கூறுகிறார். 12 வருஷமாக நமைச்சலும் எரிச்சலும் தரும் எக்ஸிமாவினால் கஷ்டப்பட்டேன். பல மருந்துகளுக்குப் பின் நிக்ஸோடெர்ம் (Nixoderm) உபயோகித்தேன். பத்து நிமிஷத்தில் நமைச்சல் நின்று மறுநாளே சருமம் சுத்தமாகியது. என் தோற்றத்தின் மாறுதலைக் கண்ட நண்பர்கள் ஆச்சரியமடைந்தனர்

திருப்திக்கு உத்தரவாதம்

இன்றே நிக்ஸோடெர்ம்(Nixoderm) வாங்கி உபயோகித்து அதனால் ஏற்படும் பலனை கவனியுங்கள். ஒரு வாரத்தில் சருமத்தைச் சுத்தப்படுத்துகிறது. திருப்தி அளிக்கும்படி சருமத்தைச் சுத்தப்படுத்தாவிடில் அதற்கான செலவைப் பற்றிக் கவலையுற வேண்டாம். அதன் காலிபாக்கெட்டைத் திருப்பி அனுப்பினால் உங்களுக்கு முழுப் பணம் வாபஸ் செய்யப்படும். அதற்கு அளிக்கப்படும் உத்தரவாதமே உங்களுக்குச் சிறந்த பாதுகாப்பு


அழகு மிகுந்த நீண்ட
அடர்ந்த கூந்தலுக்கு
பாமாலிவ்
பெர்ப்யூம்ட் கோகோனட் ஹேர் ஆயில்
PALMOLIVE
குடும்ப முழுவதிற்கும் மிக்க உகந்தது!
பெரிய எகானமி அளவு புட்டி
யினால் பணம் மிச்சமாகிறது!
மூன்று விதி விருப்பான
வாசனைகளில் கிடைக்கும்.
லவண்டர்
மல்லிகை
ரோஜா

PCH/G/2

காதில் விழுந்தன. அவருடைய நய வஞ்சகமான இதயம்தான் அவனுக்கு நன்ருகத் தெரியுமே?

''என்னுடைய கையைப் பிடித்துக் கொண்டு நீங்கள் வாருங்கள், பயப் படாதீர்கள். இன்னும் சிறிது தூரம் தான் இருக்கும்....'' என்று சொல்லி அவருடைய கையைப் பிடித்துக்கொண்டு நடந்தான். அவன் ஒழுங்காக அந்தக் குறுகிய பாதையில் இருளில் சிரமமில் லாது நடப்பது புலிப்பள்ளியாருக்குச் சிறிது வியப்பை அளித்தது. அவனுடைய கையை அவர் பிடித்துக் கொண்டிருந் தாலும் அந்த இருளில் அவனோடு வேக மாக நடப்பது அவருக்கு மிகவும் சிரம மாகத்தான் இருந்தது. அவருக்கு மூச்சு வாங்கியது.

அவர்கள் அந்தக் குறுகலான பாதை யில் நடந்துவரும்போது பாதை கொஞ் சம் கொஞ்சமாகப் பெரிதாகிக்கொண்டு வந்தது. அதோடு இருளும் சிறிது சிறி தாக மறைந்து கொண்டு வந்தது. ''இதோ கோட்டையின் சிறைக்கூடம் வந்தது. இனிமேல் அதிகக் கஷ்டமிருக் காது. வெளிச்சமிருக்கும்'' என்று பராந் தகன் சொல்லிக் கொண்டு வரும்போது அவர்கள் குகை வாசல் போன்ற ஒரு இடத்துக்கு வந்தனர். எங்கும் வெளிச் சம் நிறைந்திருந்தது. வட்டமாக இருந்த அந்த வாசலில் இரும்புக் கதவு போடப் பட்டிருந்தது. பராந்தகன் அந்தக் கதவில் ஓர் இடத்தில் கை வைக்கவும் கதவு தானுகத் திறந்து கொண்டது. அவ்வாசலுக்கு அப்பால் கீழ் நோக்கிச் செல்லும்வண்ணம் படிகள் அமைக்கப் பட்டிருந்தன. அந்தப் பாதை ஏதோ பாதாளச் சுரங்கத்துக்குப் போவது போலிருந்தாலும் இருளில்லாது வெளிச் சம் நிறைந்த பாதையாகவே இருந்தது. புலிப்பள்ளியாருக்கு இது சிறிது ஆச்சரி யத்தை விளைவித்தது. ''இந்தப் பாதை யில் வெளிச்சம் எப்படி வருகிறது?'' என்று வியப்புடன் கேட்டார்.

''அதுதான் மர்மம். வெளிச்சம் எப்படி வருகிறது என்பதை உங்களால் கண்டு பிடிக்க முடியாது'' என்று சொல்லிக் கொண்டே படிகளில் இறங்கி நடந்து கொண்டிருந்தான் பராந்தகன். முடி வில்லாமல் கீழ் நோக்கிச் செல்லும் படிகள் இறங்கி நடந்து நடந்து புலிப் பள்ளியாரின் கால்கள் துவண்டுவிட்டன. ''இப்படி இன்னும் எவ்வளவு தூரம் இந்தப் படிகள் இருக்கின்றன? பாதாள லோகம் வரை போகும் போலிருக் கிறதே....?'' என்ருர்.

''பாதாளலோகத்தைநீங்கள் பார்த்த தில்லை அல்லவா...?'' என்ருன் பராந் தகன் சிரித்துக்கொண்டே.



கல்யாண வீட்டில் வந்தவர்: நாங்கள் போய் அந்த எதிர்த்த ஹோட்டலில் சாப்பிட்டு விட்டு வந்து விடுகிறோம்!

கல்யாண வீட்டுக்காரர்: அவசியம் வந்து விட வேணும். ஏமாத்தி விட்டு அப்படியே கம்பி நீட்டி விடாதீர்கள்!

''சரிதான். என்னைப் பாதாளலோகம் பார்க்க அழைத்துச் செல்கிறீர்களா?'' என்ருர் புலிப்பள்ளியார்.

''இல்லை. இப்படிக் கொஞ்ச தூரம் கீழே இறங்கிச் செல்லுவதற்கே பாதாள லோகம் போவது போலிருக்கிறது. மறு படியும் மேலே ஏறிச் செல்லும்போது கைலாசத்தை நோக்கிப் போகிருேமோ என்று கேட்பீர்கள் போலிருக்கிறதே'' என்ருன் அவன் சிரித்துக்கொண்டே.

''மறுபடியும் மேலே நோக்கிச் செல்ல வேண்டுமா....?'' என்று மிகுந்த திகைப்போடும் கலக்கத்தோடும் கேட் டார் புலிப்பள்ளியார்.

''மறுபடியும் மேலே போகாமல் இங் கேயே இருந்து விடலாம் என்று உங்கள் உத்தேசமா? இது கோட்டையிலுள்ள சிறைக்கூடம் என்று உங்களிடம் நான் சொன்னது ஞாபகத்தில் இருக்கிறதா? நீங்கள் இங்கேயே இருப்பதில் தடை ஏதும் இல்லை'' என்ருன் பராந்தகன்.

இதைக் கேட்டதும் புலிப்பள்ளியாரின் மனத்தில் திகில் அதிகமாகி உடலிலே நடுக்கமெடுத்தது. ''இல்லை, கேட்டேன். எவ்வளவு தூரம்கீழே இறங்குகிருேமோ, அவ்வளவு தூரம் மேலே ஏறித்தானே ஆகவேண்டும்?'' என்ருர்.

கீழே இறங்கி வந்து கொண்டிருந்த அவர்கள் திடீரென்று ஒரு சமதளத்துக்கு வந்து சேர்ந்தனர். சம சதுரமுள்ள முற்றம்போல் தோன்றிய அவ்விடத் தைச் சுற்றிலும் இரும்புக் கம்பிகள்

பொருத்தப்பட்ட கூண்டுகள் போன்ற அறைகள் இருந்தன.

பராந்தகன் அவரை அந்தக் கூண்டுகளுக்குச் சமீபமாக அழைத்துக்கொண்டு போய், "இவைகளில்தான் கைதிகளை அடைத்து வைப்பது வழக்கம்" என்றான். அவன் அப்படிச் சொல்லிக்கொண்டிருக்கும் போது எங்கிருந்தோ இடி இடிப்பது போன்ற கர்ஜனை கேட்டுப் புலிப்பள்ளியார் நடுங்கி நின்றார்.

"பயப்படாதீர்கள், ஒன்றுமில்லை, சிங்கம்தான்! அதோ அந்தக் கூண்டில் பாருங்கள்" என்று சொல்லி ஒரு கூண்டைச் சுட்டிக் காட்டினான். அந்தக் கூண்டில் அடைக்கப்பட்டிருந்த சிங்கம் ஒன்று மிகுந்த ஆக்ரோஷத்துடன் உறுமிக் கொண்டே இரும்புக்கம்பிகளைப் பாதத்தால் அறைந்து கொண்டிருந்தது.

"அது நரமாமிசம் சாப்பிட்டு நெடு நாட்களாகி இருக்க வேண்டும்" என்று சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது இன்னொரு பக்கத்திலிருந்து ஏதோ உறுமுவதுபோலிருந்தது. "அதோ பாருங்கள், வேங்கைப் புலி. அதற்கும் ஆத்திரம் இருக்கிறது. நான் தனியாக வந்திருந்தால் அவை இவ்வளவு ஆர்ப்பாட்டம் செய்யாது. நான் வேறு புது மனிதர் ஒருவரை அழைத்து வந்திருப்பதைப் பார்த்துத் தங்களுக்குப் பலி கொடுக்கத்தான் அழைத்து வந்திருப்பானோ என்று நினைத்து ஆர்ப்பாட்டம் செய்கின்றன" என்று கூறினான் பராந்தகன்.

இதைக் கேட்டதும் புலிப்பள்ளியாரின் உடலே நடுங்கிச் சிலிர்த்து வியர்த்துக் கொட்டியது. "நீங்கள்..வந்து..பலி கொடுப்பது வழக்கமா?" என்றார்.

"பலி கொடுக்கும் மனிதர்களை இவ்வளவு மரியாதையாக அழைத்து வர மாட்டோம். வேறு விதமாகத்தான் அழைத்து வருவோம். அவர்கள் கைதிகள் அல்லவா?"

"கொடும்பாளூரில் கைதிகளை யெல்லாம் இப்படித்தான் மிருகங்களுக்குப் பலி கொடுப்பது வழக்கமா?"

"எல்லாக் கைதிகளையுமே பலி கொடுப்பதில்லை. புத்தசமயத்தில் பெரிய குற்றங்களைச் செய்த கைதிகளையும் எதிரிகளையும்தான் அப்படிச் செய்வது வழக்கம்" என்றான் பராந்தகன்.

சிறிது தூரம் சென்றதும் இருவரும் ஒரு பெரிய முற்றத்துக்கு வந்து சேர்ந்தனர். அந்த முற்றத்துக்கு நடுவேயிருந்த மேடையில் அமர்ந்து கொண்டு, "சுரங்கப் பாதையில் இவ்வளவுதூரம் வந்தது, உங்களுக்கு மிகுந்த களைப்பாக இருக்கும். மறுபடியும் நாம் இந்த இடத்தை விட்டுச் செல்ல நெடுந் தூரம் மேலே ஏறிச் செல்ல வேண்டும். கொஞ்ச நேரம் இங்கே உட்கார்ந்து இளைப்பாறி விட்டுச் செல்வது நல்லதுதானே?" என்றான் பராந்தகன்.

"ஆமாம், சிறிது நேரம் களைப்பாறினால்தான் நல்லது" என்று அவரும் சொல்லி அந்த மேடையில் அமர்ந்தார்.

"காலையில் நீங்கள் சுதமதியிடம் பூதுகனைப் பற்றிக் கொடுத்த தகவல் அவளுக்கு மிகவும் அதிர்ச்சியை உண்டாக்கி விட்டது. அதோடு இவ்விஷயத்தைக் கேட்டால் வைகைமாலையும் மிகவும் மனவாட்டம் அடைந்து விடுவாள். உங்களைப் போன்ற அமைச்சர்கள் இம்மாதிரி பெண்களின் மனம் அதிர்ச்சியுறும் வண்ணம் எவ்விஷயத்தையும் சொல்வது உத்தமமல்ல என்பதுதான் என் அபிப்பிராயம். அதிருக்கட்டும்; உண்மையாகவே பூதுகருக்கு ஏதேனும் ஆபத்து ஏற்பட்டிருக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?"

"கலங்கமாலரையரின் கையில் சிக்கியவர்கள் உயிர் தப்ப முடியாது என்பதுதான் என் அபிப்பிராயம்."

"இருக்கலாம். ஆனால் பூதுகருடைய சாமர்த்தியத்தைப் பற்றியும் நாம் குறைவாக மதிப்பிட முடியாதல்லவா? போகட்டும். உங்களுக்கு அதன் விவரமெல்லாம் நன்றாகத் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். பூதுகர் எங்கே எப்படிக் கலங்கமாலரையரின் கையில் சிக்கினார் என்பதைத் தெரியப்படுத்தினீர்களானால் நலம்."

"அதெல்லாம் அரசாங்க விஷயம். ரகசியம். சொல்வதும் தவறு."

"இதெல்லாம் சொல்லக்கூடாத ரகசியம் என்றால் பூதுகர் கலங்கமாலரையர் கையில் சிக்கி இருக்கிறார், அவருடைய உயிருக்கு அபாயம் என்ற ரகசியத்தை மாத்திரம் நீங்கள் ஏன் சொல்லவேண்டும்?" என்றான் பராந்தகன்.

"எனக்குத் தெரியும், எதைச் சொல்லலாம், எதைச் சொல்லக்கூடாதென்று" என்றார் அவர் விறைப்பாக.

பராந்தகன் சிரித்துக் கொண்டே, "அப்படியா? கேட்பவர்கள் பீதியடையும் வண்ணம் விவரமில்லாமல் எதையாவது சொல்லி விட்டால் அவர்கள் சாதாரணமாய்விட்டுவிடமாட்டார்கள். தயவுசெய்து நீங்கள் இந்தக் கோட்டைச் சிறைச்சாலையை விட்டு வெளியே செல்வதற்குள் என்னிடம் விவரமாக எல்லாவற்றையும் சொல்லுவது நலம் என்று நினைக்கிறேன்" என்றான்.

"நீங்கள் சொல்வதைப் பார்த்தால் என்னை இந்தச் சிறையில் வைத்து மிரட்டி ரகசியங்களை அறிய நினைப்பது போலல்லவா இருக்கிறது?" என்றார் புலிப்பள்ளியார் துடிப்போடு. (தொடரும்)

மாதர்குல திலகங்கள்

பாரிஜாதம் நாயுடு



பதினைந்து ஆண்டுகளுக்கு முன் ஒரு சகோதரியுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருந்தது. பிறகு இரண்டொரு தடவைகள் சில நிமிஷங்கள் பார்க்கநேர்ந்தது. சென்ற வாரம் வெளி நாட்டுக்குப் போகும் அந்தச் சகோதரியைச் சந்தித்தேன். பதினைந்து வருஷங்களில் அந்தச் சகோதரி அறிவு, ஆற்றலில் பிறை முழுமதி அடைந்தமாதிரி வளர்ந்திருக்கிறார். அதற்கேற்பப் பதவியில் இருக்கிறார். ஆனால் பழைய சிநேகிதிகளிடம் சிரித்து அன்புடன் பேசும் இனித்த சுபாவம் மட்டும் கால ஓட்டத்திலும் மாறவில்லை. லேடி கனகாம்பரம் பார்வைக்குப் பகட்டாக இருந்து துவண்டு சீக்கிரம் வாடிவிடும்; ஆனால் பாரிஜாத மலர் வாடாது. மணம் குன்றாது அல்லவா?

திருமதி பாரிஜாதம் நாயுடு அவர்கள் தஞ்சை ஜில்லாவைச் சேர்ந்த டாக்டர் ராவ்சாஹிப் பார்த்தசாரதி நாயுடுவின் செல்வப் புதல்வி. பொன்னி நதியின் புனிதமான தண்ணீரைக் குடித்து வளர்ந்தவர். இல்லற வாழ்க்கையில் மகிழ்ச்சியைக் காணாத அந்தச் சகோதரி பெண்குலத்துக்குச் சேவை செய்ய நினைத்தார். நாம் எவ்வளவோ செயல்களைச் செய்ய நினைக்கலாம். ஆனால் ஒன்றைக் கூடச் செய்து முடிக்க இயலாது. இவரோ சேவை செய்வதைத் தெய்வத்தின் கட்டளையாகக் கொண்டார்.

படிப்பில் அதிக ஆர்வம் கொண்டார். வீட்டிலேயே படித்துப் பிறகு ராணி மேரி கல்லூரியில் சேர்ந்தார். 1933-ம் ஆண்டு எம். ஏ. பரீட்சையில் முதன்மையாகத் தேறினார். கல்லூரிப் படிப்பில் அநேக பதக்கங்களைப் பரிசுகளாகப் பெற்றிருக்கிறார். பிறகு எல். டி. பரீட்சையிலும் தேர்ச்சி பெற்றார்.

வெறும் கல்விப்படிப்புடன் அவர் நின்றுவிடவில்லை. சமூகநல சேவை செய்யத் தனிப்பட்ட பயிற்சி பெற அமெரிக்காவுக்குச் சென்றார். அங்கேயும் தம்முடைய தனிப்பட்ட சாமர்த்தியத்தால் விரைவில் வெற்றியுடன் திரும்பினார்.

1930-ம் ஆண்டு கல்வி இலாகாவில் வேலைக்கு அமர்ந்தார். சிறிது காலம் பள்ளிக்கூட இன்ஸ்பெக்டர் வேலை பார்த்தார். ஆனால் இந்தியப் பெண்களுக்குச் சேவை செய்ய வேணுமென்ற ஆவல் மனத்தில் இருந்து கொண்டே இருந்தது. அப்பொழுது இந்திய மாதர் சங்கம் மாதர் நலத்துக்காக ஒரு மந்திரி அமைக்க வேண்டுமென்று ஒரு தீர்மானம் செய்து சர்க்காரிடம் வேண்டிக் கொண்டது. அரசாங்கம் அப்படிச் செய்யா விட்டாலும் மாதர் நல இலாகா என ஒன்று ஏற்படுத்தியது. அதில் திருமதி பாரிஜாதம் நாயுடு உயர்தர அதிகாரியாக அமர்த்தப்பட்டார். அந்த இலாகா மூலமாகச் சேவா நிலையம் என்ற ஸ்தாபனத்தை முதன்முதலில் ஏற்படுத்தினார். இன்னும் அந்த இலாகா வாயிலாகப் பெண்களுக்கு அநேக பணிகள் ஆற்றி இருக்கிறார்.

1943, 1944 ஆண்டுகளில் யுத்த காலத்தில் பெண்கள் உதவிப் படையின் தலைவியாக வேலை பார்த்த முதல் பெண்மணி இவர்தான்.

1954-ம் ஆண்டு தில்லியில் திட்ட கமிஷனில் இருந்தார். அதன்பிறகு பிலிப்பைன்ஸில் நடந்த மகாநாட்டுக்குப் பாரத நாட்டுப் பெண்குலத்தின் பிரதிநிதியாகச் சென்றார்.

மாதர் நல இலாகா முதல் ஐந்தாண்டு திட்டத்தில் மத்திய சமூக க்ஷேம நல இலாகாவாக மாறியதும் சென்ற மாதம் இந்தோனேஷியா சர்க்காருக்கு ஐ. நா. சமூக க்ஷேம அபிவிருத்தி ஆலோசகராக நியமிக்கப்பட்டு இந்தோனேஷியா சென்றார்.

இந்தச் சகோதரி சுதந்திர இந்தியாவில் பெண்களுக்காக அநேக சேவைகள் செய்யும் சக்தியை இன்னும் அபாரமாக அடைய வேண்டுகிறோம். —வசுமதி ராமசுவாமி




சுதந்திரப்போரின் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்ட இவ்வருஷம் ஆகஸ்டு 15-ம் தேதியன்று, அஹிம்சா மார்க்கத்தில் பாரத நாட்டின் சுதந்திரத்தை ஈட்டித் தந்த காந்திமகானுக்கு, பிரதமர் நேரு அஞ்சலி செலுத்தினர். புதுதில்லியிலுள்ள காந்திமகான் சமாதிக்கு நேருஜீ மலர் மாலை சாத்துகிறார்.




சென்னையில் நடைபெற்று வரும் கதர் கண்காட்சியை மந்திரி பக்தவத்சலம் பார்வையிடுகிறார். கதர் போர்டு டைரக்டர் திரு ரா. பார்த்தசாரதி மந்திரிக்கு வண்ணக் கதர் பட்டாடையின் நேர்த்தியை விளக்குகிறார். கதராடைகளின் அழகிலே மந்திரி மூழ்கியிருப்பதைப் படத்தில் காணலாம்.




தொண்டுகளிலெல்லாம் தலைசிறந்தது என்று கருதப்படுவது வைத்தியப் பணிதான். ஐ. நா. சபையின் சார்பில் பாலஸ்தீனத்திலுள்ள அகதிகளுக்கு வைத்திய உதவி அளிப்பதற்காக ஏற்பட்டுள்ள வைத்தியக் குழுவுக்குப் பாரத சர்க்கார் சில டாக்டர்களையும் மருந்துகளையும் அனுப்பியிருக்கிறார்கள். அப்படிச் சென்ற டாக்டர்களில் ஒருவரான திருமதி ஜான் ஜெருசலத்திலுள்ள அரபு மாதர் சங்கத்தில் ஒரு குழந்தைக்கு வைத்தியம் செய்கிறார். குழந்தைச் செல்வத்தைப் பெறுவதிலுள்ள ஆனந்தம் அவர் முகத்திலே பிரதிபலிப்பதைப் படத்தில் காணலாம்.



பர்மாஷெல் சங்கத்தினர் சென்ற ஆகஸ்ட் 14-ந் தேதியன்று சுதந்திர விழாவைச் சிறப்பாகக் கொண்டாடினர். ராஜாஜி அவர்கள் எழுதியனுப்பி யிருந்த "நமது ஜனநாயகம்" என்ற கட்டுரையை விழாவில் சங்கத்தின் உபதலைவர் எஸ். கே. பார்த்தசாரதி அவர்கள் வாசித்தார்.



இலங்கை, அக்கரைப்பற்று ஸ்ரீ ராமகிருஷ்ண வித்தியாலய சங்கத்தின் 11-வது ஆண்டு விழா சுவாமி பிரேமாத்மானந்தாஜி தலைமையில் நடந்தது. படத்தில் சங்கத் தலைவர் சுவாமி நடராஜானந்தாஜியையும், வித்தியாலயத்தின் தலைவர் அன்பன் க. நடராஜாவையும் காணலாம்.




கும்பகோணம் பெரிய தெருவிலுள்ள ஸ்ரீராம ஆரம்பப் பாடசாலையில் சுதந்திர விழா குடந்தை சப் கலெக்டர் ரங்கஸ்வாமி ஐயங்கார் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பள்ளிச் சிறுவர்களையும் சிறுமிகளையும் படத்தில் காணலாம்.




சமீபத்தில் மதுரை ஜில்லா எழுத்தாளர்கள் ஒன்று சேர்ந்து, சங்கம் அமைத்தார்கள். இவர்களது முதல் கூட்டம் மதுரை கல்கி அலுவலகத்தில் தினமணி திரு வெ. சந்தானம் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

திருமணங்கள்



புதுதில்லி இந்திய சர்க்கார் அதிகாரி ஸ்ரீ ஏ. ஆர். அய்யரின் புதல்வர் ஸ்ரீ அனந்தகிருஷ்ணனுக்கும் திருவனந்தபுரம் பர்மனென்ட் பாங்கு ஸ்ரீ கிருஷ்ணய்யரின் புதல்வி லக்ஷ்மிக்கும் வடிவீஸ்வரத்தில் திருமணம் நடந்தது.



சென்னை நகரசபைக் கவுன்ஸிலர் திரு கே. கமலக்கண்ணன் அவர்களின் புதல்வி செல்வி சாந்தகுமாரிக்கும் ராவ்பகதூர் பி. எஸ். திருபுராந்தக முதலியார் புதல்வன் ஆர். தயாநிதிக்கும் சென்னையில் திருமணம் நடந்தது.



மதுரை தியாகராஜா கல்லூரி விரிவுரையாளர் ஸ்ரீ எம். எஸ். கிருஷ்ணமூர்த்தி எம். ஏ. க்கும், சௌ. லலிதாவுக்கும் மதுரையில் வெகு சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது.



சௌ. ருக்மிணிக்கும் சென்னை வில்பட்டு பேராரா கம்பெனியைச் சேர்ந்த சிரஞ்சீவி எம். கோவிந்தராஜுலுக்கும் சிதம்பரத்தில் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது.



கணிதப் பேராசிரியர் டாக்டர் எஸ். மீனாட்சிசுந்தரம் அவர்களின் புதல்வி சௌ. ராதாவுக்கும், டாக்டர் எம். எஸ். கிருஷ்ணமூர்த்தியின் புதல்வன் சிரஞ்சீவி ஸ்ரீஹரிக்கும் வால்டேரில் திருமணம் நடைபெற்றது.



அவ்வளவு சிக்கனம்! ஒரு முறை தேய்த்தால்
கால்கேட் டெண்டல் கிரீம்
85% கிருமிகளை ஒழிக்கிறது
சொத்தையும் மற்றும் துர்நாற்றமும் ஏற்படுத்தும் கிருமிகள் அவை
COLGATE
COLGATE
DENTAL CREAM
மிகச் சிறந்த பலனுக்கு எப்பொழுதும் உபயோகியுங்கள்!
கால்கேட் டூத் பிரஷ்



நீண்ட, அடர்ந்த
ஒளிக்கூந்தலுக்கு
இளமையின் ஒளியும் அற்புத ஜ்வலிப்பும் பெற கூந்தலுக்கு கால்கேட் பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயிலை தடவுங்கள். கூந்தலின் இயற்கை அழகை அது எடுத்துக் காட்டி எல்லோரையும் பிரமிக்கச் செய்யும்.
எக்கானமி சைஸை வாங்கி பணத்தை மிச்சப் படுத்துக.
கால்கேட்
பெர்பியூம்டு காஸ்டர்
ஹேர் ஆயில்

வானவில்

எந்த மன்னன் போட்ட வில்லு
வானத்திலே தோணுது !

ஏழு வர்ணம் கொண்டு அது
எழிலுடனே காணுது !

மந்தை வெளியில் உள்ள ஆடு
மருண்டு எங்கோ ஓடுது !

மயில்கள் மட்டும் இங்கும்அங்கும்
தாவித்தாவி ஆடுது !

எந்தன் வீட்டுத் தோட்டத் திலே
இனிய காற்று வீசுது

இன்பத் தங்கை செய்யுங் கப்பல்
காகிதத்தால் ஆகுது !

விந்தை யாக இயற்கை தேவன்
செய்த இந்த வானவில்

விளையும் பயிர் செடி களுக்கு
மழையின் வரவு கூறுது !




பாரதன்





காவல்காரனின் பிடியிலே காசிம் கலங்கிப் போய்த் திகைத்து நின்று கொண்டிருந்த போது மற்றொரு காவல்காரன் தன் தோழனைப் பார்த்துச் சிரித்து, "பாக்தாத் எங்கே இருக்கின்றது கூட இந்தப் பயலுக்குத் தெரியாதே அண்ணே! பாக்தாதுக்கும் நம்ம கோட்டைக்கும் நடுவிலே பயங்கரமான பாலைவனம் இருப்பதை மறந்து விட்டாயா? இந்தப் பயலால் அதைக் கடந்து தான் வர முடியுமா?" என்று கேட்டான்.





காசிம் பாக்தாதிலிருந்து வந்திருக்க முடியுமா முடியாதா என்பதைப் பற்றி இருவரும் தங்களுக்குள் காரசாரமாக விவாதித்துக் கொண்டிருக்கும் போது காசிம் மெள்ள ஓசைப்படாமல் உள்ளே நுழைந்து விட்டான். சிறிது தூரம் பூனையைப் போலப் பதுங்கிச் சென்றவன் பிறகு ஒரே ஓட்டமாக ஓட ஆரம்பித்தான்.






பச்சைப் புறா சொன்னது காசிமின் நினைவுக்கு வந்தது. 'வீரனோ அல்லது மந்திர சக்தி உள்ளவனோ மங்குவை வெல்ல முடியாது. நான் வீரனும் அல்ல, நம்பிக்கையைத் தவிர வேறு மந்திர சக்தியும் என்னிடம் கிடையாது.' என்று சொல்லிக் கொண்டு பல அறைகளைக் கடந்து சமையலறைக்கு வந்துவிட்டான். "நீ யார்?" என்று கேட்டான் சமையல்காரன். "நான்



நான் மங்குவின் உணவை ருசி பார்த்துக் கொடுக்கும் புதிய வேலைக்காரன்" என்றான் காசிம். யாரும் துணிந்து முன் வராத அந்த வேலைக்கு வந்துள்ள அவனைச் சமையல்காரன் வியப்புடன் பார்த்தான். ஹும்! "அஃ, மங்கு சாப்பிட



உட்கார்ந்திருக்கிறார். இதைக் கொண்டு போ" என்று அவனிடம் உணவுத்தட்டை நீட்டினான். நெஞ்சு 'படபட' வென்று அடித்துக் கொள்ள உணவுத்தட்டுடன் மங்குவின் அறைக்குள் நுழைந்தான் காசிம்



மேஜை மீது தட்டை வைத்து விட்டு நின்ற காசிமைப் பார்த்து, "ம், சீக்கிரம் இந்த உணவை ருசி பார்த்துக் கொடு. பசிக்கிறது" என்றான் மங்கு,



சற்றுப் பசி தணிந்ததும் தன் முன்னால் உட்கார்ந்து ருசி பார்த்துக் கொடுக்கும் காசிமைப் பார்த்து, "ஓ, நீதான் புதிய பையனா?" என்று கேட்டான். காசிமின் உடல்



லேசாக நடுங்கியது. மங்குவின் கேள்விக்குத் தலை வணங்கி, "ஆமாம் பிரபுவே!" என்றான் காசிம். மங்கு காசிமை உற்றுப் பார்த்தான். "இதற்கு முன்பு உன்னை எங்கேயோ



பார்த்திருக்கிறேன் போலிருக்கிறதே" என்று சொல்லித் தீவிரமாகச் சிந்திக்கலானான். சிந்தனையால் மங்குவின் முகம் பார்க்கப் பயங்கரமாக இருந்தது. (தொடரும்)

22. அபாயச் சங்கு

கலா சிறைக்கதவு திறக்கும் சத்தம் கேட்டுக் கண்களைத் துடைத்துக் கொண்டாள். அரசகுமாரி உள்ளே நுழைந்தாள். "ஏன் கலா! இப்படி ஒன்றும் தெரியாதவள் போல விம்மி விம்மி அழுகிறாய்? உனக்குத் தெரியாமலா உன் அண்ணன் வெளியில் தப்பி ஓடி விட்டான்? உண்மையைச் சொல்லு. அவன் எங்கே போயிருக்கிறான்?" என்று அரசகுமாரி கடுமையான குரலில் கேட்டாள்.

"அரசகுமாரி! நான் சொல்லுவதை நம்புங்கள். என் அண்ணா மால்கோஷ் எங்கே போனான், எப்படிப் போனான், எப்பொழுது போனான் என்பதே எனக்குத் தெரியாது. விடியற் காலையில் நான் படுக்கையை விட்டு எழுந்திருக்கும் பொழுது வழக்கமாக என் அண்ணன் பெயரைச் சொல்லிக் கூப்பிடுவது போலக்கூப்பிட்டேன். பதில்





இல்லை. மேலே உள்ள ஜன்னல் கம்பிகளில் ஒன்று வளைந்திருப்பதைப் பார்த்தேன். அதன் வழியாகத் தப்பி இருக்க வேண்டும் என்று ஊகித்தேன். இதற்குமேல் எனக்கு வேறொன்றும் தெரியாது" என்றாள் கலா.

அப்பொழுது சிறைக்குள்ளே அரண்மனைச் சிப்பந்திகள் இருவர் வந்து கலாவின் தளிர்க்கரங்களில் விலங்குகள் போட்டு விட்டுப் போனார்கள்.

உடனே கலா பரிதாபமான பார்வையுடன் அரசகுமாரியைப் பார்த்தாள். "கலா! என்னைப் பார்த்து என்ன பிரயோசனம்? ஒரு முறை உங்கள் விஷயத்தில் தலையிட்டதற்குத் தகுந்த பலனை இப்பொழுது அனுபவிக்கிறேன். இனிமேல் உனக்கு இந்த விலங்குகள்தான். நீ வேலை செய்யும் நேரத்தைத் தவிர மற்றைய நேரங்களில் இந்த விலங்குகளுடன் தான் இருக்க வேண்டும் என்பது அரசனுடைய உத்தரவு. நீயும் உன் அண்ணனைப்போலத் தப்பி ஓடி விட்டால் என்ன செய்வது? அதற்குத்தான் இந்த முன் ஜாக்கிரதை. நான் வருகிறேன்" என்று சொல்லி விட்டு வெளியே சென்றுவிட்டாள் அரசகுமாரி.

முதலையிடமிருந்து தப்பித்துத் தண்ணீரைக் கடந்த மால்கோஷ் ஒரு வீதியிலே அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். கண்ணை விழித்துப் பார்த்தபொழுதுதான் பொழுது விடிந்தது அவனுக்குத் தெரிய வந்தது. "அடாடா! இரண்டு தலை ராட்சதனை இரவிலேயே கண்டு பிடித்துச் சந்திக்க வேண்டும் என்று நினைத்து ஒன்றும் செய்யாமல் அயர்ந்து தூங்கி விட்டேனே!" என்று சொல்லிக் கொண்டு எழுந்திருந்தான்.

அப்பொழுது கீழே ஏதோ கால்கவடுகள் தெரிகிறதே என்று கூர்ந்து கவனித்தான். அந்தக் கால்கள் முதலையின் அடிச்சுவடுகளைப்போல் காணப்பட்டன. ஏற்கனவே பொம்மை வடிவத்தில் இருக்கும்பொழுது தான் மால்கோஷ் இரண்டு தலைகள் உள்ள ராட்சதனைப் பார்த்திருக்கிறானே. அதனால்



முதலைகளின் கால்சுவடுகள் இரண்டு தலை ராட்சதனுடையவைதான் என்று எளிதில் ஊகித்தான். அவன் இரவில் தூங்கும் பொழுது அவனுக்குச் சமீபத்திலேயே அந்த ராட்சதன் போயிருப்பது அவனுக்கு அப்பொழுது தான் தெரிந்தது. உடனே அந்த அடிச் சுவடுகளைப் பின்பற்றிச் சென்றான் மால்கோஷ்.

கொஞ்சதூரம் சென்றவுடன் இந்த அடிச்சுவடுகள் குகை போன்ற ஒரு இடத்துக்கு உள்ளே சென்றது. முன்பின் தெரியாமல் குகைக்குள் போக மால்கோஷ் இஷ்டப்படவில்லை. அந்தக் குகைக்குமேல் பெரிய பெரிய பாறைகள் இருந்தன. அந்தப் பாறை



களில் ஒன்றின்மீது ஏறிக்கொண்டு குகையை நோக்கி, "ஏ இரண்டு தலை ராட்சதனே! சற்று வெளியே வருகிறாயா, நான்தான் மால்கோஷ். உங்களது அரிய நண்பன்" என்று உரக்கச் சத்தத்துடன் இரண்டு தடவைகள் கத்தினான். பதில் வரவில்லை. மூன்றாவது முறையாகப் பெரிதாகக் கத்தினான். அப்பொழுது குகைக்குள் ஏதோ சத்தம் கேட்பது போல் இருந்தது. பிறகு குகைக்கு வெளியே ராட்சதன் தனது விகாரமான பயங்கர உருவமுடைய இரண்டு தலைகளையும் மெதுவாக நீட்டினான். ராட்சதன் தன் கண்களால் மிகுந்த கோபத்துடன் மால்கோஷைப் பார்த்தான். முதலில் மால்கோஷ் அவன் முகத்தைப் பார்த்தவுடன் பயந்து நடுநடுங்கி அவ்விடத்தை விட்டு ஓட எத்தனித்தான். பிறகு மனத்தைத் தைரியப்படுத்திக் கொண்டு, "என்ன பார்க்கிறாய்? என்னைத் தெரியவில்லையா? நான்தான் மால்கோஷ். உன் அரிய நண்பன். உன்னைப் படைத்தவன். உம்மிடம் ஒரு உதவியை நாடியே நான் வந்தேன். எனக்கு உதவி செய்வீரா?" என்று கேட்டான் மால்கோஷ். சற்று நேரம் பேசாமல் இருந்த இரண்டு தலை ராட்சதன் "நீ யார்? நான் உனக்கு என்ன உதவி செய்ய வேண்டும், சொல்!" என்று கேட்டான்.

"அரசன் என்னையும், என் தங்கையையும் சிறையில் வைத்துத் துன்பப்படுத்துகிறான். பொம்மையாக இருந்த அரசனுக்கு உயிர் கொடுத்து மனிதனாக்கியவன் நானும் என் தங்கையும்தான். அப்படி இருக்கும் பொழுது நன்றி கெட்ட அரசனால் நாங்கள் பல துன்பங்களை அனுபவிக்கிறோம். அதற்காக நீ என்னுடன் வந்தால் உன்னைக்



கண்டு பயம் கொண்டிருக்கும் அரசனிடமிருந்து நானும் எனது தங்கை கலாவும் விடுதலை அடைந்து இந்த மாயப் பட்டணத்தை விட்டு வெளியே செல்லுவோம்'' என்றான் மால்கோஷ்.

"பொம்மையாக இருந்த அந்த அரசனை உண்மையான உயிருள்ள அரசனாக்கியவன் நீயா? என்ன ஆச்சரியம்! அப்படியானால் என்னையும் இரண்டு தலை ராட்சதனாக இருக்க உயிர் கொடுத்தவன் நீதான் என்று சொல்லப் போகிறாய் போலிருக்கிறதே'' என்றான் ராட்சதன்.

"ஆமாம்! அதற்கு என்ன சந்தேகம்? பொம்மையாக இருந்த உங்களுக்கு உயிர் கொடுத்து உண்மையான ராட்சதனாக்கியவன் நானே. அந்த உதவியை வைத்துக் கொண்டுதான் இப்போது உங்கள் உதவியை நாடி வந்தேன்'' என்றான் மால்கோஷ்.

மால்கோஷ் சொல்லியதைக் கேட்ட ராட்சதன் கோபம் அடைந்தான்.

"என்ன சொன்னாய்? அற்பப்பதரே! எனது ஒரு வாய்க்கு நீ காண மாட்டாய். நீயா பொம்மையாக இருந்த என்னை ஒரு உயிருள்ள ராட்சதனாக ஆக்கினாய்? என்னை அவமதித்து என்னிடமே பேசுகிறாய்? அரசனிடமும் இப்படித்தான் பேசியிருப்பாய். அதனால் அரசன் கோபமடைந்து உன்னையும் உன் சகோதரியையும் சிறையில் அடைத்திருப்பான். இந்த இடத்தை விட்டுப் போ. எனக்குக் கோபம் வந்தால் என்னசெய்வேன் என்று எனக்கே தெரியாது'' என்று ராட்சதன் கர்ஜித்தான்.

உடனே மால்கோஷ், "நீங்கள் ஏதோ என்னைத் தவறாக நினைக்கிறீர்கள். நான் பொய் பேசுபவன் அல்ல. உண்மையாகவே சொல்லுகிறேன். முதலில் இந்த மாயா பட்டணம் ஒரு பொம்மைப் பட்டணமாகத் தானிருந்தது. நீங்களும் ஒரு பொம்மை வடிவமாகத்தான் இருந்தீர்கள். எங்களிடமிருந்த மாயப் பந்தினால் இந்தப் பட்டணத்துக்கே உயிர் கொடுத்தோம். அதில் நீங்களும் உயிர் பெற்று ராட்சதனாக வந்தீர்கள். அப்படி இல்லாவிட்டால் உங்களிடம் தைரியமாக நான் உதவியை நாடி வருவேனா? சற்று யோசியுங்கள்'' என்றான் தைரியமாக.

ராட்சதன் "எங்கே அந்தப் பந்தினால் இப்பொழுது ஏதாவது ஒரு அதிசய சம்பவத்தைச் செய்து காட்டு. நான் உன்னை நம்பி உனக்கு உதவி செய்கிறேன்'' என்றான்.

"ஐயா! அந்தப் பந்து இருந்தால் உங்கள் உதவியை நாடியே நான் இங்கு வந்திருக்க மாட்டேனே. அந்தப் பந்தைத்தான் யாரோ ஒரு கழுகு போல உருவம் எடுத்து வந்து என்னிடமிருந்து பிடுங்கிக் கொண்டு போய் விட்டார்களே'' என்றான் மால்கோஷ்.

"ஹாஹா! யாரை ஏமாற்றப் பார்க்கிறாய்? நீ சொல்லுவது சுத்தப் பொய். என்னை ஏமாற்ற ஏதோ சதி செய்கிறாய்'' என்றான் ராட்சதன்.

இத்தருணத்தில் "இதனால் சகலவிதமான ஜனங்களுக்கும் தெரிவிப்பது யாதெனில் யார் சிறையிலிருந்து தப்பி ஓடிய கைதி மால்கோஷை உயிருடனோ அல்லது உயிர் இல்லாமலோ பிடித்துக் கொடுக்கிறார்களோ, அவர்களுக்கு ஆயிரம் பொன் இனாம். இது அரசனுடைய உத்தரவு! டம்! டம்! டம்!'' என்று தண்டோரா போட்டது ராட்சதன் காதிலும் மால்கோஷ் காதிலும் கேட்டது. அதைக் கேட்ட மால்கோஷின் மனம் பதைபதைத்தது.

உடனே ராட்சதன், "தண்டோரா சத்தத்தைக் கேட்டாயா? நீ தானே அந்த மால்கோஷ்?'' என்று கேட்டான்.

"ஆமாம்'' என்று பதில் சொல்லுவது போலத் தன் தலையை அசைத்தான் மால்கோஷ். "பொய் சொல்லித் திரிந்துவரும் உன்னை இப்பொழுதே பிடித்து அரசனிடம் ஒப்படைக்கிறேன். அரசனிடமிருந்து ஆயிரம் பொன்னையும் வாங்கிக் கொள்ளுகிறேன். உன்னையும், உன் தங்கையையும் எனக்கு ஆகாரமாக்கிக் கொள்ளுகிறேன்'' என்று கூறிவிட்டு வேகமாக மால்கோஷை நோக்கி ஓடி வந்தான்.

மால்கோஷ் நாலுகால் பாய்ச்சலில் ஓடினான். அவனை வேகமாகத் துரத்தினான் ராட்சதன். மால்கோஷ் அரண்மனையை நோக்கி ஓடினான். ராட்சதனும் அவனை வேகமாகப் பின்பற்றினான். இரண்டு தலை ராட்சதன் அரண்மனைப் பக்கம் வருகிறான் என்ற செய்தி எங்கும் பரவியது. அபாய மணி ஒலித்தது. அபாயச் சங்கு ஊதிற்று. ஜனங்கள் பயந்து அவரவர்கள் வீட்டுக்குள் அவசரமாகச் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டிருந்தார்கள். பள்ளிக்கூடங்கள் எல்லாம் ராட்சதனுக்குப் பயந்து மூடப் பட்டுவிட்டன.

வழியில் அரண்மனைக்கருகில் கலா கற்களைச் சுமந்தபடி ஏதோ வேலை செய்து கொண்டிருந்தாள். அபாயச்சங்கு ஒலித்தது கேட்டு, கலா பயந்து நடுங்கிக் கொண்டிருந்தாள். அவளைக் காவல் காத்திருந்த சிப்பந்திகள் தங்கள் கண்களாலேயே இரண்டு தலை ராட்சதன்வருவதைப்பார்த்ததும், நடுக்கம் கொண்டு பயந்து ஓடினார்கள். தானும் தப்பி ஓடுவதற்காக யத்தனம் செய்துகொண்டிருந்த கலாவின் கையைப் பிடித்துக் கொண்டு வேகமாக மால்கோஷ் ஓடினான்.

இருவரும் வேகமாக ஓடி, முதலில் பறக்கும் ஜமக்காளத்துடன் வந்து இறங்கினார்களே, அந்த இடத்தை அடைந்தார்கள். மேலே போக முடியாமல் கீழே விழுந்தாள் கலா. அப்படியே பயத்தினால் கால் தடுமாறி மால்கோஷ் மயக்கம் அடைந்து கீழே விழுந்தான். அவர்களை நெருங்கிக் கொண்டே வந்தான் ராட்சதன்! **(தொடரும்)**


செப்டம்பர் 6 உ முதல்
தமிழ் நாடும் கேரளமும்....
பாஸ்கரர்ஸ்
பலேராமன்
உங்கள் அபிமான நக்ஷத்திரங்கள்
நாகேஸ்வரராவ் · ரங்காராவ் · சாவித்திரி
ரேலங்கி · ஸ்ரீரஞ்சனி · சூர்யகாந்தம்
ஸ்ரீ பாலாஜி பிக்சர்ஸ் தயாரிப்பு
விவரங்களுக்கு · ஸ்ரீ வெங்கடேஸா பிக்சர்ஸ், 28, பாலாஜி நகர், ராயப்பேட்டை சென்னை-14.

மலைச்சாரல் மாதவி



அத்தியாயம் 49

"அன்றில் பறவை"

மாதவியைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்த சிவசங்கரன் காலையில் எழுந்து வாசலுக்கு வந்த போது, எதிரில் மாதவி நின்றுகொண்டிருப்பதைக் கண்டு திகைத்து விட்டார்.

மாதவியும் அவரைப் பார்த்த உடனே திகைத்துப் போனாள். அவரைப் பார்க்க வேண்டும் என்று அள வில்லாத ஆவலுடன் வந்த போதிலும், கொஞ்சமும் எதிர்பாராத இடத்தில் எதிர்பாராத ஒருவரைச் சந்தித்தால் எத்தகைய உணர்ச்சி ஏற்படுமோ அத் தகைய உணர்ச்சிதான் அவளுக்கு ஏற்பட்டது.

வரும்போதே அவரைப் பார்த்ததும் என்ன பேச வேண்டும் என்பதை நினைத்துப் பார்த்துக் கொண்டே வந்தாள். ஆனால் இப்போது எல்லாம் மறந்து போய் விட்டது. குளிர்ந்த காலை நேரமாக இருந்தபோதிலும் அவளுடைய நெற்றியில் முத்து முத்தாக வியர்வை துளித்தது. இதயம் வெகு வேகமாக அடித்துக் கொண்டதால் உடலில் படபடப்பு உண்டாயிற்று.

மாதவி நிலைபெயராமல் நிற்பதைக் கண்ட சிவ சங்கரனுக்கு ஒருவாறு அவளுடைய மன நிலையை ஊகிக்க முடிந்தது. தம்முடைய நடத்தை அவளுக்கு எவ்வளவு விசித்திரமாகப்படும் என்பது அவருக்குத் தெரியாதா? ஆகவே மாதவியினிடத்தில் அவருக்குப் பச்சாத்தாபம் பொங்கிக் கொண்டு வந்தது. முன்னெல் லாம் செய்ததைப் போல் முன்னால் சென்று அவ ளுடைய இரண்டு பொற்கரங்களையும் பிடித்து உள்ளே அழைத்துக் கொண்டு வர வேண்டும், அப்போது அவளுடைய முகத்தில் தோன்றும் புன்னகையைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை அவ ருக்கு அபரிமிதமாக எழுந்தது. பல்லைக் கடித்துக் கொண்டு அதை அடக்கிக் கொண்டார். இனி மேல் அவ்வாறு செய்வதற்குத் தாம் தகுதி யுடையவர்

ஆனந்தி



அல்ல என்ற எண்ணம் அவருக்குச் சொல்ல முடியாத துன்பத்தை அளித்தது. தம்முடைய கரைபடிந்த கரத்தினால் மாதவியைத் தொடுவதே பாவம் என்று அவர் நினைத்தார்.

இத்தகைய வேதனை தரும் நினைவுகளால் அலைப்புண்ட சிவசங்கரன் மாதவியைப் பார்த்து, ''நீ எதற்காக இங்கே வந்தாய்?'' என்று கேட்டார்.

இந்தக் கேள்வி மாதவியின் நெஞ்சை எவ்வளவு தூரம் புண்ணாக்கியது என்பது அவளுடைய முகத்தைப் பார்த்தாலே தெரிந்தது. ஊற்றுக் கண்ணிலிருந்து திடீரென்று நீர் பெருகிக் குளம் நிறைவதுபோல் அவளுடைய கண்களில் கண்ணீர் நிறைந்தது. பளிங்கு போன்ற பரிசுத்தமான இதயமுள்ள மாதவியை நோகச் செய்கிறோமே என்று சிவசங்கரன் மனம் நொந்தார்.

''நீங்கள் சௌக்கியமாக இருக்கிறீர்களா என்று பார்த்துவிட்டுப் போகத்தான் வந்தேன். பார்த்தாகி விட்டது. வருகிறேன்'' என்று கூறிவிட்டுத் திரும்பினாள் மாதவி.

தம்மையும் அறியாமல் சிவசங்கரன் ''மாதவி!'' என்று அன்புடன் அழைத்தார்.

மாதவி திரும்பிப் பார்த்தாள். அவளுடைய மனத்தை மிகவும் துன்பப்படுத்திக் கொண்டிருந்த விஷயங்களில் ஒன்று தெளிந்து விட்டது. சிவசங்கரன் வேறு எந்தக் காரணத்தினால் தன்னிடம் விசித்திரமாக நடந்து கொண்டாலும், அவருடைய அன்பு மாத்திரம் சிறிதும் குறையவில்லை என்பது அந்தக் குரலில் தொனித்த பரிவினால் மாதவிக்குத் தெரிந்தது. அந்தக் கணம் வரை ஒரே பாலைவனமாகத் தென்பட்ட அவளுடைய எதிர்காலத்தில் ஒரு சோலைவனம் இருப்பது தெரிந்தது. திடீரென்று வாழ்க்கையின் பொருள் அவளுக்கு விளங்கியது. சிவசங்கரனும், தானும் ஒருவருக்காகவே ஒருவர் பிறந்திருக்கிறோம் என்ற பேருண்மையை அவள் உணர்ந்து கொண்டு விட்டாள்.

ஆகவே போவதற்குக் காலடி எடுத்து வைத்தவள் அளவிலாத ஆர்வத்துடன் திரும்பி அவருடைய முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள்.

சந்திர கலையை உணவாக்கிக் கொள்ளும் அன்றில் பறவை பூரண சந்திரனைக் கண்டால் எவ்வாறு ஆர்வம் ததும்பப் பார்க்குமோ, அந்த மாதிரி மாதவி தம்மைப் பார்ப்பதாகச் சிவசங்கரனுக்குத் தோன்றியது.

'அன்றிலைப் போல அவள் சந்திரவதனம் நோக்கி' என்று தாம் எங்கேயோ படித்திருந்த ஒரு கவிதையின் ஒரு அடி அவருக்கு ஞாபகம் வந்தது.

மேலே ஒன்றும் பேசாமல் உள்ளே சென்றார் சிவசங்கரன். அவரைத் தொடர்ந்து மாதவியும் வந்தாள். உள்ளே வந்ததும் சிறிதும் எதிர்பாராத ஒரு காரியத்தைச் செய்தாள். சிவசங்கரன் அவள் என்ன செய்யப் போகிறான் என்பதை கணிப்பதற்கு முன் அவர் அருகில் ஓடி வந்து மண்டியிட்டு, "என்னை மன்னித்து விடுங்கள். நான் என்ன கூறியிருந்தாலும் மறந்து விடுங்கள். தயவுசெய்து இப்படிப் பராமுகமாக இருந்து என்னை வதைக்காதீர்கள்" என்று கூறி விட்டு விம்மி விம்மி அழுதாள் மாதவி.



கீழே உதிர்ந்த புஷ்பத்தை எடுப்பது போல் மாதவியின் கரங்களைப் பிடித்துத் தூக்கினார் சிவசங்கரன். அருகிலிருந்த நாற்காலியில் அவளை உட்காரச் செய்தார். தாமும் இன்னொரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார்.

"மாதவி! உன்னிடம் எனக்கு ஒரு கோபமும் இல்லை. நீ என்னிடம் மன்னிப்பு கேட்கக் காரணமும் இல்லை. உன் தம்பிக்காக நீ பரிந்து பேசியதால் எனக்கு ஏற்பட்ட கோபம் அன்றே தணிந்து போய்விட்டது. அதற்குக் காரணம் இருக்கிறது. மாதவி!" என்று கூறி விட்டுத் தயக்கத்துடன் நிறுத்தினார் சிவசங்கரன். விஷயம் முழுவதையும் மாதவியிடம் ஒளிக்காமல் சொல்லி விட்டால் என்ன என்று சிந்தனை செய்தார்.

மாதவியின் மனத்தில் அமைதி படர ஆரம்பித்தது. "உண்மையிலே நான் கூறியதையெல்லாம் மறந்து என்னை மன்னித்து விட்டீர்களா? என்னை அழுத்திக் கொண்டிருந்த பாரம் ஒன்று நீங்கியதுபோல ஆறுதலாக இருக்கிறது" என்றாள் மாதவி.

"நான் எல்லாவற்றையும் அடியோடு மறந்து விட்டேன். அதே மாதிரி நீயும் என்னை மறந்து விட வேண்டும். சென்றதெல்லாம் ஒரு கனவு என்று நினைத்துக் கொள். நான் ஒருவன் உன் வாழ்வில் குறுக்கிட்டேனென்பதை அடியோடு மறந்து விடு. அதற்காக என்னை நீதான் மன்னிக்க வேண்டும்" என்றார்.

மாதவிக்கு மறுபடியும் திகிலாகப் போய் விட்டது. "ஐயோ! ஏன் இவ்வாறு பேசுகிறீர்கள்? உங்களுக்கு என் மீது இருந்த அன்பு வறண்டு போய் விட்டதா?" என்று விம்மலுக்கிடையே கேட்டாள் மாதவி.

"இல்லை, மாதவி! என் அன்பு என்றுமே வற்றாது. முன்னெப்பொழுதையும் விட இப்போதுதான் அது அலைமோதிக் கொண்டு பெருக்கெடுத்து ஓடுகிறது. ஆனாலும் என்னை நீ மறந்துவிட வேண்டியதுதான். என்மீது நீ கொண்டிருந்த அன்பின் ஆழம் எனக்குத் தெரியும். அதனால் உன்னிடம் தைரியமாக

ஒரு வரம் கேட்கிறேன். என்னைப் பற்றி நீ எதிர்காலத்தில் என்ன கேள்விப் பட்டாலும் அதைப் பொருட்படுத் தாதே. அவை உன் மனத்தை எவ்வளவு புண்படுத்தினாலும் அதற்காக என்னை மன்னித்துவிடு. நான் வேண்டுமென்று உனக்குத் துரோகம் இழைக்கவில்லை என்பதை நீ நம்பினால் என் ஆத்மா சாந்தியடையும்'' என்று உணர்ச்சிப் பெருக்குடன் பேசி நிறுத்தினார் நீதிபதி சிவசங்கரன்.

மாதவிக்கு இதயம் உறைந்து போய் விட்ட மாதிரி இருந்தது. பேசக் கூடச் சக்தி இழந்து அவர் கூறுவதைப் பொம்மையைப் போலக் கேட்டுக் கொண்டிருந்தாள். அவர் பேசும் பேச்சில் உள்ள பொருள் அவளுக்குச் சரியாக விளங்கவில்லை. ஆயினும் ஏதோ விபரீதம் நிகழ்ந்து விட்ட தென்பது மாத்திரம் அவளுக்குத் தெரிந்தது. முகம் தெரியாத ஒரு பெண்ணின் உருவம் அவள் மனக் கண்களில் நர்த்தனமாடத் தொடங்கியது.



''தயவு செய்து அப்படியெல்லாம் சொல்லாதீர்கள்'' என்றாள் மாதவி.

''நான் சொல்லித்தான் ஆக வேண்டும், மாதவி! பின்னால் நீ என்னைப்பற்றித் தெரிந்து கொள்வாய். நான் கூறியதன் பொருள் உனக்கு ஒரு காலத்தில் விளங்கும். தயவுசெய்து என்னை நீ வேறு ஒன்றும் கேட்காதே. நான் வேதனையினால் மறுகிக் கொண்டிருக்கிறேன். இனிமேல் என்னைப் பார்க்கவும் நீ வர வேண்டாம். அது என் வேதனையை அதிகரிக்கத்தான் செய்யும். உன்னுடைய மலர் போன்ற மனத்தை நான் ஏற்கனவே மிகவும் நோகச் செய்து விட்டேன். அது இன்னும் முடியவில்லையே என்று நினைக்கும் போது எனக்குக் கபீர் என்கிறது. மாதவி! என்னைப் பற்றி என்ன கேள்விப்பட்டாலும் நீ வெறுக்க மாட்டாய் அல்லவா?'' என்று துயரமும், அன்பும், ஆர்வமும் நிறைந்த குரலில் கேட்டார் சிவசங்கரன்.

''ஒரு நாளும் உங்களை நான் வெறுக்க மாட்டேன். நான் விரும்பினால் கூட என்னால் உங்களை வெறுக்க முடியாது. தயவுசெய்து இப்படிப் பேசாதீர்கள்'' என்று அலறினாள் மாதவி.

''நீ கூறியது எனக்கு மிகவும் ஆறுதல் அளித்திருக்கிறது. பெரிய சுமை ஒன்று என் இதயத்திலிருந்து குறைந்து விட்டது போல இருக்கிறது. இதுதான் நம்முடைய கடைசிச் சந்திப்பாக இருக்கும். ஆகவே...'' என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே மாதவி சட்டென்று அவருடைய வாயைத் தன் வலது கரத்தினால் பொத்தினாள். மாதவியின் மென்மையான கரத்தின் ஸ்பரிசம் பட்ட மாத்திரத்தில் சிவசங்கரனின் படபடப்பு அடங்கி விட்டதாகத் தோன்றியது. அவருடைய உடல் முழுவதும் விவரிப்பதற்கு அரிய இன்ப உணர்ச்சி பரவியது. மாதவியின் அளவிலாத அன்பை அப்போதுதான் அவர் முற்றிலும் உணர்ந்து கொண்டார். அந்தச் சிறிய செய்கை அவளுடைய இதயத்தின் ஆழத்தை அவருக்கு எடுத்துக் கூறியது. மாதவியின் இதயத்தில் முளைத்துச் செடியாகி, மரமாகிப் பூத்துக் குலுங்கித் தழைத்து நிற்கும் அன்பெனும் மாபெரும் விருக்ஷத்தை அவர் கண்கூடாகப் பார்த்தார்.

இந்தப் புனிதமான அன்புக்கு முன்னால் மற்ற எண்ணங்களெல்லாம் பொருட்டேயல்ல எனத் தோன்றியது. மாதவியின் அந்தரங்கமான தெய்விக அன்புக்குத் தாம் செய்த அந்தப் பயங்கரமான குற்றத்தைக் கூட மன்னிக்கும் சக்தி உண்டென்பதும், அவள்மீது தாம் செலுத்தும் அன்புக்கு அந்தப்பாவத்தைக் கரைக்கச் சக்தி உண்டென்பதும் புலனாயிற்று.

சிவசங்கரன் தம் கண்களை மூடிக் கொண்டார். தம்முடைய உணர்ச்சி மிகுதியை மாதவி அறியாமலிருக்கும் பொருட்டு அவளை நேரில் பார்க்கவில்லை. ஆனால் மாதவிக்கு அவருடைய கண்களைப் பார்த்தால்தான் தெரியுமா? அவருடைய உணர்ச்சிகளை அவளுடைய இதயம் சொல்லி விடுமே. மாதவிக்குத் தான் தன்னையும் அறியாமல் ஒரு வேகத்தில் அவருடைய வாயைப் பொத்தியது குறித்து வெட்கமாகப் போய் விட்டது. நாணத்துடன் அவள் கையை எடுத்துக் கொண்டாள்.

சிவசங்கரன் மறுபடியும் இந்த உலகத்துக்கு வந்தார். அதே சமயம் வாசலில் கலகலவென்ற பேச்சுக் குரல் கேட்டது.

உலாவப் போயிருந்த சுபாஷிணியும், சீனிவாஸ மூர்த்தியும் வழக்கம் போலத் தர்க்கம் செய்து கொண்டே உள்ளே நுழைந்தார்கள்.

மாதவியைக் கண்டதும் இருவரும் தங்கள் பேச்சைக் கூட மறந்து நின்றார்கள். மாதவிக்கு இருவரும் தன்னையே பார்ப்பது இன்னும் கூச்சமாக இருந்தது.

சிவசங்கரன் அவர்களைப் பார்த்து, "இவள்தான் மாதவி" என்று கூறினார்.

"பார்த்த உடனேயே தெரிந்துவிட்டதே. உங்களைப் பார்த்ததில் எனக்கு மிகவும் சந்தோஷம், மாதவி!" என்று மலர்ந்த முகத்துடன் சொல்லிக் கொண்டே சுபாஷிணி மாதவியின் அருகில் வந்து உட்கார்ந்துகொண்டாள்.

"என்னைப் போன்ற துரதிர்ஷ்டசாலியைப் பார்ப்பதில் என்ன சந்தோஷம் ஏற்படப் போகிறது?" என்றாள் மாதவி.

"அப்படிச் சொல்லாதீர்கள். மிஸ்டர் சிவசங்கரனின் அன்பைக் கவர்ந்து கொண்ட பாக்கியசாலியைப் பார்த்ததில் எனக்கு மிகுந்த சந்தோஷம்தான்."

ஏற்கனவேயே வாடியிருந்த மாதவியின் முகம் இதைக் கேட்டதும் இன்னும் வாடியது. அதன் காரணம் புரியாமல் திகைத்தாள் சுபாஷிணி.

அத்தியாயம் 50
இடி விழுந்தது!

சீனிவாசமூர்த்தி மாதவியின் வாடிய முகத்தையும், சிவசங்கரனின் சோர்ந்த முகத்தையும் பார்த்து விட்டு, சிவசங்கரன் அவளைச் சரியாக வரவேற்றுப் பேசவில்லை என்பதை ஊகித்தார்.

ஆகவே தம்மைத் தாமே அறிமுகம் செய்து கொண்டார். "நான்தான் சிவசங்கரனின் நண்பன் மூர்த்தி. இவள் என் அருமை மனைவி சுபாஷிணி. உண்மையிலேயே உங்களைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலினால்தான் இவள் இங்கே வந்திருக்கிறாள்" என்றார்.

மாதவி சுபாஷிணியைப் பார்த்துப் புன்னகை புரிந்தாள். அதிலும் துயரச் சாயைதான் படிந்திருந்தது. ஆனால் அந்தப் புன்னகையிலும் அவளுடைய நல்ல இதயம் வெளியாயிற்று. 'பாவம், இவள் எவ்வளவு நல்லவள்' என்று சுபாஷிணி எண்ணமிட்டாள்.

சீனிவாசமூர்த்தி தொடர்ந்து, "நான் உங்களைச் சில விஷயங்கள் கேட்கலாமா?" என்றார்.

"தாராளமாகக் கேட்கலாம்" என்றாள் மாதவி. அவளுக்குச் சுபாஷிணியையும் சீனிவாச மூர்த்தியையும் உடனே பிடித்து விட்டது.

"உங்கள் தம்பிக்கு அச்சுதனைத் தவிர வேறு யாராவது விரோதிகள் இருந்தார்களா?" என்று கேட்டார்.

"இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். சித்தப்பா குடும்பத்தைத் தவிர அவன் வேறு யாரிடமும் விரோதித்துக் கொண்டதில்லை."

"உங்களுக்குத் தெரிந்து சமீபத்தில் வேறு யாரிடமாவது சண்டை போட்டுக் கொண்டானா?"

"எனக்குத் தெரிந்தவரையில் தொழிலாளர்களிடம்தான் அவன் சண்டை போடுவது வழக்கம். வேலாயுதத்திடம் குரோதம் உண்டு."

"வேலாயுதம், தான் குற்றம் செய்யவில்லை என்பதற்கு வேண்டிய ஆதாரங்களைப் போலீஸாரிடம் காட்டி விட்டதாகத் தெரிகிறது. வேறு யாரிடமாவது கருணாகரன் குறிப்பிட்டுச் சண்டை போட்டானா என்று கேட்கிறேன்."

மாதவிக்கு அவர் திரும்பத் திரும்ப அதையே கேட்பது அவ்வளவாகப் பிடிக்கவில்லை. ஆகவே பளிச்சென்று நிமிர்ந்து, "இவரிடம்தான் அன்று காலை சண்டை போட்டான்" என்றாள்.

சிவசங்கரன் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

சீனிவாசமூர்த்தி மாதவியைப் பார்த்து, "அச்சுதனை நீங்கள் 'லாக்கப்'பில் சந்தித்தீர்களா?" என்று கேட்டார்.

"ஆமாம். பார்த்தேன்."

"அவர் என்ன சொன்னார்?"

"என்னிடம் எதுவும் குறிப்பாகச் சொல்லவில்லை. தான் நிரபராதி என்று மட்டும் சொன்னான். அவனுக்குத் தெரிந்த உண்மையை வெளியிட்டு விடும்படி கூறினேன். 'நான் அதைக் கூறாமலிருப்பதால் உனக்கு ஒரு துரோகமும் செய்யவில்லை' என்று மட்டும் சொன்னான். எப்படியும் அச்சுதன் நிரபராதி என்பது எனக்குத் தெரியும்" என்றாள் மாதவி.

சிவசங்கரனின் முகம் எப்படியோ மாறிப் போயிற்று.

மாதவிக்கு இந்தப் பேச்சு அவ்வளவாகப் பிடிக்க வில்லை. அவள் சிவசங்கரனைப் பார்த்து மன்னிப்பு கேட்க வந்தாள். அவரோ எதையோ மறைத்துப்பேசினார். அவர் பேசியதன் பொருள் அவளுக்கு விளங்கவில்லை. சுபாஷிணியும் சீனிவாசமூர்த்தியும் இருக்கும் போது

அவரை வேறெதுவும் கேட்க முடியாது. ஆகவே மாதவி சலிப்புடன் எழுந்தாள். மூன்று பேரிடமும் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டாள்.

சுபாஷிணி, "அடிக்கடி வந்து கொண்டிரு, மாதவி!" என்றாள்.

மெதுவாகத் தலையை ஆட்டிய மாதவி, 'அவர்தான் நான் வருவதை விரும்பவில்லையே. எதற்காக வரவேண்டும்?' என்று எண்ணினாள். அந்த நினைப்பு அவளுக்குச் சொல்ல முடியாத துன்பத்தை அளித்தது. பொங்கி வந்த கண்ணீரைத் துடைப்பதற்காகத் தலையைக் குனிந்து கொண்டு வேகமாக நடந்து சென்றாள். மாதவி செல்வதைப் பார்த்த சிவசங்கரனுக்குத் தம்முடைய உயிர் அவளுடன் பிரிந்து செல்வது போலவும், உடல் மட்டும் அங்கே நிற்பது போலவும் தோன்றின.

மாதவி வீட்டுக்கு வந்ததும் தன் அறைக்குச் சென்று வெகு நேரம் விம்மினாள். "என்ன அக்கா! காலையில் இருந்து உங்களைக் காணவில்லையே?" என்று கேட்டுக் கொண்டே வந்த ஜயந்தி, மாதவியின் முகத்தைப் பார்த்துத் திடுக்கிட்டாள். பிறகு மிகவும் வற்புறுத்தி நடந்ததையெல்லாம் கூறுமாறு கேட்டுக் கொண்டாள். மாதவியும் மன அமைதி பெறுவதற்காக அவளிடம் எல்லாவற்றையும் கூறினாள்.

ஜயந்தி ஆறுதல்சொன்னாள். "அக்கா! நீங்கள் முன்பு பேசியதையெல்லாம் அவரால் மறக்க முடியவில்லை போலிருக்கிறது. பொதுவாகவே புருஷர்களுக்குத் தன்மானம் அதிகம். அதிலும் ஒரு பெண் அவர்களுடைய கௌரவத்தைக் குறைக்கும்படி பேசினால் அவர்களால் சீக்கிரம் மன்னிக்க முடியாதாம். வெளியே அவர்கள் எந்தக் காரணம் கூறினாலும், உள்ளுக்குள்ளே அந்த அவமான உணர்ச்சி குடைந்து கொண்டிருக்குமாம். அப்படி மனோதத்துவ சாஸ்திரம் சொல்கிறது. ஆகவே நாளடைவில் அவர் சரியாகி விடுவார். கவலைப்படாதீர்கள்" என்று தேற்றினாள்.

இது நடந்து இரண்டு நாட்கள் மாதவி சிறகொடிந்த பறவை போல இருந்தாள். அவளுக்கு எதுவுமே பிடிக்கவில்லை. வேதனையினால் வெந்து கொண்டிருந்த மனத்தை ஓரளவுக்காவது குளிர்விக்க முடியுமா என்ற எண்ணத்துடன் அந்தப் பங்களாவின் முற்றத்துத் தோட்டத்துக்கு வந்தாள்.

பெரிய சண்பக மரமொன்றில் நூற்றுக்கணக்கான மஞ்சள் நிற புஷ்பங்கள் மலர்ந்து தோட்டமெங்கும் மணம் பரப்பின. வாசலின் முன் பக்கத்தில் அழகுக்காக வைக்கப்பட்டிருந்த கூந்தல் பனைமரங்களிலிருந்து அடர்த்தியாகப் பூங்கொத்துக்கள் தொங்கின. அதைப் பார்த்த மாதவிக்கு அந்தக் கூந்தல் பனை மரங்கள்கூடத் தனக்காக அழுவது போலத் தோன்றியது.

வேலியோரத்தில் நின்ற கமுகமரங்கள் கூந்தல் பனைமரங்களுடன் போட்டியிட்டுக் கொண்டு கம்பீரமாக நின்றன. பாக்குப் பழங்களின் இயற்கையான மஞ்சள் நிறத்தில் வெய்யில் பட்டுப் பொன்னிறமாக மின்னியது. அதைப் பார்க்கும் போது, 'சண்பக மலர்களின் அழகுக்கு நாங்கள் குறைந்து விட்டோமா?' என்று கேட்பது போல இருந்தது.

இலேசாகப் பன்னீர் தெளிப்பதுபோல் மேகங்கள் நீரைத் தெளித்தன. மாதவியின் உடல் சிலிர்த்தது.

அப்போது திறந்திருந்த வெளி வாசற் கதவு வழியாக உள்ளே நுழைந்த கோவிந்தன், "ஏன் மாதவி மழையில்நிற்கிறீர்கள்?" என்று பரிவுடன் கேட்டார்.

மாதவி பதில் சொல்லாமல் நிற்கவே, "இங்கே என்ன செய்கிறீர்கள்?" என்று மறுபடியும் கேட்டார் கோவிந்தன்.

"செய்வதற்கு என்ன இருக்கிறது? என் விதியை எண்ணி நொந்து கொண்டிருக்கிறேன்" என்றாள் மாதவி.

"ஏன் இவ்வளவு வெறுப்புடன் பேசுகிறீர்கள்? சிவசங்கரனைப் பார்த்து விட்டு வந்தீர்களோ?" என்று கேட்டார் கோவிந்தன்.

மாதவி வியப்பு ததும்பும் கண்களால் அவரை ஏறிட்டுப் பார்த்தாள்.

"என்ன ஆச்சரியப் படுகிறீர்கள்? இவர்தான் இங்கு இல்லையே. இது எப்படித் தெரிந்தது என்றுதானே? நான் எங்கே இருந்தாலும் எல்லா விஷயங்களையும் தெரிந்து கொள்ளும் சக்தி எனக்கு உண்டு!"

மாதவிக்கு அவருடைய பேச்சு வியப்பைத் தந்தது. அதோடு சிவசங்கரனின் மர்மமான பேச்சுக்குக் காரணம் இவருக்குத் தெரிந்திருக்கலாமென்றும் தோன்றியது. ஆகவே அவருடன் பேசுவதில் தனக்கு உண்டான வெறுப்பைப் போக்கிக் கொண்டு, "ஆமாம். உங்களுக்கு எப்படித் தெரிந்தது என்றுதான் ஆச்சரியப்பட்டேன். நீங்கள் ஊரிலிருந்து வந்துவிட்ட சமாசாரம் எனக்குத் தெரியாது" என்றாள்.

"நான் இன்றுதான் வந்தேன். ஆலையில் விஜயராகவனைப் பார்த்தேன். அதனால்தான் தெரிந்தது."

'அவ்வளவுதானா? ஜயந்தி தன் தந்தையிடம் நான் சொன்னதை ஒருவேளை கூறியிருப்பாள். அதை இவரிடம் அவர்

சொன்னார் போல் இருக்கிறது' என்று நினைத்தாள் மாதவி.

அவளுடைய எண்ணங்களைப் படித்த மாதிரி கோவிந்தன், ''நீங்கள் சிவசங்கரனைப் பார்த்ததைப் பற்றி அவர் என்னிடம் சொல்லவில்லை. இன்று அவர் என்னிடம் ஒரு விஷயம் சொன்னார். இப்போது நீங்கள் நிற்கும் நிலையை தான் பார்த்தேன். இரண்டையும் சேர்த்து நோக்கும்போது ஒருவாறு நடந்திருக்கக் கூடியதை ஊகிப்பது எனக்குக் கஷ்டமாக இல்லை'' என்றார்.

'' என்ன ஊகித்தீர்கள்?''

''சிவசங்கரன் தம்மை மறந்துவிடும்படி உங்களை வேண்டிக் கொண்டிருப்பார் என்று ஊகித்தேன்.''

மாதவி உண்மையிலேயே திடுக்கிட்டாள். 'இவர் பொல்லாத மனிதராக இருக்கிறார். இவரிடம் ஜாக்கிரதையாகப் பழக வேண்டும்' என்று மனத்துக்குள் நினைத்துக் கொண்டாள்.

''எந்தக் காரணத்தினால் அப்படிச் சொல்கிறீர்கள்?'' என்றாள் மாதவி.

'' எனக்கு இதுகூடத் தெரியாதா மாதவி? சிவசங்கரனுக்கு ஜயந்தியை மணம் செய்து கொடுக்க விஜயராகவன் தீர்மானித்து விட்டார். சிவசங்கரனிடமும் சொல்லி விட்டாராம். அவர் சம்மதித்து விட்டதாகவும் சொன்னார்'' என்றார் கோவிந்தன்.

மாதவியின் தலை சுழன்றது. 'ஒருவேளை இதுதான் அவர் பேசியதற்கு உண்மையான காரணமாக இருக்குமோ? ஜயந்தியை மணந்துகொள்ள அவருக்குக் கசக்கிறதா என்ன? ஆனால் பாவம், ஜயந்தி. அவளுக்குக்கூட விஜயராகவன் இப்படி ஒரு சூழ்ச்சி செய்திருப்பது தெரிந்திருக்க முடியாது. சே! பணம் இருந்தால் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் போல் இருக்கிறது. பணக்காரர்களுக்கே இரும்பு இதயம்உண்டாகி விடும் போல் இருக்கிறது. தன்னிடம் எவ்வளவு பிரியமாக இருப்பது போல் நடித்தார். அப்பா! எல்லாம் வெறும் வேஷம்! நல்ல வேளை இப்போதாவது தெரிந்ததே. ஆனாலும் இது நிஜம் என்பதற்கு என்ன ஆதாரம்?'' என்று எண்ணிக் கொண்டே, ''நீங்கள் சொல்வது உண்மைதானா?'' என்று கேட்டாள் மாதவி. அவளுடைய குரலில் கோபமும், துயரமும், ஆங்காரமும் வெறுப்பும் போட்டியிட்டன.

'' உங்களுக்கு இதைப் பற்றிச் சந்தேகம் வேறா மாதவி? விஜயராகவன்மீது உங்களுக்குக் கோபம் வரலாம். ஆனால் நினைத்துப் பாருங்கள். ஜயந்தியோ சின்னஞ்சிறு பெண். அவளுக்கு மணம் செய்து வைக்காமலிருக்க அவரால் முடியுமா? தன் தந்தைக்குப் பிறகு தனியே வாழத்தான் அவளால் முடியுமா? கருணாகரனின் கதி இப்படி ஆகிவிட்டதால் வேறு யாரும் ஜயந்தியைப் பார்த்தாலே பயப்படுகிறார்கள். அவளை மணப்பதாகத் துணிந்து ஒருவன்கூடச் சொல்லவில்லை. ஏன் என்னைக்கூட விஜயராகவன் கேட்டார். நான்தான் மறுத்து விட்டேன்.''

'' ஜயந்தி சம்மதித்து விட்டாளா?''

'' அவள் என்ன செய்வாள் பாவம்? சிவசங்கரன்தான் மூட நம்பிக்கைகள் இல்லாதவர். வயதிலும் பெரியவர். அவளை அவர் நன்றாகப் பார்த்துக் கொள்வார் என்று விஜயராகவனுக்கு நம்பிக்கை. அவளுடைய பழைய விவகாரங்களைப் பொருட்படுத்தாதவர் அவர் ஒருவர்தான் இந்த வட்டாரத்தில் இருக்கிறார். ஜயந்தியின் மனம் தெளிந்ததும் திருமணத்தை நடத்தி விடுவார். அப்படித்தான் விஜயராகவன் என்னிடம் சொன்னார்'' என்றார் கோவிந்தன்.

மாதவியின் தலையில் வானமே இடிந்து விழுந்தது போலிருந்தது. (தொடரும்)



குமரி முதல் இமயம் வரை ௨




கொட்டாரக்கரை பயிற்சி முகாமைப் பார்த்து விட்டு அன்று இரவு திரும்பினேன். ஸ்ரீ நாராயண நாயரின் வீட்டில் தனிமையில் தங்க வேண்டியிருந்தது. ஸ்ரீ நாயரின் குடும்பம் எல்லாம் திருப்பூரில் இருக்கிறார்கள். அவர் மட்டும் இங்கே தனிமையில் வசிக்கிறார். அவருக்குச் சமைத்துப் போட ஒரு சமையற்காரன். அவனும் எங்கேயோ போய் விட்டான். காட்டுக்கு மத்தியில் பாம்புகள் சர்வ சாதாரணமாய் நடமாடும் உயரமான ஒரு இடத்தில் அமைந்துள்ள இந்த வீட்டில் தனிமையாக இருக்க போது 'பய'மாய் இருந்தது! மலையாளிகள் பயமின்றி வாழுகின்ற ஒரு நாட்டவர்தாம். திருட்டு பயம் உண்டா? 'கதவுகளைப் பூட்டாமல் வீடுகளைத் திறந்து வைத்திருந்தாலும், சாமான்களைத் தொடுகிறவர்கள் எங்கள் நாட்டில் இல்லை' என்று மலையாளிகள் சொல்லுவதில் தவறு இருக்க முடியாது!

கேரளநாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்த ஒவ்வொரு பிளாக்கிலும் கம்யூனிஸ்டு ஊழியர்களின் செல்வாக்கே அதிகமாயிருக்கிறது. பல பஞ்சாயத்துக்களின் தலைவர்களும் பெரும்பான்மையான அங்கத்தினர்களுமாய் அவர்கள் அடித்தளத்திலிருந்து மேல்தளம் வரை அரசியல் செல்வாக்கைப் பெற்றிருக்கிறார்கள்.

இங்கே நடைபெற்றிருக்கும் அல்லது நடைபெறுகின்ற சமுதாய நலத் திட்ட வேலைகளால் கேரள நாட்டின் நெருக்கமான ஜனத் தொகைப் பிரச்னையையோ அல்லது படித்த

ஆலப்புழை



வர்களிடையே நிலவுகின்ற வேலையின்மைப் பிரச்னையையோ தீர்த்துவிட முடியாது. படித்தவர்களிடையே நிலவுகின்ற வேலையின்மைப் பிரச்னை ஒரு தேசியப் பிரச்னையென்று மட்டும் கூறிவிட்டால் போதாது! கேரள நாட்டைப் பொறுத்தவரையில், இந்தப் பிரச்னை ஒரு பயங்கரமான பிரச்னையாகும். இந்தப் பயங்கரமான பிரச்னையின் விளைவாக எழக்கூடிய அபாயம் இந்திய ராஜீய வாழ்வினையே பாதிக்கக் கூடும்.

ஜனநெருக்கடியை, ஜனங்களை வேறு விஸ்தாரமான இடங்களில் மாற்றிக் குடிஅமைப்பது போன்ற காரியங்களால் தான் சமாளிக்க முடியும். இவையும் அவசர உணர்ச்சியுடன், யுத்த காலத்தில் பின்பற்றப்படுகின்ற செயல் வேகத்தில் புரிய வேண்டும். பெரும் தொழில்களையும், சிறுகுடிசைத் தொழில்களையும் ஆரம்பிப்பதன் மூலம் வேலை வாய்ப்புகளைப் பெருமளவில் ஏற்படுத்துவது போன்ற காரியங்க



னால்தான் இந்தப் பயங்கர மான வேலையின்மைப் பிரச்னையைச் சமாளிக்க முடியும். பழைய காலத்தில் இருந்த குடும்ப முறை உடைந்து போனதாலும், பாகப் பிரிவினையால் நிலங்கள் பல கைகளுக்கு மாறிக் கொண்டே போனதாலும், சர்க்கார் உத்தியோகத் துக்குத் தயார் செய்து வைக்கும் கல்வி முறையின் கீழ் அதிகம் பேர்கள் படித்து விட்டதாலும், படித்து விட்ட எல்லோருக்குமே சர்க்கார் உத்தியோகம் அளிக்க முடியாத நிலைமையினாலும் இன்று கேரள நாட்டில் பரிதாபமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. படித்து விட்டு வேலையின்றி அலைந்து படும் எண்ணற்ற வாலிபர்களும், யுவதிகளும் ஆத்திரமடைந்து அரசியல் இயக்கங்களில் தீவிரமாக ஈடுபடுவதை, வெறும் தத்துவ உபதேசமோ—'பொறுத்திரு' என்ற போதனையோ தடுக்கவே முடியாது! இந்த உண்மை நிலைமையைத்தான் இந்த நாட்டில் இன்று கண்கூடாகப் பார்க்க முடிகிறது!

இந்த லட்சணத்தில், இதே கல்வி வரைப் பள்ளிக்கூடங்களுக்கும் கல்லூரிகளுக்கும் போய்ப் படிக்கும் மாணவர்—மாணவிகளின் எண்ணிக்கை இங்கே இன்னும் அதிகரித்துக்கொண்டே யிருக்கிறது!


இந்த வருஷம் இந்த ராஜ்யத்தில் சுமார் அறுபதினாயிரம் பேர்கள் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சைக்கு ஆஜராகி யிருக்கிறார்கள். இதே வருஷத்தில் நமது தமிழ் நாட்டில் சுமார் அறுபதினாயிரம் பேர்களே எஸ். எஸ். எல். ஸி. பரீட்சைக்கு ஆஜராகி யிருக்கிறார்கள். நமது சென்னை ராஜ்யம் கேரள ராஜ்யத்தை விட இரண்டு மடங்கு அதிகமான ஜனத்தொகை கொண்டதாகும்!

இந்த விவரங்களை யெல்லாம் தெரிந்து கொண்டு கொட்டாரக்கரையிலிருந்து ஆலப் புழைக்கு வந்தேன்.

ஆலப்புழை மிகவும் அழகான ஊராகும். பெரிய முனிசிபல் நகரம். இந்த நகரின் நகரசபைத் தலைவர் ஸ்ரீ தாமஸ் மக்களின் செல்வாக்கையும் அன்பையும் பெற்றவர். கம்யூனிஸ்டு 'நேதா'க்களில் முக்கியமானவர்.

கயிறு தொழில் மூலம் உற்பத்தியாகும் பொருள்களை ஏற்றுமதி செய்யும் பிரதான இடமாயிருந்த ஆலப்புழை, இப்போது முக்கியத்துவம் இழந்து நிற்கிறது! கொச்சித் துறைமுகம் அபிவிருத்தி செய்யப்பட்ட பின்பு, பிரபல ஏற்றுமதி வர்த்தகர்களெல்லாம் கொச்சிக்குப் போய் விட்டார்கள். கொச்சியே தங்களின் ஏற்றுமதி வர்த்தகத்துக்குத் தகுதியான இடம் என்று அவர்கள் எண்ணிச் செயல் புரிந்ததின் விளைவாக, ஆலப்புழை தற்போது 'களையிழந்து' காட்சியளிக்கிறது.

இந்த நாட்டின் முக்கியமான தொழில்களில் இந்தக் கயிறு தொழிலே முதல் ஸ்தானத்தை வகிக்கிறது. இந்தத் தொழிலின் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளிகளின் உழைப்பால், ஏராளமாக 'டாலர்'களைப் பெறுகின்ற அந்நிய முதலாளிகளும் இருக்கிறார்கள்! இதைத் தவிர, ரப்பர்—தேயிலை—கயிற்றுப் பொருள்கள் - பாக்கு - மிளகு - முந்திரி இவை யாவுமே ஏராளமான வருமானம் தருகின்றன. அவை வெளி நாட்டு ஏற்றுமதிப் பொருள்களாக



அமைந்திருக்கின்றன. இந்த ஏற்றுமதி வர்த்தகம் பெரும்பாலும் நம்மவர் கட்டுப்பாட்டில் இருந்தாலும், ரப்பர் - தேயிலைத் தோட்டங்களின் பெரும் முதலாளிகள் அன்னியர்கள் தாம். இந்த ரப்பர் - தேயிலைத் தோட்டங்களைத் தேசிய மயமாக்கிவிட வேண்டும் என்ற திடமான எண்ணம் கம்யூனிஸ்டுகள் போன்றவர்களுக்கு இருக்கிறது.

கயிறு தொழில் மிகவும் ரஸமான ஜீவாதாரத் தொழிலாகும். இந்தத் தொழில் மூலம் எத்தனையோ பேர்கள் பிழைக்கிறார்கள். தேங்காய்களைப் பறித்து, மட்டையைத் தனியாகப் பிரித்து, அந்த மட்டைகளைத் தண்ணீரில் மாதக் கணக்கில் அழுக வைத்து பிறகு நார் எடுக்கிறார்கள். இந்த நார் மூலம் நவநவமான பொருள்கள் - விரிப்புகள் - கால் மிதிகள் பலப்பல நிறங்களில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவைகளை யெல்லாம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய எண்ணற்ற கம்பெனிகள் இருக்கின்றன.

ஆலப்புழை-எர்ணாகுளம்-கொல்லம்போன்ற பல ஊர்களுக்கு மோட்டார் படகுகளிலே பிரயாணம் செய்கின்ற ஆயிரக்கணக்கானவர்களையும் சரக்கு ஏற்றிக் கொண்டு வருகின்ற பல படகுகளையும், தங்களுக்குச் சொந்தமான மோட்டார் படகுகள், சாதாரணப் படகுகள் (கைத் துடுப்புகளால் இயக்கப்படுவன) இவைகளில் பிரயாணம் செய்கின்றவர்களையும் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. 'ஸ்வராஜ்'—'ராணி' 'ரமணி' என்ற பலப்பல பெயர்களில் செல்லுகின்ற படகுகளின் காட்சியும் அணி அணியாய் அவை கரைகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் அழகும் கண் கொள்ளாக் காட்சிகள் ஆகும்!

இந்த மோட்டார் படகுகள் அநேகமாக 'டீசெல் ஆயில்' உதவியாலேதான் ஓடுகின்றன. பெரிய படகின் விலை சுமார் இருபதாயிரம் ரூபாய்: சிறிய படகின் விலை சுமார் பதினாயிரம் ரூபாய்.

பொங்குகின்ற கடல் நீரின் ஊடுருவி உட்புகும் தன்மையாலும் சிறு சிறு மலை நதிகளின் மழைக்காலத் தண்ணீர் பெருக்கத்தாலும் இம்மாதிரியான கால்வாய்கள் பல மைல்களுக்குச் செல்லும் ரீதியில் ஏற்பட்டிருக்க வேண்டும்.

ஆலப்புழையிலிருந்து இந்தக் கால்வாய் வழியாகப் படகில் செல்லும் பேறு பெற்றவர்கள் வாழ்க்கையில் பாக்கியசாலிகள்தான். நாற்புறங்களிலும் சுந்தரமான தென்னஞ் சோலைகளும் நெல் வயல்களும் வாழ்நாளெல்லாம் பார்க்க வேண்டிய காட்சிகள். இந்தக் கால்வாய், நீளமான ஒரே கால்வாய் மட்டுந்தானா? இல்லை! கொஞ்ச தூரம் சென்றவுடனே அகலமான ஏரி. ஏரியின் நாற்புறங்களிலும் பல இடங்களுக்குப் பிரிந்து செல்லும் பல கால்வாய்கள். இருண்ட இரவுக் காலத்தில், கால்வாய்கள் தம வழிகளைத் தவறிவிடக் கூடாதே என்பதற்காக முக்கியமான சந்திப்புகளில் உயரமான மேடைகளின்மீது ஸ்தம்பங்களில் பெட்ரோமாக்ஸ் விளக்குகள் ஒளி வீசிக் கொண்டு தொங்குவதைப் பார்க்கலாம். இந்தக் கால்வாய்களில் சிறு படகுகளைச் சேரநாட்டு இளம் பெண்கள்கூட ஓட்டி (தோணிகளை) 'விளையாடி' வரும் எழில் காட்சியைப் பார்த்து மகிழலாம்.

இந்தக் கால்வாயில் பிளாக்கு நிர்வாகத்துக்குச் சொந்தமாயிருக்கும் மோட்டார் படகில் மான்கொம்பு என்ற ஊருக்குப் போகும் சந்தர்ப்பம் கிடைத்தது. வழி நெடுகிலும் பிளாக் நிர்வாகத்தினரால் அமைக்கப்பட்ட சிறு சிறு உப கால்வாய்களில் இக்கரையிலிருந்து அக்கரைக்குப் போவதற்காக அமைக்கப்பட்ட நடை பாலங்களைப் பார்த்துப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.


இப் பகுதியில் தென்னை மரங்களுக்குப் பரவலாக நோய் ஏற்பட்டிருக்கிறது. 'நமது வீடுகளில் குவிகின்ற மாட்டுச் சாணத்திலிருந்து உற்பத்தியாகும் புழுக்களின் மத்தியில் 'ரயினூசரஸ்' என்ற பெரும் பூச்சி கிளம்புகிறதாம். இந்தப் பூச்சிகள் மரங்களைத் துளைத்து உட்சென்று உள்ளேயுள்ள வளர்ச்சிக்கு உதவுகின்ற பசையான ஜீவ சத்துள்ள பொருள்களைத் தின்று விடுவதாலேயே, நாளடைவில் தென்னை மரங்களின் காய்ப்புச் சக்தி குறைவதுடன், கொஞ்சங் கொஞ்சமாகப் பசுமையும் வனப்பும் குன்றிப்போய் மரங்கள் உலர்ந்து, ஒன்றுக்கும் உதவாமல் போய் விடுகின்றன.

இந்த ராஜ்யத்தின் திருவாங்கூர் கொச்சிப் பகுதிகளில் ஏற்கனவேயே பல துறைகளில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. கல்வி விஸ்தரிப்பு, ரோடு போக்குவரத்து, வாசகசாலைகள் விஸ்தரிப்பு இந்தத் துறைகளிலும், மற்றத் துறைகளிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்கனவே ஏற்பட்டிருக்கிறது. ஆனாலும் இந்த ராஜ்யத்தில், சமுதாய அபிவிருத்தித் துறையில் சாதிக்கப்பட வேண்டிய விஷயங்கள் இன்னமும் எத்தனையோ இருக்கின்றன.

''இந்தச் சுதந்திர பூமியில், ஏழைமை மிகவும் சாமர்த்தியத்துடன் மறைத்து வைக்கப்பட்டிருக்கிறது'' என்று தமிழ்நாட்டில் பிறந்த சிறந்த அறிவாளிகளில் ஒருவரும் தேச பக்தரும், பண்டித நேருவின் ஆப்த சகாவுமான திரு கே. சந்தானம் அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன், திருவனந்தபுரத்தில் ஒரு கூட்டத்தில் சொன்னாராம். இதை பிளாக் அபிவிருத்தி அதிகாரியான ஸ்ரீ வைத்திலிங்கம் பிள்ளை கூறினார். இது நூற்றுக்கு நூறு பங்கு உண்மை யென்பதில் சந்தேகமில்லை.

இந்தநாட்டு வாலிபர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து, இவர்களின் கவனத்தை உபயோகமான போக்கில் திருப்பி விடுகின்ற திட்டமே இங்கே அவசரமாகப் பின்பற்றப்பட வேண்டிய திட்டமாகும். வீட்டுக்குள்ளேயே இருந்து கொண்டு ஏழைமையை மறைத்துக் கொண்டு மனம் புழுங்கி வாடி நிற்கும் பெண்மணிகளுக்கும் வேலை வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும். சமுதாய நலத்திட்ட நிர்வாகத்தின் மூலமும், மத்தியசர்க்காரின் நேரடியான முஸ்தீபுகள் மூலமும், கனரகத் தொழில்கள், சிறு ரகத் தொழில்கள், குடிசைத் தொழில்கள் உடனடியாக இங்கே ஆரம்பிக்கப்பட வேண்டும். ஏற்கனவே இங்கு இருக்கும் தொழில்களின் உற்பத்திச் சக்தியை விஸ்தரிப்பது மூலமும் பலருக்கு வேலை வாய்ப்புகளைச் சிருஷ்டிக்க வேண்டும்.

படித்தவர்களின் தொகை அதிகமாக இருக்கும் இந்த ராஜ்யத்தில் — எந்த விஷயத்தை


மணம்கவர் மணம்...
ரெமி
ஸ்னோ &
பவுடர்
இலங்கையில் கிடைக்குமிடம்:
AVRA Ltd., Colombo.

யும் முழுக்க முழுக்க விமர்சனம் செய்யும் போக்குள்ளவர்கள் அதிகமாக இருக்கும் இந்த ராஜ்யத்தில் கூட—கதர் திட்ட அபிவிருத்திக்கு அவசியமும், அவசரமும் இருக்கத்தான் செய்கிறது. வெறும் வறட்டு வாதப் பிரதிவாதமோ அல்லது கற்பனை உலகத்தில் செய்யப்படும் சஞ்சாரமோ நமக்குச் சோறு போடவே போடாது! வீடுகளிலே தமது ஏழைமையை மறைத்துக் கொண்டு, மனம் நொந்து போயிருக்கும் சகோதரிகளை, இந்தக் கதர்த்திட்டம் அணுகுமாறு சமுதாய நலத்திட்ட நிர்வாகம் மட்டும் முயற்சிக்குமானால், அந்த வீடுகளில் ஆரோக்கியமுள்ள நறுமணம் கமழுகின்ற, மலர்ச்சியான முகங்களை நிச்சயமாகப் பார்க்க முடியும்.

இங்கே, சில பிளாக்குகளில் சில மாதர் சங்கங்கள் இருக்கின்றன. சமுதாயத்தில் அன்றாடம் கூலி வேலை செய்து பிழைக்கின்ற மாதர்களில் ஒருவரைக்கூட இச்சங்கக் கூட்டங்களில் பார்க்க முடியவில்லை!

அந்தந்த ஸ்தலத்தில் உள்ள கொஞ்சமோ, அல்லது அதிகமோ வசதி பெற்றுள்ள குடும்பங்களைச் சேர்ந்தவர்களும், அவர்களின் சிறுமிகளுமே இக்கூட்டங்களில் பங்கெடுத்துக் கொள்ளுகிறார்கள். வர்க்கலா பிளாக்கிலுள்ள ஒரு மாதர் சங்கத்தில் வசதியற்ற நிலைமையில் உள்ள நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த மாதர்களும், சிறுமிகளும் கலந்து கொண்டார்கள். ஆயினும் இங்கு நம்மைப் பரவசத்தில் ஆழ்த்திய காட்சி இதுதான்! அவர்களின் கீதங்களிலும் பேச்சுக்களிலும், ஆட்டங்களிலும், ஆழ்ந்த, அமைதியான கடவுள் பக்தி நிலவி நிற்பதே அந்த அற்புதக் காட்சியாகும்.

* * *

வர்க்கலா பிளாக்குக்குச் சமீபத்தில் சிவகிரி என்ற புனிதமான இடம் இருக்கிறது. ஸ்ரீ நாராயண குரு என்ற பெரியார் இங்கிருந்து கொண்டுதான் "ஒரே மதம், ஒரே சாதி ஒரே தேவன்" என்ற செய்தியை இந்நாட்டில் முழக்கினார். ஈழவர்கள் எனப்படும் பெரிய சமூகம் இந்நாட்டில் ஒதுக்கப்பட்ட சமூகமாம். இந்தச் சமூகத்தைத் திரட்டியும் இதர சமூகங்களுக்கும் இந்தச் சமூகத்துக்கும் இடையே எவ்வித வேற்றுமையோ அல்லது துவேஷமோ இருக்கக் கூடாது என்று இவர்களை ஒன்று படுத்துவதற்காகவும் மகா தியாகம் புரிந்தவர் இந்த ஸ்ரீ நாராயண குரு அவர்கள். இவர் காந்தியடிகளிடம் அன்பு கொண்டவர். ஒரு சமயம் காந்தியடிகளுக்கும் இவருக்கும் இந்தச் சிவகிரியில் பெரிய தர்க்கம் நடந்ததாம். இதன் விளைவாகவே காந்திஜி தமது ஹரிஜன சேவைக்குப் புதிய பலத்தைப் பெற்றாராம்.

இந்த ராஜ்யத்தில் கிறிஸ்துவர்களும் முகம்மதியர்களும் குறிப்பிடக்கூடிய தொகையினராக வசிக்கிறார்கள். கிறிஸ்துவர்களில் சிரியன் கிறிஸ்துவர்களும் இந்தச் சிரியன் கிறிஸ்துவர்களிலேயே 'பிராடஸ்டெண்டு'களும், கத்தோலிக்கர்களும் இதர ரோமன் கத்தோலிக்கர்களும் இருக்கிறார்கள். சிரியன் கிறிஸ்துவர்கள் பெரும் வர்த்தகர்களாகவும் தொழில் பிரமுகர்களாகவும் இருக்கிறார்கள். கரையோரங்களில் வசிக்கும் மக்களிடையே ரோமன் கத்தோலிக்க மதம் பரவி நிற்கிறது. முஸ்லிம்களிடையே சாதாரண முஸ்லிம்கள், மாப்ளா முஸ்லிம்கள் என்ற பிரிவுகள் உள்ளன. மாப்ளா முஸ்லிம்கள் தீவிர மத உணர்ச்சியுள்ளவர்கள். இவர்கள் வடக்கு மலபாரில் வசிக்கிறார்கள். இவர்கள் துணிச்சல்காரர்கள். கடல் கடந்து தொலைதூரம் சென்று பலவித வியாபாரம் செய்பவர்கள்.

ஏசுவின் பரம சீடர்களில் ஒருவரான செயிண்ட் தாமஸ் என்பவர் சிரியாக்காரர். அவர் இந்த நாட்டின் மேற்குக் கரையில் இறங்கினார். அவருடைய போதனைகளைப் பின்பற்றியவர்களே இந்தச் சிரியன் கிறிஸ்தவர்கள். மாதாக் கோவில்களிலே பிரார்த்தனை செய்யும்போது சிரிய மொழியில்தான் மந்திரங்களையும், பாக்களையும் உச்சரிக்கிறார்கள். இந்தச் சிரியன் கிறிஸ்துவர்களின் பெண்களை பிராடஸ்டெண்டு பாதிரிமார்கள் மணம் செய்து கொள்ளுகிறார்கள்.

இந்த ராஜ்யத்தில் இருக்கின்ற நம்பூத்ரிகள் என்று அழைக்கப்படும் ஒரு பிரிவினரே அந்தணர்கள். இந்தப் பூமியில்தான் பரசுராமர் இருந்தாராம். பரசுராமருடன் வந்தவர்களே இந்த நம்பூத்ரி பிராமணர்கள். இந்த நாட்டின் சமுதாய வாழ்வில் இவர்கள் நல்ல ஆதிக்கம் செலுத்தி வாழ்ந்திருக்கிறார்கள். ஆயினும் அந்த நிலைமை மாறிவிட்டது. நாடு முழுதும் உள்ள நிலங்கள் யாவும் இவர்களுடைய சொத்தாகவே ஒரு காலத்தில் இருந்திருக்கின்றன. (தொடரும்)

"கல்கி" செப்டம்பர் மாதச் சிறுகதைப் போட்டி

பரிசு ரூபாய் நூறு

மாதந்தோறும் நடக்கும் இந்தச் சிறுகதைப் போட்டியில் எழுத்தாளர்கள் எல்லோரும் கலந்து கொள்ளலாம். எழுத்தாளர்கள் சொந்தமாகவே கதைகள் புனைந்து அனுப்ப வேண்டும். போட்டிக்கு ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம். கதைகள் "கல்கி"யில் ஆறு பக்கத்திலிருந்து எட்டு பக்கத்துக்குள் இருக்க வேண்டும். ஒவ்வொரு மாதமும் அந்தந்த மாதப் போட்டிக்கு வந்த கதைகளில் சிறந்ததற்கு நூறு ரூபாய் பரிசு வழங்கப்படும்.

முந்திய மாதப் பரிசுக் கதை அடுத்த மாத மூன்றாவது வாரத்தில் வெளியாகும். பிரசுரத்துக்குத் தகுதியுள்ள மற்றக் கதைகளும் "கல்கி"யில் பிரசுரமாகும். கதைகள் அந்தந்த மாதம் 20-ம் தேதிக்குள் "கல்கி" காரியாலயத்துக்கு வந்துவிட வேண்டும்.

தேர்ந்தெடுத்த கதைகளைத் திருத்துவதற்கும், குறைத்து வெளியிடுவதற்கும் ஆசிரியருக்குப் பூரண உரிமை உண்டு.

நாட்டு வைத்தியம்

ஸ்ரீஹரி

29. நேயர் கடிதங்கள்

கேள்வி 210 முக்கனியிலிருந்து ஒரு சகோதரி கேட்டிருக்கும் கேள்விக்குப் பதில் அளிக்கிறேன்.

இந்தச் சகோதரி ''மெய்யோ—பொய்யோ'' என்று தாய்மையை எதிர் நோக்கி நிற்கிறாள். ஆசிரியையாகப் பணியாற்றிவரும் இச் சகோதரிக்கு சூல் கொண்டவர் எல்லாருக்குமே ஆரம்ப காலத்தில் இருக்கும் சில; சாதாரண சுகவீனங்கள் ஏற்பட்டுள்ளன. இவற்றுக்கு என்ன செய்யலாம் என்று கேட்டுள்ளார். இனி வரப்போகும் காலத்தில் எவ்விதமான ஆகார விஹாரங்கள் நல்லது என்று கேட்டிருக்கிறார். எவ்விதமான முன்னேற்பாடுகளினால் வரப் போகும் மாதங்கள் நல்லபடியாகக் கடந்து உரிய காலத்தில் சுகமாகத் தாய்மைப்பேறு பெற்றிடச் சாத்தியமாகும் என்று தெரிவிக்கும்படி கேட்டுள்ளார். அவர் குழந்தை திடகாத்திரமாகவும், ஆரோக்கியமாகவும் (அழகு சொட்டச் சொட்ட) இருக்க வேண்டும். அதற்காக, தான் இப்போது என்னென்ன செய்ய வேண்டும், எதைத் தவிர்க்க வேண்டும்? என்பவை போன்ற விஷயங்களை அறிய விரும்புகிறார்.

ஒவ்வொரு தாயும் இதைத்தான் விரும்புகிறாள் — விரும்பியுள்ளார் — விரும்புவார். இதை ஒவ்வொரு சேயும் அறிய வேண்டும். கனவிலும் மறந்திட லாகாது. தாய்மையினும் உயர்ந்த பேறு என்ன இருக்க முடியும்? தாயினும் பெரியது எது? இதற்கு நேரிடையாகப் பதில்சொல்ல முடியாது. 'கடவுளுமல்ல' என்று மறைமுகமாகத்தான் பதில் சொல்லமுடியும். தாய் என்பாள் கடவுளினும் மேம்பட்டவள். தாய்மைப்பேறு பெண்ணுக்குத்தான் கிடைக்கும். ஆகவே ஒவ்வொரு பெண்ணும் தாய்தான். ஒவ்வொரு தாயும் கடவுளினும் மேம்பட்டவள். ஒவ்வொரு பெண்ணும் தெய்வ சொரூபம்—தெய்வம்.

ஆகவே, தாய்மையை எதிர்பார்ப் போரை எவ்விதம் பேணிடல் வேணும் என்னும் விஷயம் வைத்திய நூலில் ஒரு முக்கியமான பாகமாக விவரிக்கப்பட்டிருப்பது முற்றும் பொருத்தமானதே. ''கர்ப்ப ரக்ஷணீயம்'' என்று இப்பாகத்தை வடமொழி வைத்திய நூல்களில் விளக்கியுள்ளார். தமிழில் எழுதிய வைத்திய நூல்களிலும் இவ் விஷயமாகப் பலரும் எழுதியுள்ளனர். இவற்றையெல்லாம் ஒன்றாகத் தொகுத்து, நோயில்லா நெறி என்றொரு விஷயத்தை வகுத்துக் கொண்டு, அதன் கீழ் தாய்களையும் குழந்தைகளையும் பேணுதல் என்னும் தலைப்பின் கீழ் வருங் காலத் தாயை [அவள் சூல் கொண்டுள்ள சேயையுஞ் சேர்த்து]ப் பேணுதல் எவ்விதம் என்று எளிதில் அறியும் வண்ணம் விளக்கியுள்ளார் பிற்காலத்து ஆசிரியர்கள்.

''அத்திபுரித்தோ விடத்தில்
ஆர்த்த உமையாளின்ற
சத்தி கணபதியின் தாள்போற்றி—சத்திசையும்
கர்ப்ப மின்னார்க்குக்
காணும் பிணிதீரக்
கர்ப்பக் கிரியைகளைக்
கண்டுரைப்பேன்—உற்பத்தித்
திங்கள் முதல் கர்ப்பஞ்
....
....

என்று தொடங்கும் மிக நீண்ட பாக்களின் வாயிலாகக் கர்ப்பிணியை ஒவ்வொரு மாதமும் பேணுதல் எவ்விதமாக இருக்க வேண்டும்.... அதனால் சூலுற்ற காலத்தில் சாதாரணமாக ஏற்படும் பல்வேறு அசௌக்யங்கள் எவ்விதம் சமனமாகும்.... குழந்தையும் எவ்விதம் ஆரோக்யத்துடன் வளரும் என்பவற்றையெல்லாம் மூலநூல்கள் விளக்குகின்றன. இவற்றின் சாராம்சத்தைத் தெரிவிப்பதாயின்—ஒரு முக்கிய விஷயத்தையும் கருத்தில் வைத்திடல் அவசியம்.

முந்நாள் மக்களுக்கும் நமக்கும் வாழ்க்கையிலுள்ள வித்தியாசங்கள் காரணமாக—இன்று நமது சகிப்புத் தன்மை—மிகவும் குறைந்திருக்கிறது. ஆகவே நமக்குச் சில நோய்கள் மிக அற்பகாரணத்தினாலும் ஏற்படுவதுண்டு. வீர்யம் மிகுந்த மருந்துகளை ஏற்குஞ் சக்தியும் நமக்கு இல்லை. ஆகவே சூலுற்றவரைப் பேணிடும் விஷயத்திலும் சில அடிப்படைத் தத்துவங்களை யறிந்து, இக் காலத்தவருக்கும் ஏற்ற திட்டத்தை நாம் வகுத்துக் கொள்ளவேண்டும்.

மாதவிலக்கு கிரமமாக முழுகி வந்தது தடைபட்டது என்றதுமே, [குடும்ப

வாழ்க்கையிலிருப்பவர்] சூலுற்றார் எனக் கொள்ள வேண்டும். "வேறு காரணங்களாலும் விலக்கு ஒரு சில நாள்வரையில் தடைப்படலாமே!" என்பீராயின், அவ்விதம் ஏதேனும் தெளிவுபடும் வரையில் சூலுற்றதாகவே கருதிப் பேணிடல் அவசியம். இரண்டாவது விலக்குக் காலமும் தவறியது என்றால், அப்போது அம்மாது முதற் காரியமாகச் செய்ய வேண்டியதென்ன தெரியுமோ? தன் தாய் வீட்டுக்குச் செல்ல வேண்டும். மூன்றும் மாதம் நான்காம் மாதமாகும் போது சூலுற்றிருப்பது நிச்சயமாகி விடுமல்லவா? . . . .

அட! இந்தக் காலத்தில் வயிற்றுப் பிழைப்பை உத்தேசித்து எண்ணூறு மைல், ஆயிரம் மைல் தூரத்திலுள்ள ஊர்களில் ஸதிபதிகள் வாழ்ந்து வருகின்றனர். "மெய்யோ - பொய்யோ?" என்றிருக்கும் போதே ஒரு மாது 'இடுதிப்' பென்று பிறந்த வீட்டுக்குச் செல்லச் சாத்தியப்படுமா ?

அவ்வம்மையின் ஆரோக்கியத்தை உத்தேசித்து, பிறக்கப்போகும் குழந்தையின் ஆரோக்கியத்தையும் நீண்ட ஆயுளையும் உத்தேசித்து, இதைச் செய்யவேண்டியது அவசியம். பிற்காலத்தில் தாய்க்கும் சேய்க்கும் ஏற்படக்கூடிய எத்தனையோ இன்னல்களைத் தவிர்த்திடவே இதைச் சொன்னேன். இதைத் தெரிவித்தல் எனது கடமை. ஏற்றலோ தவிர்த்தலோ அவரவர் இஷ்டம், சௌகர்யம்.

மூன்று மாதம் சுமாருக்குச் சூலுற்றுள்ளவருக்கு 'மசக்கை' என்று வழக்கிலுள்ள 'தௌஹ்ருதம்' ஏற்படத் தொடங்கும். முதலில் ஒரு நிராத மயக்கம் - அல்லது அரைத் தூக்கம் ஆகாரத்தில் இச்சைக் குறைவு - சாப்பிட்டால் வாந்தி-சாப்பிடாவிட்டால் பசி களைப்பு- அல்லது வாந்திக்கு வரும் போன்ற உணர்ச்சி என்று இப்படிப் பல சிறிய கோளாறுகள் ஏற்படும். இந்தச் சந்தர்ப்பங்களில் ஜம்பீர பானகம், மாதீபலரஸாயனம், ஜம்பீர ஜீரகம், புதினபானகம், ஜாதி ஜம்பீரக் குழம்பு போன்ற மருந்துகளைத் திறமையுடன் உபயோகித்து வருவதும், மலபந்தமும் இருக்குமானால் திராக்ஷா கஷாயம், பாதாம் எண்ணெய் போன்றவற்றைச் சேவித்து மலபந்தத்தைப் போக்கிக் கொள்வதும் நல்லது.

நான்கு மாதங்கள் கடந்து விட்டால் மசக்கையின் வாந்தி போன்றவை தாமாகவே சமனமாகி விடும். ஒரு சிலரில் என்றைக்காவது அபூர்வமாக ஏற்படினும் அச்சமயங்களில் மட்டும் மேற்சொன்ன மருந்துகளில் ஒன்றை உபயோகித்தால் போதும்.

ஐந்தாம் மாதம் முதல் பிரசவகாலம் வரையில் தினசரி எண்ணெய்க்குளி அவசியம். குறைந்த பக்ஷம் கழுத்து வரையிலாவது தான்வந்தர தைலம், சிற்றுமுட்டித் தைலம், பலாச்வகந்தாதி தைலம் போன்றவற்றுள் ஒன்றைத் தடவிக் கொள்ளவேண்டும். சற்று நேரம் ஊறிப் பிறகு பொறுக்குஞ் சூடுள்ள வெந்நீரில் குளிப்பது நல்லது. வாரத்தில் ஒன்றிரண்டு முறை தலைக்கு எண்ணெய்க் குளி போதும். இம்மாதம் முதல் தினசரி இரண்டு வேளை ஆகாரத்துக்குப் பிறகு இரண்டு மாத்திரைகள் தான்வந்தர குளிகையை ஒரு அவுன்ஸ் சீரக கஷாயத்தில் கரைத்துக் குடித்து வருவது நல்லது.


சிறு நீரை இரண்டு வாரத்துக் கொரு முறை பரீட்சித்து வரவேண்டும். அதில் ஆல்புமின் இருப்பதாகத் தெரிந்தால், மூத்திரத்தைத் தாராளமாகப் போக்கிடப் பார்லிக் கஞ்சியை இடைவேளைகளில் குடிக்கக் கொடுப்பதும், சிறு பீளையின் வேர், சிற்றுமுட்டியின் வேர், ஜீரகம் இவற்றின் கஷாயத்தில் முன் சொன்னது போல் தான்வந்தர குளிகையைச் சேவித்து வருவதும் நல்லது.

எட்டுமாதத்துக்குப் பிறகு கர்ப்பத்தில் இருக்கும் சிசு எந்தநிலையிலிருக்கிறதென்பதைப் பரீட்சித்து அறிந்து கொள்வதோடு தக்க டாக்டரின் உதவியால், முக்கியமாக முதன் முறை கர்ப்பம் தரித்துள்ளவர், இடுப்பின் அளவுகளை எடுத்துக் கொள்வதும் மிக விரும்பத்தக்கது.

ரத்தத்தில் ஒரு சொட்டைப் பரீட்சிக்கச் செய்து குற்றங் குறைகளில்லாமல் இருக்கிறதா என்றும் தெளிந்து கொள்ள வேண்டும். ரத்தக் குறைவு இருக்குமாயின் எட்டாவது மாதத்திலிருந்தாவது ஆகாரத்துக்கு முன் இரண்டு டீஸ்பூன் அளவு திராக்ஷாரிஷ்டத்தை ஒரு அவுன்ஸ் ஜலத்திலும், ஆகாரத்துக்குப் பிறகு ஒரு டீஸ்பூன் லோஹாஸவத்தை அவ்விதமே ஜலத்தில் கலந்து ஆகாரத்துக்குப் பிறகும் தினம் இரண்டு வேளை சாப்பிட்டு வருவது நல்லது. அப்போது ரத்தத்தைப் பரிசோதித்த டாக்டர் வேறு மருந்து எழுதிக் கொடுப்பாராயின் அதையும் சேவிக்கலாம்.

மேற்சொன்ன விஷயங்களில் ஏதாவது ஒன்றிலோ மற்றொன்றிலோ சிறிது குற்றங் குறை இருப்பினும் பேறுகாலத்தில் நல்லதொரு ஆஸ்பத்திரிக்குச் சென்று பிரஸவம் கழிந்ததும் குழந்தையுங் கையுமாக வீடு திரும்ப வேண்டும்.

பிறந்த சிசு நன்றாய் வளர்ந்து - ஓரளவாவது கஞ்சி அல்லது அன்னம் போன்றவற்றை ஆகாரமாக ஏற்கும் நாள் வரையில் பிறந்த வீட்டிலேயே இருந்து பிறகு குழந்தையுடன் புகுந்த வீட்டுக்குச் செல்வதுதான் நல்லது. முதலில் சொன்னதையும் கடைசியாகச் சொன்னதையும் எவ்வளவு வலியுறுத்தினாலும் தகும்.



மனைவி: லஞ்சம் வாங்கி விட்டு எப்பொழுது பார்த்தாலும் ஜெயில் ஞாபகமாகவே இருக்கிறீர்களே! நாளைக்கு முதல் காரியமாக இந்தக் கட்டிலை மாற்றி விடுகிறேன்!

* * *

சென்னை நண்பர் ஒருவர் 246ல் தமது நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.

இவர் ஒரு மிகவும் இடக்கான விஷயமாக விளக்கம் கேட்டிருந்தார். பிரசுரிப்பது அழகல்ல; முறையல்ல. பண்புமல்ல. ஆகவே கடிதம் 225ல் 16-7-57ல் இவர் 'சந்தேகத் தெளி'ய, கேள்விக்கு விளக்கமான பதில் அளிக்கப் பட்டது. இதனால் திருப்தியடைந்த நண்பர் மேற்சொன்னபடி நன்றியைத் தெரிவித்துள்ளார்.

ஏதோ ஒரு கேள்வி கேட்டோம். அதற்குப் பதில் கிடைத்தது. பதில் பொருத்தமானதோ அல்லாததோ; சந்தேகத்தை அறவே போக்கி விஷயத்தைத் தெளிவுபடுத்தியதோ இல்லையோ- கிடைத்த பதிலோடு நிறுத்திக் கொள்வோம் என்று இல்லாமல் இப்படி ஒரு

நன்றியை எழுதித் தெரிவிக்கும் பண்பு பாராட்டத் தக்கது. கல்கியினிடம் நண்பர்களுக்கு இருக்கும் அன்பைத் தெளிவுபடுத்தவும் செய்கிறது.

'ஆகாரத்தில் கலந்துவிடும் கற்களைச் சாப்பிடவும் அவை மூத்திர மார்க்கத்தில் வந்து "கல்லடைப்பு" என்னும் வியாதியை உண்டாக்குகின்றன என்று சிலர் சொல்கிறார்களே. இது நிஜமா? இதற்குப் பரிஹாரமென்ன?' என்று 230ல் பதிப் பாளையம் நண்பர் கேட்டிருக்கிறார்.

உடற்கூறு சாஸ்திரம்—உடல் இயக்கச் சாஸ்திரங்களை யறிந்தவர் இதை ஒப்புக் கொள்ள மாட்டார்கள். ஆகாரத்தில் கற்கள் போன்றவை சேர விடாமல் அதி ஜாக்கிரதையுடன் இருக்க வேணுமென் பதை வலியுறுத்த இவ்வகையில் ஒரு பயத்தைச் சிறப்பித்திருக்கலாம்.

எனுமல் பாத்திரங்களை உபயோகிப் போர் கவனிக்க வேண்டிய விஷயமொன் றுண்டு. இங்கு மங்கும் இந்த எனுமல் போய் விடவும், உள்ளே இருக்கும் இரும்புத் தகடு எட்டிப் பார்த்துக்கொண் டிருப்பதும் அடிக்கடி நாம் காணும் காட்சி. இவற்றில் எடுக்கும் பண்டங்களை ஏற்பதில் ஆபத்து உண்டு. துருப்பிடித்த இரும்பு உட்செல்வது போன்றதால் ஏற் படக் கூடிய ஆபத்துக்கள் ஒருபுறமிருக்க, எனுமலின் சிறிய கணங்கள் உட் செல்வ தால் பேராபத்துகள் விளைகின்றன. "அபெண்டிஸைடிஸ்" என்னும் வியாதி ஏற்படுவதற்கான காரணங்களில் இவ் விதப் பொருள் அந்த அபெண்டிக்ஸில் தங்கிட நேரிடுவதும் ஒன்று. மூத்திர மார்க்கத்தில் கற்கள் ஏற்பட வழியில்லை யாளுலும், கற்கள், எனுமல், ரோமம் போன்றவை உட்செல்வதில் வேறுவிதத் தில் ஆபத்துக்கள் உண்டு.

226ல் கொழும்பு நண்பர் குடற்கிருமி களைப் பற்றியும், 237ல் திருச்சி நண் பர் — ரத்தக் கொதிப்பு — ரத்த அமுக் கம் என்னும் ப்ளட் பிரஷர் விஷயத் தைப் பற்றியும், 251ல் மதுரை நண்பர் — அடுக்குத் தும்மல் — ஆகாச கங்கை போலக் கொட்டும் மூக்குச் சளி விஷய மாயும் கல்கியில் கட்டுரைகள் எழுதும் படி விரும்பியுள்ளார்.

அவசியம் இவ் விஷயங்களைப் பற்றி எழுதத்தான் போகிறேன். மளமள வென்று இவ் விஷயங்களைப் பற்றித் தெரிந்தவைகளை எழுதிவிடலாம். ஆனால் தமிழில் சித்தர் பரம்பரையாகக் கிடைத் துள்ள நூல்களில் கிடைக்கும் விஷயங் களைத் திரட்டியாக வேண்டுமல்லவா? "அப்பா! முடிந்தது". என்னும்போது "இதோ இன்னுமொரு புத்தகம் இருக் கிறதே! இதையும் பார்த்துவிடலாமே!" என்று தோன்றுகிறது ஆகவே நண் பர்கள் கேட்டிருக்கும் விஷயங்களைப் பற்றிக் கட்டுரைகள் வரும். சிறிதுபொறு மையோடிருத்தல் எனக்குச் செய்யும் ஒரு பேருபகாரமாகும். அபூர்வ விஷ யங்களும் கிடைக்குமே? (தொடரும்)



பரத நாட்டியமும், நாகஸ்வரமும் தென் இந்தியப் பண்பாட்டின் தனிச் சிறப்புக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. அவற்றைப் போலவே பூப்பந்தாட்டம் தென்னிந்தியாவின் பெருமைக்கு அணிகலனாக விளங்குகிறது. இப் பூப்பந்தாட்டம் அமெரிக்கர்களுக்கும், ஆங்கிலேயருக்கும் குடும்ப விளையாட்டாகத் திகழ்கிறது. நம் இந்தியாவிலிருந்துதான் இந்த விளையாட்டை இந்தியாவில் முன்பு ஆட்சி பீடத்தில் அமர்ந்திருந்த ஆங்கில அதிகாரிகள் கற்றுக்கொண்டு இங்கிலாந்தில் பரப்பினர் என்று கேட்கும்போது நம் தோள்கள் பூரிக்கின்றன.

'பாட்மிண்டன்' என்று ஆங்கிலத்தில் வழங்கும் இந்த விளையாட்டில் இருவகை உண்டு. ஒன்று பூப்பந்தாட்டம்; மற்றொன்று 'ஷட்டில்காக்' விளையாட்டு. இந்த விளையாட்டு வட இந்தியாவில்தான் பரவியிருக்கிறது. மலேயாக்காரர்களே இந்த ஷட்டில்காக்' விளையாட்டில் உலகில் நிகரற்று விளங்குகின்றனர். பூப்பந்தாட்டம் ஆந்திராவிலும், தமிழ் நாட்டிலும் பிராபல்யமாயிருக்கிறது.

தமிழ் நாட்டில் இரட்டையர்கள் என்று இருகவிஞர்கள் கவிபாடி இலக்கியச் செல்வத்தை வளர்த்தார்களல்லவா? இன்று பூப்பந்தாட்டத்திலே இரட்டையர்கள் சென்னை ராஜ்யப் பூப்பந்தாட்ட வெற்றி வீரர்களாகத் திகழ்கிறார்கள். காவிரி நதியின் வளம் கொழிக்கும் தஞ்சை ஜில்லாவிலே பிறந்த திரு கரீமும் குண்டூரிலே உதித்த திரு வஹாபும்தான் அவர்கள்.

சென்னை ஆந்திரமகாசபை மைதானத்தில் சென்னை ராஜ்யத்திலுள்ள தலைசிறந்த பூப்பந்தாட்ட விளையாட்டு மன்னர்களெல்லாம் ஆகஸ்டு 15ந் தேதியிலிருந்து 18ந் தேதி வரை விளையாடினர். இறுதியில் ஜயம் பெற்றுத் தங்கள் முழுத் திறமையும் காட்டியவர்கள் திரு வஹாபும், திரு கரீமும்தான்.


அமெரிக்காவிலே, விளையாட்டுக்காரர்கள் இளம் வயதிலேயே பிரபல பயிற்சியாளரின் மேற்பார்வையில் பயிற்சி அளிக்கப்பட்டு நிபுணர்களாக்கப்படுகின்றனர் எனப் பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகின்றன. இரட்டையர்களில் ஒருவரும் 'முன்னால் ஆடும்' திறமை பெற்றவருமான வாலிபர் திரு வஹாப் அப்படித் திறமையுள்ள விளையாட்டுக்காரரிடம் பயிற்சிபெற்று வளர்ந்தவர். பூப்பந்தாட்ட உலகிலே புகழ் பெற்று விளங்கும் திரு தஹிறு அவர்களே திரு வஹாபை உருவாக்கியவர்.




அதிகாலையில் சிறுவன் ஒருவன் பந்து மட்டையுடன் விளையாடுவதற்குக் கிளம்பிவிட்டால் அவன் தந்தை, "ஏண்டா! பொழுது விடிஞ்சதும் இப்படி மட்டையோடு கிளம்பி விட்டாய்?" என்று எரிந்து விழுவதைக் கேட்கிறோம். ஆனால் திரு வஹாபின் தந்தை 'விளையாட்டுகள் பொழுதை வீணாக்குபவை' என்று கருதவில்லை. அவர் தம் மகனின் ஆர்வத்துக்குத் தூண்டுகோலாயிருந்து உற்சாகப்படுத்தினார்.

1955ம் வருஷத்திலிருந்து சென்னை ஆந்திர மகாசபை நடத்தும் சென்னை ராஜ்யப் பூப்பந்தாட்டப் போட்டியில் இவர், இரட்டையர் ஆட்டத்தில் வென்று வெற்றிக் கோப்பையை அடைந்திருக்கிறார் திரு வஹாப். திருவனந்தபுரத்தில் 1956-ம் வருஷத்தில் நிகழ்ந்த பாட்மிண்டன் போட்டியில் திரு ராஜகோபாலோடு சேர்ந்து விளையாடிக் கேரளத்தில் வெற்றிக்கொடி நாட்டியிருக்கிறார்.

மதுரையில் நடக்கும் சிவசாமி ஞாபகார்த்தப் பூப்பந்தாட்டப் போட்டியைத் 'தென்னிந்தியாவின் விம்பிள்டன்' பூப்பந்தாட்டப் போட்டி என்று குறிப்பிடுவது வழக்கம். அதில் திரு வஹாப் இவர் கோஷ்டியில் விளையாடி வெற்றி பெற்றிருக்கிறார். விளையாட்டு மன்னர் திரு வஹாப் பூப்பந்தாட்டத்திலே சிறந்தோங்க வேண்டும் என்று வாழ்த்துகிறோம். - குண்டுமணி.



பார்வதி



பார்வதிக்கு எப்படிப் பேச்சை ஆரம்பிப்பதென்றே தெரியவில்லை. சந்திரமௌளீசுவரன் மௌனமாக ஆகாயத்தில் பவனி வந்து கொண்டிருந்த சந்திரனின் அழகை ரஸித்துக் கொண்டிருந்தார். மெள்ள மனத்தைத் திடப் படுத்திக் கொண்டு, ''ஒரு விஷயம் உங்களைக் கேட்க வேண்டும்'' என்றாள் பார்வதி. மௌளீசுவரன் பதில் பேசவில்லை.

பார்வதியே தொடர்ந்து, ''உங்கள் கம்பெனியில் சுந்தரேசன் என்று யாராவது வேலை செய்கிறார்களா?'' என்று வினவினாள்.

''தலைமை ஆபீஸில் யாருமில்லை. கோயமுத்தூர் பிராஞ்சில் சுந்தரேசன் என்று ஒருவன் வேலை செய்தான். காரியாலயப் பணத்தில் இருநூறு ரூபாயைக் கையாண்ட குற்றத்துக்காக அவனைத் தாற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கி யிருக்கிறோம். விசாரணை நடக்கிறது. ஏன், என்ன விஷயம், பார்வதி?''

''இன்று மத்தியானம் அவன் மனைவி தன் மூன்று குழந்தைகளுடன் இங்கு வந்திருந்தாள்'' என்றாள் பார்வதி.

''ஓஹோ!'' மௌளீசுவரன் சிரித்தார். ''பேஷ், பேஷ்! வந்து உன்னிடம், 'என் கணவர் நிரபராதி' என்று அழுதாள்.....அவ்வளவுதானே, பார்வதி!''

பார்வதிக்கு வியப்பு மேலிட்டது. ''ஆமாம்! அது உங்களுக்கு எப்படித் தெரிந்தது?'' என்று கேட்டாள்.

"உன்னுடன் பத்து வருடங்களாகப் பழகியும் உன் சுபாவம் எனக்குத் தெரியாதா, பார்வதி! தெருவில் பிச்சைக்காரன் போனால் கூட நீ அழுது விடுவாயே! ஆனாலும் இவ்வளவு இரக்கம் கூடாது, பார்வதி."

பார்வதி பதில் பேசவில்லை. மீண்டும் சிரிப்புடன் மௌனீசுவரன் "முழுவதையும் கூறிவிடு, பார்வதி! அரைகுறையாக நிறுத்தி விடாதே. அப்புறம்..." என்றார்.

"அந்தக் குழந்தைகளின் கதையை நினைத்தாலே பரிதாபமாக இருக்கிறது. கடைசிக் குழந்தைக்கு இரண்டு வயது இருக்கும். அதன் பெயர் கண்ணனாம்! எவ்வளவு அழகாக இருக்கிறது, தெரியுமா?"

"அடேடே! அதை வேண்டுமானால் சுவீகாரம் எடுத்துக்கொண்டு விடலாம், பார்வதி! நான் கம்பெனியை மானேஜர் பொறுப்பில் விட்டு விட்டுச் சேதுவுக்குக் கிளம்பலாம் என்று ஏற்பாடு பண்ணி விட்டேனே! அந்த ஆசை போய் விட்டது போலிருக்கிறது....! உம்..."

பார்வதியின் முகம் சிவந்து விட்டது. அந்த நிலவொளியில் அது நன்றாகத் தெரிந்தது.

"...கேலி இருக்கட்டும். அந்தச் சுந்தரேசனுக்கு உங்களால் உதவி செய்ய முடியுமா? முடியாதா? இன்னொரு விதத்திலும் நாம் அவனுக்குக் கடமைப்பட்டிருக்கிறோம்."

"அது என்ன கடமை, பார்வதி?" என்றார் மௌனீசுவரன்.

"சுந்தரேசன் வேறு யாருமில்லை. ஆதியில் என்னையும் என் தாயாரையும் ஆதரித்த ராமநாதய்யரின் ஏகபுதல்வன்தான்! அவர்கள் உப்பைத் தின்றதற்காகவாவது...."

பார்வதியின் கண்களில் நீர் தேங்கி நின்றது.



"ஏ, அசடே? இதற்காகவா அழுகிறாய்? நாளைய தினம் பார்க்கிறேன்! பணத்தைக் கொண்டு வந்து கட்டி விட்டால் ஒரு எச்சரிக்கையுடன் வேலையைத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன். சரிதானே, பார்வதி!"

"அத்துடன் மட்டுமல்ல; உங்கள் காரியாலயத்தில் அவனை வைத்துக் கொண்டு அவனுக்குப் புத்திமதி கூறி அவனைத் திருத்த வேண்டும். இது விமலாவின் கோரிக்கை."

"ஏது? ஒரே கோரிக்கை மயமாக இருக்கிறதே. நாளைக்குப் பார்க்கலாம். இன்று எனக்குக் காரியாலய வேலை இருக்கிறது."

பார்வதிக்கு உறக்கமே பிடிக்கவில்லை. மௌனீசுவரன் மேஜையின் மேலிருந்த காரியாலய பைல்களில் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தார்.

ஜன்னலின் வழியாகப் பூரண சந்திரன் தன் கிரணங்களை அள்ளி வீசிக் கொண்டிருந்தான். பார்வதிக்குக் குமாரக் கோவில் முருகனின் வதனம் நினைவுக்கு வந்தது.

பார்வதிக்கு நினைவு தெரிந்த நாள் முதல் அவள் தாயார் காமாட்சிதான் ஊன்று கோலாக விளங்கினள். பார்வதிக்கு ஆறு வயது நடந்து கொண்டிருந்தபொழுது அவள் தந்தை விச்வேசுவரன் காலமானார். ஒரே ஒரு சிறிய வீட்டைத் தவிர வேறு எதுவும் காமாட்சிக்குக் கிடைக்கவில்லை. அவள் வழியிலோ, விச்வேசுவரன் வழியிலோ உறவினர்களும் அதிகமில்லை.

காமாட்சிக்கு அடைக்கலம் அளித்தது, மிராசுதார் ராமநாதய்யரின் தர்மபத்தினி விசாலம்தான். மிராசுதாரிடம்தான் விச்வேசுவரய்யர் வேலை செய்து வந்தார்.

காமாட்சியை மிகுந்த பிரியத்துடன் வைத்துக் கொண்டாள். ஒரு சமையற்காரியாக விசாலம் மதிக்கவில்லை. இவ்வளவு இரக்க சிந்தனையுடன் மனிதர்கள் இருப்பார்களா என்று காமாட்சி வியந்தாள். அவர்கள் காட்டிய இரக்கத்துக்குப் பரிகாரமாகத்தான் அவர்கள் புதல்வன் சுந்தரேசன் வளர்ந்து வந்தான். ஏகபுத்திரன்! அளவற்ற செல்வம்! கேட்பானேன்!

சுந்தரேசனின் பிடிவாதத்துக்கும் கோபத்துக்கும் எவ்வளவோ முறை இரையாகி யிருக்கிறாள் பார்வதி! சுந்தரேசனுடைய பெற்றோர்களின் மனவேதனை சொல்லுக்கு அடங்கவில்லை.

காலச்சக்கரம் வேகமாகச் சுழன்றது.

சுந்தரேசன் மேற்படிப்புக்காகச் சென்னைக்குச் சென்றான்.

மிராசுதார் தயவில் பார்வதி நாகர்கோவில் உயர்நிலைப் பள்ளியில் படித்து வந்தாள்.

முதல்தரம் சென்னையிலிருந்து வந்தபொழுதே சுந்தரேசனின் சுபாவம் மாறிப் போயிருந்தது. அடக்கமும் பண்பும் வெகுவாகக் காணப்பட்டன.

பார்வதி சுந்தரேசனுடன் இப்பொழுது பேசுவதில்லை. காமாட்சியின் கட்டளை இது.

ஆனால் சுந்தரேசன் அடிக்கடி அவள் வீட்டுக்கு வரத் தலைப்பட்டான். அவன் பார்வையே பார்வதியின் நெஞ்சில் பீதியைக் கிளப்பியது.

காமாட்சியிடம் சுந்தரேசன் சகஜமாகப் பேசிக் கொண்டிருப்பான்! அடிக்கடி அவளிடமே எவருக்கும் தெரியாமல் ஐந்து, பத்து கடன் வாங்கிக் கொண்டு போவான். தாய் தந்தை அறியாத வண்ணம் அப்படி என்ன செலவு இருக்கும் என்று வியந்தாள் காமாட்சி.

இண்டர் படிப்பை முடித்துவிட்டுச் சென்னையிலிருந்து இரண்டாம் முறையாக, சுந்தரேசன் குமாரக் கோவில் வந்த பொழுது பார்வதியின் வாழ்க்கையை மாற்றியமைக்கும் அந்தச் சம்பவம் நடந்தது. பார்வதிக்கு அப்பொழுது பதினேழு வயது நிரம்பி விட்டது. ஸ்கூல் பைனல் பரீட்சை எழுதி யிருந்தாள்.

குமாரக் கோவில் முருகன் அந்த வட்டாரத்தில் வெகு பிரசித்தம். பல இடங்களிலிருந்து ஜனங்கள் வந்த வண்ணமாக இருப்பார்கள். வெள்ளிக்கிழமை என்றால் கோவில் நிறைந்து விடும்.



குமாஸ்தா:—என்னைக் கூப்பிட்டீர்களாமே!
மானேஜர்:—ஆமாம்! அதற்காக சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருக்கிற சமயத்தில் உங்களை யார் வரச்சொன்னது? போய் விட்டு நான் கோபமாக இருக்கிறபோது வாருங்கள்!

எது எப்படித் தவறினாலும் வெள்ளிக் கிழமை கோயிலுக்குத் தன் மகளை அழைத்துச் செல்லத் தவற மாட்டாள் காமாட்சி.

அதேபோல் அந்த வெள்ளிக்கிழமையும் இருவரும் கோயிலுக்குச் சென்றார்கள். கூட்டத்தில் காமாட்சி பிரிந்து போய்விட்டாள். தீபாராதனை முடித்ததும் கையில் பழத் தட்டுடன் வந்த காமாட்சி செயலற்று நின்றாள்.

பிராகாரத்தில் காணப்பட்ட ஒரு வில்வ மரத்தடியில் பார்வதியும் சுந்தரேசனும் பேசிக் கொண்டிருந்தது அவள் காதில் தெளிவாக விழுந்தது. அவள் நிற்பதை இருவரும் கவனிக்கவில்லை.

"நான் உன்மேல் கொண்டிருக்கும் அன்பு சாதாரணமானதல்ல, பார்வதி! நீ சம்மதித்தால்..." என்றான் சுந்தரேசன் நாடக பாணியில்.

"அதை என்னிடம் திருப்பித் திருப்பிச் சொல்வானேன்? என் தாயாரிடம் கூறுங்கள்" என்றாள் பார்வதி. தொடர்ந்து, "அவள் விருப்பத்துக்கு விரோதமாக நான் ஒருநாளும் நடக்க மாட்டேன்" என்றாள்.

"உன் இஷ்டத்துக்கு விரோதமாக நானும் நடக்க மாட்டேன், சுந்தரேசா!"

சுந்தரேசன் பார்வதி இருவரும் திடுக்கிட்டுப் போய் விட்டனர்.

காமாட்சி அவர்கள் அருகில் வந்தாள். "சுந்தரேசா! ஊற்று நீரை வெள்ளமா கொண்டு போய் விடும்? சென்னைக்குப் போய் நன்றாகப் படி. இன்னும் இரண்டு வருஷங்கள் கழிந்த பின்பு பார்வதி உன் மனைவிதான்"

சுந்தரேசன் மௌனமாக அகன்றான். மீண்டும் படிப்பைத் தொடர்வதற்காகச் சுந்தரேசன் சென்னைக்குச் சென்றான்.

அடுத்த முறை அவன் குமாரக் கோயில் வந்த பொழுது பார்வதியும் காமாட்சியும் அங்கில்லை. அவன் போன சில தினங்களுக்கெல்லாம் காமாட்சி வீட்டை விற்று விட்டுச் சென்னைக்குக் கிளம்பி விட்டாள்.

"பாரு! நாம் இனியும் இங்கிருப்பது ஆபத்துத்தான்! இரண்டு வருஷம் ஓடிவிடும். சுந்தரேசன் வந்து விடுவான். எனக்கென்னவோ அவன் பேரில் கொஞ்சம்கூட நம்பிக்கையே இல்லை. அதனால்தான் அன்று கோயிலில் அப்படிப் பேசித் தப்பித்துக் கொண்டேன். தாய் தந்தையருக்குத் தெரியாமல் எவ்வளவு காரியங்கள் செய்து கொண்டிருக்கிறானோ? நாம் சென்னைக்குப் போய் விடலாம், பார்வதி! எனக்குத் தெரிந்த தூரத்து உறவினர் ஒருவர் மயிலாப்பூரில் இருக்கிறார். அவர் மூலம் அங்கு ஒரு வேலையைச் சம்பாதித்துக் கொள்ளலாம்."

தாயின் சொல்லுக்குப் பார்வதி உடனே தலையசைத்தாள்.

ராமநாதய்யர் தம்பதிகள் முதலில் சம்மதிக்கவில்லை.

பார்வதியின் கல்யாணத்தை வியாஜமாக வைத்துக் காமாட்சி கிளப்பிவிட்டாள்.

மௌனீசுவரன்-இஞ்சினீயரிங் கம்பெனியின் நிர்வாகஸ்தர் சந்திரமௌனீசுவரன்-வீட்டில் சமையற்காரியாக அமர்ந்த காமாட்சி விரைவில் அவருக்கு மாமியார் ஸ்தானத்தை அடைந்து விட்டே கண்ணை மூடினாள்.

பார்வதியின் எழில் உருவம் பிரம்மச்சாரியாகவே காலங் கடத்தி வந்த முப்பத்தைந்து வயது மௌனீசுவரனை வசீகரித்து விட்டது. அவர் செய்கையை ஆட்சேபிக்க எவருமில்லை. பார்வதி மௌனியின் மனைவியானாள்.

அவளுக்கு ஆண்டவன் வேறொரு குறையும் வைக்க வில்லை. அன்பு நிறைந்த கணவன்! கையில் அமோகமான ரொக்கம்! பார்வதியின் சிந்தனை கலைந்தது.

பார்வதி புரண்டு படுத்தாள். ஆனால் வீட்டை ஆள்வதற்குக் குழந்தை மட்டுமில்லை. குமாரக் கோயிலில் குடிகொண்டிருக்கும் குமாரப் பெருமானின் திருமுகம் பார்வதியின் மனக் கண் முன்பு நின்றது!

"முருகா....குமரா!"

நாற்காலியிலிருந்து மௌனீசுவரன் வேகமாக எழுந்து வந்தார்.

"பார்வதி! என்ன குமரனைக் கூப்பிடுகிறாயா? கவலைப்படாமல் தூங்கு. பார்வதி! இன்று வெள்ளிக்கிழமை. வரும் திங்கட்கிழமையன்று விசாரணை! அந்தச் சுந்தரேசனை விடுவித்து விட்டு அதற்குப் பதிலாக அந்தக் குழந்தையை வாங்கி உன் கையில் கொடுத்து விடுகிறேன், பார்வதி! போதுமா? சேதுவுக்குப் போக வேண்டாமே!" என்றார்.

பார்வதி நாணத்துடன் கைகளால் முகத்தை மூடிக் கொண்டாள்.

✶

பார்வதி ஸ்தம்பித்துப்போய் நின்றாள். கனவேகமாக வந்த ஆட்டோரிக்ஷாவிலிருந்து சுந்தரேசன் இறங்கினான். அடேயப்பா! பத்து வருஷங்களுக்குள் அவன் தோற்றத்தில் தான் எத்தனை மாறுதல்கள்?



லோமா ஹேர் டானிக்கை உபயோகித்து இழந்த இயற்கை அழகை திரும்பப் பெறுங்கள்.

லோமா, கேசத்தை இயற்கையாக கருமை நிறமாகச் செய்யும் தன்மை வாய்ந்தது. இது உலகம் பிரசித்திப்பெற்றது. இது பிரத்தியேகமாக தயார் செய்யப்பட்ட பாட்டிலில் சீல் செய்த மூடியுடன் இப்பொழுது கிடைக்கிறது.



லோமா

REGD.

ஸோல் ஏஜெண்டுகள்: எம். எம். கம்பாட்டாவாலா—ஆமதாபாத்

ஏஜெண்ட்கள் லீ ஹேமர்ட்டம் அண்ட் கோ., பம்பாய்-2 போன்: 30575

சென்னை ஏஜெண்டுகள்: ஜே பாலபாய் அண்டு கம்பெனி 260, எஸ்பிளனேட், மதராஸ்-1

இலங்கை ஏஜெண்டுகள்: சிர்குல் கதிர் & கோ., 41&43, இரண்டாம் குறுக்குத் தெரு, கொழும்பு-11

பார்வதி அருகே நின்ற வேலைக்காரனிடம், "ஐயா ஆபீசுக்குப் போய் விட்டார்கள் என்று அவரிடம் சொல்லு!" என்றாள்.

"அடாடா..பாவாயில்லை! என்னை அடையாளம் தெரியவில்லையா, பார்வதி! நேற்று விமலாவிடம் 'குமாரக் கோவில் ராமநாதய்யர் மகன்தானே' என்று விசாரித்தாயாம் விமலா கூறியதிலிருந்து நீயாகத்தான் இருக்க வேண்டும் என்று ஊகித்துக் கொண்டேன். என் யூகம் சரிதான். உங்கள் இருவரையும், அதாவது உன்னையும் உன் தாயாரையும் நான் நினைக்காத நாள் இல்லை! அம்மா சௌக்கியமாக இருக்கிறாளா பார்வதி?"

பார்வதியின் மனம் நெகிழ்ந்து விட்டது. ஒரு காலத்தில் லட்சாதிபதியாக இருந்த சுந்தரேசனா இவன்? முதல் தினம் விமலா சுந்தரேசன் 'விஸிடிங் கார்டை'ப் பார்த்தவுடனேயே பார்வதிக்குச் சந்தேகம் எழுந்து விட்டது. அதற்கேற்றாற்போல் பேச்சுவாக்கில் விமலாவும் குமாரக் கோவிலைப் பற்றியும் ராமநாதய்யரைப் பற்றியும் கூறிவிட்டாள். இதற்கு மேலும் பார்வதியால் சும்மா இருக்க முடியவில்லை.

"அம்மா உலகத்தை விட்டுப் போய் நாலு வருஷங்களாகின்றன. ஏன் நிற்கிறீர்கள்? உட்காருங்கள்."

"ஐயையோ! பாவம்! பெற்ற தாயை விடப் பரிவுடன் என்னை வளர்த்தாள். என் தாய், தந்தை சொத்து அனைத்தையும் இழந்தேன். நம்மேல் அன்பு கொண்ட ஜீவன்கள் எல்லாமே மறைந்து விடுகின்றன பார்வதி!"

பார்வதிக்கு முள்மேல் நிற்பது போலத் தென்பட்டது. சுந்தரேசன் நிதானமாக ஹாலில் தென்பட்ட ஒவ்வொரு படமாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"உங்கள் விஷயத்தை அவரிடம் சொல்லியிருந்தேன். பணத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டால் வேலையைத் திருப்பித் தருவதாகச் சொல்லி விட்டார்" என்றாள் பார்வதி.

"பணமா! என்னிடம் ஏது பணம் பார்வதி? நீயும் என்னைக் குற்றவாளி என்று நம்புகிறாயா பார்வதி? கையில் காலணா இல்லை. உத்தியோகத்தை இழந்தே ஒரு மாதத்துக்கு மேலாகி விட்டது. குழந்தைகளின் வியாதியால் ஏகக் கடன்! தவிரவும் அபாண்ட பழி வேறு சுமத்தப்பட்டு நிற்கிறேன். பார்வதி! நாங்கள் வாழ்ந்த வாழ்வென்ன? இப்பொழுது இருக்கும் நிலை என்ன? உன் கணவரைப் பார்த்து விட்டு வருகிறேன். நீ கூறியதைத்தான் அவரும் கூறினார் பார்வதி! திங்கட்கிழமையன்று பணத்தைக் கட்டி விடும்படி கூறினார். பணத்துக்கு எங்கே போவது?"

பார்வதி ஒரு கணம் யோசித்தாள்...பிறகு அருகிலிருந்த வேலைக்காரனிடம், "சமையற்கார ஐயாவைக் காப்பி கொண்டு வரச் சொல்லு!" என்றாள்.

"சற்று இருங்கள் சுந்தரேசன்!" என்று கூறிய பார்வதி உள்ளே சென்றவள், சிறிது நேரத்தில் திரும்பி வந்தாள். அவள் கையில் ஒரு கட்டு நோட்டு இருந்தது.

ஹாலில் காணப்பட்ட பீப்பாயின் மேல் அதை வைத்து, "இதை எடுத்துக் கொள்ளுங்கள் சுந்தரேசன்! இருநூறு ரூபாயைத் திங்களன்று ஆபீஸில் கட்டிவிடுங்கள். மீதமுள்ளதை உங்கள் செலவுக்கு வைத்துக் கொள்ளுங்கள்" என்றாள் பார்வதி.

"பார்வதி! இதை நான் எப்பொழுது திருப்பித் தருவது?" என்றான்.

பார்வதி முத்துப் போன்ற பற்கள் தெரியும்படி நகைத்தாள். பிறகு, "திருப்பித் தர வேண்டியதில்லை" என்றாள்.

"பார்வதி.....!" சுந்தரேசன் குரல் தடுமாறியது.

"என்ன வேண்டும் சுந்தரேசன்! தயக்கமில்லாமல் கேளுங்கள்" என்றாள் பார்வதி.

"பார்வதி! குமாரக் கோவிலில் அன்றொரு நாள் நடந்தது ஞாபகமிருக்கிறதா?"

பார்வதியின் முகத்திலுள்ள சிரிப்பு மறைந்தது. "அதற்கென்ன?"

"ஒன்றுமில்லை, பார்வதி! அன்று முதல் இன்று வரை நிம்மதியில்லாமல் இருந்தேன். என்னைப் பற்றி நீ நேற்று விமலாவிடம் வெகு அக்கறையாக விசாரித்தபோதுதான் உன் உள்ளம் எனக்குப் புரிந்தது. உனக்காக விமலா, குழந்தைகள் எல்லோரையும் தியாகம் செய்யச் சித்தமாக இருக்கிறேன். பார்வதி! அன்று மட்டும் உன் தாயார் குறுக்கிட்டிராவிட்டால்...."

"மிஸ்டர் சுந்தரேசன்!" — பார்வதியின் முகத்தில் கடுமை தென்பட்டது. "என் இரக்கத்தையும் நல்லெண்ணத்தையும் தவறுதலாகப் புரிந்து கொண்டு விட்டீர்கள் போலிருக்கிறது. நீங்கள் போகலாம்."

"பார்வதி...."

பார்வதி சீறினாள்:

"பொறுப்பு வாய்ந்த குடும்பஸ்தனென்று தங்களை உள்ளே அனுமதித்தது என் தவறு. இன்னும் சற்றுத் தாமதித்தால் பார்வதியின் கோபத்தின் எல்லையையும் கண்டுவிடுவீர்கள்!"

பார்வதியின் சீற்றத்தைக்கண்ட சுந்தரேசன் மௌனமாகக் கீழே இறங்கி நடந்தான்.

*

"பார்வதி! திங்களன்று சுந்தரேசனைப் பணம் கட்டிவிடும்படி கூறியிருக்கிறேன்!" என்றார் மௌனீசுவரன்.

பார்வதிக்குச் சுருக்கென்றது. அவள் மௌனமாக நின்றாள்.

'தேவி! திங்கட்கிழமை அவனிடம் ஒன்றே ஒன்று கேட்க வேண்டும். அந்தக் கண்ணனை நமக்குக் கொடுத்து விடும்படியாக..."

"வேண்டாம்! வேண்டாம்!" பார்வதியின் கண்களில் நீர் துளித்து விட்டது.

"ஏன் பார்வதி?"

"அந்தச் சுந்தரேசனுக்கு வேலையைக் கொடுத்தாலும் கொடுங்கள்! அவனை வடக்கே உள்ள ஏதாவது ஒரு கிளைக்கு மாற்றி விடுங்கள். இங்கிருந்தால் நம்மிருவர் பெயரையும் பாழ் செய்து விடுவான்!"

பார்வதியின் உள்ளம் மௌனீசுவரனுக்கு விளங்காத புதிராக இருந்தது.

"ஏன் நிறுத்தி விட்டாய், பார்வதி! முழுவதையும் கூறி விடு."

"சீக்கிரமே நாம் ராமேசுவரம் போக வேண்டும்!" என்றாள் பார்வதி முகம் சிவக்க.


பல நூற்றாண்டுகளுக்கு முன் ஓர் இந்திய பிக்ஷு தேயிலையின் நல்ல குணத்தைப் பற்றிக் கண்டுபிடித்தார்
1955ல், யு.எஸ்.ஏ யில் உள்ள "பயலாஜிகல் ஸையன்ஸ் பௌண்டேஷன்" என்ற விஞ்ஞான நிபுணர்கள் கொண்ட குழு, தேநீர் சோர்வைப் போக்க உதவுகிறது என்று குறிப்பிட்டிருக்கிறது.
தேநீர் சோர்வை விரட்டியடிக்கும் வல்லமை பெற்றது என்ற உண்மையைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே கண்டுபிடித்தவர் தருமா என்ற இந்திய பிக்ஷு என்று சொல்லப்படுகிறது. அவர் சீனாவிலும், ஜப்பானிலும் புத்தமதத்தைப் பிரசாரம் செய்வதற்காக இந்தியாவிலிருந்து கி. பி. 520ம் ஆண்டு சென்றவர்.
தற்போது, பல லக்ஷக்கணக்கான வீடுகளில் தேநீர் அருந்துவது தினசரி வழக்கங்களில் ஒரு அங்கமாகி விட்டது மட்டுமல்ல, அது விருந்தோம்பலின் சின்னமாகவும் விளங்குகிறது. ஒரு கோப்பை தேநீர் அருந்தும்போது, உங்கள் கவலை யெல்லாவற்றையும் மறந்து, நீங்கள் எந்த விஷயத்தைப் பற்றியும் பிறரிடம் விவாதிக்கலாம்.
நண்பர்கள் டீ — நட்பின் சின்னம்
TEA BOARD INDIA



தாங்க முடியாத கோபத்தோடு மூர்த்தி தன் சகோதரியின் வீட்டை நோக்கி வேகமாக நடந்துகொண்டிருந்தான். நெருக்கடியான அந்தத் தெருவில் குறுக்கே வருபவர் மீதெல்லாம் மோதிக் கொள்ளாமல் ஜாக்கிரதையாக நடந்து வருவதே மிகுந்த பிரயாசையாயிருந்தது. அதோடு உள்ளத்தின் நிலை வேறு சரியில்லை. அவன் சகோதரி ஏழை, ஒரு மூலைச் சந்தில் வசிக்கிறாள். அவர்கள் எல்லோரும் ஏழைதானே? அப்படியிருக்க, ஏதோ கொஞ்சம் சம்பாதிக்கும் அவன், அக்காவின் கஷ்ட தசையில் அவளிடம் சென்று 'பணம் இல்லை' என்று கையை விரிக்க வேண்டிய நிலையென்றால்...

மூர்த்திக்குக் கோபம் தாளவில்லை. கூடவே 'நான் ஒரு முட்டாள். நான் ஏழைதானே? என் தரத்திலேயே இருந்திருக்க வேண்டும். ஊருக்குள் பெரிய வக்கீல் வந்து பெண்ணைக் கொடுக்கிறேன் என்றால் நான் பணக்காரனாகி விடுவேனா? அல்லது என்னைக் கல்யாணம் செய்து கொண்டதற்காக அந்தப் பெண்தான் ஏழையாகி விடுவாளா? தெரியாமலா சொன்னார்கள், சம்பந்தம் சம இடத்தில் செய்ய வேண்டுமென்று. பார்வதியும் என்னைப்போல் ஒரு ஏழையின் வீட்டில் இருந்திருந்தால் இப்படியெல்லாம் நடந்திருக்குமா?' என்று அவன் சிந்தனை ஓடியது.

அன்று காலை அவன் தன் மனைவியிடம், "பார்வதி! அத்திம்பேர் ஜயராமனை ஏதோ இட நெருக்கடி காரணமாக அவர் கம்பெனியில் வேலையை விட்டு அனுப்பி விட்டார்களாம்" என்றான்.

பாக்கை எடுத்து அவன் கையில் கொடுத்த பார்வதியின் முகத்தில் உண்மையான சோகம் படர்ந்தது. தன் நாத்தனார் கற்பகத்தையும் அவள் கணவர் ஜயராமனையும் கூடப் பிறந்த சகோதரி சகோதரனும் எண்ணுபவள் அவள்.

"அடபாவமே! அப்படியா?"

"ஆமாம். ஒரு வாரமாயிற்றாம். எப்படியோ சரி செய்யலாம் என்ற நம்பிக்கையில் என் காதில் போடாமலேயே இருந்திருக்கிறார்கள். இன்று காலையில்தான் கற்பகம் பையன் மூலம் விஷயத்தைச் சொல்லி உடனடியாகச் செலவுக்கு ஏதாவது ரூபாய் இருந்தால் 'கொடுக்கும்படி கேட்டு அனுப்பினாள்."

பார்வதியின் நெஞ்சம் அவர்கள் துயரத்தை எண்ணிச் சற்று நேரம் சோர்வில் மூழ்கிப் போயிருந்தது.

"என்ன பார்வதி! காதில் விழுந்ததா?"

அவள் விழித்தெழுந்து 'உம்' என்றாள்.

"அவருக்கு வேறு ஏதாவது வேலைக்கு முயல வேண்டும்."

"ஆமாம்."

"இப்போது உடனடியாய் நாம் வீட்டுச் செலவில் மீதப்படுத்தி வந்தோமே, அந்தப் பணத்தை அவர்களுக்கே கொடுத்தனுப்பலாம். ஒரு ஐம்பது ரூபாய் இருக்காது?"

அவள் முகம் வாடிவிட்டது.

"சொல்லேன், பார்வதி!"

"ஐம்பதுதான், ஆனால்...."

"நீயா 'ஆனால்' என்கிறாய்?" மூர்த்தி அவளைப் பார்த்து அன்புடன் நகைத்தான். "ஒருவருக்கொருவர் வித்தியாசம் இல்லாமல் பழகி வந்தோமே, நீயா நம் பணத்தை அக்காவுக்குக் கொடுக்கத் தயங்குகிறாய்?"

"இல்லை. ஆனால் அந்தப் பணம் இப்போது வீட்டில் இல்லையே?"

"என்ன!" மூர்த்தியின் முகம் சற்றே கடுமையாகியது. "வீட்டில் இல்லையாவது! விளையாடுகிறாயா?"

"இவ்வளவு பெரிய விஷயத்தில் விளையாடுவேனா? இப்போது சமீபத்தில் பிரசுரமாயிற்றே, ஸ்ரீ பாஸ்கரன் அவர்களின் வேதாந்த நூல், ஐந்து புத்தகங்களின் 'செட்' அதை அந்த ஐம்பது ரூபாய்க்கு நேற்றுத்தான் வாங்கினேன்."

எவ்வளவு சகஜமாய் அவள் சொல்லி விட்டாள்! கலக்கமில்லாத கண்களை அவன் எதிரே நிறுத்தி 'நான் சாதம் சாப்பிட்டேன்' என்று சொல்வது போல் சாதாரணமாகப் பேசி விட்டாள். மூர்த்தியின் முகம் கோபத்தினால் சிவந்தது.

"புத்தகம் வாங்கினாயா? ஏன்?"

"படிக்கத்தான். மிகவும் நல்ல 'செட்' டென்று விமர்சனமெல்லாம்..."

"அவ்வளவு பணத்தைப் போட்டா?"

"செலவு செய்யத்தானே பணம் இருக்கிறது?" என்றாள் பார்வதி."

அவள் குத்தலாகச் சொல்லவில்லை. 'இவர் என்ன இவ்வளவு சின்ன விஷயம் தெரியாமல்

கேட்கிறீரே' என்ற குழப்பம்தான் அவள் முகத்தில் இருந்தது. "அக்காவுக்குச் சமயத்தில் கொடுக்க முடிந்திருந்தால் எவ்வளவோ நன்றாயிருந்திருக்கும். எனக்கு இப்போது அதை நினைத்தால் ரொம்ப வருத்தமாக இருக்கிறது. ஆனால் நேற்று இந்த விஷயம் தெரியாதல்லவா? அதனால்தான் புத்தகம் வாங்கி விட்டேன்."

இப்போது மூர்த்தியின் கோபம் எல்லை மீறியது. குரல் ஓங்கியது. "யாரைக் கேட்டுக் கொண்டு வாங்கினாய்?"

பார்வதி அயர்ந்து போய் விட்டாள். திறந்த வாயோடு அவனைப் பார்த்தபடியே ஒரு அடி பின்நகர்ந்தாள். சவுக்கால் அடித்திருந்தால்கூட அவளுக்கு அவ்வளவு வேதனை ஏற்பட்டிருக்காது. "யாரைக் கேட்டுக் கொண்டா? அப்படியானால் இது என் வீடு இல்லையா? இங்கு எனக்கு ஸ்தானம் இல்லையா?"

அவன் குரல் மறுபடியும் வலுத்து வீசியது. "அது என் பணம். நான் சம்பாதித்தது."

பார்வதிக்குப் பேச்சே எழவில்லை. அவமானத்தாலும் துக்கத்தாலும் அவள் கண்களில் குப்பென்று நீர் சுரந்தது. "என் வாழ்வை உங்களுக்கு அளித்திருக்கிறேனே, உங்கள் பணத்தில் எனக்கு உரிமை யில்லையா?" என்றாள் கடைசியில்.

"அதற்காகக் கேட்காமல் பணத்தை எடுப்பதா? இஷ்டம் போல் ஊதாரித்தனமாய்க் கொட்டி இறைப்பதா?"

"நீங்கள் வேறு நான் வேறு என்று நான் நினைக்கவில்லை. உங்கள் பணத்தை என்னுடையதென்று எண்ணினேன். செலவு வந்தபோது இயற்கையாய் எடுத்து அதை உபயோகப்படுத்திக் கொண்டேன்."

ஆத்திரத்துடன் மூர்த்தி அருகிலிருந்த பாக்குத் தட்டை எட்டி உதைத்தான். "செலவா அது? அவசியமான செலவுதானா ஐம்பது ரூபாய்க்குப் புத்தகம்?"

"எனக்குப் படிப்பதென்றால் விருப்பம் என்பது உங்களுக்குத் தெரியாதா? புத்தகம் வாங்குவதை அனாவசியச் செலவென்று நான் இதுவரை நினைத்ததில்லை. அப்பா வீட்டிலும் அவர் சம்பாதித்த பணம் தான். ஆனால் அதை நான் என்னுடையதைப் போலவே இயற்கையாய் எடுத்துச் செலவு செய்வேன். கல்யாணத்தை. அப்பாவுக்கு அடுத்தது வேறொருவர் அதே அன்பு ஆதரவோடு என்னைப் பாதுகாக்கும் நிலை என்றுதான் எண்ணினேன். இதை என்னுடைய வீடென்றும் இங்குள்ள பணத்தை என்னுடையதென்றும் நினைத்து வந்தேன்" என்றாள் பார்வதி.



அவளது படபடத்த துயர முகத்தைக் கண்டு அவன் ஒரு நிமிஷம் பேச்சற்று நின்றான். பிறகு மறுபடியும் கரைபுரண்டது. "நீ ஒரு ஏழையின் மனைவி."

"ஏழையென்றால் எனக்கு அர்த்தம் புரியவில்லை." அவள் தலை நிமிர்ந்து நின்றாள்.

"அதுதான் தெரிகிறதே." அவன் சிவந்த முகத்தோடு அவளருகில் வந்து முகத்துக்கு நேரே விரலை நீட்டி ஆட்டியபடியே பேசினான். "ஏழையென்றால் நீ இங்கே நினைத்தபடி செய்ய முடியாதென்று அர்த்தம். உழைக்க வேண்டுமென்று அர்த்தம்."

"நான் இங்கு எல்லா வேலையும்தான் செய்கிறேன். ஆனால் அதனால் என்னை ஏழையென்று கருதவில்லை. அன்புதான் செல்வமென்று என் அப்பா எனக்குக் கற்பித்தார். அதனால் நான் என்னை இன்னும் பணக்காரியென்றேதான் எண்ணி வந்திருக்கிறேன்."

ஒரு நிமிஷம் அவன் மனம் குத்தியது. பிறகு கோப வெறியில், "உன் பணத் திமிரால் கண்டபடி பேசுகிறாய். என் பணத்தைக் கொண்டு போய் வீணாக்கியதால் இப்போது என் அக்காவுக்கு உதவியும் செய்ய முடியாமல் இருக்கிறேன். நான் ஏழை. உன்னைக் கல்யாணம் செய்து கொண்டது என்னுடைய தவறு" என்று சீறினான்.

ஆழ்ந்த வியப்பைத் தாங்கிய கண்களால் அவள் அவனை ஏறெடுத்துப் பார்த்தாள். கடைசியில் அந்தக் கண்களில் அமைதியான வருத்தம் வந்து சூழ்ந்தது.

"ஆமாம். நீங்கள் ஏழைதான்" என்றாள் அவள் மெதுவாக.

மூர்த்தி நடந்து கொண்டேயிருந்தான். பார்வதியை நினைத்து அவனுக்கு ஆத்திரம் பொங்கியது. பணக்கார வீட்டுப் பெண் அவள். நிரம்பப் படித்தவள். வீட்டில் அவளும் அவள் தந்தையும் ஒரு அருமையான புத்தகசாலைகூட வைத்திருந்தார்கள். அவள் தோழிகள், "பார்வதியிடம் லட்சுமியும் சரஸ்வதியும் சேர்ந்திருக்கிறார்களல்லவா? அவள் திருசக்தியாக்கும்" என்று கேலி செய்வார்கள். ஆனால் திரு சக்தியை அவனைப் போல் உள்ளவன் மணந்திருக்கக் கூடாது. சீ, என்ன பணக் கர்வம் அவளுக்கு...

கற்பகத்தின் வீட்டை அடைந்தான் அவன். அக்காவின் முகத்தைப் பார்க்கவே அவனுக்குக் கஷ்டமாயிருந்தது.

"கற்பகம்!"

"மூர்த்தி! இந்தக் கஷ்டத்தில் உடனே உதவி செய்தாயே அப்பா, மத்தியானம் பார்வதி வந்து நீ கொடுக்கச் சொன்னதாய் ஐம்பது ரூபாய் கொண்டு வந்து கொடுத்து விட்டுப் போனாள். நீ இப்போது வரும்போது கொண்டு வந்திருந்தால்கூடப் போதும். அதற்காகக் குழந்தையை ஒரு தரம் நடக்கச் சொல்லியிருக்க வேண்டுமா?" என்று கண்களில் அன்பு பொங்கச் சொன்னாள் கற்பகம்.

பத்து நாட்கள் கழிந்தன. அன்று அவன் சாப்பிட்டு விட்டுக் காரியாலயம் செல்லும் போது பார்வதி மெதுவான குரலில், "இன்று மத்தியானம் அப்பா வீட்டுக்குப் போய் வரட்டுமா?" என்றாள்.

மூர்த்தி அவளைக் கவனித்துப் பார்த்தான். பத்து நாட்களாய் அவன் மனைவியிடம் சரியாகப் பேசக்கூட இல்லை. அவனுக்கு அவ்வளவு கோபம். அவள் அதற்காக அவனிடம் கெஞ்சிக் கொண்டு மன்னிப்பு கேட்க

வரம்தது அதைவிடக் கோபத்தையளித்தது. வீட்டில் அவள் வாங்கியதாய்ச் சொன்ன புத்தகங்களையும் காணவில்லை. அவற்றை விற்று விட்டுத்தான் கற்பகத்திடம் பணத்தைக் கொண்டு போய்க் கொடுத்திருக்கிறாள். அவ்வளவு ரோசக்காரியாய் இருந்தால் இருந்து விட்டுப் போகட்டும். தவறு அவளுடையதுதானே?

ஆயினும் பார்வதியின் முகத்தில் பத்து நாட்களாய்ப் பதிந்து விட்ட அடக்கமான சோர்வில் தவறு இழைத்தவளின் பயம் காணவில்லை. புண்பட்ட நெஞ்சின் வாட்டம்தான் விளங்கியது.

''போய் விட்டு வாயேன். இவ்வளவு நாள் என்னைக் கேட்டுக் கொண்டா போனாய்?'' அவள் அவனுடைய உத்தரவைக் கேட்கா திருந்தால் அவனுக்கும் கொஞ்சம் ஆறுத லாய்த்தான் இருந்திருக்கும். அவளுடைய முகத்து வாட்டம் இரவும் பகலும் அவனைக் குற்றம் சாட்டுவது போலிருந்தது.

''இவ்வளவு நாட்கள் கேட்காததற்கு மன்னித்து விடுங்கள். அதிக சுதந்திரம் கொண்டாடி விட்டேன்.''

அவள் குரலில் பரிகாசமோ பழிக்குப் பழியோ தொனித்திருந்தால் அவனுக்கு இயல்பான கோபம் வந்திருக்கும். ஆனால் அதில் தொனித்தது அடிபட்ட பெருந்தன்மைதான். அது அவன் மனச்சாட்சியைக் குத்த ஆத்திரம் அதிகரித்தது.

''ஏது இருக்கிறதோ இல்லையோ, வாய் இருக்கிறது. வேறென்ன கண்டது? பணத்தைத் தாம் தூமென்று விட்டெறிகிறது. ஏன் என்று கேட்டால் மூக்குக்கு மேல் ரோசம். பெரிய மகாராணி யல்லவா? அப்படித்தான் இருக்கும்'' என்றான் அவன்.

மூர்த்திக்கு அவ்வளவு சுயமரியாதை இருந்திராவிட்டால் அவளை அறைந்திருப்பான். பணத் திமிரின் மிதப்பைக் கண்டு அவனுக்குச் சீற்றம் பொங்கியது. அத்திம்பேர் ஜயராமனிடம் அவள் செயலைப் பற்றிச் சொல்லிக் கொட்டி ஆற்றியிருந்தும்கூட அவன் கோபம் ஆறியிருக்கவில்லை.

''உன் மண்டைக் கர்வத்துக்கு என்ன செய்தாலும் போதாது. நீ பணக்காரி என்பதால் நான் புருஷன் என்ற முறையில் ஒரு வார்த்தைகூடச் சொல்லக் கூடாது. அப்படித்தானே?''

அவள் மௌனமாய்த் தலை குனிந்தபடியே நின்றாள்.

மூர்த்தி முகத்தில் வெறுப்பு தோன்ற, ''நாங்களெல்லாம் ஏழைகள். நீ ஆயிரக் கணக்காகச் சம்பாதிப்பவர் பெண். நான் மாதம் இருநூறு சம்பாதிப்பவன். என் அக்கா ஒண்டுக் குடித்தனம் செய்பவள். என் அத்திம்பேர் வேலையை இழந்தவர்...'' என்று உணர்ச்சி மிகுந்து நிறுத்தினான். இப்போதும் 'டெபாஸிட்'டுக்கு நானூறு ரூபாய் சேர்க்க முடியாததால் பாங்கி வேலை ஒன்று காலியாய் இருந்தும் அவருக்குக் கிடைக்காமல் போவதை எண்ணி அவன் மனம் குமுறியது. பிறகு கோபமாய், ''நீயோ மாதா மாதம் வியர்வைத் துளிபோல் சேர்த்து வைத்திருக்கும் பணத்தை ஒரே நிமிஷத்தில் கொட்டிப் புத்தகம் வாங்குகிறாய்! அது என் அக்கா குடும்பத்துக்குச் சாப்பாடு போடுமா?'' என்றான்.

அவள் குனிந்த முகம் வருத்தத்தினால் சுருங்கியது. வாய் பேசாமல் நின்றாள்.

''உன் அப்பா வீட்டுக்குப் போய் விட்டு இஷ்டப்பட்ட போது வா. அப்புறம் நான் ஏதோ தடையுத்தரவு போட்டிருப்பதாக யாரும் நினைத்துக் கொள்ள வேண்டாம்'' என்று இறுதியாய்க் கத்தி விட்டு வெளியேறினான் மூர்த்தி. 'சரி' என்ற அவள் பதில் அவன் காதில் மங்கலாய் விழுந்தது.

காரியாலயத்தில் அன்றெல்லாம் அவனுக்கு வேலையே ஓடவில்லை. பார்வதி இப்படிப்பட்ட



பெண்ணா! இவ்வளவு நாட்கள் தெரியாமலேயே இருந்துவிட்டதே! பணம் ஒன்றுதான் அவளுக்கு முக்கியம் போலும்!

மத்தியானம் சாப்பிடவும் எழுந்திருக்கவில்லை. மாலை மணி ஐந்து அடித்ததும் வெளியே வந்தான். பசியின் சின்னமே இல்லை. மனத்தில் நிம்மதி இல்லாவிட்டால் வயிற்றில் பசி ஏது?

தெருவில் அவன் எதிரில் சப் கலெக்டர் வண்டி போயிற்று. மூர்த்தி பல்லைக் கடித்தான். அவரிடம் ஒருவரின் சிபாரிசு மூலம் ஜயராமன் சென்று 'டெபாஸிட்' பணத்தைக் கெஞ்சிக்கேட்டிருந்தும் அவர் மறுத்திருந்தார்.

பணக்காரர்களே இப்படித்தான்.. பிறரைப் பற்றிய கவலையே கிடையாது. அவன் ஏழை. இடமிரண்டு அவனுக்குத் தன் பணக்கார மனைவியிடம் போகப் பிடிக்கவில்லை. ஏழை சகோதரியிடம் அவன் கால்கள் தாமே இழுத்துச் சென்றன.



மனைவி:—புலிகடடல் புடவை எனக்கு எப்படி இருக்கிறது!
கணவர்:—புலியை விட உன் உடலுக்குத் தான் அது ரொம்ப நன்றாக இருக்கிறது!

"என்னடா மூர்த்தி, சோர்ந்திருக்கிறாய்? ஆபீசில் ஏதாவது விசேஷமா?" என்று தம்பியைக்கவலையோடுவரவேற்றாள் கற்பகம்.

"ஒன்றுமில்லை."

"காப்பி சாப்பிட்டாயா?"

"வீட்டுக்கே போகவில்லை."

"ஏன் அப்படி? பார்வதி தனியாயிருப்பாளே?" என்றாள் கற்பகம்.

"பணக்கார அப்பாவுடன் போய் இருந்து விட்டு வருகிறாள். இன்றுமத்தியானம்கூட..."

"மூர்த்தி! வானிலுறையும் நட்சத்திரம் ஒருவன் கைக்கு வரலாம். ஆனால் அதை உள்ளபடி மதிக்கத் தெரியவும் அதிர்ஷ்டம் வேண்டும். ஜயராமன் அழுத்தமாய்ப் பேசிய பேச்சு மூர்த்தியை ஆச்சரியப்படுத்தியது."

"என்ன சொல்கிறீர்கள் அத்திம்பேர்?"

"இன்று மத்தியானம் 'டெபாசிட்' பணத்துக்காக உன் மாமனாரிடம் போகலாமா என்று தயக்கத்துடன் அவர் வீட்டுக்குப் போனேன். அவர் ஏதோ அவசர வேலையாக வெளியே போயிருந்தார். உன் மனைவிதான் அவர் அறையில் உட்கார்ந்திருந்தாள். நான் வந்த விஷயத்தை அவளிடம் சொல்லி, 'உன் அப்பா எப்போதம்மா திரும்பி வருவார்?' என்று கேட்டேன். அவள், 'தாமதம் எதற்கு?' என்றபடி சகஜமாய் எழுந்து சென்றாள். அவர் பீரோவைத் திறந்தாள். நானூறு ரூபாயை எடுத்து வந்து என் கையில் கொடுத்தாள். 'உடனே போய் வேலைக்கு வேண்டியதைக் கவனியுங்கள்' என்றாள்.

"மூர்த்தி! தகப்பனார் வீட்டில் 'எல்லாம் தன்னுடையது' என்ற சகஜ பாவத்துடன் செலவுக்கு வேண்டிய பணத்தை வேறு நினைவின்றி எடுத்துக் கொடுத்தாள். அந்தப் பெண் மனத்தில் பணம் என்று தனியாக ஒரு உணர்ச்சியோ முக்கியத்துவமோ இல்லை. அதே இயற்கை இயல்போடுதான் உன் ஐம்பது ரூபாயில் புத்தகம் வாங்கியிருக்கிறாள். மூர்த்தி! பணம் பணம் என்று நினைத்துக் கொண்டு அதற்காகக் கவலைப்படுவதும் கோபப்படுவதும் அது இல்லாதது குறையென்று எண்ணித் தவிப்பதும் நாம்தான்."

பச்சாத்தாபமும் அவமானமும் உந்த மூர்த்தி பார்வதியின் சுயமான பெருந்தன்மையின் முன் தன் அற்பத்தனத்தை வைத்து வெட்கியவாறு ஆர்வத்துடன் வீட்டுக்கு விரைந்தான். கூடத்தில் பார்வதியோடு அவள் தந்தையும் உட்கார்ந்திருந்தார்.

மூர்த்தி பதற்றத்துடன் நின்று விட்டான். கணவனைக் கண்ட பார்வதி காப்பி கலக்க உள்ளே எழுந்து சென்றாள்.

"மூர்த்தி! நான் பணக்காரன். இல்லையா? அதுதானே அப்பா நீ என் மகளிடமும் என்னிடமும் கண்ட குற்றம்?"

அவன் அவமானத்துடன் தலை குனிந்தான்.

"அவ்வளவு பணக்காரனான நான் பார்வதியை எல்லாரையும் விட்டு விட்டு உனக்கு ஏன் கல்யாணம் செய்து கொடுத்தேனென்று நினைக்கிறாய், நீ குணவான் என்று கேள்விப்பட்டிருந்ததால்தான். சந்தோஷத்தைக் கொடுக்கப் பணம் போதாது; அன்புதான் வேண்டும். அந்த அன்பை நீ என் குழந்தைக்குக் கொடுப்பாய் என்று நம்பித்தானே அப்பா என் தாயற்ற ஒரே மகளை உனக்குக் கொடுத்தேன்! நீ அவளைக் கண் கலங்கும்படி செய்து விட்டாயே, நியாயமா?"

அவர் கண்களும் கலங்கி விட்டன. மூர்த்தியை யாரோ கன்னத்தில் பலமாக அடிப்பது போல் இருந்தது.

"அவள் அன்று என்னிடம் வந்து விஷயத்தைச் சொல்லி அழுதுவிட்டாள் மூர்த்தி! பணம் அவளுக்கு ஒரு பிரத்தியேகமான முக்கிய பொருளல்ல. அந்த இயல்பால் அவள் ஏதாவது தவறு செய்யும்போது அதை நீ அன்பால் திருத்தவேண்டும். ஏனென்றால் என் குழந்தையின் உள்ளத்தில் அன்பைத் தவிர வேறொன்றும் கிடையாது. அன்று அவள் அந்தப் புத்தகங்களை என் புத்தகசாலைக்காக என்னிடம்தான் விற்றாள். அந்த ஐம்பது ரூபாயை என்னிடம் இனாமாக வாங்கி உன்னை அவமானப்படுத்த அவள் விரும்பவில்லை. அவள் ரோசக்காரி. அதை ஓர் கர்வமென்றே சொல். ஆனால் அது உயர்ந்த கர்வம். மனத்தில் சுயகௌரவம் இருப்பவரின் கர்வம்."

மூர்த்திக்குத் தான் எங்கோ பூமிக்குள் புதைந்து விட்டதுபோல் தோன்றியது. பார்வதியின் மனத்தை அவன் எவ்வளவு தூரம் புண்படுத்தியிருந்தால் அவள் சொந்த அப்பாவிடமே அந்தப் புத்தகங்களை விற்றிருப்பாள்! அவன் நெஞ்சம் வெதும்பியது.

பார்வதி கையில் காப்பியோடு வெளியே வந்தாள். அவளது வருந்திய முகத்தைக் கண்டு அவன் நெகிழ்ந்த உள்ளத்தோடு, "பார்வதி! கவலைப்படாதே. நாம் மறுபடியும் பணம் சேர்த்து உன் அப்பாவிடமிருந்து அந்தப் புத்தகங்களை வாங்கிவிடலாம்" என்றான்.

மூவர் முகத்திலும் அப்போது மலர்ச்சி தோன்றியது.


'அனஸின்'
வலியை வெல்லுவதற்கான
நான்கு மருந்துகளின் கலப்பாகும்
1. க்வினைன் சல்பேட் 2. காப்பின்
3. பினஸிடின் 4. ஆஸிடில்ஸாலிஸிலிக் ஆஸிட்
வலிகளுக்கு நிவாரணமளிப்பதில் புகழ் பெற்ற 'அனஸின் விஞ்ஞான முறையில் சேர்க்கப்பட்ட நான்கு மருந்துகளின் கலப்பாகும். இவைகள் நரம்புகளின் கேந்திர ஸ்தானங்களில் கூட்டாக வேலை செய்து, தலைவலி, ஜலதோஷம் ஜுரம், பல்வலி, மற்றும் தசைவலிகளுக்குத் துரிதமாயும் அபாயமின்றியும் நிச்சயமாயும் நிவாரணம் அளிக்கிறது. வலிகளுக்குத் துரித நிவாரணமளிப்பதில் அனஸினுக்கு இணையொன்றில்லை ... அனஸினைப் போல் தீங்கு விளைவிக்காதவை வேறொன்றில்லை. ஆகவே ஞாபகமிருக்கட்டும் 'அனஸின்' ஒரு டாக்டரின் குறிப்புக்கு ஒப்பாகும். அது இருதயத்திற்குத் தீங்கு விளைவிக்கவோ அல்லது வயிற்றுக் கோளாறுகள் உண்டு பண்ணவோ செய்யாது. 'அனஸின்' லக்ஷக்கணக்கான மக்களுக்கு நிவாரணம் அளிக்கிறது. 'அனஸின்' விலை ஒவ்வொருவர் சக்திக்கும் ஏற்றது. ஒரு பாக்கெட்டின் விலை 12 நயா பைஸா மட்டுமே.
நான்கு மருந்துகளின் சேர்க்கையான 'அனஸின்' வேண்டுமென்றே கேளுங்கள்
WILL NOT UPSET THE STOMACH
DOES NOT HARM THE HEART
ANACIN
TABLETS
10 नये पैसे 1957
2 नये पैसे 1957
ஒரு பாக்கெட்டின் விலை 12 நயா பைஸா



ராஜியின் கணவன்?

'நீதியின் பிரதிநிதி' என்று அழைக்கப் படும் நீதிபதி குருசாமியை அறிந்தவர்களுக்கெல்லாம் அவர் அன்று ஒரு புதுமையாக, புதிராகத் தோற்றமளித்தார். எத்தகைய வழக்கிலும் கொஞ்சமும் கலக்கமின்றித் தீர்ப்பு சொல்லும் இரும்பு நெஞ்சம் படைத்த அவரது முகம் அன்று இயற்கைக்கு விரோதமாக வெளுத்திருந்தது. அவரது பார்வை அடிக்கடி கைதிக் கூண்டிலே நின்றுகொண் டிருக்கும் குற்றவாளியின் மீது பதிந்தபோது அந்த உறுதியான நீண்ட கைகள் இலேசாக நடுங்குவது உன்னிப்பாகக் கவனிப்பவர்களின் பார்வையிலிருந்து தப்பவில்லை.

ஜூரர்கள் தங்கள் முடிவை நீதிபதிக்குத் தெரிவித்தபின் நீதிபதி தம் முன்னால் கிடந்த ''மோகனாம்பாள் கொலை வழக்கின்'' தீர்ப்பை ஒரு தடவை பார்த்தார். அவர் கண்களிலே ஒரு மருட்சி தோன்றி மறைந்தது. அதுமட்டுமல்ல; அதைப் படிக்கும்போது அவர் குரல் விநோதமாக ஒலித்தது. அப்படியொன்றும் அது நீண்ட பேச்சல்ல. மிகவும் சுருக்கமாகத் தான் வழக்கின் விவரத்தைச் சொன்னார். ஆனால் அதையும் நிறுத்திச் சொல்லிக் கொண்டு போனார். இடைஇடையே அவரை அறியாமலே பார்வையாளர் வரிசையிலே உட்கார்ந்திருந்த ஒரு பெண்ணின்மீது அவர் கவனம் சென்று திரும்பியது.

அந்தப் பெண் தவிப்புடன் நீதிபதியின் ஒவ்வொரு அசைவையும், சொல்லையும் விழுங்கிக் கொண்டிருந்தாள். சிவந்த மேனி, சின்ன உடம்பு, சிந்தையிலே பதியும் சிங்கார உருவமானாலும் சிரிப்பு செத்து விட்ட பார்வை. அவளது தவிக்கும் பார்வையையும் துடிக்கும் உதடுகளையும், பார்த்தால் கைதிக் கூண்டிலே நிற்கும் குற்றவாளியை விட இந்தப் பெண்ணின் நிலைதான் பரிதாபமாக இருந்தது.

நீதிபதி தம் தீர்ப்பின் முடிவுக்கு வந்து விட்டார்.. ''ஆகவே ரவீந்திரனே இந்தக் கொலையைச் செய்தவன் என்று தீர்ப்பளிக்கிறேன். குற்றவாளி ரவீந்திரனுக்கு மரண தண்டனை விதிக்கிறேன்.''

நீதிஸ்தலமே செயலற்று விட்டது போன்ற பயங்கர அமைதி நிலவியது. சில விநாடிகள் தான். அதை யடுத்துத் தேக்கி வைத்த மூச்சை அவிழ்த்து விடும் அரவம் எழுந்தது.

தன்னை அங்கிருந்து இழுத்துப் போகக் கூடாது என்றோ என்னவோ, சிலையாக நின்ற ரவீந்திரன் தன் முன்னாலுள்ள கைதிக் கூண்டின் கிராதிகளை இறுகப் பிடித்துக் கொண்டான். அவன் பார்வை நீதிபதியின் மீது நிலைத்து நின்றது. குற்றவாளிகள் வழக்கமாக முறையிடுவது போல அவன் வாய் பரிதாபமாக, ''நான் குற்றமற்றவன், நிரபராதி!'' என்று மீண்டும் மீண்டும் முணுமுணுத்துக்கொண்டே இருந்தது.

ரவீந்திரனின் மனைவியாக வேண்டிய அந்தப் பெண், ''ஐயோ கடவுளே, கடவுளே!'' என்றாள். அதற்குமேல் வார்த்தைகளற்றுக் குமுறிக் கொண்டிருந்தாள்.

*

ஒரு நாள் மோகனாம்பாள் தன் படுக்கை யறையில் பிணமாகக் கிடந்தாள். அவளது உடல் கிடந்த படுக்கையில் ரத்தக் கறை இல்லை. தன் உயிருக்காகப் போராடிய எந்த வித அறிகுறியும் அங்கு இல்லை. அவள் கொலை விஷயமாகக் குறிப்பிட்டு யாரையும் சந்தேகிக்கும்படியாக இல்லை. மோகனாம்பாள் உப நடிகை. அவள் தனியாகத்தான் வசித்து வந்தாள். வேலைக்கார வள்ளிகூட அவளுடன் தங்குவதில்லை. தன் காரியங்கள் முடிந்ததும் அவள் வீட்டுக்குப் போய் விடுவாள்.

கொலை செய்யப்பட்ட அன்று இரவு அவளுடைய நடவடிக்கைகளைப் பற்றி அறிவதும் சிரமமாக இருந்தது. அவளுடன் கடைசிக் காலத்தில் நெருங்கிப் பழகியதாக ஆறு பேர்களைப் போலீஸார் மோகனாம்பாள் கொலை செய்யப்பட்டுக் கிடந்த அறைக்கு அழைத்துப் போய் விசாரணை நடத்தினார்கள். அவர்களைச் சில நாட்கள் தங்கள் கண்காணிப்பிலும் வைத்திருந்தார்கள். ஆனால் முடிவு திருப்திகரமானதாக இல்லை.

இந்த ஆறு பேரில் ரவீந்திரனும் ஒருவன். இளைஞன். கட்டுமஸ்தான உடல், கம்பீரமான தோற்றம், உணர்ச்சிகளைக் கிளறும் பார்வை, உள்ளத்தைத் தொடும் சிரிப்பு. மோகனாம்பாள் இறந்ததைக் கேட்டுத் தவித்தவன் அவன் ஒருவன்தான். அவள் உடலைக் கண்டதும் துடித்துப் போய் விட்டான்.

அந்தச் சமயத்தில் ரவீந்திரன் மீது போலீஸ் தன் சந்தேக விதையை ஊன்றவில்லை. அதற்குத் தக்க ஆதாரம் அப்போது அவர்களிடம் இல்லை. மோகனாம்பாள் கொலை வழக்கு முடிந்து போனதாகக் கருதப்பட்டு இரண்டு மாதங்களும் ஓடி விட்டன.

அப்படியே அந்த விஷயம் தேய்ந்து போய் இருக்கக்கூடாதா? ஆரம்பத்திலே பிறருக்குப் பயந்தோ வேறு என்ன காரணத்தினாலோ சொல்லாத சில விஷயங்களை ரகசியம் என்று தன் அந்தரங்கமான ஒருவரிடம் வள்ளி சொல்லப் போக அது விபரீதமாக விசுவரூபம் எடுத்து விட்டது.

இறந்த அன்று இரவு ரவீந்திரன் மோகனாம்பாளின் வீட்டுக்கு வந்திருந்தான். 'வழக்கம்போல அவர்கள் சுமுகமாகப் பேசிக் கொண்டிருக்கவில்லை' என்பதுதான் வள்ளி விதைத்த விஷ வித்து. அது விருக்ஷமாகிப் பூத்து மணம் பரப்பவே போலீஸ் அதை மோப்பம் பிடித்து விட்டது.

ரவீந்திரன் மறுபடியும் விசாரிக்கப்பட்டான். தனக்கும் மோகனாம்பாளுக்கும் காதல் வளர்ந்தது உண்மைதான் என்பதை ஒப்புக் கொண்டான் ரவீந்திரன். அத்துடன் அவனைப் போலீஸ் விடவில்லை. குடைந்து குடைந்து இன்னும் சில விஷயங்களையும் சேகரித்தது. அவைகளை ஒன்று சேர்த்து ரவீந்திரனைக் குற்றவாளியாக்க அதற்கு ஒரு உருவத்தையும் போலீஸ் கொடுத்தது. அது இதுதான்:

ரவீந்திரன் மோகனாம்பாளின் மோகத்திலே மயங்கிக் கிடந்தது ஒரு காலம். கடைசிக் காலத்தில் அவனுக்கு அவள்மீது வெறுப்புத்தான் வளர்ந்தது. காரணம், மோகனாம்பாள் தன் மோகனச் சிரிப்பை வேறு யாருக்கோ உரிமையாக்கியதுதான். அவளுக்கு அது சகஜமாக இருந்திருக்கலாம். ஆனால் அவனுக்கோ அது வெறுப்பைத் தந்தது. அவர்கள் நட்பில் பிளவு ஏற்பட்டது.

இந்தச் சமயத்தில்தான் அவன் இதயத்திலே இடம் தேடிக்கொண்டாள் ராஜி. சாதாரணக் குடும்பத்துப் பெண். நாகரிகப் பகட்டும், ஆடம்பர அலங்காரத்தின் அழகும் இல்லாத அன்றலர்ந்த புது மலர் போல விளங்கிய ராஜியை அவன் இதயம் விரும்பியதிலும் வியப்பில்லை. மோகனாம்பாளின் மயக்கத்திலிருந்து ரவீந்திரன் விழித்துக் கொண்டதற்குக் கூட ராஜிதான் காரணம் என்று சொல்லலாம். ரவீந்திரன் இன்னொருவளின் உடைமை ஆகப் போகிறான் என்பதை அறிந்த மோகனாம்பாள் பொறுமையினால் பொசுங்கிப் போனாள். ராஜியை அவன் மணக்கக் கூடாது என்று முரண்டு பிடித்தாள். ஆனால் ரவீந்திரன் அவள் வார்த்தையை லட்சியம் செய்ய வில்லை. இதனால் மோகனாம்பாள் வெகுண்டாள். அவன் காதலி ராஜியிடம் போய் அவனைப் பற்றித் தாறுமாறான செய்திகளைச் சொல்லப் போவதாகப் பயமுறுத்தினாள். ஆகவே ஆத்திரம் அடைந்த ரவீந்திரன் தன் இன்ப வாழ்வுக்கு இடையூறாக நிற்கும் மோகனாம்பாளை ஒழித்துக் கட்டி விட்டான்.

இது போலீஸ் தரப்பின் வாதம். ஆனால் ரவீந்திரன் ஒப்புக் கொண்டது இவ்வளவுதான்: 'மோகனாம்பாள் கொலைப்பட்ட இரவு அவளை அவன் சந்தித்தது உண்மை. அவளுக்கும் அவனுக்கும் ராஜியின் விஷயமாக வாக்குவாதம் நடந்ததும் உண்மை. ஆனால் அவளை உதாசீனம் செய்து விட்டு அவன் திரும்பி விட்டான். தான் அவளைக் கொல்லவே இல்லை' என்று கண்ணீர் வழிய, கல்லும் உருகச் சொன்னான் ரவீந்திரன். போலீஸோ பொதுமக்களோ அவன் வார்த்தைகளை நம்பத் தயாராக இல்லை. சந்தர்ப்பச் சாட்சியங்கள் அவனை முதல்தரக் குற்றவாளியாக்கி விட்டன.

தீர்ப்புக்குப் பிறகு ரவீந்திரனை நீதி மன்றத்திலிருந்து சிறைச்சாலைக்கு அழைத்துச் சென்ற போது, அவனை மணப்பதாக இருந்த அந்தப் பெண் ராஜி உள்ளம் வெடிக்க உயிர் துடிக்கக் 'கோ' என்று கதறி விட்டாள். ரவீந்திரனால் பேச முடியவில்லை. அவன் கண்ணீர்தான் பேசிற்று.

★

இன்று குருசாமி கனம் நீதிபதியவர்கள். ஆனால் முப்பது வருஷங்களுக்கு முன்பு அவன் ஒரு அநாதை. தாயின் அன்பை அவன் அனுபவித்ததில்லை; தந்தையின் அரவணைப்பும் அவனுக்குக் கிடைக்கவில்லை. வறுமையின் விளையாட்டுப் பொம்மையாக இருந்தவனை விதி விரட்டி விரட்டி வேடிக்கை பார்த்தது. குருசாமி வாழ்க்கையின் மூலை முடுக்குகள் எல்லாவற்றிலும் போய் முட்டி மோதிக் கொண்டு திரும்பினான்.

வாழ்விலே முன்னேற வேண்டும், வறுமையை எட்டி



உதைத்து அதன்மீது ஏறி நின்று சுக வாழ்வைத் தாவிப் பிடிக்க வேண்டும் என்ற வெறிதான் அவன் மூச்சாக இருந்தது. எத்தனையோ கஷ்டங்களை அனுபவித்துப் படித்தான். வறுமையின் வேதனை அவன் அறிவின் சுடரை வளர்த்தது. சலியாத உழைப்பும், வாழ வேண்டும் என்ற துடிப்பும் அவனை வக்கீலாக்கின. தனக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களை யெல்லாம் பயன்படுத்திக் கொண்டு மன உறுதியுடன் கூடிய கட்டுப்பாடான வாழ்வைத் தன் ஆசைக் கனவுகளுக்கு அஸ்திவாரமாக அமைத்துத் தனது லட்சியத்தை எட்டிப் பிடித்தான் குருசாமி.

குருசாமியின் புகழ் ஓங்கியது. மக்கள் அவரிடம் மதிப்பும் மரியாதையும் காட்டினர். தலை சிறந்த 'கிரிமினல் லாயர்' என்று புகழ் பெற்றார். தம் தொழிலிலே ஈடு இணையற்று விளங்கினார். எப்படிப்பட்ட வழக்கானாலும் குருசாமி போய் நின்றால் அது வெற்றிதான். பணம், புகழ் இவைதான் அவர் லட்சியம்.

படிப்படியாக அவர் தமது குறிக்கோளை அடைந்து கொண்டிருந்தார். வருஷத்துக்கு வருஷம், வழக்குக்கு வழக்கு புகழ் ஓங்கிற்று.

நாற்பதாவது வயதிலே நீதிபதி பதவி அவருக்காகக் காத்திருந்தது. நீதிதேவனின் பிரதிநிதியாக நியாயம் வழங்க, நேர்மை என்ற கூரான வாள் முனையின் மீது அவர் உட்கார்ந்த போது முதன் முதலாக மோகனாம்பாளின் கொலை வழக்குத்தான் நடந்தது.

அந்த வழக்கு உண்மையிலேயே அவரிடம் ஒரு மாறுதலை உண்டாக்கித்தான இருந்தது. இல்லாவிட்டால் யாருடைய சுக துக்கங்களையும் பற்றிக் கவலைப் படாதவராக வாழ்ந்துவிட்ட குருசாமி, நீதி மன்றத்திலே மயங்கி விழுந்த ராஜியைப் பற்றி அத்தனை அக்கறையுடன் விசாரிப்பானேன்?

ராஜி ஒரு ஏழைப் பெண். அவளுக்கு இந்த ஊருமில்லை. ரவீந்திரனை நம்பி வந்தவள். இப்போது அவள் நிராசையுடன் வாழ்க்கையிலே நம்பிக்கை இழந்து ஆஸ்பத்திரியிலே கவனிப் பாரிக்காமல் கிடந்தாள்.

★

ரவீந்திரனின் விதி முடிந்து இரண்டு மாதங்கள் ஆகி இருக்கும். ஒரு நாள் ஆஸ்பத்திரி அதிகாரிகளுக்கு ஒரு கடிதம் வந்தது. அங்கு சிகிச்சை பெற்று வரும் ராஜியைத் தனிமையில் சந்திக்க விரும்புவதாகவும் அதற்கு அனுமதி கோரியும் எழுதி இருந்தார் கனம் நீதிபதி குருசாமி அவர்கள். அவருக்கு அனுமதி மறுக்க முடியுமா?



குருசாமி ராஜியைச் சந்திக்கப் பிரத்தியேகமாக ஒரு அறையை ஏற்பாடு செய்திருந்தார் வைத்தியசாலை நிர்வாகி. ஜன்னல் அருகே நின்றபடி வெட்ட வெளியை வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தார் குருசாமி. காலடிச் சத்தம் கேட்டுத் திரும்பினார். ராஜி மெதுவாக அறையில் நுழைந்து கொண்டிருந்தாள். ஒட்டி உலர்ந்த உடல். வேதனை தோய்ந்த முகம். விரிந்த கண்கள். குருசாமியின் பார்வையைச் சந்தித்ததும் வியப்புடன் சுருங்கின. துர்ப்பலத்தினால் கூனிக் குறுகி நடந்து வந்தாள்.

''ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றி உன்னுடன் பேசவே வந்தேன். ராஜி! கடிதத்தில் எழுதி அனுப்ப முடியாத முக்கியத்துவம் வாய்ந்தது அது. இந்த உலகிலே உன்னை ஆதரிக்க நண்பர்களோ உறவினர்களோ யாரும் இல்லை என்று அறிந்தேன்.''

அவள் மெலிந்த உதடு துடித்தது. ஏதோ மறுத்துச் சொல்ல முயன்றாள். ஆனால் முடியவில்லை. அவள் குழி விழுந்த கண்களிலே குளமாகத் தேங்கி நின்றது கண்ணீர்.

''என் அறிவுக்கும் அனுபவத்துக்கும் எட்டிய வரையில் ஒரு விதத்தில்தான் உனக்கு என்னால் உதவ முடியும். உன் ஏழைமையைப் போக்கவோ, உன் வாழ்நாள் முழுதும் நீ சுகமாக வாழ்வதற்கோ பெருந்தொகையை நான் உன் பெயருக்கு எழுதி வைக்கலாம். ஆனால் அது உலகத்தின் கண்களுக்குத் தவறாகப்படும். அதுமட்டுமல்ல, என் செல்வாக்குக்கும் புகழுக்கும் அது மாசு கற்பிக்கும். ஆகவே, ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன். சொல்லட்டுமா? ராஜி! என்னை நீ மணந்து கொள்ளுவாயா?''

பலவிதமான உணர்ச்சிகளால் குழம்பிப் போய்ப் பேசவே முடியாமல் உட்கார்ந்திருந்த ராஜிக்குக் குருசாமியின் கடைசி வார்த்தைகள் ஒரே பிரமிப்பை உண்டாக்கின.

''என்னால் நம்பவே முடியவில்லையே? என்னைப் பற்றி உங்களுக்கு ஏதுவுமே தெரியாதே... நான்...'' இதற்குமேல் அவளால் தொடர்ந்து பேச முடியவில்லை. ஆயாசத்தினால் நாற்காலியில் அப்படியே சாய்ந்து கொண்டாள். அவளுக்கு மூச்சு வாங்கியது. குருசாமி அசையாமல் அவளைப் பார்த்தபடியே நின்றுகொண்டிருந்தார். அவருடைய மௌனம் அவளை மறுபடியும் பேச வைத்தது.

''நீதிபதி அவர்களே! நான் உங்கள் நிலைக்குத் தகுதியானவளில்லை. நானோ பட்டிக்காட்டுப்பெண். நாகரிகத்தின் காற்றுகூட என் மீது பட்டதில்லை. பெரிய மனிதர்களுடன் நான் பழகியது கூட இல்லை...''

அவன் அதிக நேரம் பேசுவதைக் குருசாமி விரும்பவில்லை. "எல்லாம் எனக்குத் தெரியும், ராஜி! உன்னிடம் இளமை இருக்கிறது. என்னிடம் பொருளும் புகழும் இருக்கின்றன. உன்னை என் செல்வாக்கினால் மாற்றியமைக்க முடியும். என் மனைவியாக இருக்க வேண்டிய சகல விதமான தகுதிகளும் உனக்கு வரும்படி செய்வேன், போதுமா?" என்றபோது அபூர்வமாக அவர் முகத்திலே தோன்றும் சிரிப்பு அப்போது படர்ந்தது. "நன்றாக யோசித்து ஒரு முடிவுக்கு வா, ராஜி!" என்றபடியே கிளம்பத் தயாரானார். குரலிலோ, பார்வையிலோ எவ்வித மாறுதலுமின்றி, "ஆனால் ஒன்று மட்டும் நினைவில் வைத்துக் கொள். இதைத் தவிர வேறு விதமாக உனக்கு, உன் சந்தோஷ வாழ்வுக்கு என்னால் உதவ முடியாதே என்பதற்காகத்தான் என்னை மணந்து கொள்ளும்படி உன்னைக் கேட்கிறேன்" என்றார்.



"இப்படி இந்த விநோதமான ஏற்பாட்டை நீங்கள் எதற்காகச் செய்ய வேண்டும்?" என்று கேட்டாள் ராஜி படபடப்புடன்.

குருசாமி ஒரு நிமிஷம் அவள் முகத்தையே பார்த்துக் கொண்டு நின்றார். பிறகு, "உனக்கு வாழ்வளிக்க இருந்தவனின் வாழ்வை நீதிபதியாக இருந்து வழிப்பறி செய்ததற்குப் பிராயச்சித்தம்" என்றார்.

தேக்கி வைத்திருந்த அழுகையும் வேதனையும் குமுறிக் கொண்டு வந்தன ராஜிக்கு. வாய்விட்டு விம்மி விம்மி அழுதாள்.

குருசாமி திரும்பிப் பார்க்காமல் வெளியே வேகமாகச் சென்றார்.

★

ஆடம்பரமே இல்லாமல் யாருக்குமே தெரியாமல் எங்கோ ஒரு கிராமத்துக் கோயிலில் ராஜியைத் தம் வாழ்க்கைத் துணைவியாக்கிக் கொண்டார் குருசாமி. அதன்பிறகு ஊர் ஊராக அவளுடன் சுற்றிக் கொண்டிருந்தார்:

நீதிபதி குருசாமி திருமணம் செய்து கொண்டார் என்ற செய்தியைவிட, அவர் நண்பர்களுக்கு அவரிடத்தில் காணப்பட்ட மாறுதல்கள்தான் திகைப்பூட்டுவதாயிருந்தன. திடீரென்று அவரிடம் முதுமையின் ரேகைகள் படர ஆரம்பித்தன. சுறுசுறுப்பு மறைந்து சோர்வு வந்து புகுந்து கொண்டது.

குருசாமி ராஜியின் முன்னால் காரணமின்றி வரவே மாட்டார். அவளது காரியங்களிலும் தலையிடுவதில்லை. அவளுக்குப் பூரண சுதந்திரம் கொடுத்திருந்தார். எங்கும் போகலாம், எதையும் வாங்கிக் கொள்ளலாம்.

ராஜிக்கு யாரோ அந்நியர்களைப் போல நடத்தும் இந்த விநோத வாழ்க்கை வேம்பாகக் கசந்தது. தயவு என்னும் விலங்கு பூட்டிய கைதியாக வாழ்ந்து வந்தாள் ராஜி.

குருசாமி இப்போது கோடைக்கானலில் இருந்தார். ஒரு மாதத்துக்கு முன்பு திடீரென்று ஏதோ விஷ ஜுரத்தினால் பீடிக்கப்பட்டார். அதிலிருந்து அவர் மலை வாசஸ்தலத்துக்கு வந்திருந்தார் மனைவி ராஜியுடன்.

அன்று மாலை முந்நேரத்திலேயே பனி விழுந்து விட்டது. குருசாமி நீண்ட கம்பளி அங்கி அணிந்து கழுத்திலும் கம்பளி மப்ளர் சுற்றிக்கொண்டு பங்களாவின் முன்னாலுள்ள பூங்காவில் பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். அவர் மனைவி வந்ததைக் கூடக் கவனிக்கவில்லை.


"அந்த மப்ளரைத் தலையைச் சுற்றிக் கட்டிக் கொள்வதுதானே?" என்ற அவள் குரல் கேட்டதும் தான் திடுக்கிட்டுத் திரும்பினார். ராஜி அவர் எதிரிலுள்ள நாற்காலியில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

"சின்ன வயசிலே மழையாலும் பனியாலும் வெயிலாலும்தான் இந்த உடம்பு வளர்ந்தது ராஜி. இப்பொழுது சுகமான சூழ்நிலை! சொகுசான வாழ்க்கை, பார். அதுதான் இந்தக் குளிர் காற்றுக்குக் கூட உடல் நடுங்குகிறது. இனி எங்கே இந்த உடல் தேறப் போகிறது? எனக்கு நம்பிக்கை இல்லை" என்றார் விரக்தியுடன். பிறகு கம்பளிச் சட்டையின் உட்புறம் கையை விட்டு ஒரு நீண்ட கவரை எடுத்து மேஜையின்மீது வைத்து ராஜியின் பக்கமாகத் தள்ளிவிட்டார்.

அதில் ராஜியின் பெயருக்கு விலாசமிடப்பட்டிருந்தது. வியப்பினால் விரியும் அந்த விழிகளைப் பார்த்த குருசாமி, காய்ந்த தன் உதடு வெடிக்க இலேசாகச் சிரித்தபடியே, "ஒரு வருஷமாக இது உன் கைக்கு வராமல் ஆனால் உன்னைத் தொடர்ந்து கொண்டு வருகிறது" என்று சொல்லிவிட்டு நாற்காலிக்குள் ஒடுங்கி உட்கார்ந்து கொண்டார்.

ராஜி கடிதத்தின் உறையைக் கிழித்தாள். உள்ளிருப்பதை எடுத்து மேஜைமீது வைத்தாள். சாதாரண நோட்டுப் புஸ்தகத் தாளில் எழுதப்பட்ட பெண்ணின் கையெழுத்துடன் கூடிய கடிதம். இன்னும் இரண்டொரு மக்கிப்போன கடிதங்கள். ராஜி தன் கணவனின் முகத்தை வினாக்குறியோடு நோக்கினாள். குருசாமி கண்களை மூடியபடி துவண்டுபோய்க் கிடந்தார். அடிக்கடி வந்து அவரை அலட்டிய அந்த விஷ ஜுரம் இப்போது வந்து விட்டது.

"ரவீந்திரனின் தாயார் சிவகாமி அல்லவா எழுதி இருக்கிறாள்? அவள்தான் தன் மகன் ரவீந்திரனை இழந்த துயர் தாங்காமல், அந்த அதிர்ச்சியிலேயே இறந்து விட்டாள் என்று கேள்விப்பட்டேனே?" நெஞ்சைத் திருகி எடுக்கும் அந்தக் கடந்தகால நினைவுகளினால்



கணவன்: என் கடிகாரத்தை எவனோ எடுத்துக் கொண்டு ஓடுகிறானே!

மனைவி: போகிறது! இனிமேலாவது கடிகாரம் 'ஓடவில்லை, ஓடவில்லை' என்று சொல்ல மாட்டீர்களே!

சிந்தை கலங்க வார்த்தைகளை நிறுத்தி நிறுத்திப் பேசினாள் ராஜி.

கைகளை மேஜையின்மீது ஊன்றி எழுந்திருக்க முயன்றார் குருசாமி. முடியாமல் நாற்காலியிலேயே பொத்தென்று விழுந்தார். ஜுர வேகத்தினால் அவரது உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. அந்தக் கடிதத்தைப் பற்றி விவாதிக்க இது சமயமல்ல என்பதை அறிந்தாள் ராஜி. இதற்கு முன்பு இரண்டு மூன்று தடவை அந்த விஷ ஜுரம் வந்திருப்பதால் ராஜி பயப்படவில்லை. டாக்டருக்கு போன் செய்து விட்டு வேலைக்காரனின் உதவியுடன் அவரைக் கொண்டு போய்ப் படுக்கையில் கிடத்தினாள்.

நினைவிழந்த நிலையிலே கிடந்த குருசாமியின் அருகிலேயே இரவு முழுதும் உட்கார்ந்திருந்தாள் ராஜி. அவ்வப்போது வேளை தவறாமல் மருந்து கொடுத்தாள். அவர் ஜுரத்தில் பிதற்றிக் கொண்டே இருந்தார்.

நான்கு நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் குருசாமி கொஞ்சம் தெம்புடன் உட்கார்ந்திருந்தார். அவரைத் தவிர வேறு யாருமில்லை. ராஜி அவர் அருகில் சென்று உட்கார்ந்தாள்.

ராஜிதான் அந்த மௌனத்தைக் கலைத்தாள். "நீங்கள் நினைவிழந்து கிடந்தபோது, ஜுர வேகத்தில் சில விஷயங்களைப் பிதற்றினீர்கள்... நீங்கள் சொன்னீர்கள், ரவீந்திரரைக் குற்றமற்றவர் என்று. எந்தக் குற்றத்துக்காக அவன் தூக்கிலிடப்பட்டானோ அதை அவன் செய்யவில்லை என்றும் அவனுக்கு நீங்கள் மரண தண்டனை விதித்தபோது உங்களுக்கு அவன் குற்றவாளியல்ல என்ற விஷயம் தெரியும் என்றும் சொன்னீர்கள். எல்லாவற்றுக்கும் மேலாக மோகனாம்பாளைக் கொன்றது நீங்கள்தான் என்றும் கதறினீர்கள்! அதெல்லாம் உண்மைதானா, சொல்லுங்கள்?"

குருசாமி தம் பலத்தை எல்லாம் ஒன்று சேர்த்துக் கொண்டு பேசலானார்:

"ராஜி! இத்தனை நாளாக நான் என்னைப் பற்றி உன்னிடம் ஒன்றுமே சொன்னதில்லை. இப்போது சொல்லும் காலம் நெருங்கி விட்டது. ஆதியிலே வாழ்க்கையின் வெற்றியைப் பற்றி நான் கனவு கண்டு கொண்டிருந்த காலத்தில் பொருள், புகழ், இவற்றுடன் இன்னொரு விஷயமும் எனது லட்சியமாக இருந்தது. எனக்கென்று ஒரு மகன்—என்னை அப்பா என்று அழைத்து ஓடிவரும் ஒரு ஆண் குழந்தை வேண்டும் என்று விரும்பினேன். அதற்காக ஒரு பெண்ணை மணந்து கொண்டேன். ஆனால் என்னுடைய துரதிர்ஷ்டம் அவள் என்னுடன் வாழத் தகுதியில்லாதவளாகி விட்டாள்.

"அவளுக்குக் கடுமையான வியாதியோடு தாய்மைப்பேறும் சேர்ந்துகொண்டது. 'பிறக்கும் குழந்தையும் தாயின் வியாதியோடு பிறந்தால்....?' என்ற எண்ணம் நெஞ்சை நடுங்க வைத்தது. பிரசவத்தின்போது குழந்தையோடு அவளும் இறந்துவிட்டாள் என்ற செய்தி கிடைத்தது.

"நான் அப்போது ஒரு வழக்கு விஷயமாக டில்லிக்குச் சென்றிருந்தேன். ஆகவே பணம் அனுப்பி அவள் கடைசிக் காரியங்களை நடத்திவிடும்படி ஏற்பாடு செய்தேன். அவளைப் பற்றிய நினைவை என் நெஞ்சிலிருந்து, வாழ்க்கையிலிருந்தே பிடுங்கி எறிந்தேன். என் லட்சியம், என் வெற்றி உறுதியாகும் வரை பெண்களை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை என்று உறுதி கொண்டேன்.

"இத்தனை வைராக்கியத்துடன் இருந்தும் மோகனாம்பாளிடம் நான் என் உள்ளத்தைப் பறி கொடுத்தது விதியின் செயல்தான். அவள் ரவீந்திரனைக் காதலித்தாள். ஆனால் பணத்துக்காக என்னை மணந்துகொள்ள ஆசைப்பட்டாள். பேதைப்பெண். நான் அவள் வலையில் சிக்கி விட்டதாக, என் வாழ்வைத் தன் கைக்குள் பிடித்து வைத்திருப்பதாக எண்ணி விட்டாள்.

"அழகும் இளமையும் அப்படி அவள் அறிவை மறைத்திருந்தன. அவைதான் அவள் முடிவுக்கும் காரணமாகும் என்பதை அவள் அறியவில்லை. எப்போதோ சொன்ன ஏதோ ஒரு வார்த்தையை வைத்துக் கொண்டு அவள் தன்னை உலகமறிய என் மனைவியாக்கிக் கொள்ளவேண்டும் என்றும் இல்லாவிட்டால் நம்பிக்கைத் துரோகம் செய்ததாக வழக்காடுவேன் என்றும் பயமுறுத்தினாள்.

"நினைத்துப் பார் ராஜி. கேவலம் ஒரு அனாதைப் பெண், மக்களின் மதிப்புக்கும் கௌரவத்துக்கும் உரிய ஒரு நீதிபதியின்மீது வழக்கு தொடருவதாம். என்னால் தாங்க முடியவில்லை. ஆத்திரத்துடன் அவள் வீட்டை நோக்கி ஓடினேன். அங்கு நான் கண்டகாட்சி என் கோபவெறியைக் கிளறி விடுவதாக இருந்தது. அவளும் இன்னொரு இளைஞனும் இரைந்து பேசிக் கொண்டிருந்தார்கள். ஜன்னல் திரையிலே விழுந்த நிழல் உருவத்தைத்தான் நான் பார்த்தேன். அது ரவீந்திரன் என்பது அப்போது எனக்குத் தெரி





எல்லாக் குழந்தைகளும்
விரும்புவது மிக எளிதில்
ஜீரணமாகும் கௌ & கேட்.
டாக்டர்களும் தங்களது
சொந்தக் குழந்தைகளுக்கு
தேர்ந்தெடுக்கும் உணவும்
அதுவே இன்றைய உலகில்
கௌ & கேட்டே தலைசிறந்த
உணவாகத் திகழ்கிறது என்
பதற்கு இதுவே தக்க சான்
றாகும். உங்கள் குழந்தைக்கு
கௌ & கேட்டை வற்புறுத்
திக் கேளுங்கள்.

5465

COW & GATE MILK FOOD

The FOOD of ROYAL BABIES

யாது. பொருளுக்கு ஆசைப்பட்டு அவள் மனம் மாறியதைத் தூற்றிவிட்டு ரவீந்திரன் வெளியேறி விட்டான்.

"நான் குமுறும் உள்ளத்துடன் உள்ளே ஓடினேன். அது எப்படி நடந்தது என்றே எனக்குப் புரியவில்லை. அவளைக் கொல்ல வேண்டும் என்ற எண்ணமே எனக்கில்லை. என் வெறி அடங்கியபோது, பிரமை நீங்கிய போது அவள் என் கைகளில் துவண்டு தொங்கிக் கொண்டிருந்தாள். பயம் என்னை வந்து பற்றிக் கொண்டது. நான் அவளை மிரட்டிப் பாடம் கற்பிக்கத்தான் வந்தேன். ஆனால் நடந்ததோ வேறு.

ஓடினேன். பயம் பிடரியைப் பிடித்துத் தள்ள ஓடினேன். யாரும் அறியாதபடி என் இருப்பிடத்துக்கு வந்து பதுங்கிக் கொண்டேன். 'கொலைகாரன், கொலைகாரன்' என்று யாரோ உரக்கஎன் காதுகளின் அருகில் கத்திக் கொண்டிருந்தார்கள். கொலை வழக்குகளைப் பற்றி அலசி ஆராய்ந்த எனக்கு அப்போதுதான் கொலைகாரனின் நிலை எப்படி இருக்கும் என்று புரிந்தது. மனச்சாட்சியின் குத்தலைத் தாங்க முடியாமல் ஒரு மாத ரஜாவிலே ஊரை விட்டு ஓடினேன்.

ஒரு மாதம் கழித்து நான் ஊர் திரும்பிய போது மோகனாம்பாள் கொலை வழக்கு உப்பு சப்பில்லாமல் போய் விட்டதை அறிந்து நிம்மதி அடைந்தேன்."

ராஜியை ஒரு நிமிஷம் உற்று நோக்கி விட்டுக் குருசாமி தொடர்ந்தார்.

"விதி என் வாழ்க்கையிலே வலை பின்ன ஆரம்பித்தது. நிரபராதியான ரவீந்திரனைக் குற்றவாளியாக்கி—குற்றவாளியான என்னை அவனுக்கு நியாயம் வழங்கும் நீதிபதியாக்கியது. என் உள்ளத்தின் ஆழத்திலே மட்டும் நம்பிக்கை இருந்தது. ரவீந்திரனை இந்த வழக்கில் குற்றவாளியாக்க முடியாது என்று. நான் அவனுக்கு வாதாடும் வக்கீலாக இருந்திருந்தால் கட்டாயம் விடுதலை வாங்கிக் கொடுத்திருப்பேன். ஏனென்றால் சாட்சிகள் பலமில்லை. சந்தர்ப்பச் சாட்சியங்களினால்தான் அவன் குற்றவாளியாக்கப் பட்டிருந்தான். கடைசி வரையில் நான் அந்த நம்பிக்கையுடனேயேதான் நீதிபதி ஸ்தானத்திலே நெஞ்சத் துடிப்புடன் உட்கார்ந்திருந்தேன். ஆனால் அவனுக்காக வாதாடிய வக்கீலின் திறமைக் குறைவினால்தானோ அல்லது விதிதான் அவன் விஷயத்தில் வேறுவிதமான முடிவை நிச்சயித்திருந்ததோ?... அதுதான் உனக்குத் தெரியுமே!" அத்தனை நேரம் ஆவேசத்துடன் பேசி வந்தவர் ஆயாசத்துடன் நாற்காலியில் சாய்ந்தார்.

"உங்கள் வாயால் அவனுக்கு மரண தண்டனை விதித்தீர்கள். இல்லையா? ஐயோ, கடவுளே!" நெஞ்சு வெடிக்க அவள் விம்மிப் புலம்பினாள். "இவ்வளவுக்கும் பிறகு என்னையும் மணந்து கொண்டீர்கள்?" என்றபோது அவள் துக்கம் எல்லை மீறிவிட்டது.

குருசாமியையும் அது உலுப்பி உட்கார வைத்தது.

"ராஜி! நான் உன்னை மணந்ததின் காரணத்தைத்தான் முன்பே சொன்னேனே. நீதி மன்றத்திலே நீ உட்கார்ந்திருந்தபோது உன் வேதனை தோய்ந்த முகம் என்னை வாட்டி எடுத்தது. இனி அந்த நீதி ஸ்தலத்திலே உட்கார்ந்து நியாயம் வழங்கும் தகுதி எனக்கு இல்லை—முடியாது என்பதை உணர்ந்துதான் நான் பதவியை, புகழை உதறிவிட்டு உன்னுடன் ஊர் ஊராகச் சுற்றிக் கொண்டிருக்கிறேன். நான் செய்த குற்றங்களுக்குப் பிராயச் சித்தமாகவே உனக்கு வாழ்வளிக்க உன்னை மணந்து கொண்டேன்."

ராஜி பேச வில்லை. பேசக்கூடிய நிலையில் அவள் இல்லை.

"ராஜி...! உன் பெயருக்கு வந்த அந்தக் கடிதத்தை இந்த ஒரு வருஷமாக உன்னிடம் கொடுக்காமல் சுமந்தேன். காரணம், அதில் நான் குற்றவாளி என்று அறிவிக்கும் ரகசியம் ஏதாவது இருக்குமோ என்றுதான். இனி நான் எந்த ரகசியத்துக்கும் பயப்பட வேண்டாம். ராஜி! அந்தக் கடிதத்தில் உள்ள விஷயம் என்ன என்பதை நான் அறியலாமா?"

"இதைவிடக் கோரமான செய்திகள் ஏதும் அதில் இல்லை. சிவகாமி — ரவீந்திரனின் தாயார்—தான் சாகும்போது தன் மகனைப் பற்றிய சில உண்மைகளை என்னிடம் தெரிவித்துச் சென்றிருக்கிறாள். அவள் வாழ்க்கையில் சம்பந்தப்பட்டு, சாகாமல் வாழ்வது நான் தானே? அதனால்தான் என் பெயருக்கு இவைகளை அனுப்பி இருக்கிறாள். ரவீந்திரனின் ஜனனக் குறிப்பு. இன்னும் சில ரகசியங்கள்" என்றாள் ராஜி அடைபட்ட குரலில்.

"இன்னும் ரகசியங்களா?" என்று அலுத்துக் கொண்டார் குருசாமி.

"ஆமாம். சிவகாமி அவனது உண்மைத் தாயார் இல்லையாம். யாரோ ஒரு துர்ப்பாக்கியவதி பெற்ற பிள்ளையாம் அவன். அவனைப் பெற்றதும் மரணப் படுக்கையிலிருந்த அந்தப் பெண் தன் குழந்தையைச் சிவகாமியிடம் ஒப்படைத்து அதை அவள் காப்பாற்ற வேண்டும் என்றும் அவள் கணவன் தனக்குச் செய்த கொடுமைக்கு இந்தக் குழந்தையை அவர் கண்ணில் காட்டக் கூடாது என்றும் கேட்டுக் கொண்டாளாம். அதன்படியே குழந்தையின் தந்தைக்குத் தாயும் சேயும் இறந்து விட்டதாகச் செய்தி அனுப்பப்பட்டதாம். குழந்தையை வளர்த்து ஆளாக்கி இருக்கிறாள், கணவனை இழந்த கைம்பெண்ணான சிவகாமி."

"ராஜி! ரவீந்திரனின் ஜனனக் குறிப்பிலே அவன் பிறந்த ஊர் என்ன என்று போட்டிருக்கிறது? தாயாரின் பெயர் என்ன என்று குறிப்பிடப்பட்டிருக்கிறதா?"

அவர் நிலையைக் கண்டு பீதியடைந்த ராஜி நடுங்கும் குரலில் "அவன் தாயார் பெயர் சரஸ்வதியாம்—பிறந்த ஊர் மாதுளந் தோட்டம் கிராமம்" என்று சொன்னவள் நிலை மீறித்தவள் போல, "ஐயோ, உங்களுக்கு என்ன?" என்று அலறி விட்டாள்.


"சரஸ்வதி என் மனைவி. ரவீந்திரன் என் அருமை மகன்!" தம் வாழ் நாளி[illegible] முதன் முறையாக வாய்விட்டு 'ஹோ[illegible] புலம்பி அழுதார். கனம் நீதிப[illegible]

திகைப்பிலிருந்து விடுபட்ட ரா[illegible] போது அவர் உடலில் அசைவி[illegible] இமைக்கவில்லை. அடுத்த வி[illegible] வெடிக்க ராஜி கதறி அழுதா[illegible] அழுதாள், யாருக்காக அ[illegible] அவளுக்கே புரியவில்லை!

Printed and Published by T. Sadasivam at the Kalki Press Kilpauk
for the Proprietors Messrs Bharathan Publications Private
Managing Editor: T. Sadasivam.

Registration No. M. 4301
Registered as a Newspaper in Ceylon

சிறு குழந்தையும் அறியும்...
ரின்ஸோ அதிவெண்மையாக
வெளுக்கும் என்பதை!



சலவைக்கு ரின்ஸோ உபயோகிக்கும் தாய்மார்களின் எண்ணிக்கை மேன்மேலும் பெருகி வருவதன் காரணம் ரின்ஸோ வெள்ளைத் துணிகளை அதிவெண்மையாகவும், வர்ணத் துணிகளை அதிகப் பிரகாசத்துடனும் வெளுப்பதனால்தான்.

சலவைக்கு ரின்ஸோ உபயோகியுங்கள். உங்கள் குழந்தைகளின் ஆடைகள் உள்பட, குடும்பத்தின் சகல துணிகளையும் அற்புதமான சுத்தத்தோடு சலவை செய்வதைக் காண்பீர்கள். ரின்ஸோவின் விறுவிறுப்பான நுரை அழுக்குகளை அறவே அகற்றிவிடுகிறது — அடித்துத் துவைக்கவோ, அழுத்தித் தேய்க்கவோ வேண்டியதில்லை!

... உங்கள் வேலையை
இலகுவாக்கும் அற்புத
சோப் பவுடர்



R. 13-50 TM